சிவமயம்

நகரத்தாரின் அறப்பணிகள்
















கிருஷ்ணா பதிப்பகம்

டாக்டர் நா.வள்ளி

நகரத்தாரின் அறப்பணிகள்

டாக்டர் நா. வள்ளி M.A., B.Ed., Ph.D.,
P.G.Dip.in Epigraphy & Archaeology

கிருஷ்ணா பதிப்பகம்
7. லெட்சுமணன் செட்டியார் தெரு,
காரைக்குடி - 630 001.
✆ :(04565) 420274.

நூற் பதிப்பு விளக்கம்

தலைப்பு	:	நகரத்தாரின் அறப்பணிகள்
நூற்பொருள்	:	ஆய்வேடு
ஆசிரியர்	:	டாக்டர் நா.வள்ளி.
உரிமை	:	ஆசிரியர்
வெளியீடு	:	கிருஷ்ணா பதிப்பகம். 7. லெட்சுமணன் செட்டியார் தெரு, காரைக்குடி - 630 001. ✆ : (04565) 420274.
பதிப்பு	:	முதல்
நாள்	:	ஜுலை 2001
புத்தக சைஸ்	:	1/8 டம்மி.
தாள்	:	18.1. Kg. JK
அச்சு	:	12 Pt
நூற்படி	:	1000.
பக்கம்	:	296
விலை:	:	ரூ.165/= (ரூபாய் நூற்று அறுபத்தைந்து மட்டும்)

அச்சும், அமைப்பும் :

தெய்வம் உடனடி ஆப்செட் அச்சகம்,
புதிய பேருந்து நிலையம், காரைக்குடி-1.
✆ : (04565) 437843, 434961.
Cell : 98424 - 34961.

புத்தகத் தொடர்புக்குரிய முகவரி :

நா.வள்ளி
7. லெட்சுமணன் செட்டியார் தெரு,
காரைக்குடி- 630 001.
✆ : (04565) 420274.

30-2

உ

சிவமயம்

✆ : (04565) 436846.

KOVILOOR MADALAYAM
KOVILUR - 630 307
[VIA] MANAGIRI
[NEAR] KARAIKUDI.

கோவிலூர் மடாலயம்
கோவிலூர் - 630 307
மானகிரி (வழி)
காரைக்குடி (அருகில்)

Date: 07-07-2001

திருமதி
பேராசிரியை, **முனைவர் வள்ளி சொக்கலிங்கம்**
இராமசாமி தமிழ்க் கல்லூரி,
இலுப்பக்குடிச் சாலை,
காரைக்குடி - 600 004.

காரைக்குடி, இராமசாமி தமிழ்க் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி வரும் திருமதி வள்ளியம்மை நம் மடாலயத்தின் பால் அன்பும் பக்தியும் கொண்டவர். அவர் கணவர் சொக்கலிங்கத்தின் தந்தை, காரைக்குடியைச் சார்ந்த சொ.கிருட்டிணன் செட்டியார் பூர்வாஸ்ரமத்தில் நமக்கு மிக நெருங்கிய நண்பர். நமக்கு மிக மிக வேண்டியவர்கள். அவருடைய மருமகள் வள்ளியம்மை கல்வெட்டுத் துறையில் ஆழ்ந்த புலமை பெற்றவர். அது தொடர்பாகப் பல ஆய்வுக் கட்டுரைகளும் எழுதியுள்ளார்.

அவர் தன் முனைவர் பட்டத்திற்காக எழுதிய, 'நகரத்தார் அறப்பணிகள்' பற்றிய ஆய்வேடு இப்பொழுது அச்சாகி அழகிய நூலாக வெளிவந்துள்ளது. அந்நூல் வெளியீடும், நம்முடைய நகரத்தார் மரபினரான பட்டினத்தாருடைய திருவிழா நிகழ இருக்கும், நமக்குரிய இடமான காவிரிப் பூம்பட்டினத்தில் நகரத்தார் முன்னிலையில் நடப்பது மிக மிகப் பொருத்தமே.

இந்நூலை எழுதிய பேராசிரியை வள்ளியம்மைக்கும், இதனை மிக்க ஆர்வத்தோடு வெளிக் கொண்டு வந்த அவரது கணவர் சொக்கலிங்கத்துக்கும் அமெரிக்காவில் இருந்து நாம் ஆசி வழங்குகின்றோம். அருள்மிகு திருநெல்லை உடனாய கொற்றவாளீசர் திருவடியினைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

ஸ்ரீ சற்குரு நாதன் துணை

உ
சிவ சிவ
'தன்கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணிசெய்து கிடப்பதே!'

தவத்திரு
குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

குன்றக்குடி - 630 206.
சிவகங்கை மாவட்டம்
தொலைபேசி : குன்றக்குடி
(04577) - 264227
காரைக்குடி
(04565) 437766
நாள் : 13-7-2001.

வாழ்த்துரை

பெருமைக்குரிய பேராசிரியை பெருந்தகை நா. வள்ளி அவர்கள் நகரத்தார் அறப்பணிகள் பற்றித் தாம் செய்த ஆய்வினை நூலாக வடித்துத் தந்துள்ளார். தமிழ்ப்பண்பாடு, கலாச்சாரம், நாகரிகத்தின் வடிவமாக விளங்கும் பண்பட்ட சமுகத்தைப் பற்றிய ஆய்வு, உலகின் வரலாற்றுப் பதிவுக்கு மிக அவசியத் தேவை.

நகரத்தார்கள் உலகின் எந்த உயர்ந்த சிகரத்தில் இருந்தாலும் தாய்மண்ணை, தமிழ்மண்ணை நேசிப்பவர்கள். ஒரு சமுதாயத்தைப் பற்றி என்று ஆராய்வதைவிட, அச்சமுதாயம் நாட்டிற்கு என்ன செய்திருக்கிறது என்று ஆராய்வது சிறப்புடையதாகும் என்ற ஆய்வுத் தூண்டலுக்கான காரணம் பாராட்டுக்குரியது. ஆய்வு நோக்கில் நகரத்தார் புகழுக்குச் சங்கு ஊதுவதற்காக அன்று பழைமையச் சொல்லிப் புதுமைக்குப் புதிய விளக்கம் பெறச் செய்வதற்கே என்ற பார்வை பாராட்டுக்குரியது.

இன்றைக்குத் தமிழ்இசை ஜீவித்திருக்கின்ற தென்றால், காசிமுதல் கன்னியாகுமரி வரை ஆலயங்களின் அரும்பணி சிறப்புற நடைபெறுகின்றது என்றால், அதன் முழுப்பெருமையும் புகழும் நகரத்தார் பெருமக்களையே சாரும். 'செட்டி கப்பலுக்குச் செந்தூரான் துணை' என்று கடல்கடந்து, உயிரைத் துச்சமென மதித்து, உறவினரிடம் வாய்க்கு அரிசி பெற்றுவிட்டு, திரைகடல் ஓடித் திரவியம் தேடியவர்கள். இந்தியாவில் முதன்முதலாக அந்நியச் செலாவணி ஈட்டிய சமுகம் நகரத்தார் சமுகமே! கட்டாந்தரைகளை யெல்லாம் கலாசாலைகளாக மாற்றியவர்கள். மண் எல்லாம் விண்முட்டும் கோபுரங்களாகவும், கல்எல்லாம் பேசும் பொற்சிலைகளாகவும் வண்ணங்கள் எல்லாம் உயிர்ப்புடைய ஓவியங்களாகவும் உருமாற்றியவர்கள். வ.சுப. மாணிக்கம் அவர்களின் வாக்குப்படி நகரத்தார் வரலாறு குறிபிட்ட ஓர் எல்லைக்குள்ளோ, குறிப்பிட்ட ஒரு காலத்துக்கோ, குறிப்பிட்ட

ஓரினத்துக்கோ, உட்பட்டதன்று. நகரத்தார் இருந்த இடம், சென்ற இடம் எல்லாம் வரலாற்றுத் தடங்கள் உண்டு. சைவசமயம் கடல் கடந்து பரவியதற்கும், கோயில்கள் அங்கெல்லாம் நிலைத் திருப்பதற்கும் நகரத்தார் தம் பொதுத் தொண்டு தலையாய காரணமாகும். நகரத்தார் இமயம்முதல் குமரிவரை ஆற்றியிருக்கும் தொண்டுகள் அளப்பரியன.

நகரத்தார் வரலாறு, தமிழ்நாட்டு வரலாற்றிலும், தமிழ்மொழி வரலாற்றிலும், இந்திய விடுதலை வரலாற்றிலும், தொழில் வரலாற்றிலும் கணிசமான பங்குடையது என்று அறிஞர் வ. சுப. மா. கூறுகிறார். நகரத்தார் வரலாறு தமிழ்நாட்டின் வரலாறு மட்டுமன்று. இந்திய நாட்டின் வரலாறு மட்டுமன்று, உலக வரலாற்றின் ஒருபகுதி என்ற நிலையில் நகரத்தார் பணிகள் விரிவாகக் கூறப்படுகின்றன. நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்பு எல்லோருக்கும் கல்வி உரிமை கிட்டாத காலத்தில் மிகப் பின்தங்கிய செட்டிநாட்டுப் பகுதியில் ஏராளமான கல்வி நிலையங்களைத் தொடங்கி, சாதி மத வேறுபாடு இல்லாமல் அனைவருக்கும் கல்விக் கொடை அளித்தனர். என்ற செய்தி, மிகவும் எண்ணி மகிழத்தக்கது.

பேராசிரியை திருமதி நா. வள்ளி அவர்கள் மிகக் கடுமையாக உழைத்து ஆய்வுச் செய்திகளைத் திரட்டியிருக்கின்றார். பரந்துபட்ட தமிழறிவும் சமூக நன்மையில் அக்கறையும் உள்ளவராக மரபுகள் வழுவாது வரலாற்றுக்குப் பெருமை சேர்ப்பவராக நன்மை பயக்கும் புதுமைகளை விரும்பி ஏற்பவராக விளங்கும் பேராசிரியரின் ஆய்வுக் கண்ணோட்டம் அரிய தமிழ்நூலாகித் தமிழ்த்தாய்க்குச் சிறந்த அணியாகியுள்ளது. நகரத்தார் வாழும் கலை அறிந்தவர்கள். பிறரை வாழவைக்கும் கலையும் கற்றவர்கள். நகரத்தார் என்பது ஒரு வகுப்பினரின் அடையாளம் மட்டும் அல்ல! உலகு போற்றும் தமிழ்ப்பண்பாட்டின் அடையாளம். உலகு வாழ அறம் வளர்க்கும் நகரத்தார் பணிகள் சிறக்கட்டும்.

தமிழ்த்தாயின் வரலாற்றுக் கருவூலமாய் விளங்கும் இந்நூலைப் படைத்திட்ட பேராற்றல் மிக்க பேரறிஞர் பெருந்தகை திருமதி வள்ளி அவர்களுக்கு நெஞ்சுநிறை வாழ்த்துக்கள்! பாராட்டுக்கள்!

என்றும் வேண்டும் இன்ப அன்பு

பொன்னம்பல அடிகளார்

உ
சிவமயம்

பேராசிரியர் டாக்டர்
அர. சிங்கார வடிவேலன் (எ) அரசி
மீனாட்சி அரங்கம்
106 வ.உ.சி தெரு,
கண்டனூர்-630 104.
✆ :(04565)482360

ஒருதலைக்கை கற்பகத்தான் அருளினாலே ஊழிபல வென்றாண்டு உயர்ந்து வாழி!

திருமதிநா வள்ளி திரு சொக்க லிங்கம்
        திகழ்மனையின் தமிழ்த்தும்பி; என்றன் கண்கள்
தருமதுரை இராமசாமி பெரியார் மைந்தர்
        தமிழோடு தாமிணைந்தார் தமிழின் கோவில்
குருமணியாள்; தமிழ்தருவாள் அறங்கள் பேணும்
        குலதரும மணிமாலை வரலா றென்னும்
திருமாலின் திருமுடியில் சூட்டி னாளாம்
        செட்டிமக்கள் திருப்பணிகள் நாட்டி னாளாம்.

பாரளக்கும் இனத்தரசர் ஊரில் வள்ளி
        பசுவனையார் நாகப்பர் பாவை ஆனாள்
காரளக்கும் கற்பகத்தான் பிரிவைச் சேர்ந்த
        காரைநகர்ச் **சொக்கலிங்கம்** தேவி ஆனாள்
தேரளித்தாள் திருப்பணிக்குத் தெய்வ நூலால்
        திருப்பணிசெய் வரிசையிலே சேர்ந்திட் டாளே.

கங்கைமுதல் குமரிவரை நம்நாட் டுள்ளும்
        கடல்கடந்தும் வானளந்தும் அங்கும் இங்கும்
தங்கள்'குல **உரிமை'முதல் கடமை'** என்று
        தருமங்கள் செய்துவரும் நகரத் தாரின்
தங்கமனச் சுடரளந்தாள் தங்கை வள்ளி
        தமயன்நான் வழிகாட்டு தூண்டு குச்சி
சிங்கார வடிவேலன் வாழ்த்து கின்றேன்
        திருமதிநா வள்ளிகுடி மலைபோல் வாழ்க!

ஆய்ச்சிகுரல் நெய்மணக்கும் நிலத்தைக் காட்டும்
ஆச்சிவிரல் அறம்கமழும் குலத்தைக் காட்டும்
பாய்ச்சுமுளி கல்வெட்டில் பதித்த வற்றைப்
பாய்ச்சுமொளி விழியாலே பார்த்துப் பார்த்துப்
தாய்ச்சுமையாம் கருவைப்போல் தருமம் ஈனும்
தலைமுறையின் மருத்துவராம் நங்கைவள்ளி
பாய்ச்சுபுனல் ஆராய்ச்சி ஐயா றப்பர்
பண்ணைவயல் போல்விளைந்து பல்கி வாழ்க!

ஒருதலைப்பே ஒருநூலாய் ஓங்கத் தக்க
உட்பொருளைக் கொண்டபெரும் தலைப்பை ஏற்றாள்
மறுதலைப்பை மற்றவர்கள் தொடர்ந்து வாங்கி
மணிமாலை தொடுப்பதற்கு நூலை நூற்றாள்
வருகளைப்பை மாற்றுகிற கணவன் பெற்றாள்
வளர்குடியை வளர்ப்பதற்குக் கிளைகள் வாய்த்தாள்
ஒருதலைக்கை கற்பகத்தான் அருளி னாலே
ஊழிபல வென்றாண்டு உயர்ந்து வாழி!

12-7-2001
கண்டனூர்.

அன்புடன் வாழ்த்தும்,

12.07.2001

வாழ்த்துப்பா

பிறந்தகச் சீரும் புக்ககப் பெருமையும்
அறம்பயில் உணர்வும் ஒருங்குடன் பெற்ற
கல்வெட் டாய்வில் கனிந்திடும் வள்ளி
வெல்வெட்டு உள்ளம் கொண்ட கணவர்
சொக்க லிங்கர் ஒத்துழைப் புடனே
தக்க தமிழ்க்கல் லூரிப் பணியுடன்
திருமகள் விலாசம் தினம்தினம் திகழும்
பெருந்தனம் மிக்க பேறுறு இனமாம்
நாட்டுக் கோட்டை நகரத் தாரின்
ஏட்டில் அடங்கா எழிலறப் பணிகளை
"உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ"
விழுப்புகழ் பட்டினத் தாரின் வார்த்தைபோல்
ஆய்விற் கான தலைப்பாய் எடுத்தே
காய்தல் உவத்தல் கடுகள வின்றி
வயல்விளை நெல்லின் வளங்காண் பார்போல்
அயலூர் உள்ளூர் அலைந்து திரிந்து
கோயில் குளங்கள் பசுமடம் விடுதி
ஆய்வின் மிக்க கல்விக் கூடம்
மருத்துவம் போன்ற அறப்பிரி வனைத்தும்
பொருத்த மாகப்போதிய சான்றுடன்
விழுமிய நடையில் வெளிநாட் டறமெலாம்
வழுவின் றிங்கே வரவழைத் தெழுதி
செட்டி நாட்டின் சீதனம் போல
ஒட்டு மொத்தமாய் அளித்தஆய் வேட்டால்
மதுரை காம ராசர் பல்கலை
மதுரமாய்த் தந்தது டாக்டர் பட்டமும்,
நிறுவனர் செந்தமிழ்ப் பெரிய கருப்பர்
உறுதுணைச் செயலர் மெய்யம்மை ஆச்சி
'டாக்டர் வள்ளி' ஆவதைக் காண
நோக்கிய நோக்கெலாம் முதல்வராய் இருந்த
பாக்கியத் தாலே அறிந்தவன் என்பதால்
ஆக்கிய சோறு பயனா தல்போல்
அன்னார் நினைவுடன் ஆன்ற வாழ்த்தினை
பொன்னார் திரு.வி.க. இல்லத் தாருடன்
நல்வாக் காக நானும் வாழ்த்தினன்;
பல்நோக் குடனே பன்னூல் எழுதி
மணக்கும் பைந்தமிழ்த் தொண்டால் சிறந்து
குணமிகு மக்கள் கணவர் சுற்றமுடன்
'முனைவர் வள்ளி' வாழ்க வளமுடன்
நனைமலர் அன்பில் நாளும் மகிழ்ந்தே!

நன்றி! வணக்கம்!

தெ. முருகசாமி
முன்னாள் முதல்வர்
இராமசாமி தமிழ்க்கல்லூரி
காரைக்குடி-3.

தி.வ.ஆ.2032
ஆனி 28,
12-7-2001.

உ
சிவமயம்

✆ : (04561) 373703.

AL.AR.SM. Narayanan Chettiar
Palace
DEVAKOTTAI - 630 302.

Date: 7-7-2001

அணிந்துரை

காரைக்குடி இராமசாமி தமிழ்க் கல்லூரி இணைப்பேராசிரியர் திருமதி நா. வள்ளி அவர்கள் எழுதி உள்ள 'நகரத்தாரின் அறப்பணிகள்' என்னும் ஆய்வு ஏட்டினைப் படித்து மிக்க மகிழ்ச்சி அடைந்தேன். வேலங்குடி கல்வெட்டில் தொடங்கி டாக்டர் சந்திரசேகர் வரை ஏராளமான சான்றுகளைக் காட்டி இன்னும் ஆய்வுப் புலமாக இருக்கும் நகரத்தார் வரலாறும் அறப்பணிகளும் விரிகடல் போல விரிந்த பரப்புடையதாகும் அதில் நுழைந்து டாக்டர் வ.சுப.மா. முதல் பலர் காட்டிய வழியில் நுண்மான் நுழைபுலத்தோடு ஆய்வு செய்துள்ள வள்ளியம்மையின் அரும் பணியினைப் பாராட்டி வாழ்த்துகிறேன். அவரது ஆய்வு போற்றத்தக்கது. செட்டிநாடு இதன் பயனை நுகரட்டும்.

அணிந்துரை

'தமிழண்ணல்'
முனைவர் இராம. பெரியகருப்பன்
முன்னைத் தமிழ்த்துறைத்தலைவர்
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.

'நகரத்தாரின் அறப்பணிகள்' பற்றிய இவ் ஆய்வேடு, நகரத்தார் பற்றிய வரலாற்றையும் அவர்கள் இயல்புகளையும், அறிய உதவும் ஒரு கையேடு எனலாம். இதன் ஆய்வாளர், முனைவர் நா.வள்ளி நகரத்தாரின் அறப்பணிகளை ஆய்வது நகரத்தார் புகழுக்குச் சங்கு ஊதுவதற்காக அன்று; பழைமையைச் சொல்லிப் புதுமைக்குப் புதிய ஊக்கம் பெறச் செய்வதற்கே' எனத் தொடக்கத்தில் கூறுவது, ஒருவகையில் அவையடக்கம் ஆகிறது. ஆயினும் நகரத்தார் மரபுப்படி சங்கூதித்தான் நல்ல செயல்கள் தொடங்கப்படும். இந்நூல் பன்முகப் பரிமாணமுடைய நகரத்தார்களின் உருத்தோற்றத்தை மிக எளிமையாக அதே சமயம் உறுதிபடப் படம்பிடித்துக் காட்டுகிறது.

காரைக்குடி இராமசாமிதமிழ்க் கல்லூரியின், இணைப் பேராசிரியராகிய திருமதி வள்ளி, கல்வெட்டு மற்றும் தொல் பொருளாய்வில் பட்டயப் படிப்பு முடித்தவர். கல்வெட்டு ஆய்வரங்கு களில் தவறாது கலந்து கொள்பவர். நகரத்தார் பற்றியே பல ஆய்வுக் கட்டுரைகளை எழுதியவர். நகரத்தார் தொடர்பான கல்வெட்டுக்கள், சிறப்புப் பணிகள், கட்டிடக்கலை போல்வனவற்றில் நாட்டம் செலுத்திப் புதிய வெளிச்சம் தந்தவர்.

'சிற்பக் கலையின் சிறப்பும் சிற்பக் கலைக்கு முகவையின் பங்கும்' எனும் ஆய்வேடு ஒன்றைத் தஞ்சைப் பல்கலைக் கழகத்திற்குத் தந்தவர். 'திருப்பத்தூர்' பற்றிய நூல் ஒன்று தமிழக அரசின் தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடாக வந்துள்ளது.

இவ் ஆய்வேட்டில் 'நகரத்தார்' எனும் பெயராய்வு குறிப்பிடற்பாலது. காஞ்சி நகரிலிருந்து, அது கடலாற் கொள்ளப்பட்டபோதே, காவிரிப்பூம் பட்டினத்தில் குடியேறிய இவர்கள் 'நகரத்தார்' என அழைக்கப் பட்டிருக்கவேண்டும். துளாவூர் ஏடுகளில் 'நாட்டுக்கோட்டைப்பூமி' 'நாட்டுக்கோட்டைச்சீமை' என்ற குறிப்புகள் கிடைப்பதை எடுத்துக்காட்டுகிறார். நாட்டார், நகரத்தார் எனும் ஊர்மக்கள் பேச்சு வழக்காற்றைப் பார்த்தால் புதிதாகக் குடியேறிய நாட்டின்கண் கோட்டைபோல் வீடுகட்டி வாழ்ந்தவர் என எண்ணத்தோன்றுகிறது. வீட்டைச் சுற்றி எழுப்பும் சுவரைக் 'கோட்டைச்சுவர்' என்பர்.

நகரத்தார்கள் தங்கள் ஊர்களில் மட்டுமல்லாமல் குடியேறிய - தொழில் செய்யக் கடல்கடந்து சென்ற ஊர்களிலும் கோயில்கட்டி வாழ்ந்ததை, இவ்ஆய்வு விரிவாக எடுத்துரைக்கிறது. தமிழகத்தில் குறிப்பிட்ட காலத்தில் கோயில் கட்டியதற்கு, புறச்சமயத் தாக்குதல்களால் மக்கள் தடம்மாறி விடாமல், சமயத்தைக் காக்கவே எனவும் கடல்கடந்து வணிகம் செய்ததால் தற்காப்பு உணர்வினால் எனவும் இவர் கூறுவன நெஞ்சை நெகிழவைப்பனவாகும்.

நகரத்தார் வட்டித்தொழிலுக்கு வந்தது பிற்காலத்திலே தான், கொண்டு விற்றலே அவர்கள் குலத்தொழில்; அண்மை நூற்றாண்டு வரை, அவர்கள் சொந்தமாகப் பாய்மரக் கப்பல்கள் வைத்திருந்தனர்; இத்தகைய நல்ல குறிப்புக்கள் இந்நூலால் அறியப்படுகின்றன.

இவரது கல்வெட்டு ஆய்வறிவு, பல இடங்களில் இதனை எழுதத் துணை செய்துள்ளது. கூடியவரை நகரத்தார் பற்றி எழுதப்பட்ட வரலாற்று நூல்களைத் தொட்டுக் காட்டுகிறார். பர்மாவின் செழிப்பிற்கு நகரத்தார்களே காரணம் என்பதை இவர் நிறுவுகின்றார். நகரத்தார் வீடுகள் கட்ட பர்மாத் தேக்குகள் தனித்தனிக் கப்பலில் வந்து இறங்கினவாம். மலாயாவில் முதன் முதலாக இரப்பர் பயிரிட்டவர் நச்சாந்துபட்டியைச் சேர்ந்த ஒரு நகரத்தார் என்பது அறிய வேண்டிய செய்தி. இவர்கள் பேரேடு, கணக்கு எல்லாம் தமிழிலேயே எழுதியதுடன் தமிழ் எண்களையே பயன்படுத்தி வந்தனர் என்பதும் மிக முக்கியமாய்க் குறிப்பிடவேண்டியதாகும்.

தவத்திரு முத்துராமலிங்க ஞான தேசிகர் காலம் முதல் கோவிலூர் மடம் தோன்றி வளர்ந்த வரலாறு சுவையானது.

தனி மனிதர்களாக மட்டுமன்றிக் குடும்பமாக நின்று, கோயிலும் கோயில்சார் பசுமடம் நந்தவனம் முதலியனவும் செய்த அறப்பணிகள் அளவிடற்கரியன. சிவ வழிபாட்டினராகிய இவர்கள் வைணவக் கோவில்களையும் கட்டித் திருப்பணி செய்துள்ளனர்.

'சிதம்பரம் கோயில் தொடர்ந்து முப்பத்தைந்து ஆண்டுகள் இராணுவத்தினர் வசம் இருந்தமை; சிதம்பரம் திருவண்ணாமலைக் கோவில்கள் சிதைக்கப்பட்டமை; போன்ற பல அரிய செய்திகள்; பலரும் அறியவேண்டிய செய்திகள் இந்நூலுள் உள.

திருக்கோயில்களுக்கு அளவின்றிச் செலவழித்ததை மறைமலை அடிகளார் குறைகூறியதையும் கல்வித் திருக்கோயில்களுக்கும் தருமம் செய்வதே சிறந்ததெனப் பண்டிதமணி மு. கதிரேசச்செட்டியார் கூறியதையும் இவ்ஆய்வாளர் நடுவுநிலையோடு கூறியுள்ளார். மேலும் கோயில் திருப்பணிகளின் போது கல்வெட்டுக்கள் அழிக்கப்பட்டதை அறியாமையால் கவனிக்கத் தவறினர் எனச்சுட்டிக் காட்டுகிறார்.

சமயப்பணி போலவே, தமிழ்மொழிப் பணிக்கும், கல்விப் பணிக்கும், சமுகப் பணிக்கும் நகரத்தார்களின் பங்களிப்பு அளப்பறியது; எல்லையற்றது. ஊர் தோறும் சுமைதாங்கிக் கற்கள் வைத்த நகரத்தார்கள், மன்னர்களுக்கும் மேலாக இந்நாட்டு மக்களின் நல்வாழ்வுக்கான சுமையைத் தாங்கியுள்ளனர் என இவ்ஆய்வு கோடிட்டுக்காட்டுகிறது.

நேதாஜியின் விடுதலைப் போராட்டத்தில், பர்மாவிலிருந்த நகரத்தார்கள் பெரும்பங்காற்றினர்.

இவர்களின் கணக்கேடுகளில் 'தர்மக் கணக்கு' என்ற ஓர் ஏடு தனியே எழுதப்பட்டது.

அறப்பணிகளில் பல நூற்றாண்டுகளாக ஈடுபட்டதால், இந்தியா விலேயே இவர்களுக்கு முதலிடம் உண்டு என இவர் குறிப்பிடுவது வெறும் சங்கொலி அன்று சரித்திரம் கூறும் எதிரொலியுமாகும்.

இன்று சின்னத்திரை, தொலைக்காட்சி, ஆய்வுகள்யாவும் ஆர்வம் காட்டும் நகரத்தார் ஆய்வுக்கு, இந்நூலும் கைகொடுக்கும். தம்மிடமுள்ள குறைகளை நீக்கி, நகரத்தார்கள் தம் குழந்தைகளின் கல்விப்பணியில் நாட்டம் செலுத்துவதே அறமாகும் என இன்றையச் சூழலை எடுத்துரைக்கும் ஆய்வாளர் நா. வள்ளி அவர்கள் பாராட்டுக்குரிய முடிவுரையைத் தந்துள்ளார். அவரைப் பாராட்டி வாழ்த்துக்கின்றேன்.

'ஏரகம்'
சதாசிவநகர்,
மதுரை-பக்.20.

தமிழண்ணல்
1-7-2001

முனைவர் கோ. விசயவேணு கோபால் **10-7-2001**
முதுநிலை ஆய்வாளர்.
பிரெஞ்சு இந்தியவியல் ஆய்வகம்
பாண்டிச்சேரி.

அணிந்துரை

முனைவர் (திருமதி) நா.வள்ளி சொக்கலிங்கம் எழுதிய ''நகரத்தாரின் அறப்பணிகள்'' என்ற நூலிற்கு அணிந்துரை அளிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். இத்தலைப்பில் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்திற்கு அவர் அளித்த முனைவர் பட்ட ஆய்வேட்டின் திருந்திய வடிவமே இந்நூல்.

நூல், நகரத்தாரின் அறப்பணிகளை நகரத்தாரின் வரலாறு நகரத்தாரின் அறப்பணிகள், கோயிற்பணிகள், கோயில் தழீஇய பணிகள், கல்விப்பணிகள், மொழிப்பணிகள், பிறதுறை அறப்பணிகள் என்ற தலைப்புக்களில் விளங்க எடுத்துரைத்துள்ளார்கள். நகரத்தாரின் வரலாறு சுருக்கமாகவே எழுதப்பட்டுள்ளது. அறப்பணிகளை ஆசிரியர், சமயம் தொடர்பானவை, சமுதாயம் தொடர்பானவை, ஒப்புரவு எனும் பேரறங்கள், காலத்திற்குத் தேவையான அறப்பணிகள் எனப்பாகுபடுத்துகின்றார். அறத்தை ஆசிரியர் சமயத் தொடர்பான அறம் என்றும் சமூகத்தொடர்பான அறம் என்றும் வகுத்து விளக்குகிறார். சமயமும் சமூகத் தொடர்புடையதே.

ஆசிரியர் அரிதின்முயன்று பல ஆவணங்களைத் தொகுத்து விளக்கியுள்ளார். அவரது முயற்சி பாராட்டுக்குரியது. தமிழக மேல்தட்டுச் சாதியாரில் நாட்டுக்கோட்டை நகரத்தார் பொதுத்தொண்டு புரிவதில் முன்னிடத்தில் உள்ளனர். தமிழக வளர்ச்சியில் இவ்வினத்தாரது பங்கு இன்னும் சிறப்பாக ஆராய்ந்து விளக்கப்படவேண்டிய ஒன்றாகும்.

நகரத்தாரின் பணிகளை பிராமணநெறியாக்கம் [Sanskritisation] மேற்கத்திய ஆக்கம் [Westerntisation] தமிழ்த் தேசிய நோக்க [Tamil Nationalism] முடையது என்ற முப்பெரும் பிரிவுகளில் அடக்கி விளக்கலாம் எனக் கருதுகிறேன். இந்நோக்கிலும் நகரத்தாரின் பணிகளை விரிவாக விளக்க ஆதாரங்கள் உள்ளன. ஆசிரியர் தொடர்ந்து இவ்வாய்வினை மேற்கொள்ளும் போது இதனை மனத்திற் கொள்ள வேண்டுமென வேண்டுகின்றேன்.

நகரத்தார் தொண்டினை வெளிப்படுத்தும் - ஓரளவு முழுமையான தமிழ்நூல் இது எனக் கருதுகிறேன்.

மனைவியின் நூலை வெளிக்கொணரக் கணவர் திரு சொக்கலிங்கம் பதிப்பகம் நிறுவியுள்ளதும் பாராட்டுக்குரியது. இந்த நல்ல தமிழ்க் குடும்பத்தின் பணி மேலும் சிறப்புற்று ஓங்குவதாக என வாழ்த்துகிறேன்.

கோ. விசயவேணு கோபால்

என்னுரை

'நகரத்தாரின் அறப்பணிகள்' என்ற ஆய்வேடு முனைவர் பட்டத்திற்காக மதுரை காமராசர் பல்கலைக் கழகத்திற்கு நான் அளித்தது. அதனை ஏற்றுப் பட்டம் நல்கி நூலாக வெளியிட இசைவு தந்த பல்கலைக் கழகத்தாருக்கு முதற்கண் நன்றி.

ஆய்வு செய்ய முனைந்தபோது அன்புடன் ஊக்கம் அளித்து அனுமதி வழங்கிய எங்கள் கல்லூரி நிறுவனர் அமரர் 'செந்தமிழ்ச் செல்வர்' திரு.இராம.பெரி. பெரியகருப்பன் செட்டியார் அவர்கட்கும் என்பால் மிகுந்த அன்பு பாராட்டிய திருமதி பெரி. மெய்யம்மை ஆச்சி அவர்கட்கும் கல்லூரித் தலைவர் திரு பெரி. பெரியகருப்பன் அவர்கட்கும், கல்லூரிச் செயலர் திரு பெரி. வீரப்பன் அவர்கட்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

ஆய்வுத் தலைப்பைத் தேர்ந்தெடுத்து அறிவுரை கூறி ஆய்வுக்குப் பல்லாற்றானும் உறுதுணையாக இருந்ததோடு இந்நூலுக்கு வாழ்த்துக் கவிதையும் வழங்கிய முனைவர் அர. சிங்கார வடிவேலன் அவர்கட்கு என் நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

இந்நூலுக்கு ஆசியுரை வழங்கவேண்டும் என்று வேண்டிய போது அமெரிக்காவிலிருந்து ஆசியுரையும் வாழ்த்துரையும் வழங்கிய நகரத்தார் குருபீடமான கோவிலூர் மடாலயம் தவத்திரு நாச்சியப்ப சுவாமிகள் அவர்களுக்கும், திருவண்ணாமலை ஆதீனம் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்களுக்கும் என் பணிவான நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

இந்நூலுக்கு அணிந்துரை வேண்டும் என்று கேட்டவுடன் அன்புடன் அணிந்துரை அளித்துதவிய முனைவர் தமிழண்ணல் அவர்கட்கும், முனைவர் கோ. விசயவேணுகோபால் (பிரெஞ்சு இந்தியவியல் ஆய்வகம்) அவர்கட்கும் நன்றிக் கடப்பாடுடையேன். இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கிய திருப்பணிச்செம்மல் ஏ.எல்.ஏ.ஆர்.சோம. நாராயணன் செட்டியார் அவர்களுக்கும் எங்கள் கல்லூரி முன்னாள் முதல்வர் தமிழாகரர் தெ. முருகசாமி அவர்கட்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நகரத்தாரின் அறப்பணிகள் தொடர்பாகக் கள ஆய்வை மேற்கொண்டபோதும், நேர் காணலின்போதும், கடிதங்கள் எழுதிய போதும் பல அரியசெய்திகளைத் தந்துதவிய நகரத்தார் பெருமக்களுக்கும், நூல்கள் கொடுத்துதவிய நூலகமேதை திரு ரோஜா முத்தையா அவர்கட்கும் பல நிலைகளில் உதவிய ஏனையோருக்கும் என் நன்றிகள்.

வாழ்க்கைத் துணையாக மட்டுமல்லாமல் என் ஆய்வுக்கும் துணையாக இருந்து இந்நூல் வெளிவர ஆவண செய்த என் கணவர் திரு கி. சொக்கலிங்கம் அவர்கட்கும் குடும்பப் பொறுப்பைப் பகிர்ந்து கொண்ட என் குழந்தைகளுக்கும் என் பெற்றோருக்கும் என் நன்றி என்றும் உரியது.,

இந்நூலை மிக நல்ல முறையில் அச்சிட்டு உதவிய தெய்வம் உடனடி ஆப்செட் அச்சகத்தாருக்கும், கம்ப்யூட்டர் டிசைனிங் செய்துகொடுத்த தே. வள்ளியப்பனுக்கும் என் நன்றி உரித்தாகும்.

நகரத்தார்களின் பூர்வீகமான, காவிரிப்பூம் பட்டினத்திலிருந்து வெளிவரும் இந்நூலை அறப்பணிகள் ஆற்றிய நகரத்தார் பெருமக்களுக்கு காணிக்கையாக்கி மகிழ்கிறேன்.

நா. வள்ளி

7. லெட்சுமணன் செட்டியார் தெரு,
காரைக்குடி - 630 001.
✆ :(04565) 420274.

உள்ளுறை

குறியீட்டு விளக்கம்

இராய. சொ.	இராய. சொக்கலிங்கம்
ப.	பக்கம்
பக்.	பக்கங்கள்
கழகம்	தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்
தொ.ஆ.	தொகுப்பு ஆசிரியர்
ப. ஆ.	பதிப்பாசிரியர்
மொ.ஆ.	மொழிபெயர்ப்பாசிரியர்
Ed.	Editor
P.	Page
PP.	Pages
Vol.	Volume

1. முன்னுரை

1. ஆய்வுத் தூண்டல் :-

அறஞ்செய்து சிறப்படைந்த சமூகங்களுள் நகரத்தார் சமூகமும் ஒன்று. பல கோடி மக்கள் வாழும் பாரத நாட்டில் நகரத்தார்கள் சிறுபான்மைச் சமூகத்தினராவர்.

ஒரு சமுதாயத்தைப் பற்றி ஆராயும்போது அச்சமுதாயம் எவ்வளவு பெரியது என்று ஆராய்வதைவிட, அச்சமுதாயம் நாட்டிற்கு என்ன செய்திருக்கிறது என்று ஆராய்வது சிறப்புடையதாகும். அந்த நோக்கில் நகரத்தார் சமூகத்தை ஆராய்ந்தால் அவர்கள் நாட்டிற்குச் செய்த அறப்பணிகள் தெரியவரும். அவர்கள் என்னென்ன அறப்பணிகளை, ஏன், எவ்வாறு, எத்தகைய சூழ்நிலையில் செய்தார்கள் என்ற ஆய்வை ஆய்வாளர் மேற்கொண்டுள்ளார். அவர்கள் அறப்பணிகள் குறித்த அரிய செய்திகளை உலகறியச் செய்ய வேண்டும் என்ற ஆய்வுத் தூண்டலே இவ்வாய்வினைத் தொடங்குவதற்குக் காரணமாக உள்ளது.

2. ஆய்வுத் தலைப்பு :-

"நகரத்தாரின் அறப்பணிகள்"

நகரத்தார்கள் செட்டிநாட்டைச் சேர்ந்தவர்கள். செல்வர்கள். கடல் கடந்து பொருளீட்டும் மரபுடையவர்கள். ஆக்கிய செல்வத்தில் ஒரு பகுதியை அறப்பணிகளிற் செலவிடுவது அவர்களின் குல மரபு. நகரத்தார்கள் செய்த அறப்பணிகள் வகையாலும் தொகையாலும் பல. அவர்கள் உண்டாக்கிய விடுதிகளையும், மடங்களையும், சத்திரங்களையும், கோயில்களையும், நகர விடுதி, நகர மடம், நகரச் சத்திரம், நகரச் சிவன் கோயில் என்றே பெயரிட்டு அழைத்தனர்.

மேலும் நகரத்தார் பெண்களின் குருபீடமான துலாவூர் மடத்தில் சுமார் 300 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஓலைச் சுவடிகள் உள்ளன. அவற்றில் நகரத்தார் தொடர்பான ஓலைச் சுவடிகளில் 'நகர ஓலை', 'நகர வரன்முறை', 'நகர ஒப்பந்தம்' என்றே காணப்படுகின்றன. இதனால், பலவகையாகக்

குறிப்பிடப் பெற்றாலும் இவர்களுக்கு 'நகரத்தார்' என்ற பெயரே பெரும்பான்மையாக வழங்கியது என அறியமுடிகிறது. ஆதலால், ஆய்வாளர் 'நகரத்தார்' என்ற சொல்லையே ஆளுகிறார். நகரத்தார் செய்த அறப்பணிகளே ஆய்வுக்குரிய பொருளாகின்றன.

3. ஆய்வுச் சிக்கல்:

1. நகரத்தார்கள் யார்? அவர்கள் வரலாறு என்ன?
2. நகரத்தார்கள் அறப்பணிகளில் ஈடுபட்டது ஏன்?
3. எத்தகைய அறப்பணிகளை அவர்கள் செய்திருக்கிறார்கள்?
4. சமயப் பணிகளில் அவர்கள் அதிகமாக ஈடுபட்டது ஏன்?
5. காலத்திற்கேற்பச் சமுதாயத்திற்குத் தேவையான பணிகளைச் செய்திருக்கிறார்களா?
6. நகரத்தார்கள் செய்த சமயப் பணிகள் யாவை?
7. நகரத்தார்கள் செய்த சமுதாயப் பணிகள் யாவை?
8. நகரத்தார்களின் மொழிப் பணிகள் யாவை?
9. நகரத்தார்களின் கல்விப் பணி எத்தகையது?

மேற்கண்ட வினாக்களை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆய்வு அமைகிறது.

4. ஆய்வின் நோக்கம்:

"சகல தேவாலயம் மடாலயம் திருப்பணிகள்
சத்திரம் தண்ணீர்க் குளஞ் சாலை முதல்
எண்ணான்கு தன்மமும் இயற்றும் சீலர்"

என்று 'நகரத்தாரென்னுந் தனவைசியர் பஞ்சரத்னம்' என்ற நூல்[1] கூறுகிறபடி தங்களால் இயன்ற அறப்பணிகளைச் செய்து 'ஈதல் இசைபட வாழ்தல்' என்ற கொள்கையோடு வாழ்ந்த நகரத்தார்களின் அறப்பணிகளை ஆய்வது நகரத்தார் புகழுக்குச் சங்கு ஊதுவதற்காக அன்று. பழமையைச் சொல்லிப் புதுமைக்குப் புதிய ஊக்கம் பெறச் செய்வதற்கே.

'சிவகோத்திர வைசிய விருத்தி' என்ற நூல், 'நாட்டுக்கோட்டை வைசியமகா சமூகத்தின் பேரறப் பணிகளை அணிபெற வரைவது பாரதமாதாவின் திருமுகத்தை அணிபெறச் செய்தலையே ஒக்கும்,[2] என்று கூறுகிறது.

முனைவர் வ. சுப. மாணிக்கனார், மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக இருந்தபோது 'நகரத்தார் குரல்' என்ற இதழில் ''நகரத்தார் வரலாறு குறிப்பிட்ட ஓரெல்லைக்கோ, குறிப்பிட்ட ஒரு காலத்துக்கோ, குறிப்பிட்ட ஓரினத்துக்கோ உட்பட்டதன்று. நகரத்தார்கள் இருந்த இடம், சென்ற இடம் எல்லாம் வரலாற்றுத் தடங்கள் உண்டு. சைவ சமயம் கடல் கடந்து பரவியதற்கும் கோயிற் கலைகள் அங்கெல்லாம் நிலைத்திருப்பதற்கும் நகரத்தார் தம் பொதுத் தொண்டு மனமே தலையாய காரணமாகும். நகரத்தார்கள் இமய முதல் குமரி வரையும் ஆற்றியிருக்கும் தொண்டுகள் அளப்பறியவை. எனவே நகரத்தார் வரலாறு தமிழ்நாட்டு வரலாற்றிலும், தமிழ் மொழி வரலாற்றிலும், இந்திய விடுதலை வரலாற்றிலும் தொழில் வரலாற்றிலும் கணிசமான பங்குடையது. இவைபற்றிய பேராய்வு, வளரும் பெரு ஆய்விற்குத் துணை செய்யும். ''நகரத்தார் ஆய்வுத் திட்டம்'' ஒன்று பல்கலைக் கழகத்தில் நிறுவ நகரத்தார்கள் பொருளுதவி செய்ய வேண்டும்'' என்று எழுதியுள்ளார்.[3]

நகரத்தார் வரலாறு தமிழ் நாட்டின் வரலாறு மட்டுமன்று இந்திய நாட்டின் வரலாறு மட்டுமன்று உலக வரலாற்றின் ஒரு பகுதி என்ற நிலையில் நகரத்தார்களின் அறப்பணிகளை ஆராய்தல் இவ்வாய்வின் நோக்கமாக அமைகிறது.

5. ஆய்வுத்துணை:

இவ்வாய்விற்கு நகரத்தார்கள் திருப்பணி செய்த கோயில்களும், புதிதாகக் கட்டிய கோயில்களும், தோற்றுவித்த பசுமடங்களும், நந்தவனங்களும், அன்னதான மடங்களும், நகர விடுதிகளும், நகரச் சத்திரங்களும், பாடசாலைகளும், ஊருணிகளும், தண்ணீர்ப் பந்தல்களும், சுமைதாங்கிக் கற்களும், சாலைகளும், பாலங்களும், தண்ணீர்த் தொட்டிகளும், மருத்துவச் சாலைகளும், பள்ளிகளும், கல்லூரிகளும், பல்கலைக் கழகங்களும், பதிப்பகங்களும் அடிப்படைச் சான்றாதாரங்களாகின்றன.

நகரத்தார் வரலாறு தொடர்பான பல தமிழ், ஆங்கில நூல்களும், நெற்குப்பை, துலாவூர் மடம் ஆகிய இடங்களில் உள்ள ஓலைச் சுவடிகளும், நகரத்தாரின் அறப்பணிகளை விளக்கும் கல்வெட்டுக்களும், நகரத்தார்களைப் பற்றிய பல இலக்கியங்களும், தல வரலாற்று நூல்களும், பல குடமுழுக்கு மலர்களும், நகரத்தார் சமூக இதழ்களும் சான்று மூலத்துணையாக அமைகின்றன. அவற்றைப் பற்றிய செய்திகள் இயன்ற வரையில் தொகுக்கப் பெற்றுச் சான்று மூலாதாரப் பட்டியலில் தரப்பட்டுள்ளன.

6. முன்னைய ஆய்வுகள்:

அயல் நாடுகளிலும் இந்தியாவிலும் நகரத்தார்களைப் பற்றிய ஆராய்ச்சிகளைப் பல்வேறு துறைகளில் பலர் ஆய்வு செய்துள்ளனர். அவர்கள் ஆய்வுகள் வெவ்வேறு துறைகளில் அமைந்தவை. எடுத்துக்காட்டாக, இலண்டன் ஆக்சுபோர்டு பல்கலைக் கழகத்தில் **Yuko Nishimura** என்ற பெண்மணி ஆங்கிலத்தில்**'Religious and Customs of Nagarathar'** 'என்ற தலைப்பில் ஆய்வு செய்துள்ளார். இந்தியாவில் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் முனைவர் வ. தேனப்பன் ஒன்பது நகரக் கோயில்கள்' என்ற தலைப்பிலும், முனைவர் அன்பு மீனாள் நகரத்தார்களின் கையறுநிலைப் பாடல்கள்' என்ற தலைப்பிலும் ஆய்வு செய்துள்ளனர்.

ஆய்வாளரின் ஆய்வு, 'நகரத்தார்களின் அறப்பணிகள் பற்றியது. நகரத்தாரின் அறப்பணிகள் தொடர்பான செய்திகளை ஆய்வு நோக்கில் பார்க்கும்போது 'இரத்தினதன மகுட வைசியர் என்னும் நகரத்தார் முதுநெறி விளக்கம்' என்ற நூல்தான் நகரத்தாரின் சிறப்புக்களையும் அவர்கள் செய்த அறப்பணிகளையும் நூல் வடிவில் எடுத்துக் கூறும் முந்தைய நூலாகும். அந்நூலில் அதன் ஆசிரியர், 'பல தருமங்களையும் செய்துவரும் நகரத்தாரின் பெயர்கள், தருமஞ் செய்த இடம், காலம், அத்தரும நிலையத்தின் உருவப் படம், தருமம் செய்த குடும்பத்தாரில் இப்போதிருக்கும் தலைவரின் உருவப்படம் முதலியவைகளைச் சேர்த்து "நாட்டுக்கோட்டை நகரத்தார் தரும பரிபாலன விளக்கம் என்னும் நூல் பிரசுரம் செய்யக் கருதியுள்ளோம்" என்று எழுதியுள்ளார்.[4] ஆனால் அந்நூல் வெளிவந்ததாகத் தெரியவில்லை.'

அமராவதிபுதூர் வயிநாகரம் அ. இராமநாதன் செட்டியார் தொகுத்து, பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரால் திருத்தி அமைக்கப் பெற்று கானாடுகாத்தான் ஆர். இராமநாதன் செட்டியாரால் 1953-இல் வெளியிடப்பட்ட 'நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு' என்ற நூலில் நகரத்தார்கள் தமிழகத்திலும், காசியிலும் ஆற்றிய அறப்பணிகள் பற்றிய செய்திகள் ஊர் வாரியாகப் பட்டியலிட்டுச் சொல்லப்பட்டுள்ளன.

அடுத்து, அ.சேக்ஷாத்திரி சர்மா எழுதிய 'நாட்டுக் கோட்டை நகரத்தார் வரலாறு' என்ற நூலிலும் நகரத்தாரின் அறப்பணிகள் தொடர்பான செய்திகள் இடம்பெற்றுள்ளன.[5]

1980-இல் 'தினமணிகதிர்' என்ற வார இதழ் நகரத்தார்களைப் பற்றிய சிறப்பிதழை வெளியிட்டது. அதில் குன்றக்குடி பெரிய பெருமாள் என்பார் நகரத்தார்களைக் குறித்தும், அவர்களது அறப்பணிகளைக் குறித்தும் கட்டுரை எழுதியுள்ளார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில், பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியாரைத் தலைவராகக் கொண்டு 'நகரத்தார் வரலாற்று ஆய்வுக் குழு' நகரத்தார்களின் வரலாறு, பண்பாடு, பெருமை, புகழ், வணிகம், பொருளாதார மேம்பாடு, பழக்க வழக்கங்கள், அறச்செயல்கள், வாழ்க்கை முறைகள், நாகரிகம், வெளிநாட்டுத் தொடர்பு, மக்கள் தொகை மதிப்பீடு முதலியன குறித்து ஆய்வு அடிப்படையில் ஆராய்ச்சி நூலொன்று தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளிவரவேண்டும் என்ற நோக்கத்தோடு தொடங்கப்பெற்றது. அதன் விளைவாக **'The Nagarathar of South India'** என்ற ஆங்கில நூலொன்று வெளிவந்தது.

1981-இல் காரைக்குடியில் நடந்த நகரத்தார் நல உரிமை மாநாட்டில் நகரத்தாரின் அறப்பணிகளை விளக்கும் சிறு குறிப்பேடு ஒன்று வெளியிடப்பட்டது.

இவையே நகரத்தாரின் அறப்பணிகளைக் குறித்து ஆய்வுப் போக்கில் வெளிவந்துள்ள நூல்களாகும். இத்தலைப்பில் முதலாவதாக விரிவான அளவில் தனி ஆராய்ச்சியாக மேற்கொள்ளப் பெறும் ஆய்வு இதுவேயாகும்.

7. ஆய்வு முறை:

விளக்குமுறை, பகுப்பாய்வு முறை, ஒப்பாய்வு முறை, திறனாய்வு முறை, மதிப்பீட்டு முறை ஆகியவற்றுள் தேவைக்கேற்ற முறைகள் கையாளப்பட்டுள்ளன.

8. ஆய்வுப் பரப்பும் சான்றாதாரத் தொகுப்பும்:

நகரத்தார்கள் தாங்கள் வசிக்கும் ஊர்களிலும் அருகிலுள்ள பல ஊர்களிலும், தமிழ் நாட்டிலுள்ள பல தலங்களிலும், மற்றும் தென்னிந்தியாவிலும், கீழ்த்திசை நாடுகளிலும், மேலை நாடுகளிலும் அறப்பணிகள் புரிந்துள்ளார்கள்.

நகரத்தார்களின் அறப்பணிகள் பற்றிய ஆய்வுப் பரப்பு மிக விரிவானது. கி. பி. 18, 19, 20 ஆம் நூற்றாண்டுகளில் நகரத்தார்களின் அறப்பணிகளுக்கான ஆதாரங்கள் மிகுதியாகக் கிடைக்கின்றன. ஆகையால் அந்த நூற்றாண்டுகளில் நகரத்தார்கள் செய்த அறப்பணிகளும் ஒப்பீட்டு அளவில் மற்ற காலச் செய்திகளும் இவ்வாய்வில் சொல்லப்பட்டுள்ளன.

நகரத்தார்களின் அறப்பணிகள் தொடர்பான செய்திகளை ஆய்வாளர் சேகரித்த நிலையில் அச்செய்திகள் பல்கிப் பெருகியிருப்பதைக் கண்டு, ஆய்வேட்டின் பக்க வரையறையை மனத்திற் கொண்டு ஆய்வாளர் அறப்பணிகள் பற்றிய செய்திகளைப் பெரும்பாலும் கொள்கைகளாகவே கூறியுள்ளார். நகரத்தார்கள் அனைவருமே ஏதாவது ஒரு வகையில் அறப்பணிகளோடு தொடர்பு கொண்டிருப்பதால் அவர்கள் அனைவரையும் கூற இயலாத நிலையில் முக்கியமான ஒரு சிலரின் பெயர்களே ஆய்வேட்டில் இடம்பெற்றுள்ளன.

நகரத்தார்கள் திருப்பணி செய்த கோயில்கள் மற்றும் அவர்கள் ஏற்படுத்திய பாடசாலைகள், பசுமடங்கள், நந்தவனங்கள், பாலங்கள், சாலைகள், சத்திரங்கள், விடுதிகள், கல்வி நிலையங்கள், பதிப்பகங்கள் ஆகியவற்றை ஆய்வாளர் இயன்றவரையில் நேரில் கண்டு ஆய்வு செய்துள்ளார். மற்றும் ஊர்ப் பெரியவர்கள், கோயில் அறங்காவலர்கள், நகரத்தார் சமூகத்தைச் சேர்ந்த அறிஞர்கள், அறப்பணிகள் செய்த

குடும்பத்தார்கள் ஆகியோரிடம் நேர்காணல் மூலமாகவும், பழைய ஆவணங்கள், ஓலைச் சுவடிகள் மூலமாகவும், வினாப் பட்டியல் மூலமாகவும் செய்திகளைத் திரட்டியுள்ளார்.

கோயில் திருப்பணி செய்தது, ஊருணி வெட்டியது, சத்திரங்கள், விடுதிகள் கட்டியது, கோயில் உள்ள மலைகளில் ஏறப் படிக்கட்டுகள் அமைத்தது, வீதிகள் அமைத்தது, சுமைதாங்கிக் கற்கள் அமைத்தது குறித்து அந்தந்த இடங்களில் உள்ள கல்வெட்டுச் செய்திகளையும் ஆய்வாளர் நேரில் கண்டு செய்திகளைச் சேகரித்துள்ளார்.

நகரத்தாரின் அறப்பணிகள் தொடர்பான நூல்கள், குடமுழுக்கு மலர்கள், நகரத்தார் சமூகத்தைச் சேர்ந்த சான்றோர்களை நேர்காணல் மூலமாக நகரத்தார்கள் இந்தியாவின் பிற பகுதிகளிலும், அயல் நாடுகளிலும் செய்த அறப்பணிகள் தொடர்பான செய்திகளைத் திரட்டியுள்ளார்.

9. ஆய்வின் கருதுகோள்:

1. நகரத்தார் சமூகம் தமிழக வரலாற்றுக்கும் தமிழகக் கலைக்கும் நாகரிகத்திற்கும் தொடர்ச்சியூட்டிய சமூகம்.

2. நகரத்தார்கள் இயல்பாகவே அற உணர்வு உடையவர்கள், அதனால் ஒல்லும் வகையால் அறவினைகளை ஓவாது செய்தார்கள்.

3. சிக்கனமாக வாழ்ந்து செல்வம் ஈட்டி அறப்பணிகள் ஆற்றுவதை வாழ்க்கைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தார்கள். கடல் கடந்து வெளிநாடுகளுக்குச் சென்று பெரும் பொருள் ஈட்டிய நகரத்தார்கள், ஈட்டியதில் ஒரு பகுதியை அறப்பணிகளுக்கென்றே ஒதுக்கினார்கள். அவர்கள் இனத்தொகை சிறிது; ஆனால் அறப்பணிகளுக்கு வழங்கிய தொகை மிகப் பெரிது. கி. பி. 1800 முதல் 1950 வரையில் நகரத்தார்கள் செய்த அறப்பணிகளின் பொருள் அளவு சுமார் பன்னிரண்டு கோடி என மதிப்பிடப்பட்டிருக்கிறது. அதன் இன்றைய மதிப்பு பல கோடி ரூபாய்களாகும்.

4. நகரத்தார்கள் ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையிலோ அல்லது குடும்பமாகவோ, கூட்டாகவோ சமுதாயத்திற்குச் சிறந்த பணியாற்றியிருக்கிறார்கள்.

5. நகரத்தார்கள் செய்த சமயப் பணி, சமுதாயப் பணி, கல்விப் பணி, மொழிப்பணி ஆகியவை வரலாற்றில் குறிப்பிடத்தக்கவை. சமுதாயத்தின் தேவையறிந்து, காலமறிந்து சேவை செய்திருக்கிறார்கள்.

10. ஆய்வுப் பகுப்பு:

1. முன்னுரை
2. நகரத்தார் வரலாறு
3. நகரத்தாரும் அறப் பணிகளும்
4. நகரத்தாரின் கோயிற் பணிகள்
5. நகரத்தாரின் கோயில் தழீஇய பணிகள்
6. நகரத்தாரின் கல்விப் பணிகள்
7. நகரத்தாரின் மொழிப் பணிகள்
8. நகரத்தாரின் பிறதுறை அறப்பணிகள்
9. முடிவுரை.

11. பின்னிணைப்பு :

1. செட்டிநாட்டு வரைபடம்
2. நகரத்தார்கள் வசிக்கும் செட்டிநாட்டு ஊர்ப்பெயர்கள்
3. வினா நிரலும் விடையளித்தோர் நிரலும்
4. பாடல் பெற்ற தலங்களில் நகரத்தார்கள் செய்த திருப்பணிகளின் பட்டியல்
5. சான்று மூலாதாரப் பட்டியல்
6. துணைநூற் பட்டியல்.

அடிக்குறிப்புகள் :

1. சிவசண்முகம் பிள்ளை, ஏகை, **நகரத்தாரெனும் தனவைசியர் பஞ்சரத்னம்,** இரங்கோன் பிறையர் அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது. 1904 பாடல் எண். 02

2. ஆண்டியப்பன், **ப. சொ. சிவகோத்திர வைசிய விருத்தி,** முதற்பாகம், மதராஸ் மினர்வா அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது. 1924, ப. 10.

3. மாணிக்கம், வ. சுப. **நகரத்தார் குரல்** மார்ச் 1982, ப. 24.

4. வேற்சாமிநாதக் கவிராஜர் ந. **இரத்தின தன மகுட வைசியர் என்னும் நகரத்தார் முதுநெறி விளக்கம்,** மனோண்மணிவிலாஸ் பிரஸ், கடியாபட்டி, 1940, ப. 21.

5. பெரியபெருமாள், குன்றக்குடி, கட்டுரை, 'கோபுரம் போல் உயர்ந்த குலவணிகர்' **தினமணிகதிர்,** நகரத்தார் சிறப்பிதழ், 11-4-80, பக் 22-45.

2. நகரத்தார் வரலாறு

2.1. நகரத்தார் வாழுமிடம் :

2.1.1. செட்டிநாடு :

நகரத்தார்கள் தமிழகத்தில் சுமார் ஓர் இலட்சம் மக்கள் தொகையைக் கொண்ட சிறுபான்மைச் சமூகத்தினராவர். இவர்கள் வசிக்கின்ற பகுதிக்குச் செட்டிநாடு என்று பெயர். இப்பகுதி சுமார் 1700 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுடையது.

'செட்டிநாடு' என்ற சொல்லாட்சி, நகரத்தார் மரபைச் சேர்ந்த 'பாடுவார் முத்தப்பரின் பாடலில்தான் முதன் முதலில் காணப்படுகின்றது. செட்டிநாட்டுக்கு எல்லை சொல்லவந்த முத்தப்பர்.

"வெள்ளா றதுவடக்காம் மேற்குப் பிரான்மலையாம்
தெள்ளார் புனல்வையை தெற்காகும் - ஒள்ளியசீர்
எட்டிக்கடல் கிழக்காம் இஃதன்றோ நாட்டரண்சேர்
செட்டிநாட் டெல்லையெனச் செப்பு"

என்று பாடுகிறார்.[1] இதே செய்தி நகரத்தார் பெண்களின் குருபீடமான துலாவூர் மடத்தில் உள்ள நகரத்தார் தொடர்பான ஏட்டுச் சுவடிகளிலும் காணப்படுகிறது. ஆனால் 'செட்டிநாடு' என்ற சொல்லாட்சி காணப்படவில்லை. அந்த ஓலைச் சுவடிகளில் நகரத்தார் வாழ்ந்த பகுதி 'நாட்டுக்கோட்டைப்பூமி' 'நாட்டுக்கோட்டைச் சீமை' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.[2]

2. 1. 2. நகரத்தார் ஊர்கள் :

செட்டிநாட்டு ஊர்கள் சிவகங்கை மாவட்டத்திலும், புதுக்கோட்டை மாவட்டத்திலும் உள்ளன. நகரத்தார்கள் இவ்வூர்களில் பல்வேறு இனத்தாருடன் சேர்ந்து வாழுகின்றார்கள்.

கி. பி. 15, 16 ஆம் நூற்றாண்டுகளில் பாண்டிய நாட்டில் இசுலாமியர் கலகங்களும், சிற்றரசர் சண்டைகளும், பாளையக்காரர் கொள்ளைகளும் ஏற்பட்டதால் பாண்டிய நாட்டில் பல ஊர்களில் சிதறி வாழ்ந்த நகரத்தார்கள்

ஆங்கிலேயர் ஆட்சி ஏற்பட்டவுடன் அச்சம் நீங்கி, ஓர் ஊரிலிருந்து இன்னொரு ஊருக்குக் குடியேறும் வழக்கத்தை விட்டுத் தொண்ணூற்றாறூர் என்று வரையறுத்துக் கொண்டு வாழத் தொடங்கினர். அந்நிலையில் தான் அவர்களுக்குத் 'தொண்ணூற்றாறூர் நகரத்தார்' என்ற பெயர் ஏற்பட்டது.

இப்போது அவர்கள் எழுபத்து ஐந்து ஊர்களைத் தங்கள் வாழிடமாகக் கொண்டு வாழ்கிறார்கள். அவர்கள் மறவர் நாட்டின் பல ஊர்களில் வசித்து, பின் இப்போதுள்ள ஊர்களுக்குக் குடி வந்தவர்கள் என்பதை, அவர்கள் எந்த ஊரிலிருந்து வந்து குடியேறினார்களோ அந்த ஊரின் பெயரால் அழைக்கப்படுவதிலிருந்து உணரலாம். சான்றாகத் தேவகோட்டையில் 'ஆலம்பட்டார் வீடு', காரைக்குடியில் 'ஆர்க்காட்டார் வீடு', 'ஆலங்குடியார் வீடு', 'கீரணிப்பட்டியார் வீடு', 'கொரட்டியார் வீடு', 'சேந்தணியார் வீடு', இராயவரத்தில் 'ஓணாங்குடியார் வீடு' ஆகிய அடையாளப் பெயர்கள் வழக்கிலிருக்கின்றன.

நகரத்தார்கள் இன்று வணிகம், தொழில், வேலை வாய்ப்பு ஆகியவற்றின் காரணமாகப் பற்பல பகுதிகளில் வசித்தாலும், திருமணம் போன்ற நிகழ்ச்சிகளைப் பெரும்பாலும் சொந்த ஊர்களிலேயே நடத்துவதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர்.

2. 2. நகரத்தார்களும் கோயில் பிரிவுகளும் :

நகரத்தார்கள் ஒன்றுகூடித் தங்களுக்குள் சாதிமுறை நியாயங்களை வகுத்துக் கொண்டு வாழ்ந்தார்கள். அவர்களுடைய சாதிமுறை நியாயங்களுள் ஒன்று, ''சிவ மதத்திலேயே இருக்கிறது. அன்னிய மதங்களில் சேரக்கூடாது. சிவ மதமும் சிவ தர்மமுமாக நடக்கிறது'' என்பதாகும்.[3]

'சிவ மதத்திலேயே இருக்கிறது' என்ற கொள்கையை மிகவும் தீவிரமாகக் கடைப்பிடித்த நகரத்தார்கள் சிவன் கோயில்களை அடிப்படையாகக் கொண்டு ஒன்பது பிரிவினராக வாழ்ந்து வருகிறார்கள். சில பிரிவுகளில் உட்பிரிவுகளும் உண்டு. உட்பிரிவுகளை, 'கோத்திரம்' என்றும் 'கொடிவழி' என்றும் சொல்வர்.[4]

நகரத்தார்களின் ஒன்பது கோயில் பிரிவுகளும் இருபத்து மூன்று கோத்திரங்களும் வருமாறு:

1). இளையாத்தங்குடிக் கோயில்:
இறைவன் பெயர் - கைலாசநாதர்
இறைவி பெயர் - நித்திய கல்யாணி

பிரிவுகள் :

அ) கல்வாசல் நாட்டில் இளையாத்தங்குடியான குலசேகரபுரத்தில் ஒக்கூருடையார்

ஆ) கல்வாசல் நாட்டில் இளையாத்தங்குடியான குலசேகரபுரத்தில் அரும்பாற்கிளையரான (அரும்பூர்க்கிழாரான) பட்டணசாமியார்

இ) கல்வாசல் நாட்டில் இளையாத்தங்குடியான குலசேகரபுரத்தில் பெருமருதூருடையார்

ஈ) கல்வாசல் நாட்டில் இளையாத்தங்குடியான குலசேகரபுரத்தில் கழனிவாசற்குடியார்

உ) கல்வாசல் நாட்டில் இளையாத்தங்குடியான குலசேகரபுரத்தில் கிண்கிணிக்கூருடையார்

ஊ) கல்வாசல் நாட்டில் இளையாத்தங்குடியான குலசேகரபுரத்தில் பேரசெந்தூருடையார்

எ) கல்வாசல் நாட்டில் இளையாத்தங்குடியான குலசேகரபுரத்தில் சிறுசேத்தூருடையார்

2) மாற்றூர்க் கோயில் :

இறைவன் பெயர் - ஐந்நூற்றீசர்
இறைவி பெயர் - பெரியநாயகி

பிரிவுகள் :

அ) கேரளசிங்க வளநாடாகிய பிரம்பூர் நாட்டில் மாற்றூரான வீரபாண்டியபுரத்தில் உறையூருடையார்

ஆ) கேரளசிங்க வளநாடாகிய பிரம்பூர் நாட்டில் மாற்றூரான வீரபாண்டியபுரத்தில் அரும்பாக்கூருடையார்

இ) கேரளசிங்க வளநாடாகிய பிரம்பூர் நாட்டில் மாற்றூரான வீரபாண்டியபுரத்தில் மணலூருடையார்

ஈ) கேரளசிங்க வளநாடாகிய பிரம்பூர் நாட்டில் மாற்றூரான வீரபாண்டியபுரத்தில் மண்ணூருடையார்

உ) கேரளசிங்க வளநாடாகிய பிரம்பூர் நாட்டில் மாற்றூரான வீரபாண்டியபுரத்தில் கண்ணூருடையார்

ஊ) கேரளசிங்க வளநாடாகிய பிரம்பூர் நாட்டில் மாற்றூரான வீரபாண்டியபுரத்தில் கருப்பூருடையார்

எ) கேரளசிங்க வளநாடாகிய பிரம்பூர் நாட்டில் மாற்றூரான வீரபாண்டியபுரத்தில் குளத்தூருடையார்

3) நேமம் கோயில் :

இறைவன் பெயர் - செயங்கொண்ட சோழீசர்
இறைவி பெயர் - சவுந்தர நாயகி

கேரளசிங்க வளநாட்டில் நேமமாகிய குலசேகரபுரத்தில் இளநலமுடையார்.

4) வயிரவன்பட்டிக் கோயில் :

இறைவன் பெயர் - வளரொளிநாதர்
இறைவி பெயர் - வடிவுடையம்மை

பிரிவுகள் :

அ) கேரளசிங்க வளநாடாகிய ஏழகப் பெருந்தெருவான வீரபாண்டியபுரத்தில் சிறுகுளத்தூ ருடையார்

இதில் உட்பிரிவுகள் :

பெரிய வகுப்பு
தெய்யனார் வகுப்பு (தெய்வ நாயகர் வகுப்பு)
பிள்ளையார் வகுப்பு

ஆ) கேரளசிங்க வளநாடாகிய ஏழகப் பெருந்தெருவான வீரபாண்டியபுரத்தில் கழனிவாசலுடையார்

இ) கேரளசிங்க வளநாடாகிய ஏழகப் பெருந்தெருவான வீரபாண்டியபுரத்தில் மருதேந்திரபுரமுடையார்.

5) இலுப்பைக்குடிக் கோயில் :

இறைவன் பெயர் - தான்றோன்றியீசர்
இறைவி பெயர் - சவுந்தரநாயகி

அ) கேரளசிங்க வளநாடாகிய பிரம்பூர் நாட்டில் இலுப்பைக்குடியான புகலிடங்கொடுத்த பட்டணத்தில் சூடாமணிபுரமுடையார்

6. சூரைக்குடிக் கோயில் :

இறைவன் பெயர் - தேசிகநாதர்
இறைவி பெயர் - ஆவுடைநாயகி

அ) கேரளசிங்க வளநாட்டில் சூரைக்குடியான தேசிக நாராயணபுரத்தில் புகழ்வேண்டிய பாக்கமுடையார்

7. வேலங்குடிக் கோயில் :

இறைவன் பெயர் - கண்டீசுவரர்
இறைவி பெயர் - காமாட்சியம்மை

அ) கேரளசிங்க வளநாடாகிய பாலையூர் நாட்டில் வேலங்குடியான தேசிகநாராயணபுரத்தில் கழனி நல்லூருடையார்.

8. இரணியூர்க் கோயில் :

இறைவன் பெயர் - ஆட்கொண்டநாதர்
இறைவி பெயர் - சிவபுரந்தேவி

அ) கல்வாசல் நாட்டில் இளையாத்தன்குடியான குலசேகரபுரத்தில் இரணியூர் மருதங்குடியான இராசநாராயணபுரத்தில் இரணியூர்த் திருவேட்பூருடையார்

9. பிள்ளையார்பட்டிக் கோயில் :

விநாயகர் பெயர் - தேசிக விநாயகர் (கற்பக விநாயகர்)
இறைவன் பெயர் - திருவீசர்
இறைவி பெயர் - சிவகாமவல்லி
இறைவன் பெயர் - மருதீசர்
இறைவி பெயர் - வாடாமலர் மங்கை

கல்வாசல் நாட்டில் இளையாத்தங்குடியான குலசேகரபுரத்தில் இரணியூர் மருதங்குடியான இராசநாராயணபுரத்தில் பிள்ளையார்பட்டியான திருவேட்பூருடையார்

நகரத்தார்கள் முன்பு 'இளையாத்தங்குடி நகரத்தார்கள்' என்ற ஒரே பிரிவினராகத்தான் இருந்திருக்கிறார்கள்.

" இங்கிலீசுக் - கொடி பறக்கவே
இளையாத்தங்குடி நகரம் சிறக்கவே "

என்று பாடுவார் முத்தப்பரும் எல்லா நகரத்தாரையும் இளையாத்தங்குடி நகரத்தார் என்றே குறிப்பிடுகிறார்.[5]

காலப்போக்கில் ஏழு பிரிவினராக அதாவது இளையாத்தங்குடி நகரத்தார், மாற்றூர்க் கோயில் நகரத்தார், நேமம் கோயில் நகரத்தார், வைரவன் கோயில் நகரத்தார், இலுப்பைக்குடிக் கோயில் நகரத்தார், சூரைக்குடிக் கோயில் நகரத்தார், வேலங்குடிக் கோயில் நகரத்தார் என்று பிரிந்து வாழ்ந்தனர்.

நீண்ட நாட்கள் வரை ஏழு பிரிவுகள் தான் இருந்தன. 'ஏழு நகரத்தார் பேரில் பள்ளு நாடகம்', 'ஏழு நகரத்தார் பேரில் குழுவ நாடகம்' என்று நகரத்தார்களின் பேரில் எழுந்த இலக்கியங்களும் 'ஏழு நகரத்தார்' என்றே குறிப்பிடுகின்றன. இரணியூரில் அண்மையில் கிடைத்த செப்பேடும் 'ஏழு நகரத்தார்' என்றே கூறுகிறது.[6]

இளையாத்தங்குடியில் இப்போதுள்ள ஏழு உட்பிரிவினரோடு முன்பு திருவேட்பூருடையார் என்ற ஒரு பிரிவினரும் இருந்திருக்கிறார்கள். இராங்கியம், மறவாமதுரை, இரணியூர், கோனாபட்டு போன்ற இடங்களிலுள்ள கல்வெட்டுக்கள் இளையாத்தங்குடி திருவேட்பூருடையாரைக் குறிப்பிடுன்றன.[7] நகரத்தார் பழனி அறப் பட்டயமும் திருவேட்பூருடையார் என்ற கோத்திரத்தைக் குறிப்பிடுகின்றது.[8] இக்காலத்தில் இளையாத்தங்குடிக் கோயிலில் திருவேட்பூருடையார் என்ற உட்பிரிவு இல்லை.

இந்த திருவேட்பூருடையார் தான் நாளடைவில் இரணியூர்க் கோயிலாராகவும் பின்னர் பிள்ளையார்பட்டிக் கோயிலாராகவும் பிரிந்து இப்போதுள்ள ஒன்பது கோயில் பிரிவினராயிருக்கின்றனர்.[9] இந்த இரு கோயிலாரும் திருவேட் பூருடையார் கோத்திரத்திலிருந்து பிரிந்தவர்கள் என்பதை.

"கல்வாசல் நாட்டில் இளையாத்தங்குடியான
குலசேகரபுரத்தில் இரணியூர் மருதங்குடியான
ராசநாராயணபுரத்தில் இரணியூர்த் திருவேட்பூருடையார்"

என்றும்

"கல்வாசல் நாட்டில் இளையாத்தங்குடியான
குலசேகரபுரத்தில் இரணியூர் மருதங்குடியான
ராசநாராயணபுரத்தில் பிள்ளையார்பட்டியான
திருவேட்பூருடையார்"

என்றும் நகரத்தார் திருமணத்தின்போது எழுதப்படும் 'இசைவுப் பிடிமானம் முதலியவற்றில் குறிப்பிடுவதன் மூலம் அறியலாம். ஒரே பிரிவைச் சேர்ந்தவர்கள் ஆதலால் இரணிக் கோயிலாரும் பிள்ளையார்பட்டிக் கோயிலாரும் தங்களுக்குள் மணவினைத் தொடர்பு வைத்துக் கொள்வதில்லை. நகரத்தார்களின் குடிவழி அறிதற்கும் புள்ளிக் கணக்கு அறிதற்கும் நகரக் கோயில்கள் ஒன்பதிலுமுள்ள பதிவேடுகள் ஒப்பற்ற சான்றுச் செப்பேடுகளாகத் திகழ்கின்றன. திருமணமான பிறகு கணவனும் மனைவியுமாக இணைந்த ஒரு குடும்பம் 'ஒரு புள்ளி' எனப்படும்.

2. 3. பெயராய்வு :

இவர்களுக்கு, செட்டியார், நாட்டுக்கோட்டைச் செட்டியார் நாட்டுக்கோட்டை நகரத்தார், தனவைசியர், இரத்தின மகுட தன வைசியர், சிவகோத்திர வைசியர் என்ற பல பெயர்கள் உண்டு.[10]

செட்டியார், நாட்டுக்கோட்டைச் செட்டியார் என்ற பெயர்கள் வழக்கிலிருந்தாலும் இவர்கள் தங்களை நகரத்தார்கள் என்றே அழைத்துக் கொண்டனர். செட்டியார், நகரத்தார் என்ற பெயர்கள் இவர்களுக்கு ஏற்பட்டதற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன.

2. 3. 1. செட்டியார் - பெயராய்வு :

(1) 'சிரேஷ்டி' என்ற வடமொழிச் சொல் வணிகர்களைக் குறிக்கும் பெயராகும். இச்சொல்லிலிருந்து 'செட்டி' என்ற சொல் பிறந்தது என்று முன்னாள் பாரதப் பிரதமர் சவகர்லால் நேரு குறிப்பிடுகின்றார்.[11]

(2) இச்சமூகத்தார் செட்டாக, அதாவது சிக்கனமாக வாழும் இயல்பினர். இவர்களின் இந்த இயல்பினை,

"வீட்டினிற் செட்டாக வாழ்ந்திடுவார் - ஏதும்
வீணின்றி மிக்க கணக்கிடுவார்"

என்று பாராட்டுவார் கவியோகி சுத்தானந்த பாரதியார்.[12] செட்டாக வாழ்ந்ததனால் செட்டியார்கள் எனப்பட்டனர்.[13]

(3) வணிகர்களுள் சிறந்தவர்களுக்கு 'எட்டி' முதலிய பட்டங்கள் கொடுத்துச் சிறப்பிப்பது உண்டு என்பதைச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.[14] இந்த எட்டி என்ற சொல்லில் இருந்துதான் 'செட்டி' என்ற பெயர் பிறந்தது. 'செட்டியிறை' என்பது வணிகர்களுக்கு விதிக்கப்பட்ட சுங்க வரியாகும்.[15] சிவகங்கை மாவட்டம், புதுக்கோட்டை மாவட்டம், ஆகிய பகுதிகளில் செட்டிபட்டி, செட்டிவயல் என்ற பெயருடைய ஊர்கள் காணப்படுகின்றன.[16] இச்சான்றுகள் அனைத்தும் வணிகத் தொழில் செய்துவந்த நகரத்தார்கள் அப்பகுதிகளில் வாழ்ந்தமையையும், அவர்களுக்குச் 'செட்டி' என்ற பெயர் வழங்கியது என்பதையும் காட்டுவனவாய் உள்ளன. 'செட்டி' என்ற சொல் 'ஆர்' விகுதி பெற்று 'செட்டியார்' என்று வழங்கப்படுகிறது.

2. 3. 2. நகரத்தார் - பெயர்க் காரணம் :

(1) மறவர் நாட்டில் சிறு சிறு கிராமங்களில் பெரிய பெரிய மாட மாளிகைகளைக் கட்டிக் கொண்டு குடியேறி அவற்றை நகரமாக்கியதால் 'நகரத்தார்' என்ற பெயர் ஏற்பட்டது என்று 'சிவகோத்திர வைசிய விருத்தி' என்ற நூலில் கூறப்பட்டுள்ளது.[17]

(2) அதே நூல் நகரத்தார் என்ற பெயருக்கு வேறொரு காரணத்தையும் பின்வருமாறு சொல்கிறது.

"திருச்சிற்றம்பலத்தின் கண் எக்காலத்தும் ஆனந்தத் திருநடனம் ஆடிக் கொண்டிருக்கும் சோதியை மாந்தராய்ப் பிறந்தார் எவர்கட்குமெளிதிற் காட்டத்தகுந்த பேராசிரியன் மார்கள் ஐவரேயாவர். எல்லையிற் பெரிய இவர்கள்தான் நகரத்தார், மகரத்தார், வகரத்தார், சிகரத்தார், யகரத்தார் எனப்பெயர் பெறும் பேராசிரியன்மார்கள். இவ்வைவரும் மனிதராய்ப் பிறந்தார் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாத ஆவசியம் பற்றித்தான் இவ்வைவரின் முதலெழுத்தாய் ந.ம.சி.வ.ய ஆகிய அவ்வைந்தெழுத்தையு மொன்று கூட்டி நமசிவய என்று ஆன்றோர்கள் அமைத்து வைத்திருக்கின்றனர். இவ்வைந்து ஆசிரியன்மார்களிலும் இஞ்ஞால வாழ்க்கைக்கு முதன்மை அல்லது தலைமை பெற்றவர் நகரத்தாரேயாவர். ஆதலின் தான் அஃதினை நன்கு உணர்ந்த இச்சமூகத்தார் 'நகரத்தார்' என்ற பட்டத்தினைத் தமக்குரியதாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.[18]

(3) 'நகரம்' என்று காஞ்சிபுரம் சிறப்பாகக் கூறப்படும். 'நகரேஷு காஞ்சி' என்பது காளிதாசன் கூற்றாகும். நகரமாகிய காஞ்சியிலிருந்து வந்தவர்களாதலால் இவர்களுக்கு நகரத்தார் என்ற பெயர் ஏற்பட்டது என்பார் கம்பன் அடிப்பொடி சா. கணேசன் அவர்கள்.[19]

(4) 'நகர்' என்பதற்குக் 'கோயில்' அதாவது இறைவன் உறையும் இடம் என்ற பொருளுண்டு.

"பணிஇயர் அத்தை நின்குடையே.
முக்கட்செல்வன் நகர்வலம் வரற்கே"[20]

என்ற புறப்பாடலில் 'முக்கட் செல்வன் நகர்' என்பது சிவன் கோயிலைக் குறிக்கிறது. 'பிறப்பு முதல் இறப்பு வரை கோயிலைச் சார்ந்து வாழ்ந்து, கோயிலையே வாழ்வின் மையமாகக் கொண்டு கோயில்வழி நாகரிகத்தைக் கடைப்பிடித்ததால் அக்கோயில் என்னும் பொருளிலேயே 'நகரத்தார்' என்ற சிறப்புப் பெயர் ஏற்பட்டது என்று கூறுகிறார் முனைவர் வ. தேனப்பன்.[21]

2. 4. 1. நகரத்தார்களின் தொன்மை வரலாறு :

நகரத்தார்களின் தொன்மை வரலாறு பூங்குன்ற நாட்டு வேலங்குடிக் கோயில் கல்வெட்டிலும், துலாவூர் மடத்திலுள்ள செப்பேட்டிலும் எழுதப்பட்டிருப்பதாகவும் அதை அனுசரித்து தேவகோட்டை வீர. லெ. சிந்நயச் செட்டியார் எழுதி வைத்திருந்த செய்திகளை அடிப்படையாகக் கொண்டு 'நாட்டுக்கோட்டை நகரத்தார் சரித்திரம்' என்ற நூலைத் தஞ்சை சதாவதானம் சுப்பிரமணிய அய்யர் என்பவர் வெளியிட்டுள்ளார்.

நகரத்தார் வரலாறு கூறும் கல்வெட்டு இருப்பதாகச் சொல்லப்படுகின்ற பூங்குன்ற வேலங்குடி உருத்திராபதியீசுவரர் கோயிலுக்கு ஆய்வாளர் நேரிடையாகச் சென்று பார்த்தபோது நகரத்தார் வரலாற்றை விவரிக்கின்ற கல்வெட்டுக்கள் இல்லை. இருந்து அழிந்ததாகவும் தெரியவில்லை. ஆனால் நகரத்தார்களில் சில பிரிவினர் அளித்த கொடைகளைப் பற்றிய செய்திகள் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன.

கோயிலின் மகாமண்டபத் தென்சுவரில் சக ஆண்டு 1404-இல் வெட்டப்பட்ட (கி. பி. 1482) ஒரு கல்வெட்டு உள்ளது. அதில் 'மருதங்குடியான ராசநாராயணபுரத்து திருவேட்பூருடையான் இனிமையே தரு தேவர்' என்ற பெயர் காணப்படுகிறது. அருகிலுள்ள மற்றொரு கல்வெட்டில் 'மாத்தூரான' வீரபாண்டியபுரத்து இலுப்பைக்குடியான சூளாமணிபுரமுடையான் கற்பகநாயினார்'. 'கேரளசிங்க வளநாட்டு பெரம்பூர் நாட்டு மாத்தூரான வீரபாண்டியபுரத்து அரும்பாக்கூருடையான் இனிமையே தருவார்' என்ற பெயர்கள் காணப்படுகின்றன.[22]

ஆய்வாளர் நேரில் சென்று பார்த்தபோது துலாவூரில் செப்பேடு இல்லை. ஆனால் 'நகரத்தார் வரன்முறை', 'நகர ஒப்பந்தம்', 'நகர ஓலை' என்ற ஓலைச் சுவடிகள் உள்ளன. அவற்றில் சிந்நயச் செட்டியார் கூறியுள்ளதற்கான ஆதாரங்கள் உள்ளன.

பாடுவார் முத்தப்பரின் 'நகரவாழ்த்து' 'திருமுகவிலாசம்' ஆகிய நூல்களிலும் 'ஏழு நகரத்தார் பேரில் பள்ளு', 'ஏழு நகரத்தார் பேரில் குழுவநாடகம்' ஆகிய சிற்றிலக்கியங்களிலும்

முத்துக்குட்டிப் புலவர் பாடிய 'கண்ணுடையம்மன் பள்' என்ற நூலிலும் பழனித் தலத்தில் நகரத்தார் செய்த அறங்களை விவரிக்கும் 'நகரத்தார் அறப்பட்டயங்கள்' என்ற நூலிலும் நகரத்தாரின் வரலாறு பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. அவை அனைத்தும் கி. பி. 18 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. நகரத்தாரின் பெருமைகளை விரிவாகப் பேசும் அந்நூல்கள் அனைத்திலும் நகரத்தார் வரலாறு பற்றிய செய்திகள் கிட்டத்தட்ட ஒரே மாதிரியாகப் பின்வருமாறு காணப்படுகின்றன.

'நகரத்தார்கள் ஆதியில் நாக நாட்டில் சாந்தியாபுரி என்னும் நகரத்தில் வாழ்ந்து வந்தார்கள். பிறகு அவ்வூர் அரசனின் கொடுமையால் கலியுகம் 204 ஆவது ஆண்டில் காஞ்சிபுரத்தில் குடியேறினார்கள். அங்கு நெடுங்காலம் வாழ்ந்தார்கள். காஞ்சிபுரத்தை ஆண்ட பிரதாபருத்திரன் என்ற மன்னனின் கொடுமையால் கலியாண்டு 2312 இல் சோழநாட்டுக் காவிரிப் பூம்பட்டினத்தில் குடியேறினார்கள். இங்கு சிம்மக் கொடியும் சீரகப் பூமாலையும் உடையவர்களாக மன் இணை மரியாதைகளோடு மன்னனுக்கு முடிசூட்டும் உரிமை பெற்றவர்களாக வாழ்ந்தார்கள்.[23] சோழநாட்டை ஆண்ட பூவந்திச் சோழன் நகரத்தார் பெண்களிடம் தகாதமுறையில் நடந்து கொண்டதால் தங்கள் ஆண் பிள்ளைகளை மட்டும் விட்டுவிட்டு அனைத்து நகரத்தார்களும் தத்தம் மனைவியருடன் உயிர்துறந்தனர்.

நகரத்தார்களுடைய பிள்ளைகள் வளர்ந்து ராஜபூக்ஷன சோழனுக்கு முடிசூட்டும் பொருட்டுத் தங்கள் இனத்தில் பெண்கள் இல்லாததால் வேளாளப் பெண்களை மணந்து கொண்டார்கள். பிறகு தன் நாட்டுக்கு நற்குடி வேண்டுமென்று குலசேகர சவுந்திரபாண்டிய மன்னன் சோழனிடம் கேட்க, கலியுகம் 3808 இல் பாண்டிய நாடு வந்து வெள்ளாற்றங்கரைக்குத் தெற்கே ஓங்காரக்குடியில் தங்கினார்கள். காலப்போக்கில் ஒன்பது பிரிவினராயினர்.'

2. 4. 2. நகரத்தார்கள் இடம் பெயர்ந்தமை பற்றிய முடிவு:

நகரத்தார்கள் நாக நாட்டுச் சாந்தியாபுரியில் வாழ்ந்தமைக்கோ, காஞ்சிபுரத்தில் வசித்தமைக்கோ சான்றுகள் கிடைக்கவில்லை. சொல்லப்பட்டுள்ள காலவரையறைகளும் பொருத்தமாக இல்லை.

நகரத்தார்கள் காஞ்சிபுரத்திலிருந்து காவிரிப் பூம்பட்டினம் வந்ததாகக் கூறிக் கொள்வதைப் போலவே பல குடியினரும் தாங்கள் தொண்டைமண்டலத்தில் இருந்து வந்ததாகக் கூறிக் கொள்கிறார்கள்.[24] பண்டு, காஞ்சி சிறப்பான, நகரமாக இருந்ததால் அங்கிருந்து வந்தவர்கள் என்று கூறிக்கொள்வதைப் பெருமையாகக். கருதியிருக்கிறார்கள்.

நகரத்தார்கள் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து பாண்டிய நாட்டிற்கு வந்தனர் என்ற கருத்து ஒருவாறு ஏற்புடைத்தாக இருக்கிறது. ஒரு நாட்டுக்கு நற்குடிகள் வேண்டுமென்று அரசன் அழைப்பது வரலாற்றில் காணக்கூடிய நிகழ்ச்சிதான்.

"பாண்டிய நாட்டில் புதிய குடியேற்றங்களை அமைப்பதில் மன்னர்கள் அதிக ஊக்கம் காட்டினர். காடுகளை அழித்துக் குடியிருப்புக்களாகவும் விளை நிலங்களாகவும் மாற்றியுள்ளனர். இராமநாதபுரம் போன்ற வறட்சியான பிரதேசங்களிலும் மக்கள் குடியேறப் பல சலுகைகள் வழங்கியுள்ளனர்."

என்று 'பாண்டியர் வரலாறு' நூலில் கே வி. இராமன் குறிப்பிடுகிறார்.[25] இந்தவகையில் பாண்டியன் அழைக்கப் பாண்டி நாட்டில் குடியேறினர் என்பது பொருத்தமான காரணமாகக் காணப்படுகிறது.

"காடு வெட்டிப் போட்டுக் கடிய நிலம்திருத்தி
வீடுகட்டிக் கொண்டிருக்கும் வேள்வணிகர்"

என்ற பாடுவார்முத்தப்பர் கூற்றும்[26] இக்கருத்தை அரண் செய்யும்.

பிள்ளையார்பட்டிக் குடைவரைக் கோயிலில் உள்ள இரண்டு கல்வெட்டுக்கள் நகரத்தார்கள் புதிய நகரமைத்துக் குடியேறியதைக் குறிப்பிடுகின்றன.[27] கி.பி. 12ஆம் நூற்றாண்டில் கான நாட்டுக் காரிக்குடி ஐநூற்றுவப் பெருந்தெருவில் வசித்த நகரத்தார்கள் மருதங்குடியையும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளையும் விலைக்கு வாங்கி, இராச நாராயணபுரம் என்ற நகரமைத்துக் குடியேறியிருக்கிறார்கள். இதற்கு 'திரிபுவனச் சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டான்' என்ற பட்டப் பெயருடைய மன்னன் அனுமதி அளித்ததை ஒரு கல்வெட்டுக் கூறுகிறது.

கி. பி. 1284 இல் எம்மண்டலமும் கொண்டருளிய குலசேகர பாண்டியன் காலத்தில் கானநாட்டுக் காரிக்குடி ஐநூற்றுவப் பெருந்தெருவில் உள்ள நகரத்தார்களுக்கு அவர்கள் விலைக்கு வாங்கின மருதங்குடி முதலிய ஊர்களில் சில வரிகளை வசூலித்துக் கொள்ளும் உரிமை வழங்கப்பட்டதை மற்றொரு கல்வெட்டுக் கூறுகிறது.

கான நாடு என்பது புதுக்கோட்டைப் பகுதி, வெள்ளாற்றுக்குத் தெற்கில் கானாடுகாத்தான் முதலிய பல ஊர்களைக் கொண்ட நாடு.

நகரத்தார்கள் சோழ நாட்டிலிருந்து வந்தபோது புதுக்கோட்டைப் பகுதிகளில் திருவெண்ணாயில்,[28] நார்த்தாமலை எனப்படும் நகரத்து மலை[29] போன்ற ஊர்களில் சில காலம் தங்கிப் பிறகு இப்போதுள்ள மறவர் சீமைக்கு வந்திருக்கிறார்கள்.

நகரத்தார்களுடைய குடியேற்றம் பாண்டிய நாட்டில் ஒரே சமயத்தில் ஏற்பட்டிருக்க இயலாது. சிறிதுசிறிதாகப் பாண்டிய நாட்டில் குடியேறினார்கள் என்று கொள்வதே பொருந்தும்.

2. 5. பாண்டிய நாட்டில் நகரத்தார்கள் :

12 ஆம் நூற்றாண்டிலிருந்து பாண்டிய நாட்டுப் பகுதிகளில் காணப்படும் கல்வெட்டுக்கள் மூலம் நகரத்தார்கள் பற்றிய செய்திகளைப் பரவலாகத் தெரிந்துகொள்ள முடிகிறது.

தமிழகத்தில் கி. பி. ஏழு, எட்டு, ஒன்பதாம் நூற்றாண்டுகளில் மணி கிராமத்தார், வளஞ்சியர், நானாதேசி திசையாயிரத்து ஐந்நூற்றுவர் போன்ற வணிகக் குழுக்கள் சிறப்பாகச் செயல்பட்டன. இந்த வணிகர் குழுக்களில் நானாதேசி திசையாயிரத்து ஐந்நூற்றுவர் வழிவந்தவர்களாக நகரத்தார்கள் இருக்கவேண்டும்.

நகரத்தார்களின் ஒன்பது கோயில்களுள் ஒன்றான மாற்றூர்க் கோயில் இறைவன் பெயர் ஐந்நூற்றீசர். சூரைக்குடிக் கோயில் இறைவன் பெயர் தேசிகநாதர், பிள்ளையார்பட்டிப் பிள்ளையாரின் பெயர் தேசிக விநாயகர். இப்பெயர்கள் எல்லாம்

நானாதேசி திசையாயிரத்து ஐந்நூற்றுவர் என்ற பெயரோடு தொடர்புடையவையாய் இருப்பதும் பிள்ளையார்பட்டிக் கல்வெட்டில் கானநாட்டு காரிக்குடியில் நகரத்தார் வசித்த தெருவின் பெயர் ஐநூற்றுவப் பெருந்தெரு' என்று குறிப்பிடப்படுவதும் கருதத்தக்கன.

இராங்கியம், திருக்கோளக்குடி, பிள்ளையார்பட்டி, செங்கரை, கூத்தலூர் போன்ற பல ஊர்களில் இளையாத்தங்குடி நகரத்தார்கள் வசித்ததைக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. நகரத்தார்களுள் சில பிரிவினர் பெயர்களையும் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

'காளையர்காலப் பெருந்தெருவில் மாத்தூருடையான்'[30]

கல்வாயில் நாட்டு காளையர் காலப் பெருந்தெருவில் அரும்பாற்கிழார்'[31]

'கல்வாசல் நாட்டு இளையாத்தங்குடியான குலசேகரபுரத்துத் திருவேட்பூருடையான்'[32]

'இளையாத்தங்குடிக் கழனிவாசலுடையான்'[33]

'கல்வாயில் நாட்டு காளையர் காலப் பெருந்தெருவில் குலசேகரபுரத்து ஒக்கூருடையான்'[34]

என்ற பெயர்கள் கி. பி. 15 ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. கி. பி. 15 ஆம் நூற்றாண்டில் நகரத்தார்கள் கோயிற்பணி, குளப்பணி போன்ற சமுதாயப் பணிகளில் ஈடுபட்டிருந்ததை இரணியூர்க் கோயில் கல்வெட்டு ஒன்று கூறுகிறது.[35]

திருமெய்யம் தாலுகா மேலப்பனையூர் சிவன் கோயிலில் உள்ள கல்வெட்டு,

"பிலவங்க வருஷம் பங்குனி மாதம் யஉ
பொன்னமராபதி நாட்டில் வடபத்து பனையூர்,
குலமங்கலத்து ஊரவரோம், கோவில்
வியாச்சியமாக இரண்டு ஊரவற்கும்

சட்சை நடந்த விடத்திலே கோனாபட்டு
வெள்ளாழரனைவரும் இளையாத்தக்குடி
நகரத்தார் அனைவரும் பல நடுவரும்
கூடி இருவர் வாய்மொழியும் கேட்டு
வழக்கு தேர்ந்து நிலவரம் பணிணினது''

என்று நகரத்தார்கள் ஊர் நடுவர்களாக இருந்த செய்தியைக் கூறுகிறது.[36]

நகரத்தார்களுடைய கோயிற்பணியைப் பாராட்டி ஊரவர் சிறப்புச் செய்ததைப் புதுக்கோட்டை மாவட்டம், மறவாமதுரைக் கல்வெட்டொன்று எடுத்துரைக்கிறது.[37]

இவ்வாறாக, நகரத்தார்களைப் பற்றிய கல்வெட்டுக்கள் பாண்டிய நாட்டில் பலவாகக் காணக் கிடைக்கின்றன.

2. 6. நகரத்தார் வாழ்க்கை முறை :

கி. பி. 18 ஆம் நூற்றாண்டிலிருந்து அதாவது ஆங்கிலேயர் ஆட்சிக்கால முதல் நகரத்தார்கள் சீரும் சிறப்புமாக வாழ்ந்தனர். முதலில் உப்பு, பஞ்சு, தானியங்கள், அரிசி என்று வாணிபம் செய்தவர்கள் பிறகு கொடுக்கல் வாங்கல் தொழில் எனப்படும் வட்டித் தொழிலிலும் ஈடுபட்டனர்.

கீழ்த்திசை நாடுகள் பல ஆங்கிலேயர் ஆட்சியின்கீழ் இருந்ததாலும் கடற்பாதுகாப்பும் அந்நியச் செலாவணி முறையும் எளிதாக இருந்ததாலும் இலங்கை, பர்மா, மலேயா, சிங்கப்பூர், இந்தோசீனா போன்ற அயல் நாடுகளுடன் நகரத்தார்கள் வாணிகத் தொடர்பு கொண்டனர்.

பர்மாவின் செழிப்பிற்கு நகரத்தார்களே காரணம். மண்வளமும் நீர் வளமும் இருந்தும், உழைப்பவர்களும், உழைப்பவர்களுக்குப் பொருளுதவி செய்பவர்களும் இல்லாத காரணத்தால் பர்மிய நிலங்கள் காடு மேடாகக் கிடந்தன. கல்கத்தாவில் வணிகம் செய்து கொண்டிருந்த நகரத்தார்கள், பர்மாவிற்குச் சென்று தங்கள் முயற்சியால், அந்நிலங்களைப் பொன்விளையும் பூமியாக்கினர். பர்மாவிலிருந்து ஏற்றுமதியாகும் அரிசி உலகச் சந்தையில் முதலிடம் பெற்றது.

கி. பி. 1860 இல் சூயசு கால்வாய் திறக்கப்பட்டது. இதன் மூலம் ஐரோப்பாவிலிருந்து இந்தியாவிற்கு வரும் கப்பல்கள் ஆப்பிரிக்காவைச் சுற்றி வராமல் சூயசு கால்வாய் வழியாக வந்து சென்றன. இதனால் நகரத்தார்கள் அதிகம் பயனடைந்தனர். பர்மாவில் விளைந்த அரிசியை உலகச் சந்தைக்கு எளிதில் எடுத்துச் சென்று விற்க முடிந்தது.[38]

இலங்கை, இந்தோசீனா, மலேயா போன்ற நாடுகளில் தேயிலைத் தோட்டங்களையும், இரப்பர்த் தோட்டங்களையும் உண்டாக்கி அந்த நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திற்குக் காரணமாயிருந்தவர்கள் நகரத்தார்கள். மலேயாவில் முதன் முதலாக இரப்பர் பயிரிட்டவர் நச்சாந்துபட்டியைச் சேர்ந்த ஒரு நகரத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.[39]

இவ்வாறாக நகரத்தார்கள், போக்குவரத்து வசதிகள் அதிகம் இல்லாத கி. பி. 18, 19 ஆம் நூற்றாண்டுகளில் துணிச்சலுடன் அயல் நாடுகளுக்குச் சென்று வணிகத் தொழிலில் ஈடுபட்டு அந்தந்த நாடுகளை வளப்படுத்தித் தாங்களும் பெரும் பொருள் குவித்தனர்.

தமிழகத்தில் தாங்கள் வசித்த ஊர்களில் பெரியபெரிய மாடமாளிகைகளைக் கட்டிக் கொண்டனர். திருவாடானைக்கு அருகிலுள்ள தொண்டி துறைமுகத்துக்கும் பர்மாவுக்கும் இடையே 1930 வரை பாய்மரக் கப்பல்கள் போய்வந்து கொண்டிருந்தன. அரண்மனை போன்ற செட்டிநாட்டு வீடுகள் கட்ட பர்மாத் தேக்குகள் ஒவ்வொரு வீட்டிற்கும் ஒவ்வொரு கப்பலில் தனியே வந்திறங்கின.[40] செட்டிநாட்டுக் கட்டிடக் கலை இன்றளவும் உலகத்தாரால் வியந்து பாராட்டத்தக்கதாக உள்ளது.

மலேயா சுல்தான், தஞ்சை சரபோஜி, புதுக்கோட்டை அரசர், இராமநாதபுரம் சேதுபதி ஆகியோர்களுக்குப் பொருளுதவி செய்தவர்கள் நகரத்தார்கள்.[41] தான தருமங்கள் செய்வதைத் தங்கள் குலமரபாகக் கொண்ட நகரத்தார்கள், தாங்கள் ஈட்டிய பொருளில் ஒரு பகுதியைப் பலவிதமான அறப்பணிகளுக்குச் செலவிட்டனர். நகரத்தார்களுடைய தொண்டுள்ளத்தையும், அறச் செயல்கள்பால் அவர்களுக்குள்ள ஈடுபாட்டையும் கண்டு வியந்த பாரதியார்,

"உண்மையே தாரகமென் றுணர்ந்திட்டார்
அன்பொன்றே வழியாக் கண்டார்
வண்மையே குலதர்ம மெனக்கொண்டார்
தொண்டொன்றே வழியாக் கண்டார்"

என்றும்,

"பலநூல்கள் பதிப்பித்தும் பலபெரியோர்
பிரசங்கம் பண்ணுவித்தும்
நலமுடைய கலாசாலை புத்தகசாலை
பலவும் நாட்டி யுந்தம்
குலமுயர நகருயர நாடுயர
உழைக்கின்றார்"

என்றும் வியந்து பாடியுள்ளார்.[42]

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு பர்மாவிற்கும் நகரத்தார்களுக்கும் இடையே உள்ள தொடர்பு துண்டிக்கப்பட்டதால், நகரத்தார் பொருள் வருவாய் குறையத் தொடங்கியது. மற்ற நாடுகளிலும் தொழில்கள் சுருங்கின.

எனினும் அந்நிலைக்கு மனந்தளராமல், உள் நாட்டிலேயே பல தொழில் துறைகளில் ஈடுபட்டு, மீண்டும் தலைநிமிர்ந்து கால நிலைகளுக்கு ஏற்பத் தங்களால் இயன்ற அறப்பணிகளைச் செய்து வருகிறார்கள்.

அடிக்குறிப்புகள் :

1. தெட்சிணாமூர்த்தி, உ. (தொ. ஆ) **'நாட்டுக்கோட்டை நகரத்தார் சரித்திரமும் பாடுவார் முத்தப்ப செட்டியார் வரலாறும் அவர்கள் இயற்றிய அருட் கவிகளும்,** தேவகோட்டை சு. செ. சேவு. மெய்யப்ப செட்டியார் உமையாள் ஆச்சி மணிவிழா வெளியீடு, 1981, ப. 108.

2. குன்றக்குடிக்கு அருகிலுள்ளதும், நகரத்தார் பெண்களின் குருபீடமாக விளங்குவதுமான துலாவூர் மடத்தில் நகரத்தார் தொடர்பான ஓலைச் சுவடிகள் பல உள்ளன. 'நகரவரன்முறை' என்ற ஓலைச் சுவடியில் 'நாட்டுக் கோட்டைப் பூமி' 'நாட்டுக்கோட்டைச் சீமை' என்ற சொற்கள் காணப்படுகின்றன. ஆய்வாளரால் அவ்வோலைச் சுவடிகள் படிக்கப்பட்டன.

3. துலாவூர் மடத்திலுள்ள 'நகரத்தார் வரன்முறை' என்ற ஓலைச்சுவடியில் இச்செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது. ஆய்வாளரால் படிக்கப்பட்டது.

4. ஆண்டியப்பன், ப. சொ., **சிவகோத்திர வைசிய விருத்தி** முதற்பாகம், மதராஸ் மினர்வா அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப் பெற்றது. 1924, ப. 38.

5. சொக்கலிங்கம், தே. **பாடுவார் முத்தப்பர்,** பார்வதி பதிப்பகம், காரைக்குடி, 1988, ப. 59.

6. சந்திரமூர்த்தி, மா., **இரணியூர்க்கோயில்** மணிவாசகர் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 1990, ப. 224.

7. வள்ளி, நா., **இரணியூர் கோயில் கும்பாபிடேக மலர்,** 'திருவேட்பூருடையார்கள்' கட்டுரை, 1990.

8. மாணிக்கம், வ. சுப. (ப. ஆ) **நகரத்தார் அறப்பட்டயங்கள்,** நகரத்தார் பொருளுதவியால் பழனி அன்னதான மடத்து நிருவாகி கு. பழ. சு. பழ. சுப்பிரமணியன் செட்டியார் வெளியிட்டது, 1961, ப. 109.

9. வள்ளி, நா., இரணியூர் கோயில் கும்பாபிடேக மலர், 'திருவேட்பூருடையார்கள்' கட்டுரை, 1990.

10. சேக்ஷாத்ரிசர்மா, அ. **நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு,** வானதி பதிப்பகம், முதற்பதிப்பு 1970, பக் 225-226.

11. Jawaharlal Nehru, **The Discovery of India,** Asia, Publishing House, Reprinted 1973, Page No. 332.

12. கதிரேசன், ராம. சோமு., **தனவணிகர் தன்மை,** 'தனவணிகர் கும்மி' சுத்தானந்தபாரதியார், செட்டிநாடு நூற்பதிப்புக் கழகம் தேவகோட்டை 1940, பாடல் எண் 17.

13. சோமலெ. **செட்டிநாடும் செந்தமிழும்,** வானதி பதிப்பகம், முதற்பதிப்பு, 1984, ப. 13.

14. அ) சீத்தலைச் சாத்தனார், **மணிமேகலை,** பாகனேரி வெ. பெரி. பழ. மு. காசி விசுவநாதன் செட்டியார் வெளியீடு, காதை 4, வரி 64, ப. 60.

ஆ) சாமிநாத அய்யர் உ. வே., (ப. ஆ) **சிலப்பதிகாரம்,** தியாகராஜ விலாசம், சென்னை, 1955, ப. 395

15. சோமலெ., **செட்டிநாடும் செந்தமிழும்,** வானதி பதிப்பகம், முதற்பதிப்பு, 1984, ப. 12.

16. புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள 'திருவெண்ணாயில்' என்ற ஊரிலும் அதைச் சுற்றிலும் நகரத்தார்கள் வாழ்ந்தமையை புதுக்கோட்டைக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. திருவெண்ணாயில் இன்று 'செட்டிபட்டி' என்று அழைக்கப்படுகின்றது.

17. ஆண்டியப்பன், ப. சொ., சிவகோத்திர வைசியவிருத்தி, முதற்பாகம், மதராஸ் மினர்வா அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப் பெற்றது, 1924, ப. 51

18. மேலது, ப. 52

19. கம்பன் அடிப்பொடி, **காஞ்சிபுரம் மலர்**, 'நகரத்தாரும் காஞ்சியும்' கட்டுரை, 1979, பக். 21-22.

20. காரிகிழார், **புறநானூறு**, ஔவை சு. துரைசாமிபிள்ளை உரை, தி. தெ. சை. நூ. கழகம், 1967, 6வது பாடல், வரிகள் 17-18.

21. தேனப்பன், வ., **'ஒன்பது நகரக் கோயில்கள்'**, தேன் வள்ளியம்மை பதிப்பகம், தேவகோட்டை, 1990, ப. 34.

22. பூங்குன்ற வேலங்குடி உருத்திராபதியீசுவரர் கோயிலில் உள்ள கல்வெட்டுக்கள், ஆய்வாளரால் படிக்கப்பட்டன. அவற்றில் நகரத்தார்கள் சிலரின் பெயர்களும் பிரிவுகளும் காணப்படுகின்றன.

23. அ) மாணிக்கம் வ. சுப. டாக்டர் (ப. ஆ) **நகரத்தார் அறப்பட்டயங்கள்**, நெற்குப்பை கு. பழ. சு. பழ. சுப்பிரமணியன் செட்டியார் வெளியீடு, 1961, ப. 31.

ஆ)சுப்பிரமணிய ஐயர், சதாவதானம், தஞ்சாவூர், **தனவைசியராகிய** நாட்டுக்கோட்டை நகரத்தார் சரித்திரம், கலாதர அச்சுக்கூடம், தேவகோட்டை, இரண்டாம் பதிப்பு, 1904, ப. 6.

இ)பாடுவார் முத்தப்ப செட்டியார், **நகர வாழ்த்து**, தேவகோட்டை அ. செ. சேவு. மெய்யப்ப செட்டியார் உமையாள் ஆச்சி மணிவிழா வெளியீடு, 1981, ப. 185, வரி. எண் 5.

ஈ)**ஏழு நகரத்தார் பேரில் பள்ளு நாடகம்**, ஆண்டிபட்டி ஜமீன்தார் பெத்தாச்சி செட்டியார் பதிப்பித்தது, 1922, ப. 70, பாடல் எண் 18.

உ)**ஏழு நகரத்தார் பேரில் குழுவ நாடகம்**, ஆண்டிபட்டி ஜமீன்தார் பெத்தாச்சி செட்டியார் வெளியீடு, 1922, ப.8.

24. அண்ணாமலைச் செட்டியார், செ. அ., **வல்லநாட்டு நகரத்தார்கள் சமூக வரலாறு**, வல்லநாட்டு நகரத்தார் பிரமுகர்கள் ஆதரவில் வெளியிடப்பட்டது 1965, பக். 38-39.

25 இராமன், கே. வி., **பாண்டியர் வரலாறு**, தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், 1977, ப. 205.

26 சொக்கலிங்கம், தே., **பாடுவார் முத்தப்பர்** பார்வதி பதிப்பகம், 1988, ப. 196

27 கணேசன், சா., **பிள்ளையார்பட்டி தலவரலாறு**, பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர் நகரத்தார் அறநிலைய வெளியீடு, இரண்டாம் பதிப்பு, 1983, பக். 36-39, கல்வெட்டு எண்8, 9.

28. K. R. Venkat Rama Iyyar, [Editor], A. Manual of the Pudukkottai state, Vol. II. Part II, Published under the authority of the Pudukkottai Darbar, Second and revised edition, 1944, P. 1022.

29. **புதுக்கோட்டைக் கல்வெட்டுக்கள்**, புதுக்கோட்டை சமஸ்தான வெளியீடு, 1946, கல்வெட்டு எண் 744, குளத்தூர் தாலுகா, கீரனூர் உத்தமநாதசுவாமி கோயிலில் சுவாமி கோவிலின் தென்புறச் சுவரிலுள்ள கல்வெட்டில் நார்த்தாமலை, 'நகரத்துமலைச் சீர்மை' என்று குறிப்பிடப்படுகிறது.

30. தேனப்பன், வ., **ஒன்பது நகரக் கோயில்கள்**, தேன் வள்ளியம்மை பதிப்பகம், 1990, பிற்சேர்க்கை 3. 1. 4. இளையாத்தங்குடிக் கல்வெட்டு, 1926 ஆம் ஆண்டறிக்கை கல்வெட்டு எண் 17.

31. மேலது, இரணியூர் கோயில் கல்வெட்டு, 3, 2. 12. 1926 ஆம் ஆண்டறிக்கை, கல்வெட்டு எண் 12.

32. புதுக்கோட்டைக் கல்வெட்டுக்கள், புதுக்கோட்டை சமஸ்தான வெளியீடு, 1946, கல்வெட்டு எண் 854, திருமெய்யம் தாலுகா, இராங்கியத்தில் பூமீசுவரர் கோயிலில் சுவாமி கோயிலில் தென்புறச் சுவரிலுள்ள கல்வெட்டு.

33. மேலது, கல்வெட்டு எண் 725, திருமெய்யம் தாலுகா மறவாமதுரை அகளங்கீசுவரர் கோயிலில் சுவாமி கோயிலில் தென்புறம் சுவரிலுள்ள சாசனம்.

34. மேலது, கல்வெட்டு எண் 1050, ஆலங்குடி தாலுகா பழங்கரை புராதன புரீசுவரர் கோவிலின் வடபுரம் சுவரிலுள்ள சாசனம்.

35. தேனப்பன் வ., **ஒன்பது நகரக் கோயில்கள்,** தேன் வள்ளியம்மை பதிப்பகம், 1990, பிற்சேர்க்கை 3. 2. 3. இரணியூர்க் கோயில் கல்வெட்டு 1926 ஆம் ஆண்டு அறிக்கை, கல்வெட்டு எண் 3.

36. **புதுக்கோட்டைக் கல்வெட்டுக்கள்,** புதுக்கோட்டை சமஸ்தான வெளியீடு, 1946, கல்வெட்டு எண் 944, திருமெய்யம் தாலுகா, மேலப்பனையூர், ஞானபுரீசுவரர் கோயிலில் சுவாமி கோயிலின் வடபுறம் சுவரிலுள்ள கல்வெட்டு.

37. மேலது, கல்வெட்டு எண் 848, திருமெய்யம் தாலுகா, மறவா மதுரை, அகளங்கீசுவரர் கோயிலின் தென்புறம் சுவரிலுள்ள சாசனம்.

38. சோமலெ. நேர்காணலின்போது கூறியது, 1, 2-6-84.

39. சோமு. எல்., நடராசன், சித, **பெ. ராம. குடும்பத் திருப்பணிகள்,** திருக்கொள்ளம்புதூர் திருக்குட நன்னீராட்டு நினைவு மலர், 1979, 'நச்சாந்துபட்டி பெ. ராம.' கட்டுரை, ப. எ. இல்லை.

40. சோமலெ. **இராமநாதபுரம் மாவட்டம்,** பாரி நிலையம், முதற்பதிப்பு, 1972, ப, 114

41. தினமணி கதிர், 'நலம் வளர்க்கும் நகரத்தார்', குன்றக்குடி பெரிய பெருமாள் கட்டுரை, 25. 4. 80. ப. 16.

42. பாரதியார் கவிதைகள், 'ஹிந்து மதாபிமான சங்கத்தார்' பூம்புகார் பிரசுரம், இரண்டாம் பதிப்பு, 1978, ப. 242, பாடல் எண் 6. 7.

3. நகரத்தார்களும் அறப்பணிகளும்

3.1. அறம் என்பதன் பொருள் :

வாழ்க்கைக் குறிக்கோளாகப் பண்டு முதல் 'அறம்' வலியுறுத்தப்பட்டு வருகிறது. அறம்' என்ற சொல்லுக்கு நோன்பு; கடமை; தருமம்; கற்பு; இல்லறம்; துறவறம்; நல்வினை; அறநூல்; அறக்கடவுள்; தரும தேவதை; தீப்பயன் உண்டாக்கும் சொல் என்று தமிழகராதி பல பொருள்களைக் கூறுகிறது. [1]

இவ்வாய்வில் 'அறம்' என்ற சொல், 'தான தருமம்', 'வறியார்க்கு ஒன்று ஈதல்', 'ஒப்புரவு', மனம் மொழிமெய் என்ற மூன்று நிலைகளிலும் பிறருக்கு உதவி செய்தல் என்ற பொருளிலேயே பயன்படுத்தப்படுகிறது. 'அறஞ்செய விரும்பு,[2]' என்றும். 'ஈதல் அறம்,[3]' என்றும் ஔவை கூறுவதும், இப்பொருளில் தான்.

3.2. அறங்களின் வகைகள் :

இக்கலியுகத்தில் யாகங்களைக் காட்டிலும் தானங்களையே புரியவேண்டும் என்றும் அவையே இம்மைக்கும் மறுமைக்கும் நன்மை பயக்கும் என்றும் கூறுகின்ற நீதி நூல்கள் அறங்கள் முப்பத்திரண்டு வகைப்படும் என்று கூறுகின்றன.

அவையாவன :

1. ஆதுலர் சாலை
2. ஓதுவார்க்கு உணவு
3. அறுசமயத்தோருக்கு உண்டி
4. பசுவுக்கு வாயுறை
5. சிறைச் சோறு
6. ஐயம்
7. தின்பண்டம் நல்கல்
8. அறவைச் சோறு (அனாதைக்கு அளிக்கும் சோறு)

9. மகப் பெறுவித்தல்

10. மகப்பால் வார்த்தல்

11. மகவு வளர்த்தல்

12. அறவைப் பிணஞ்சுடுதல் (அனாதைப் பிணத்தை எரித்தல்)

13. அறவைத்தூரியம் (அனாதைக்கு அளிக்கும் உடை)

14. சுண்ணம்

15. நோய் மருந்து

16. வண்ணான்

17. நாவிதன்

18. கண்ணாடி

19. காதோலை

20. கண்மருந்து

21. தலைக்கு எண்ணெய்

22. பெண்போகம்

23. பிறர்துயர் காத்தல்

24. தண்ணீர்ப் பந்தல்

25. மடம்

26. தடம்

27.சோலை

28. ஆவுரிஞ்சுதறி

29. விலங்கிற்கு உணவு

30. ஏறுவிடுத்தல்

31. விலைகொடுத்து உயிர் காத்தல்

32. கன்னிகா தானம்[4]

புண்ணியம் பயக்கும் என்ற ஆழ்ந்த நம்பிக்கையின் விளைவாக மட்டுமன்றித் தனக்கு உதவும் சமுதாயத்திற்குத் தான் செய்யும் கடமையாக மக்கள் இயன்ற அளவில் தானதருமங்களைச் செய்தார்கள். அச்செயல்களைத் தெரிவிக்கும் கல்வெட்டுக்கள் தமிழகத்தில் மிகுந்த அளவில் கிடைக்கின்றன.

'சமயத் தொடர்பானவைகளுக்கோ அல்லது சமூக நலங் கருதியோ பணமோ தாவர சொத்தோ சங்கம சொத்தோ கொடுப்பதை இந்தியாவில் பண்டைக் கால முதல் சிறந்ததோர் அறமாகக் கருதி வந்திருக்கிறார்கள்.[5] என்று கலைக் களஞ்சியம் கூறுகிறது.

கோயில், மடம், நந்தவனம் போன்றவற்றை நடத்துவதற்காகவோ அவற்றில் ஏதேனும் ஒரு காரியம் செய்வதற்காகவோ கொடுப்பது சமயத் தொடர்பான அறம் என்றும் ஏழைகளுக்கு அன்னதானம், கல்விதானம், மருத்துவ உதவி அல்லது ஏதேனும் பொதுநல முன்னேற்றமான காரியம் ஆகியவற்றிற்காகக் கொடுப்பது சமூகத் தொடர்பான அறம் என்றும் வகுக்கலாம். சத்திரங்கள், அன்ன சாலைகள், கல்விச் சாலைகள் மருத்துவச் சாலைகள் முதலியவை நடத்துவது; குளங்கள் கிணறுகள் முதலிய நீர்நிலைகள் அமைப்பது; சாலைகள், பாலங்கள், சுமைதாங்கிக் கற்கள் அமைத்தல் போன்ற போக்குவரத்து வசதிகள் செய்து கொடுப்பது ஆகியவற்றை சமூக நலத் தொடர்பான பேரறங்களுக்கு, ஒப்புரவுக்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

3.3. நகரத்தார்களும் அறப்பணிகளும் :

மேலே குறிப்பிட்ட அறப்பணிகளுள் சமயத் தொடர்பான, சமுதாயத் தொடர்பான அறப்பணிகளையும், ஒப்புரவு என்னும் பேரறங்களையும் காலத்திற்குத் தேவையான அறப்பணிகளையும் நகரத்தார்கள் செய்திருக்கிறார்கள்.

திரைகடல் ஓடித் திரவியம் தேடிய நகரத்தார்கள் தாங்கள் தேடியதில் ஒரு பகுதியை, தருமப் பணிகளுக்காக மகமைப் பணம் என எடுத்து வைத்தனர்.

மகமையாக எடுத்து வைக்கும் தொகை நாளடைவில் வளர்ச்சியடைந்து சிறுதுளி பெரு வெள்ளம் ஆவது போலப் பெருந்தொகையாகியது. நகரத்தார்கள் அதைக் கொண்டு அறப்பணிகளாற்றினர்.

சமுதாய நல மையங்களாக விளங்கும் ஆலயங்கள் அந்நியர் ஆட்சியில் பேணுவாரின்றிக் கிடந்தன. அத்தகைய ஆலயங்களை நகரத்தார்கள் திருப்பணி செய்தனர். திருப்பணி செய்த கோயில்களை ஒட்டிக் குளங்கள், நந்தவனங்கள், மடங்கள், விடுதிகள், சத்திரங்கள், வேத பாடசாலைகள், தேவாரப் பாடசாலைகள், ஆகம பாடசாலைகள், கோச்சாலைகள் முதலியவற்றை ஏற்படுத்தினர். 'ஏழு நகரத்தார் பேரில் குழுவ நாடகம்' என்ற நூல் நகரத்தார் செய்த அறப்பணிகளை,

திருவரு	ணாசலம்	சிதம்பரங்	காசி
இருநிலம்	புகழ்ரா	மேசுரங்	கூடல்
அருள்தரு	பழனி	யங்கிரி	செந்தூர்
குருபரன்	விளங்கு	குன்றக்	குடிதனில்
அன்னதா	னம்ம	டாலயஞ்	செய்து
இந்நிலம்	புகழு	மேழ்நகர்	வணிகர்
சேரமா	னாடு	செம்பியன்	னாடு
பாருளோர்	புகழ்தென்	பாண்டிநா	டதினுந்
தேவா	லயங்கள்	திருமதில்	கோபுரம்
பூவா	லயமாம்	புனல்நிறை	வாவிகள்
வற்றாத	ஊருணி	மாறா	மலர்க்கா
வித்தார	மாக	விளங்கவுஞ்	செய்தோர்
அரிபூசை	தேவா	ராதனை	மறையோர்
வருபூ	சனையும்	மயேசுர	பூசையும்
தண்ணீர்க்	காவணஞ்	சாலைகள்	கிணறு
விண்ணுளோர்	மதிக்க	மிகவுண்டு	பண்ணி
சந்திரா	தித்தர்	தாமுள	வரைக்கும்
இந்த்ர	வைபோக	மிலங்கிய	திறலோர்

என்று விரிவாக எடுத்துரைக்கிறது.[6]

பிறகு கால மாறுதலுக்கேற்பக் கல்வி நிலையங்களான பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் நிறுவியும், தண்ணீர்த் தொட்டிகள், கஞ்சித் தொட்டிகள், சுமைதாங்கிக் கற்கள் போன்றவை ஏற்படுத்தியும், பல இடங்களில் சாலைகள், பாலங்கள் அமைத்தும், மருத்துவமனைகள் ஏற்படுத்தியும், பல அரிய தமிழ் நூல்களையும் சைவ சமய நூல்களையும் பதிப்பித்தும் கோடிக்கணக்கான பொருள்களை அறப்பணிகளுக்காகச் செலவிட்டு இருக்கிறார்கள். 'அபிதான சிந்தாமணி' இவர்களைப் பற்றிக் கூறுகையில்.

> "சிதம்பரம், திருவண்ணாமலை, மதுரை
> திருக்காளத்தி முதலிய பல சிவாலயங்
> களைப் புதுக்கிய திருப்பணி வியக்கத்
> தக்கது. இவர்களைத் தமிழ்நாட்டரசரின் மாறிய
> பிறப்பெனவே புகழலாம். இவர்கள் தேச, மத,
> கல்வியின் பொருட்டு ஏற்படுத்தியுள்ள கலாசாலைகள்
> இவர்களுடைய புண்ணிய நிலைமைக்கு அறிகுறியாம்.
> இவர்கள் உலக நன்றி எக்காலத்தும் மறக்கத்
> தக்கதன்று" என்று கூறுகிறது.[7]

பெரிய பெரிய அறச் செயல்களை ஒரு சமூகத்தினருள் யாராவது ஓரிருவர் செய்திருக்கிறார்கள். ஆனால் ஒரு சமூகத்தைச் சேர்ந்த மக்கள் அனைவருமே அறப்பணிகளைத் தனியாகவோ, குடும்பமாகவோ, கூட்டாகவோ செய்திருப்பதை நகரத்தார் சமூகத்தில் தான் காணலாம். இவர்களில் 'தர்ம பூக்ஷணம்', 'தர்ம போக்ஷகர்', 'வள்ளல்' என்ற அடை மொழியுடன் அழைக்கப்படுவோர் பலருளர்.

தாங்கள் செய்த தருமங்களால் பாடசாலையார் வீடு, பசுமடத்தார் வீடு, தண்ணீர்ப்பந்தலார் வீடு, சத்திரத்தார் வீடு, கோயில் செட்டியார் வீடு, மடத்துச் செட்டியார் வீடு, பெருமாள் கோயிலார் வீடு, தோப்புக்கார வீடு, கார்த்திகை மடத்தார் வீடு, பள்ளிக் கூடத்தார் வீடு என்று அழைக்கப்படுகின்ற குடும்பங்கள் செட்டிநாட்டில் பல.

தொழில் முறையின் பொருட்டுச், சென்ற இடங்களிலும் நகரத்தார்கள் அறப் பணிகளாற்றியிருக்கிறார்கள்.

சிறுபான்மையினரான இச்சமூகத்தார், தங்களுடைய அறப்பணிகளால் உலகமறிந்த சமூகத்தாராக விளங்குகின்றனர்.

"நயனொடு நன்றிபுரிந்த பயனுடையார்
பண்பு பாராட்டும் உலகு"[8]

என்றபடி இவர்கள், அனைவரது பாராட்டையும் பெற்றுள்ளார்கள். தம் உழைப்பால் முன்னேறி, அறப்பணியாற்றிய நகரத்தார் வரலாறும், அறப்பணிகளைப் பற்றிய அரிய செய்திகளும் அனைவருக்கும் பயன்படத் தக்கவை என்ற எண்ணத்தின் அடிப்படையில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

அடிக்குறிப்புகள் :

1. கழகப் புலவர் குழுவினர் தொகுத்தது, **கழகத் தமிழ் அகராதி** திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், முதற்பதிப்பு 1964, ப. 49.

2. ஔவையார், **ஆத்திசூடி**, காரைக்குடி, தமிழ்ச் சங்க வெளியீடு, 8 ஆம் பதிப்பு, 1986, ப. எ. 3.

3. ஔவையார், **தனிப்பாடற்றிரட்டு**, அ. இரங்கசாமி முதலியார் ஸன்ஸ், பூமகள் விலாச அச்சுக்கூடம், சென்னை, 1940, ப. 41.

4. **எண்சுவடி**, திருப்பதி இரத்தின முதலியார் அண்டு சன் கலைக்கியான முத்திராக்ஷரசாலையில் பதிப்பிக்கப்பட்டது,. 1923.

5. **கலைக்களஞ்சியம்**, தொகுதி 1, தமிழ் வளர்ச்சிக் கழகம், முதற்பதிப்பு 1954, ப. 253.

6. திருஞானசம்பந்த கவிராயர், வி. (ப. ஆ) **"ஏழுநகரத்தார் பேரில் குழுவ நாடகமும் பள்ளு நாடகமும்"** சா. ராம. மு. சித. பெத்தாச்சி செட்டியார் வெளியிட்டது. 1922, ப. 10.

7. சிங்காரவேலு முதலியார், **ஆ. அபிதானசிந்தாமணி** ஏசியன் எடுகேக்ஷனல் சர்வீஸஸ், புதுடில்லி, AES Reprint, 1982 ப. 960.

8. திருவள்ளுவர், **திருக்குறள்**, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 16 ஆம் பதிப்பு, 1976, குறள் எண் 993.

4. நகரத்தாரின் கோயிற்பணிகள்

4.1. கோயில் திருப்பணியில் ஈடுபட்டதற்கான சூழ்நிலையும் பொருள் நிலையும்:

கி. பி. 13 ஆம் நூற்றாண்டில் பாண்டியர்களுக்குள் ஏற்பட்ட அரசுரிமைப் போராட்டத்தின் விளைவால் தமிழக ஆட்சியில் அந்நியர் தலையிட்டனர். பிறகு வாணிகம் செய்யவந்த ஐரோப்பியர்களும் அரசியலில் தலையிட்டு நாட்டின் அமைதிக்கு ஊறு விளைவித்தனர்.

பிறகு ஆங்கிலேயர் ஆட்சி ஏற்பட்டது. நாட்டில் அமைதி நிலவியது. பொருளுக்கும் உயிருக்கும் பாதுகாப்புக் கிடைத்தது. அக்காலகட்டத்தில் நகரத்தார்கள் கீழ்த்திசை நாடுகளுக்குச் சென்று பெரும் பொருளீட்டி, ஈட்டியதில் பெரும்பகுதியை அறப்பணிகளுக்குக் குறிப்பாகக் கோயில் திருப்பணிகளுக்குச் செலவிட்டனர்.

4.2.நகரத்தார்கள் கோயிற்பணியில் ஈடுபட்டதற்கான காரணங்கள்:

பலவிதமான அறப்பணிகளில் நகரத்தார்கள் ஈடுபட்டிருந்தாலும் அதிக அளவில் கோயில் திருப்பணிகளில் ஈடுபட்டதற்குப் பல காரணங்கள் கூறலாம்.

அவையாவன:

4. 2. 1. பாதுகாப்பு:

இந்து சமயத்தின் தூண்களாக விளங்குபவை ஆலயங்கள். இவ்வாலயங்கள் அந்நியர் ஆட்சியில் பாழடைந்து போற்றுவாரின்றிக் கிடந்தன. மேலும் வணிகம் செய்யவந்த ஐரோப்பியர் மக்களை மதம் மாற்ற முயன்றனர். இத்தகைய சூழ்நிலையில் இந்து மதத்தையும் கோயில்களையும் பாதுகாக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இதை உணர்ந்த நகரத்தார்கள் பொருள் வசதி இருந்த காரணத்தாலும், ஆழ்ந்த சமயப் பற்று உடையவர்களாக இருந்ததாலும் இந்து மதத்தையும் கோயில்களையும் பாதுகாக்கும் பொறுப்பை விரும்பி ஏற்றுக் கொண்டனர்.

"வேறு மதத்தில் விழாதபடி நம்மை
வேலியைப் போல் நின்று கோலிடுவார்
நீட்ட மேனியர் செல்வக் குபேரர்கள்
நீதி வணிகரைப் பாருங்கடி"

என்ற கும்மிப் பாடல் இந்து சமயப் பாதுகாவலர்களாக நகரத்தார்கள் விளங்கியதைக் கூறுகிறது.[1] காஞ்சிப் பெரியவர் சந்திரசேகர சுவாமிகளும் "ஒரு நாட்டுக்குக் கோட்டைக் காப்பு வீரர்கள் இருப்பதுபோல இந்து மதம் என்னும் கோட்டைக்குத் தன வணிக நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் கோட்டைக் காப்பு வீரர்களாக இருந்து வருகின்றார்கள்"[2] என்று பாராட்டியுள்ளார்.

4.2.2. நலம்தரும் என்ற நம்பிக்கை:

போக்குவரத்து வசதிகள் அவ்வளவாக இல்லாத கி. பி. 18, 19 ஆம் நூற்றாண்டுகளில் நகரத்தார்கள் தங்கள் உறவினர்களிடம் வாய்க்கரிசி வாங்கிக் கொண்டு, அதாவது தாங்கள் உயிரோடு இருக்கும்போதே இறந்தவர்களுக்குச் செய்யப்படுகின்ற சடங்குகளைச் செய்து கொண்டு, உயிரையே பணயம் வைத்துப் பாய்மரக் கப்பல்களில் 'செட்டிக் கப்பலுக்குச் செந்தூரான் துணை' என்ற துணிவோடு திரைகடலோடித் திரவியம் தேடினர். அயல் நாட்டில் தம்மையும், உள் நாட்டில் தம் குடும்பத்தையும் தெய்வம்தான் காப்பாற்றும், துணைநிற்கும் என்ற ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தனர். வெளி நாடுகளிலிருந்து தங்கள் உறவினருக்குக் கடிதங்கள் எழுதுகிறபோது கூட "இப்படிக்கு, வேணும் ஸ்ரீ கற்பகமூர்த்தி துணை; இப்படிக்கு வேணும் ஸ்ரீ தெண்டாயுதபாணி துணை" என்றே கையெழுத்திட்டனர். இவ்வாறாகத் தங்கள் நல்வாழ்விற்குத் தெய்வம் தான் காரணம் என்ற நம்பிக்கை அவர்களைக் கோயில் திருப்பணிகளில் ஈடுபடத் தூண்டியது.

4.2.3.சிவனை மறவாத சிந்தை :

நகரத்தார்கள் தங்களுடைய ஒன்பது கோயில்களைப் பேணியும், பல தலங்களைப் புதுப்பித்தும், புதிய கோயில்கள் கட்டியும் கோயில் திருப்பணிகளில் ஈடுபட்டதற்கு, அவர்கள் சிவனை மறவாத சிந்தையர்களாக இருந்ததும் ஒரு காரணமாகும்.

4.2.4. வருமானத்தில் ஒரு பங்கு தருமம் - தருமம் தொடர வட்டி ஊற்று :

நகரத்தார்கள் பெரும்பாலும் வட்டித் தொழில் புரிந்துவந்தனர். வட்டி வாங்குவது பாவம் என்றும் அதற்குக் கழுவாயாகத்தான் இத்தகைய திருப்பணிகளில் ஈடுபட்டனர் என்றும் சொல்லப்பட்டது. இக்கருத்து ஏற்றுக்கொள்ளக் கூடியதன்று. வட்டித் தொழில் மிகவும் பழமையான தொழில். பண்டைக் காலத்தில் கோயிலுக்குத் தர்மம் செய்ய விரும்புவோர் ஒரு குறிப்பிட்ட பொருளைக் கோயில் கருவூலத்தில் மூலதனமாகக் கொடுத்து அதிலிருந்து கிடைக்கும் வட்டியைக் கொண்டு தருமம் செய்ததைக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. வட்டியைக் கல்வெட்டுக்கள்' 'முதல் கெடாது வந்த பொலிசை' (பொலிசை - வட்டி) என்று குறிப்பிடுகின்றன[3]. வட்டித் தொழில் பாவம் என்று கருதியிருந்தால் கோயில்களில் வட்டி மூலம் தருமம் செய்யும் முறையை ஏற்படுத்தியிருக்க மாட்டார்கள். ஆகவே வட்டித் தொழில் பாவமானது அன்று. வட்டி முதலை வளர்க்கும் கன்று; அறத்தை வளர்க்கும் செவிலி.

நகரத்தார்கள் தங்கள் வருமானத்தில் ஒரு பகுதியைத் தருமத்திற்கென்றே ஒதுக்கினார்கள். அவர்களின் ஐந்தொகைப் பேரேட்டில் 'தருமக் கணக்கு' என்றே ஒரு பகுதி இருக்கும். அந்தப் பணத்தையும் வட்டித் தொழிலால் வளர்த்துத் திருப்பணிகள் போன்றவற்றைச் செய்திருக்கிறார்கள்.

"வட்டியிலே சோற்றையுண்டு வந்த மிச்சமெல்லாம்
கட்டிவைத்துக் கோயிலாகக் கட்டி வைத்தோர்"

என்று இவர்களைக் குறிப்பிடுவார் கவிஞர் கொத்தமங்கலம் சுப்பு.[4] ஆகவே வட்டி வாங்குவதற்குக் கழுவாயாகத்தான் கோயில்கள் கட்டினர் என்பது ஏற்புடைத்தாக இல்லை. செய்யும் திருப்பணிக்குத் தொடர்ந்து நிதி பெறவும், பெருஞ் செலவு பிடிக்கும் திருப்பணி செய்வதால் தாம் நொடித்துப் போகாமல் இருக்கவும் வட்டித் தொழில் அவர்களுக்கு உதவியது. இலாபத்தில் ஒரு பகுதியைக் கொண்டு நகரத்தார்கள் உலகமே வியக்கும் வண்ணம் கோயிற்பணிகள் செய்துள்ளனர். ஒவ்வொரு நகரத்தாரும் ஏதாவது ஒரு வகையில் கோயில் திருப்பணியோடு தொடர்புடையவரே.

4.3. ஆலயப் பணியாகிய அறப்பணி :

மக்களின் சமூக வாழ்க்கை பற்றியவை என்று நாம் இப்போது கருதும் பல காரியங்கள் அந்நாளில் புண்ணியம் பயப்பவை என்று கருதப்பட்டுச் சமயத்தில் முக்கிய இடம் பெற்றிருந்தன.

கோயில்கள் மக்களின் சமய வாழ்க்கையிலும் சமுதாய வாழ்க்கையிலும் முக்கிய இடம் பெற்றிருந்தன. அவை வழிபாட்டுத் தலங்களாக மட்டுமல்லாமல், பல சமுதாய நிகழ்ச்சிகள் நடைபெறும் பொது மன்றங்களாகவும் விளங்கின. கட்டடக் கலை, சிற்பக் கலை, ஓவியக் கலை, இசைக் கலை, நாட்டியக் கலை போன்ற கலைகள் கோயில்களால் வளர்ந்தன. கோயில்களில் கல்லூரிகள், மருத்துவசாலைகள், நூல் நிலையங்கள் முதலியவை இயங்கின. அன்னதானங்கள் நடந்தன. கோயில்களை ஒட்டிக் குளங்கள் வெட்டப் பெற்றன. புனிதப் பயணிகளும், வழிப்போக்கர்களும் வயிறார உண்டு இளைப்பாறிச் செல்லமுடிந்தது. கோயில்களில் இடையறாது விழாக்கள் நடந்த தால் மக்களை ஒருங்கு கூட்டும் விழா மன்றங்களாகவும் அவை விளங்கின. எல்லாவற்றுக்கும் மேலாக ஆலய வழிபாட்டால் மக்களுக்கு நல்லொழுக்கம், மனத் தூய்மை ஆகியவை ஏற்பட்டன.

பலவகைகளிலும் பயன்படும் கோயில்களை நகரத்தார்கள் திருப்பணி செய்து, திருப்பணி செய்த கோயில்களையொட்டி இறைவன் பூசனைக்குரிய மலர்களுக்காக நந்தவனங்கள், கோச்சாலைகள், வேத, ஆகம, தேவாரப் பாடசாலைகள், வழிபடுவோர் தங்கிச் செல்ல விடுதிகள், மடங்கள், சத்திரங்கள்; ஊருணிகள் ஆகியவற்றையும் ஏற்படுத்தினர். அதனால் கலைஞர்களும் மற்ற ஊழியர்களும் வேலை வாய்ப்புப் பெற்றனர். கல்வியும் கலைகளும் வளர்ந்தன.

எனவே ஆலயப் பணி செய்வது மக்களுக்கு அனைத்து வகையிலும் பயன்படும், நன்மை பயக்கும் அறப்பணியேயாகும். எனவே நகரத்தார்களும் அனைத்து வகை அறப்பணிகளுக்கும் தாய்ப்பணியாகிய ஆலயப் பணியை மேற்கொண்டனர்.

4.4. கோயிற்பணியில் நகரத்தார்களை ஈடுபடுத்தியோரும் ஊக்கம் கொடுத்தோரும் துணை நின்றோரும் :

18 ஆம் நூற்றாண்டிலேயே நகரத்தார்கள் கோயில் திருப்பணிகளில் சிறந்திருந்தமையை அக்கால நகரத்தார் தொடர்பான இலக்கியங்கள் விரிவாக எடுத்துரைக்கின்றன. முதலில் நகரத்தார்கள் தங்களுடைய ஒன்பது நகரக் கோயில்களில் திருப்பணி செய்திருக்கிறார்கள். பாடுவார் முத்தப்பரின் 'நகர வாழ்த்து' என்னும் நூல் நகரத்தார்கள் செய்த திருப்பணிகளை விரிவாக எடுத்துரைக்கிறது.[5]

கி. பி. 19 ஆம் நூற்றாண்டில் நகரத்தார்களை அதிக அளவில் கோயில் திருப்பணிகளில் ஈடுபடுத்தியவர்களுள் குறிப்பிடத் தக்கவர்கள் மூவர்.

4.4.1. கோவிலூர் ஆண்டவர் என்னும் ஸ்ரீ முத்துராமலிங்க ஞானதேசிகர் :

நகரத்தார்கள் வசிக்கும் ஊர்களுள் ஒன்றாகிய காரைக்குடியில் நகரத்தார் மரபில் பிள்ளையார்பட்டிக் கோயில் பிரிவில் கி. பி. 1791 – இல் தோன்றியவர் கோவிலூர் ஆண்டவர் என்று அழைக்கப்படும் ஸ்ரீ முத்துராமலிங்க ஞான தேசிகர். அவர் கருவிலே திருவுடையாராகத் திகழ்ந்தார்.

அவர் காலத்தில் காரைக்குடியில் சிவன் கோயில் இல்லை. அதனால் காரைக்குடிக்கு அருகிலுள்ள கழனிவாசலுக்குச் சென்று அங்கு கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் கொற்றவாளீசர் - திருநெல்லையம்மனை வணங்குவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.[6]

அக்கோயில் பழுதுபட்டிருந்ததைக் கண்ட முத்துராமலிங்கர் கி.பி. 1808 இல் திருப்பணியைத் தொடங்கி நகரத்தார் பொருளுதவியோடு செய்தார். திருப்பணிக்குப் பொருள் போதவில்லை. அதனால் தன் மாணாக்கர்களுள் ஒருவராகிய காரைக்குடி அண்ணாமலைச் செட்டியார் என்பவருக்குப் பிள்ளை இல்லாத காரணத்தால் தானே அவருக்குத் தத்து பிள்ளையாகச் சென்று அண்ணாமலைச் செட்டியாரிடம் பொருள் பெற்று அதைக் கொற்றவாளீசர் கோயில் திருப்பணிகளுக்குச் செலவிட்டார்.[7]

முத்துராமலிங்கர் செய்த திருப்பணிகளுக்குப் பிறகு கோயிலைச் சுற்றி ஊரமைந்து அப்பகுதி கழனிவாசலில் இருந்து பிரிந்தது; அதற்குக் 'கோவிலூர்' என்ற பெயர் ஏற்பட்டது. முத்துராமலிங்கர் கோவிலூரில் ஒரு வேதாந்த மடம் நிறுவி அதன் முதல் தலைவராகவும் திகழ்ந்தார்.

முத்துராமலிங்கத் தேசிகர் கல்லல், கானாடுகாத்தான், சாக்கை ஆகிய தலங்களிலும் திருப்பணி செய்துள்ளார்.

நகரத்தார்கள் அயல்நாடுகள் சென்று பெரும் பொருளீட்டிய காலக்கட்டத்தில் வாழ்ந்த முத்துராமலிங்கர்,தாம் திருப்பணிகள் செய்ததுமன்றி, நகரத்தார்களையும் தத்தம் ஊர்களிலும், பாடல் பெற்ற தலங்களிலும், ஏனைய தலங்களிலும் திருக்கோயில் திருப்பணிகளோடு, வேதபாடசாலைகள், தேவாரப் பாடசாலைகள், பசுமடங்கள், குருபூசை மடங்கள், நந்தவனங்கள், அன்னசத்திரங்கள் முதலான அறப்பணிகள் செய்யவும் தூண்டினார். நகரத்தார்களும் அவ்வாறே செய்தனர்.

இவ்வாறு ஆண்டவர் காலமுதல் திருப்பணிகள் செம்மையாக நடந்துவருவதை,

'மடமுண்டோ சிவாலயங்கள் மிகுதியுண்டோ
வாசிட்டம் படிப்பதுண்டோ மனத்துள் ஞானத்
திடமுண்டோ நால்வர்தமிழ் படிப்பாருண்டோ
திவ்வியமாம் உதாரமுதற் குணங்களுண்டோ
விடமுண்டோன் அடியர்குழாம் மிகுதியுண்டோ
மெய்யறம் சத்திரம் விரைப்பூங்காவுமுண்டோ
வடகயிலைக் கிறைவனெனும் முத்துராம
வள்ளல்திருக் கழனிநகர் வாராமுன்னம்''[8]

என்ற பாடல் மூலமும் அறியலாம். இன்று உலகறிந்த நகரத்தார்களின் அறப்பணிகளுக்கு முன்னோடியாகத் திகழ்ந்து வழிகாட்டியாக இருந்து அடியெடுத்துக் கொடுத்தவர் கோவிலூர் ஆண்டவராவர்.

4. 4. 2. மெய்யப்ப சுவாமிகள் :

மெய்யப்ப சுவாமிகள், கோவிலூர் மடாலயத்தின் இரண்டாவது பட்டமான துறவு ஆண்டவரின் மாணாக்கர். இவர் மதுரையிலுள்ள கோவிலூர் மடத்தின் கிளை மடமான குட்டைய சுவாமிகள் மடத்தில் தங்கியிருந்து மீனாட்சி சொக்கநாதருக்குப் பணிவிடை செய்துகொண்டு இருந்தார்.

அமராவதிபுதூரைச் சேர்ந்த வயி. நாக. ராம. குடும்பத்தில் தோன்றிய நாகப்பய்யா என்பவரும் அவர் சகோதரர் வெங்கிடாசலய்யாவும் மதுரையில் சடாமுனி தெருவில் தங்கி நூல் வியாபாரமும் துணி வியாபாரமும் செய்துகொண்டு இருந்தனர். வியாபாரத்தில் பெரும் பொருள் ஈட்டிய அவர்கள் மதுரை மீனாட்சியம்மனிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தனர். தங்களுடைய வியாபாரத்தின் பொருட்டுத் தூத்துக்குடிக்கும் கல்கத்தாவுக்கும் இடையே ஓடிய பாய்கட்டிக் கப்பலுக்கு 'மீனாட்சி' என்றே பெயரிட்டிருந்தனர்.[9] இவர்கள் மெய்யப்ப சுவாமிகளோடும், குட்டைய மடத்தை நிறுவிய குட்டைய சுவாமிகளோடும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர்.

அக்காலக்கட்டத்தில் மீனாட்சியம்மன் கோயிலில் உள்ள சித்தி விநாயகர் ஆலயம் இடிந்து விழும் நிலையில் இருந்தது. அப்போது மெய்யப்ப சுவாமிகள் வயிநாகரம் நாகப்பய்யாவை அணுகிப் பிள்ளையார்பட்டிக் கோயிலைச் சேர்ந்த வயிநாகரம் குடும்பத்தார் சித்திவிநாயகர் கோயில் திருப்பணியை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

முதலில் ஆலயத் திருப்பணி செய்யப் பயந்து, தயங்கி மறுத்த நாகப்பய்யா பிறகு மெய்யப்ப சுவாமிகள் தந்த ஊக்கத்தினால் சித்தி விநாயகர் ஆலயத் திருப்பணியைச் செய்து முடித்தார்.[10] மெய்யப்ப சுவாமிகள்தான் வயிநாகரம் குடும்பத்தாரை முதன் முதலில் திருப்பணியில் ஈடுபடுத்தியவர், என்ற இச்செய்தியை 'ஸ்ரீமத் சொக்கலிங்க ஐயா அவர்கள் சரித்திரம்' என்ற நூலும் தெளிவாக்குகிறது.[11] மெய்யப்ப சுவாமிகளின் ஊக்கத்தாலும், முயற்சியாலும் வயிநாகரம் குடும்பத்தார் மதுரைக் கோயிலில் விமானம், மண்டபம், கோபுரம், திருமதில் முதலிய திருப்பணிகளை அக்காலத்திலேயே இருபத்தைந்து இலட்ச ரூபாய் செலவில் செய்து முடித்தனர்.

மதுரைத் திருப்பணி முடிந்து 6. 2. 1878 - இல் குடநீராட்டு விழா நடந்தபோது கோவிலூர் மடத்தின் மூன்றாவது பட்டமான கருணாநிதி சுவாமிகள் இரங்கூனுக்குத் தந்தி அனுப்பி பர்மாவெங்கும் இருந்த நகரத்தார் ஒவ்வொருவரிடமும் ஒரு மாத ஊதியம் நன்கொடையாகப் பெற்று அக்குட நீராட்டு விழாவிற்கு உதவினார்.[12]

4. 4. 3. திருக்களர் ஆண்டவர் :

நகரத்தார்கள் அதிகமாகக் கோயில் திருப்பணி செய்வதற்குக் காரணமாக இருந்தவர் 'ராஜரிஷி' என்று அழைக்கப்பட்ட வீரப்ப சுவாமிகளாவார். அவர் கோவிலூரின் ஐந்தாவது மடாதிபதியாகத் திகழ்ந்தார். கோவிலூரைக் கலைமலிந்த 'மாதிரிச் சிற்றூராக' ஆக்கிய வீரப்ப சுவாமிகள் சோழநாட்டுத் தலமான திருக்களரில் திருப்பணி செய்ததால் 'திருக்களர் ஆண்டவர்' என்று அழைக்கப்பட்டார். அவர் நகரத்தார்களிடம் பணம் வசூலித்துச் சிருங்கேரியில் உள்ள சாரதாம்பாள் கோயிலைக் கருங்கல் திருப்பணியாக்கி, ரூ. 50,000 சிருங்கேரி மடத்திற்குக் கொடுத்தார். வீரப்ப சுவாமிகள் இன்ன ஊரில் இன்ன திருப்பணி செய்யுங்கள் என்று கட்டளையிட்ட படியே நகரத்தார்களும் திருப்பணி செய்தார்கள்.[13]

சுருக்கமாகக் கூறினால் கோவிலூர் மடாதிபதிகள் தாங்களும் கோயில் திருப்பணிகள் மேற்கொண்டு, நகரத்தார்களையும் கோயில் திருப்பணிகளில் ஈடுபடுத்தினர்.

4. 5. கோயிற் பணிகள்:

நகரத்தார்கள் தென்னிந்தியாவிலும் வட இந்தியாவிலும் கோயில் திருப்பணிகள் செய்துள்ளனர். இந்தியாவில் மட்டுமல்லாமல் கடல்கடந்த நாடுகளிலும் கோயில் திருப்பணிகள் செய்துள்ளனர். உலகம் முழுவதிலும் நகரத்தாரின் கோயில் பணிகள் காணப்படுகின்றன. அதனால் நகரத்தாரின் கோயில் பணிகளை,

1. தமிழகத்தில் (நகரத்தாரின் கோயில் பணிகள்)
2. வட இந்தியாவில் (நகரத்தாரின் கோயில் பணிகள்)

3. அயல் நாடுகளில் (நகரத்தாரின் கோயில் பணிகள்)

என்று பகுத்துக் காணலாம்.

4. 5. 1. தமிழகத்தில் நகரத்தாரின் கோயில் பணிகள்:

நகரத்தார்கள் தமிழகத்தில் நான்கு வகையாகக் கோயில் திருப்பணிகள் செய்திருக்கிறார்கள்.

1. புதியன அமைத்தல்
2. பழையன புதுப்பித்தல்
3. கிராம தேவதைகள் கோயில்களில் திருப்பணி செய்தமை
4. வைணவக் கோயில்களில் திருப்பணி செய்தமை

4. 5. 1. 1. புதியன அமைத்தல் :

தினமும் கோயிலுக்குச் சென்று வழிபடுவதும் மனத்தூய்மை பெறுவதும் இன்றியமையாத சைவசமயச் செயல் முறைகளாகும். நகரத்தார்கள் தினமும் சிவன் கோயிலுக்குச் சென்று இறைவனை வழிபடுவதை நியமமாகக் கொண்டிருந்தனர்.

நகரத்தார்கள் குடியேறிய தொண்ணூற்றாறு ஊர்களுள் சில ஊர்களில் சிவன் கோயில்கள் இல்லை. எடுத்துக்காட்டாகக் காரைக்குடி, ஆத்தங்குடி, தேவகோட்டை போன்ற ஊர்களில் நகரத்தார்கள் குடியேறியபோது அங்குச் சிவன் கோயில்கள் இல்லை. காரைக்குடி நகரத்தார்கள் கழனிவாசலில் உள்ள கொற்றவாளீசுவரர் கோயிலுக்கோ அல்லது செஞ்செய் வயல்களுக்கு நடுவிலுள்ள காட்டு ஈசுவரன் கோயிலுக்கோ சென்றுதான் வழிபட வேண்டும். ஆத்தங்குடி நகரத்தார்கள் தங்கள் ஊருக்கு அருகிலுள்ள ஆதனூர்ச் சிவாலயத்திற்குத்தான் செல்ல வேண்டும்.

மழைக் காலத்திலும் இரவு நேரங்களிலும் பக்கத்து ஊரிலுள்ள கோயிலுக்குச் சென்று வருவது சிரமமாக இருந்ததாலும், 'கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'[14] என்ற சொல்லை நினைவுகூர்ந்தும், நகரத்தார்கள் தாங்கள் குடியேறிய ஊர்களில் சிவன் கோயில்கள் இல்லாவிட்டால் புதிய

கோயில்களை எடுப்பித்தனர். இவர்கள், தாங்கள் வசிக்கும் ஊர்களில் கட்டிய புதிய சிவன் கோயில்களுக்கு 'நகரச் சிவன் கோயில்கள்' என்று பெயர் - இந்த வகையில் நகரத்தார்கள் அறுபத்து நான்கு ஊர்களில் புதிதாக நகரச் சிவன் கோயில்களைக் கட்டியுள்ளார்கள்.

தாங்கள் வசித்த ஊர்களிலும் அருகிலுள்ள ஊர்களிலும் ஊருணிகள், குளங்கள் ஆகியவற்றை ஏற்படுத்திய நகரத்தார்கள் அவற்றையொட்டி விநாயகர் ஆலயங்களைப் புதிதாக எடுத்துள்ளனர். 1585 இல், இளையாத்தங்குடியான குலசேகரபுரத்துத் திருவேட்பூருடையான் அழகாபுரி சேவகப் பெருமாள் புத்திரன் அழகன் செட்டியார் என்பவர் 'அழகப் பெருமாள் ஊருணி' என்ற பெயரில் ஓர் ஊருணி உண்டாக்கித் திருக்கோயிலும் கட்டுவித்துக் கற்பக விநாயகரை மண்டபத்திலே எழுந்தருளப் பண்ணின செய்தியைக் கோனாபட்டு கல்வெட்டுக் கூறுகிறது.[15] நகரத்தார்கள் புதிதாகக் கட்டிய விநாயகர் கோயில்களுள் காலத்தால் முந்தியது இதுவேயாகும்.

தங்கள் ஊருக்கு அருகிலுள்ள, தாங்கள் வணிகத்தின் பொருட்டுச் செல்லும் போது வழியிலுள்ள, குளக்கரைகளில் மரத்தடியில் எழுந்தருளியிருக்கும் விநாயகருக்கும் ஆலயங்களை எழுப்பியுள்ளனர். புதுக்கோட்டைக்கு அருகில் பேரையூர் செல்லும் வழியில் உள்ள பொய்யாத விநாயகர் ஆலயம் அவ்வாறு எழுப்பப்பட்ட ஆலயங்களுள் ஒன்றாகும்.[16]

நகரத்தார்கள் புதிதாக அமைத்த ஆலயங்கள் எல்லாம் ஆகம விதிப்படியே கட்டப்பட்டன. ஆகம விதிக்கு மாறாக நகரத்தார்களுள் சிலர் ஆலயங்களைக் கட்ட முயன்றபோது, அது தவறு என்று எடுத்துச் சொல்லி ஆகம விதிப்படிதான் ஆலயங்கள் அமைக்கப்பட வேண்டும் என்று நகரத்தார்களே வலியுறுத்தியிருக்கிறார்கள்.[17]

4. 5. 1. 2. பழையன புதுப்பித்தல் :

பழங்காலத்தில் கோயில்கள் மரத்தாலும் செங்கற்களாலும் கட்டப்பட்டன. அவை விரைவில் அழிந்தன. அதனால், விரைவில் அழியாமல், என்றும் நிலைத்திருக்கும் வண்ணம் கோயில் கட்ட விரும்பிய மன்னர்கள் கற்கோயில்களை

எழுப்பினர். செங்கல்தளிகளை எல்லாம் கற்றளிகளாக மாற்றினர். 'மயமதம்' போன்ற சிற்ப நூல்களும் தெய்வங்களின் உறைவிடங்களைக் கல்லால் அமைத்தல் நலம் என்று கூறுகின்றன.

நகரத்தார்களும் கி. பி. 18ஆம் நூற்றாண்டு முதல் கல் திருப்பணி செய்வதில் ஆர்வத்தோடு ஈடுபட்டனர். திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தி நாயனார் ஆகியோரது பாடல் பெற்ற தலங்களையும், திருவாசகத் தொடர்புடைய தலங்களையும் கி.பி.18,19ஆம் நூற்றாண்டுகளிலும் இந்நூற்றாண்டின் ஆரம்பத்திலும் பல இலட்சக் கணக்கான ரூபாய்கள் செலவிட்டுப் புதுக்கினர். சிதிலமடைந்த பழங்கோயில்களிலும் திருப்பணி செய்தனர்.

தேவகோட்டைக்கு அருகிலுள்ள 'கோட்டூர்' என்னும் தேவார வைப்புத் தலத்தைத் திருப்பணி செய்தவர் தேவகோட்டை மாயாண்டிச் செட்டியாராவார். 1818 இல் திருப்பணி செய்து முடித்தார். கி.பி. 18ஆம் நூற்றாண்டில் நகரத்தார்கள் திருப்பணி செய்தமைக்கு இஃது ஒரு சான்றாகும்.[18]

இயல்பாகவே சைவசமயத்தில் ஆழ்ந்த ஈடுபாடுடைய நகரத்தார்கள் சைவசமயக் குரவர்கள் பாடிய தலங்களைத் தேடித் தேடித் திருப்பணி செய்தனர். புதுக்கோட்டைக்கு அருகிலுள்ள நச்சாந்துபட்டியைச் சேர்ந்த பெ. ராம. ராமன் செட்டியார் என்பவர் கோயில் திருப்பணி செய்ய நினைத்துத் திருத்தலங்களைத் தேர்வு செய்து கொண்டிருந்தார். புதுக்கோட்டை சமஸ்தானத்தைச் சேர்ந்த பேரையூர் நாகநாத சுவாமி கோயிலைத் திருப்பணி செய்யப் புதுக்கோட்டை மன்னர் இசைவு வழங்கியிருந்தபோதிலும் அது பாடல் பெற்ற தலமாக இல்லையே என்று தயங்கி, பிறகு சம்பந்தர் பதிகம்பாடி ஓடம் போக்கிய தலமான திருக்கொள்ளம்புதூர் என்ற சோழநாட்டுத் திருத்தலம் திருப்பணி செய்ய வேண்டிய நிலையில் இருப்பதை அறிந்து கி.பி.1930 இல் அவ்வாலயத் திருப்பணியை மேற்கொண்டார்.[19] நகரத்தார்கள் பாடல்பெற்ற தலங்களைத் தேடிக் கண்டுபிடித்துத் திருப்பணி செய்தனர் என்பதற்கு இஃது ஓர் எடுத்துக்காட்டாகும்.

நகரத்தார்கள் பாடல் பெற்ற தலங்களைத் திருப்பணி செய்தபோது அத்தலங்கள் எத்தகைய நிலையில் இருந்தன என்று ஆய்வது நகரத்தார்கள் திருப்பணி செய்ததன் சூழ்நிலையை விளக்குவதாக அமையும். 'கி.பி. 18 ஆம் நூற்றாண்டில் கிறித்துவ, முகமதிய சமயங்கள் ஏற்றங் கண்டதாலும் இந்து மன்னர்கள் ஆற்றல் இழந்து அயல் சமயத்தினரின் படைத் துணையை நாடி ஓடியதாலும் இந்துக் கோயில்கள் பாதுகாப்பற்றுப் பேணுவாரற்றுக் கிடந்தன. இக்காரணத்தால் தமிழகத்துப் பெருங்கோயில்கள் போர் அணிகள் நிறுத்தப்பட்டிருந்த பாடி வீடுகளாகவும் கொத்தளங்களாகவும் பயன்படுத்தப்பட்டன.[20]

'சிதம்பரம் கோயிலில்' 'சாஹுஜி' என்ற மராத்தியன் பகைவருக்கு அஞ்சித் தன் படையுடன் அடைக்கலம் புகுந்தான். பிரெஞ்சுக்காரரும் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியாரும், ஐதரலியும் மாறிமாறி இக்கோயிலைத் தம் கொத்தளங்களாகப் பயன்படுத்தி வந்தனர். இக்கோயில் முப்பத்தைந்து ஆண்டுகள் தொடர்ந்து இராணுவத்தினர் வசம் இருந்தது. பீரங்கித் தாக்குதல்களால் இக்கோயிலின் மண்டபங்களும், சுற்றாலைகளும், சிற்றாலயங்களும் இடியுண்டு அழிந்தன. ஒருமுறை நடராசர் சிவகாம சுந்தரி திருவுருவச் சிலைகளை அந்நியருக்குப் பயந்துஎடுத்துச் சென்று திருவாரூர்க் கோயிலில் சபாபதி மண்டபத்தில் வைத்திருந்து, சிதம்பரம் கோயில், இராணு வத்திடமிருந்து விடுதலையான பிறகு மீண்டும் அங்கு கொண்டுவந்து வைத்திருக்கிறார்கள்.'[21]

சிதம்பரம் கோயிலைப் போலவே திருவண்ணாமலைக் கோயிலிலும் படை வீடுகள் அமைக்கப்பட்டிருந்தன. பல கொலைகள் அக்கோயிலுக்குள் நடைபெற்றன. ஒருமுறை ஆர்க்காட்டு நவாபு ராஜாசாயுபு விட்டுவிட்டுப் போன பட்டாளம் ஒன்று அண்ணாமலையார் கோயிலினுள் தங்கியிருந்தது. தியாக துர்க்கம் கின்னேதாரன் கிருக்ஷ்ணாராவு என்ற மராத்தியன் ஒரு நாள் திடீரென்று தன் படை வீரருடன் கோயிலுக்குள் புகுந்து எழுநூற்றைம்பது சிப்பாய்களைப் படுகொலை செய்து கோயில் சுற்றாலைகளை இரத்தத்தால் மெழுகினான்.[22]

இவ்வாறு அனேக பாடல் பெற்ற தலங்கள் காலத்தின்

கோலத்தால் சீரழிந்து, வருவாயின்றிப் பூசை முதலியன நடைபெறாமல் இருந்தன. பூசனை தவறினால் வரும் தீங்கினை

"கண்ணுதற் பெருமான் மேய கோயிலிற் காலந் தோறு
நண்ணுதற் பூசை யாதி விதிப்படி நடத்தல் வேண்டும்
பண்ணுத றவறு மாயிற் பார்த்திபன் றனக்கும் பாரி
லண்ணுபல் லுயிர்க்குந் தீமை யணுகுதல் சரத மாமே"

என்று மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை கூறுவார்.[23] பாடல் பெற்ற தலங்களில் பூசைகள் முட்டுப்பாடின்றி நடைபெற வேண்டும் என்று நினைத்த நகரத்தார்கள், பொருள் வருவாயும் துணைசெய்ய, பல தலங்களைத் திருப்பணி செய்து பூசை முதலியவை நிரந்தரமாய் நடந்துவர, வழி வகைகளும் செய்தனர்.

சில சமயங்களில் பொதுமக்கள் தங்கள் தங்கள் ஊர்களிலுள்ள புராதனக் கோயில்களைத் திருப்பணி செய்யுமாறு வேண்டிக் கொண்டிருக்கிறார்கள். அப்போது அந்தத் தலங்களில் நகரத்தார்கள் திருப்பணி செய்திருக்கிறார்கள்.

சுந்தரமூர்த்தி நாயனார் திருவெண்பாக்கத்தை அடைந்து சிவபெருமானை வணங்கித் 'திருக்கோயில் உள்ளீரே' என்று விண்ணப்பஞ் செய்ய, சிவபெருமான் அவருக்கு ஊன்று கோல் கொடுத்து 'உளோம் போகீர்' என்று சொல்லி அனுப்பிய தலம் திருவெண்பாக்கம். திருவள்ளூருக்கு மேற்கே சுமார் ஆறு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. இத்தலத்தில் உள்ள கோயிற்பகுதி கள்ளி முளைத்துப் பாழடைந்து வழிபாடு நடைபெறாமல் இருந்தது. இக்கோயிலைத் திருப்பணி செய்ய வேண்டும் என்று 1916 இல் பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்க நகரத்தார்கள் திருப்பணி செய்து கொடுத்திருக்கிறார்கள்.[24]

உறையூரில் உள்ள திருமூக்கீசுவரம் என்ற பாடல் பெற்ற தலத்தை அவ்வூரார் வேண்டிக் கொள்ள நகரத்தார்கள் திருப்பணி செய்துள்ளார்கள். உறையூர் வாசிகள் இக்கோயிலைத் திருப்பணி செய்ய முயன்று பணம் போதாமையால் தேவகோட்டை வந்து நகரத்தார்களை வேண்டிக் கொள்ள தேவகோட்டை நகரத்தார்கள் திருப்பணியை முடித்துக்

கொடுத்திருக்கிறார்கள்.[25]

கி.பி.19ஆம் நூற்றாண்டிலேயே பல பாடல் பெற்ற தலங்களைத் திருப்பணி செய்து முடித்திருக்கிறார்கள்.

"சீர்பெருகு ஒற்றியூர் கச்சிகழுகாசலம்
தில்லை சீர்காழி வைய்யித்
தீசர் உறுகோவில் திருவதிகை யருணாசலந்
திகழ் கும்ப கோண மதுரை
பார்பெருகு வெங்காடு செங்காடு மாயூரம்
பரங்கிரி கண்ணி யாவுமுன்னாள்
பாண்டி சோழன்னாதி மன்னராற் கட்டிட்ட
பகரரிய திவ்ய தேசம்
ஏர்பெரு மடந்தடஞ் சோலைகள் முதலான
வியாவையு நவமாக்கி"

யவர்கள் நகரத்தார்கள் என்று 1901 - இல் பாடப்பட்ட 'தனவணிகர் குல சிரேக்ஷடர்களாகிய நகரத்தார் பேரில் நவரத்தினம்' என்ற நூல் கூறுகிறது.[26]

'கும்பாபிடேகக் கவித்திரட்டு' என்ற செய்யுள் நூல் மூலமாகவும், நகரத்தாரின் கோயில் திருப்பணி விவரங்களைத் தெரிந்துகொள்ள முடிகிறது.[27] சுமார் இருநூறு 'பாடல் பெற்ற தலங்களில்' நகரத்தார்கள் திருப்பணி செய்து உள்ளார்கள்.

நகரத்தார்கள் அனைவரும் ஏதோ ஒரு கோயில் திருப்பணியில் தொடர்புடையவர்களாக உள்ளார்கள். தொண்ணூற்றாறூர் நகரத்தார்களில் தேவகோட்டை நகரத்தார்கள் அதிகமாகக் கோயிற்பணிகள் செய்திருக்கிறார்கள். அவர்கள் சுமார் அறுபத்தேழு பாடல் பெற்ற தலங்களிலும் இன்னும் பல தலங்களிலும் திருப்பணி செய்துள்ளனர்.

ஒன்பது கோயில் நகரத்தார்களில் இலுப்பைக்குடி நகரத்தார்கள் அதிகமாகத் திருப்பணி செய்துள்ளார்கள். அவர்கள் திருக்காளத்தி, கச்சி ஏகாம்பரர் கோயில், திருவீழி மிழலை, திருக்கொள்ளம்புதூர், தில்லைவளாகம் போன்ற வரலாற்றுச் சிறப்புமிக்க தலங்களில் திருப்பணி செய்தமை குறிப்பிடத்தக்கது.

ஒரு சில கோயில்களில் நகரத்தார்களில் ஒரு குடும்பத்தார் மட்டுமே திருப்பணி செய்துள்ளனர். மதுரை, திருப்பரங்குன்றம், திருவாடானை போன்ற தலங்கள் இவ்வாறு ஒரு குடும்பத்தாரால் திருப்பணி செய்யப் பெற்றவை.

நகரத்தார் அனைவரின் சார்பாகவும் ஒரு குடும்பத்தார் திருப்பணி செய்ததும் உண்டு. இராமேசுவரம், திருவண்ணாமலை போன்ற தலங்கள் இவ்வாறு திருப்பணி செய்யப் பெற்றவை.

இனி, ஒரு குடும்பத்தார் ஒரு திருப்பணியை மேற்கொண்டிருந்தபோது அத்தலத்தைச் சேர்ந்த பிற திருப்பணிகளை ஒரே சமயத்தில் செய்ய இயலாததாலோ அல்லது பிறருடைய பங்கும் இருக்கட்டும் என்று நினைத்ததாலோ திருப்பணி செய்தவரின் சுற்றத்தார், பங்காளிகள் போன்றோர் அத்தலத்தில் நந்தவனம், பசுமடம் வேத, ஆகம, தேவாரப் பாடசாலைகள் போன்றவற்றை ஏற்படுத்தியிருக்கிறார்கள். பாடல் பெற்ற பல தலங்களில் இவ்வாறு பல திருப்பணிகள் செய்துள்ளனர்.

4. 5. 1. 3. திருப்பணி அனுபவங்கள் :

நகரத்தார்கள் திருப்பணிகள் செய்தபோது நடந்த சில நிகழ்ச்சிகள். நகரத்தார்களுக்குத் திருப்பணிகள் செய்வதில் உள்ள ஈடுபாட்டைக் காட்டுவனவாக உள்ளன.

மயிலாடுதுறையில் மயூரநாதசுவாமி கோயிலைத் திருப்பணி செய்தவர் தேவகோட்டை அள. வீர. பெ. வீர. குடும்பத்தைச் சேர்ந்த வீரப்பச் செட்டியார் என்பவராவார். ஆங்கிலேயர் ஆட்சி நடைபெற்ற அந்தக் காலத்தில் செட்டியாரின் திருப்பணியைக் கண்டு வியந்த ஆங்கில அதிகாரி ஒருவர், ஏதாவது உதவி செய்ய விரும்பிச் செட்டியாரை அணுகியபோது அவர் திருப்பணி வேலைகளுக்குப் பெரிய பெரிய கற்களைக் கொண்டு வருவதிலுள்ள சிரமங்களை எடுத்துக் கூறினார். அதைக் கேட்ட அந்த அதிகாரி திருப்பணிக்கான கற்களைப் புகைவண்டி மூலம் கொண்டு வருவதற்காக மாயவரம் புகைவண்டி நிலையத்தை ஏற்படுத்திக் கொடுத்ததோடு திருப்பணிக்கு எந்த ஊரிலிருந்து கற்கள் வந்தாலும் அவற்றுக்குப் புகைவண்டிக் கட்டணம் வசூலிக்க வேண்டாம் என்றும் கட்டளை பிறப்பித்தார்.

அதன்படி திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் போன்ற பகுதிகளிலிருந்து மாயவரத்திற்குக் கற்கள் வந்தன.[28] அயல் நாட்டினரும் அயல் மதத்தினரும் நகரத்தாரின் திருப்பணியைப் போற்றியிருக்கிறார்கள் என்பதை இந்நிகழ்ச்சி எடுத்துக்காட்டுகிறது.

கண்ணப்பர் நாள் ஆறில் கண்ணிடந்து அப்பிய திருக்காளத்தித் தலத்தில் திருப்பணி செய்தவர்கள் தேவகோட்டை மெ. அரு. குடும்பத்தார். இக்குடும்பத்தைச் சேர்ந்த மெ. அரு. நா. இராமநாதன் செட்டியார் காளத்தி ஞானப்பூங்கோதை அம்மனுக்கு அணிவிக்கத் தன் மனைவியின் மாங்கல்யத்தையே தந்தவர் என்பது குறிப்பிடத் தக்கது.[29]

அமராவதிபுதூர் வயிநாகரம் குடும்பத்தார் பல சிவத்தலங்களில் திருப்பணிகள் செய்துள்ளனர். பாண்டி நாட்டுத் தலங்கள் அனைத்தையும் திருப்பணி செய்ய வேண்டும் என்று நினைத்திருந்த வயிநாகரம் நாகப்பய்யா மதுரைத் திருப்பணியை மேற்கொண்டபோது நடந்த இரு நிகழ்ச்சிகள் குறிப்பிடத்தக்கவை.

மீனாட்சியம்மன் கோயிலின் வடக்குக் கோபுரம் முழுமையடையாமல் இருந்ததால் 'மொட்டைக் கோபுரம்' என்று அழைக்கப்பட்டது. கோபுரத்தின் அருகில் முனீசுவரர் கோயில் இருக்கிறது. நீண்ட நாட்களாக முழுமையடையாதிருந்த கோபுரத்தைத் திருப்பணி செய்து முடிக்க நாகப்பய்யா எண்ணியபோது கோபுரத்திற்கு அருகிலுள்ள முனீசுவரரின் கோபத்திற்கு ஆளாகிவிடுவோம் என்று பயந்து அனைவரும் தயங்கினர். தலைமைக் கொத்தனாரும் ஏதேனும் இடையூறு வருமோ என்று அஞ்சினார். அந்நிலையில் வயிநாகரம் குடும்பத்தார் தாங்களே முதற் செங்கல்லை எடுத்துவைத்துப் பகுத்தறிவோடு திருப்பணியைத் தொடங்கி வைத்தனர். பின்னர் வேலை விரைவில் நடந்தேறி கோபுரப்பணி நிறைவடைந்தது.[30]

ஒருசமயம் வயிநாகரம் நாகப்பய்யா, வியாபாரத்தின் பொருட்டுத் தூத்துக்குடிக்குச் சென்றபோது வழியில் தாமிரபருணி ஆற்றங்கரையிலுள்ள ஆத்தூர் என்ற இடத்தில் இரவு தங்கினார். எப்பொழுதும் அர்த்தசாமப் பூசைக்குச் சென்று மீனாட்சி அம்மனை வணங்கி, அங்கு கொடுக்கப்படும் பிரசாதத்தையே இரவு உணவாக உட்கொள்ளும் வழக்கமுடைய

நாகப்பய்யா, ஆத்தூரில் இரவு உணவு உட்கொள்ளாமலேயே படுத்திருந்தார். அப்போது ஒரு சிறுமி ஒரு தட்டில் பிரசாதத்தை நாகப்பய்யாவிடம் கொடுத்து மறைந்தாள். தன்பொருட்டுச் சிறுமியாக வந்தது மீனாட்சியம்மன்தான் என்று உணர்ந்து நெஞ்சம் நெக்குருகிய நாகப்பய்யா இனிமேல் தான் மதுரையை விட்டு, வையை ஆற்றைக் கடந்து ஒருபோதும் செல்வதில்லை என்று உறுதிபூண்டார். இந்நிகழ்ச்சி 1875 - இல் நடந்தது[31]. அதன்பிறகு நாகப்பய்யா அமராவதிபுதூரில் தன் மனைவி இறந்தபோது கூடச் செல்லாமல் இறுதிவரை மதுரையிலேயே வாழ்ந்தார்.

தேவகோட்டைச் சமீன்தார்கள் என்றழைக்கப்படுகின்ற தேவகோட்டை அள. அரு. குடும்பத்தார் இராமநாதபுரம் சேதுபதிகளுடனும் சிவகங்கை மன்னர்களுடனும் இணைந்து பல கோயில் திருப்பணிகள் செய்துள்ளார்கள். அக்குடும்பத்தாரின் திருப்பணிகளுள் இராமேசுவரம் கோயில் திருப்பணியும் காளையார்கோயில் திருப்பணியும் குறிப்பிடத் தக்கவையாகும்.

இராமேசுவரம் கோயில் திருப்பணிக்கு வேண்டிய கற்களை அம்பாசமுத்திரத்திலிருந்து தூத்துக்குடிக்கு மாட்டு வண்டியில் ஏற்றி அங்கிருந்து கடல் வழியாகப் பாய்மரத் தோணிகளில் ஏற்றி இராமேசுவரத்திற்குக் கொண்டு வந்தனர். இராமேசுவரத்தலத்து இறைவன் இறைவி பெயர்களான 'இராமநாதர்', 'பருவதவர்த்தினி' என்ற பெயர்களையே பாய்மரக் கப்பல்களுக்கும் வைத்திருந்தனர்.[32]

மருதுபாண்டியர் காலத்திற்குப் பிறகு வெகுகாலம் வரை காளையார் கோயில் மிகவும் நலிவடைந்தும் புராதனப் பெருமை இழந்தும் இருந்தது. அக்காளையார்கோயில் பகுதியைச் சிவகங்கை மன்னரிடமிருந்து குத்தகைக்கு எடுத்து ஊரில் பல சீர்திருத்தங்களையும் கோயில் திருப்பணியையும் செய்து முடித்தார்கள் ஜமீன்தார் குடும்பத்தினர். இவர்கள் திருப்பணி செய்ததைத் தொடர்ந்து மற்ற நகரத்தார்கள் கோயிலைச் சுற்றியுள்ள நான்கு பெரு வீதிகளிலும் இருக்கு, யசுர், சாம, வேத பாடசாலைகள், அறுபத்துமூவர் மடம், திருமந்திர மடம், நடன மடம், இசைப் பள்ளி, காலை சந்தி,

உச்சிக்கால சந்தி நந்தவனங்கள், வேதாந்த மடம், பசுமடம், விபூதி மடம், குங்கிலிய மடம், திருவாய்மொழி பாராயணம், செட்டி ஊரணி, திருவாசக மடம், யோகீசுவரர் மடம் ஆகியவற்றை அமைத்துள்ளார்கள்.[33]

'சத்திரத்து வீட்டார்' என்று அழைக்கப்படும் தேவகோட்டை ராம. அரு. அரு. குடும்பத்தார் பல தலங்களில் பல இலட்சங்கள் செலவிட்டுத் திருப்பணி செய்துள்ளனர். அவர்களால் திருப்பணி செய்யப் பெற்ற திருவாடானைக் கும்பாபிடேகத்தில் கலந்துகொண்ட பாஸ்கர சேதுபதி நகரத்தார்களின் திருப்பணிகளைப் பண்டைய அரசர்களின் திருப்பணிகளோடு ஒப்பிட்டுப் பாராட்டியுள்ளார்.[34]

கடியாபட்டியைச் சேர்ந்த தீ. சொ. தீ. நா. நாச்சியப்பச் செட்டியார் திருநாவுக்கரசர் கரையேறிய திருப்பாதிரிப்புலியூரில் திருப்பணி செய்து முடித்து 1917-இல் குடமுழுக்கு விழா நடத்தியபோது தான் பெறும் இன்பத்தை வையகமும் பெறவிரும்பி விழாவைக் காண மக்கள் இருப்புப் பாதை வண்டியில் கைப்பொருள் செலவின்றி ஏறிவர ஏற்பாடு செய்ததோடு, வந்த அனைவருக்கும் உணவு வசதி, குடிநீர் வசதி, மருத்துவ வசதி ஆகியவற்றைச் செய்து கொடுத்தார்.[35]

திருக்கொள்ளம்புதூரில் திருப்பணி செய்தபோது தஞ்சை மாவட்டத்தில் கருங்கற்கள் கிடைப்பது அரிதாகையால் பட்டிமலைக் குப்பம், திருவண்ணாமலை, வடமதுரை, குளத்தூர், திருமெய்யம் ஆகிய ஊர்களிலிருந்து கற்கள் சென்றன. பெரிய பெரிய கருங்கற்கள் ஏற்றிச் செல்லப்படுவதால் கொரடாச்சேரியிலுள்ள வெட்டாற்றுப் பாலம் (திருக்கொள்ளம் புதூருக்கு அருகிலுள்ளது) சேதமடையும் எனப் பொதுப்பணித் துறையினர் [P.W. D. Department] தடை செய்தனர். அப்போது திருப்பணி செய்தவர்கள், அவ்வாறு சேதம் ஏற்பட்டால் அப்பாலத்தைச் சரிசெய்ய ஆகும் செலவைத் தாங்களே ஏற்றுக் கொள்ளுவதாகப் பொதுப்பணித் துறையினருடன் உடன்படிக்கை செய்து கருங்கற்களை வரவழைத்துத் திருப்பணி செய்து முடித்தார்கள்.[36]

இவ்வாறாக மிகுந்த ஈடுபாட்டுடன் பாடல் பெற்ற தலங்களில் திருப்பணி செய்த நகரத்தார்கள், திருப்பெருந்துறை, உத்தரகோசமங்கை போன்ற திருவாசகத் தொடர்புடைய தலங்களிலும், திருப்பணிகள் செய்தனர். நகரத்தார்கள், உப்பூர் வெயிலுகந்த விநாயகர் கோயில், பிள்ளையார்பட்டி போன்ற பழமையான விநாயகர் தலங்களிலும் திருப்பணிகள் செய்துள்ளனர்.

சிவத்தலங்களில் திருப்பணிகள் செய்ததைப் போலவே திருப்பரங்குன்றம், பழனி, சுவாமிமலை, திருத்தணிகை, பழமுதிர்ச்சோலை, திருச்செந்தூர் ஆகிய அறுபடை வீடுகளிலும் குன்றக்குடி, சிக்கல், புள்ளிருக்குவேளூர் ஆகிய முருகன் தலங்களிலும் திருப்பணிகள் செய்தனர்.

4. 5. 1. 4. கிராம தேவதைக் கோயில்களில் திருப்பணி செய்தமை :

நகரத்தார்கள் பாண்டி நாட்டு மேட்டு நிலப் பகுதிகளில் குடியேறியபோது அப்பகுதியில் வாழ்ந்த கள்ளர், மறவர், வல்லம்பர், அகம்படியர் முதலிய பூர்வீகக் குடிகளோடு அனுசரித்து வாழ்ந்தனர். அவர்கள் வணங்கிவந்த கிராம தேவதைகளான காளி, கருப்பர், ஐயனார் ஆகிய சிறு தெய்வங்களைத் தாங்களும் தொழுது குலதெய்வமாகக் கொண்டாடினர். தாங்கள் வசிக்கும் பகுதிகளுக்கு அருகிலுள்ள ஐயனார் கோயில்களுக்கு மாசி மாதம் சிவன் இரவு போன்ற நாட்களில் சென்று வழிபடுவதை வழக்கமாகக் கொண்டனர். இலங்குடி, மூலங்குடி, துவார், பரியா மருதுபட்டி, சுண்டைக்காட்டு வேலங்குடி, இராங்கியம், கீழக்கோட்டை போன்ற ஊர்களில் உள்ள ஐயனார் கோயில்களுக்கு அந்தந்தப் பகுதியிலுள்ள நகரத்தார்கள் தங்கள் இல்லங்களில் திருமணம் நடைபெற்றாலோ, குழந்தை பிறந்தாலோ அல்லது படைப்பு நிகழ்த்தினாலோ சென்று வழிபடுவதை வழக்கமாகக் கொண்டனர். அக்கோயில்களில் திருப்பணிகள் செய்து, குடமுழுக்குகள் நடத்தினர். தாங்கள் வசிக்கும் ஊர்களில் உள்ள கருப்பர், அம்மன், காளி, ஆகிய தெய்வங்களுக்கு நாட்டாரோடு சேர்ந்து திருப்பணிகள், திருவிழாக்கள், கும்பாபிடேகங்கள் நடத்தினர், நடத்தி வருகின்றனர்.

4. 5. 1. 5. வைணவக் கோயில்களில் திருப்பணி செய்தமை:

நகரத்தார்கள் சைவர்களாக இருந்தாலும் சமயக் காழ்ப்பில்லாமல் வைணவக் கோயில்களிலும் திருப்பணிகள் செய்துள்ளனர். சிலர் அரியக்குடி, பள்ளத்தூர், கண்டனூர், அலவாக்கோட்டை போன்ற ஊர்களில் பெருமாள் கோயில்கள் புதியனவாகக் கட்டியுள்ளனர். அவர்கள் 'பெருமாள் கோயில் வீட்டார்' என்று மக்கள் வழக்கில் அழைக்கப்பட்டனர்.

ஆழ்வார்களால் மங்களாசாசனம் பெற்ற காஞ்சி நிலாத்திங்கள் துண்டம், திருமெய்யம், திருக்கோட்டியூர், திருவில்லிபுத்தூர், தில்லை, திருக்கண்ணபுரம், அழகர்கோயில், மதுரைக் கூடலழகர் கோயில் ஆகிய கோயில்களில் திருப்பணிகள் செய்துள்ளனர்.

தில்லையில் கோவிந்தராசப் பெருமாள் கோயில் சிதைந்து இடிந்துவிழும் நிலைமையில் இருந்தபோதும் சைவர்களுக்கும் வைணவர்களுக்கும் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாகப் பழுதுபார்க்கப் படாமல் இருந்தது. அண்ணாமலை அரசர் அவ்விரு தரத்தாரையும் அமைதியான முறையில் உடன்படச் செய்து தானே முன்னின்று திருப்பணியைச் செய்துமுடித்தார்.[37]

4. 5. 1. 6. நகரத்தாரும் கோயில் பராமரிப்பும் :

நகரத்தார்கள் பழங் கோயில்களைத் திருப்பணி செய்ததோடு அமையாமல் அக்கோயில்களில் வழிபாடு முதலியவை சிறப்பாகவும் நிரந்தரமாகவும் நடந்துவர ஏற்பாடு செய்திருக்கிறார்கள். கோயில் செலவுகளுக்காகப் பல கிராமங்களை மானியமாக விட்டனர். பல கட்டளைகள் ஏற்படுத்தினர். வௌவால்கள் முதலியவற்றால் தூய்மை கெடாதிருக்க, கோயிலைப் பராமரிக்க 'வௌவாலடிமானியம்' விட்டிருக்கிறார்கள்.

இன்னும், தாங்கள் திருப்பணி செய்த கோயில்களுக்கு வைரம், தங்கம், வெள்ளி ஆகியவற்றாலான ஆபரணங்களையும், பொன், வெள்ளி, மரம் ஆகியவற்றாலான வாகனங்களையும் ஏராளமாகச் செய்து கொடுத்துள்ளனர்.

இவ்வாறு கோயில் பராமரிப்புப் பணியில் தொலைநோக்குடன் சிந்தித்துச் செயல்பட்ட நகரத்தார்கள் 'வர்ணாசிரம தர்ம ஆலய சம்ரக்ஷன விசேக்ஷ மகாநாடு' போன்றவை நடத்தி ஆலயப் பரிபாலனம் குறித்து விவாதித்து இருக்கிறார்கள்.[38]

அன்றைய ஆங்கில அரசு திருப்பணிச் செல்வர்களுக்கு விருதுகள் அளித்துக் கௌரவித்திருக்கிறது. நகரத்தார்களைப் பற்றி ஆராய்ந்துள்ள 'டாக்டர் பிலிப் சீகெல்மென்' என்ற அமெரிக்க அறிஞர்,

"பொதுவாகத் தென்னிந்தியாவிலும் சிறப்பாகச் சோழ நாட்டிலும் இன்று நாம் காணும் சிறந்த கோயில்களை வாழ வைப்பவர்கள் நகரத்தார்களே. காவிரி பாயும் வளமான பகுதிகளில் நிலங்கள் வாங்கி இக்கோயில்களுக்குச் செல்வம் சேர்த்திருக்கிறார்கள் கோயில் நிலங்களைப் பாதுகாப்பதிலும் கோயில் நிதிகளைப் பல மடங்காகப் பெருக்குவதிலும் நகரத்தார்களுக்கு இருக்கும் திறமை ஈடு இணையில்லாதது. ஊதுவத்தியானது தன்னைப் பொசுக்கிக் கொண்டு பிறருக்கு மணம் கொடுப்பதுபோல நகரத்தார்கள் எத்துனையோ இடையூறுகளைத் தாங்கியும் இன்னல்களைச் சமாளித்தும் தொல்லைகளைப் பொறுத்துக் கொண்டும் தாக்குதல்களுக்கு ஈடு கொடுத்தும் கோயில் திருப்பணிகளை முடித்திருக்கிறார்கள். அவற்றை உள்ளபடி சொன்னாலும் கற்பனை போலவே தோன்றும் என்கிறார்.[39]

4. 5. 2. வட இந்தியாவில் நகரத்தார்களின் திருப்பணிகள்:

கி. பி.1800 ஆம் ஆண்டளவில் கல்கத்தா சென்ற நகரத்தார்கள் வணிகத்தில் சிறந்து விளங்கினர். கல்கத்தாவிலிருந்து பர்மாவுக்கும் இலங்கைக்கும் அரிசி, நவதானியங்கள் முதலியவற்றைக் கடல் வழியாக ஏற்றுமதி செய்தனர். கப்பல் கம்பெனிகள் ஆண்டு இறுதியில் ஏற்றுமதி செய்த பொருட்களுக்குக் கப்பல் கட்டணத்துக்காகச் செலுத்திய தொகைகளில் 100க்கு 5 சதவிகிதம் திருப்பிக் கொடுத்தன. இவ்வாறு கிடைத்த தொகையைப் பொதுநிதியாக வைத்திருந்து தர்மத்திற்குச் செலவிடுவதென நகரத்தார்கள் முடிவுசெய்தனர். இவ்வகையில்

அக்காலத்தில் ஆண்டுதோறும் இருபத்தையாயிரம் ரூபாய் வரை வருவாய் வந்துகொண்டிருந்தது.[40] இப்பொருளைக் கொண்டும், கல்கத்தா நகரத்தார்கள் தர்மத்திற்கென எடுத்து வைத்திருந்த பொருளைக் கொண்டும் வடநாட்டில் பல அறப்பணிகளைச் செய்தனர்.

4. 5. 2. 1. கல்கத்தா :

வணிகத்தின் பொருட்டு வடநாடு சென்ற நகரத்தார்கள் முதலில் கல்கத்தாவில் நகர விடுதி அமைத்து அதில் வேல் ஊன்றி முருகனை வழிபட்டனர். இதைக் குறிக்கும் பின்வரும் தமிழ்க் கல்வெட்டு கல்கத்தா நகர விடுதியில் காணப்படுகிறது.

> "நீலமா மிடற்றால வாயினான் பாலதாயி
> னார் ஞாலமாள்வரே மங்களம்
> நாட்டுக்கோட்டை தன வைசிய
> நகரத்தார்கள் தொழில் முரைமுத
> ல் முதலில் செய்ய முயன்ற துரமுக ஊ
> ர்கள் ஐந்து. அதாவது நாகூர் சென்னை
> கல்க்கற்றா, காலி, பினாங்குமேயாகும்.
> இவடத்திற்கு நம்மிட பிள்ளைகள் வந்து
> சக்திவேல் ஸ்தாபித்து தொழில் ஆரம்பி
> த்து நடந்து வருகிறதும் நுவரை இல் ளஉய
> ஆகிரது, நாட்டுக்கோட்டை
> நகரத்தார் பெரியவீடு, 1921"[41]

4. 5. 2. 2. காசி :

கல்கத்தா நகரத்தார்கள் 1812 முதல் இந்துக்களின் புண்ணியத் தலமான காசியில் ஈடுபாடு கொண்டனர். காசி விசுவேசுவரருக்குக் கட்டளைகள் பல ஏற்படுத்தினர். 1863 - இல் நகரச் சத்திரமும் பிறகு நந்தவனமும் பசுமடமும் அமைத்து விசுவேசுவரர் வழிபாட்டிற்குப் பால், மலர்கள் முதலியவற்றை அனுப்பி வைத்தனர்.

நகரத்தார் கட்டளையாகத் திருவனந்தலும், உச்சிக் காலமும், அர்த்தசாமப் பூசையும் எக்காரணத்தாலும் ஒருவேளைகூடத் தடைப்படாமல் நடந்துவர ஏற்பாடு செய்தனர்.

1942 - ஆம் ஆண்டு 'வெள்ளையனே வெளியேறு' என்ற இயக்கம் நடைபெற்று, காசியில் கலகங்கள் நிகழ்ந்து ஊரடங்குச் சட்டம் ஏற்பட்டபோதும் விதிவிலக்குப் பெற்று பூசைக்குரிய பொருட்கள் உரிய நேரத்தில் காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரத்திலிருந்து அனுப்பப்பட்டன.[42] காசி விசுவேசருக்கு உச்சிக் காலம், அர்த்தசாமப் பூசைகளின்போது தென்னிந்திய முறைப்படி மேளம், நாதசுவரம் வாசிக்கவும் ஏற்பாடு செய்து தென்னிந்திய கலாச்சாரத்தை வடநாட்டிலும் பரப்பினர்.

ஒருசமயம் காசி நகர் வந்து விசுவநாதரை வணங்கி மகிழ்ந்த மைசூர் மகாராஜா அர்த்தசாமத்துப் பூசைக் கட்டளையைத் தாம் ஏற்று நடத்த விரும்பி நகரத்தார்களைக் கேட்டபோது அந்தத் தொண்டை விட்டுவிட மனம் வராமல் நகரத்தார்கள் மறுத்துவிட்டனர்.[43]

காசி விசுவேசுவரர் கோயில் மகந்து (பூசாரி) பங்காளிகளுக்குள் கோயில் நிர்வாகம் பற்றிச் சச்சரவு உண்டாகி, அலகாபாத் உயர்நீதி மன்றத்தில் வழக்கு நடந்தபோது நகரத்தார்களின் இறைப் பற்றையும், தொண்டையும் கண்ட அலகாபாத் உயர்நீதி மன்றம் காசி விசுவேசுவரர் கோயில் நிர்வாகத்தை ஏற்றும் நடத்தும் பொறுப்பை நகரத்தார்களே ஏற்க வேண்டும் என்று தீர்ப்பு வழங்கியது.[44] கல்கத்தாவில் பெருஞ் செல்வராயிருந்த 'மோதிலால் கெஷல்லி' என்பவர் அவருடைய சொந்தச் சிவன் கோயிலை நகரத்தார்களிடம் ஒப்புவித்து, விடாது நடத்திவரச் செய்திருக்கிறார்.[45]

இந்நிகழ்ச்சிகள் நகரத்தார்களுடைய சமய உணர்வும், தொண்டு உணர்வும் மற்றவர்களால் எந்த அளவு மதிக்கப்பட்டது என்பதற்கு எடுத்துக்காட்டுக்களாய் உள்ளன.

காசி விசுவேசுவரர் கோயிலில் மட்டுமல்லாமல் காசி விசாலாட்சி கோயிலில் பூசை செய்வது முதலிய சுதந்திரங்களையும் நகரத்தார்கள் பெற்றனர். 1893-இல் கல்கத்தா நகரத்தார்கள் ஒரு லட்ச ரூபாய் செலவில் காசி விசாலாட்சி கோயிலைக் கல் திருப்பணியாக்கிக் குடமுழுக்குச் செய்துள்ளனர். காசிச் சத்திரத்தை ஒட்டி நகரேசுவரர் ஆலயத்தைப் புதிதாகக் கட்டியுள்ளார்கள். காசி நாட்டுக்கோட்டைச் சத்திரம் இன்றளவும் நல்ல முறையில் இயங்கி வருகிறது.

4. 5. 2. 3. கயை :

கயை, பீகாரிலுள்ள இந்துக்களின் புண்ணியத் தலம், பல்குனி ஆற்றங்கரையில் அமைந்த கோயிலில் விஷ்ணு பாதம் இருக்கிறது. இப்பாதத்தில் முன்னோர்களுக்காகப் பிண்டம் போடுவதை இந்துக்கள் புனிதமான செயலாகக் கருதுகிறார்கள். நகரத்தார்களும் காசிக்குப் போகத் தொடங்கியது முதல் கயைக்கும் போய் வந்திருக்கிறார்கள்.

அங்கும் சத்திரமும் நந்தவனமும் உண்டாக்கிச் சத்திரத்தில் நடராசரைப் பிரதிட்டை செய்து வழிபாடுகள் நடத்தினர். விஷ்ணு பாதத்தில் ஏறத்தாழ 150 ஆண்டுகளாக நகரத்தார்கள் பால் அபிடேகம் செய்தும் நெய் தீபம் போட்டும் வருகிறார்கள். விஷ்ணு பாதத்தருகே ஒரு சிவலிங்கத்தையும் அம்மனையும் பிரதிட்டை செய்திருக்கிறார்கள். இச்செய்திகளை கயை நகரத்திலுள்ள தமிழ்க் கல்வெட்டு கூறுகிறது.[46]

4. 5. 2. 4. அயோத்தி :

இராமர் பிறந்த தலமான அயோத்தியில் நகரத்தார்கள் சத்திரம், நந்தவனம் முதலியன அமைத்து சத்திரத்தில் இராமர் கோயிலை ஏற்படுத்தினார்கள். இங்குள்ள இராமர், சீதை, இலக்குமணன், பரதன், சத்ருகன், அனுமன் ஆகியோர் செப்புத் திருமேனிகள் வனப்புடையவை. இங்கு நித்திய வழிபாடும் திருவிழாவும் நடைபெற நகரத்தார்கள் ஏற்பாடு செய்தனர். அயோத்தி நகரச் சத்திரத்திலுள்ள தமிழ்க் கல்வெட்டு அயோத்தியில் நகரத்தார் செய்த பணிகளை எடுத்துரைக்கிறது.

காளிகட்டம், பிரயாகை, அரித்துவாரம், தாரகேசுவரம் திரியம்பகம், கோதாவரி ஆகிய தலங்களிலும் நகரத்தார்களது கோயில் தொடர்பான பணிகளைக் காணலாம்.[47]

4. 5. 2. 5. நாசிக் பஞ்சவடி :

கி. பி. 1860 ஆம் ஆண்டளவில் நகரத்தார்கள் பம்பாய் சென்று வணிகத்தில் ஈடுபட்டனர். பம்பாய்க்கு அருகில் கோதாவரி ஆற்றங்கரையில் அமைந்துள்ள தலம் நாசிக் பஞ்சவடி. இராமாயணத் தொடர்புடைய இத்தலத்தில் நகரத்தார்கள் சுமார் 130 ஆண்டுகளுக்கு முன்பு சீதாகுகை,

ஐந்து ஆலமரம் ஆகியவற்றிக்கு அருகே சத்திரம் அமைத்து அதில் தண்டபாணிக்குக் கோயில் கட்டியுள்ளனர். மகாராட்டிர மக்கள் இக்கோயிலை 'கார்த்திக் சுவாமி மந்திர்' என்று அழைக்கிறார்கள். இங்கு, கந்தர் சட்டி, திருக்கார்த்திகை, தைப்பூசம், பங்குனி உத்திரம் ஆகிய திருவிழாக்கள் சிறப்பாக நடைபெறும்.[48]

4. 5. 3. அயல் நாடுகளில் நகரத்தாரின் ஆலயத் திருப்பணிகள் :

18, 19 ஆம் நூற்றாண்டுகளில் வணிகத்தின் பொருட்டுக் கிழக்காசியு நாடுகளுக்கு நகரத்தார்கள் சென்றனர். தாங்கள் சென்ற நாடுகளிலும் கோயில்கள் கட்டினர். "கொண்டுவிற்கப் போன நாட்டில் கோயில் கட்டும் தூயர்" என்று இவர்களது இயல்பைக் குறிப்பிடுவார் கவிஞர் கொத்தமங்கலம் சுப்பு.[49]

தாயகத்தில் சிவனுக்கு முக்கியத்துவம் கொடுத்த நகரத்தார்கள் தாங்கள் சென்ற நாடுகளில் சிவனின் மகனான முருகனைத் தண்டாயுதபாணிக் கோலத்தில் வழிபடுவதில் ஈடுபாடு கொண்டனர்.

அயல் நாடுகளில் முருகனைத் தண்டாயுதபாணிக் கோலத்தில் வழிபட்டதற்குப் பல காரணங்கள் உள.

1. முதன் முதலில் பழனித் தலத்துக்கு உப்பு வியாபாரம் செய்யச் சென்ற நகரத்தார்கள் பழனி மலை மேல் உள்ள தண்டாயுதபாணியை வணங்கி மேன்மை அடைந்தனர். அதனால் வணிகத்தின் பொருட்டுத் தாங்கள் சென்ற வெளி நாடுகளிலெல்லாம் தண்டாயுதபாணிக் கோலத்தில் முருகனை அமைத்து வணங்கினர்.

2. சிவன் கோயில்களில் பூசை முதலியவை நடத்த சிவாச்சாரியார்கள் வேண்டும். அக்காலத்தில் சிவாச்சாரியார்கள் பெரும்பாலும் கடல் கடப்பதில்லை. ஆகவே வெளிநாடுகளில் சிவன் கோயில்கள் கட்டினால் சிவாச்சாரியார்கள் கிடைப்பது அரிது என்ற காரணத்தாலும் பழனித் தலத்தில் தண்டாயுத பாணிக்குப் பண்டாரங்கள் பூசை செய்வதைக் கண்டதாலும் நகரத்தார்கள் வெளிநாடுகளில் தண்டாயுதபாணிக்குக்

கோயில்கள் கட்டி, பண்டாரங்கள் மூலம் பூசை நடத்தி வழிபட்டனர்.

3. பெண்டு பிள்ளைகளை விட்டு, பொருள் ஈட்டும் பொருட்டு அயல் நாடுகளில் துறவு வாழ்க்கை வாழ்ந்த நகரத்தார்கள் மனம் சலனமடையாமல் இருக்கும் பொருட்டுத் துறவுக்கோல முருகனை வழிபட்டனர் என்றும் சொல்லுவர்.

தென்கிழக்கு ஆசிய நாடுகளில் நகரத்தார்கள் கட்டிய கோயில்கள் தென்னிந்தியச் சிற்பக்கலை மரபை ஒட்டிக் கட்டப்பட்டவை. பெரும்பாலான கோயில்கள் 19 ஆம் நூற்றாண்டில் கட்டிமுடிக்கப்பட்டவையாகும்.

தைப்பிங் (மலேசியா) போன்ற இடங்களில் முதலில் வேல் நட்டு வழிபட்டிருக்கிறார்கள். பிறகு தண்டாயுதபாணியைப் பிரதிட்டை செய்திருக்கிறார்கள்.

நகரத்தார்கள் வெளிநாடுகளில், தாங்கள் கட்டிய கோயில்களுக்கு விலை மிக்க நகைகளையும், வெள்ளித் தேர்களையும் செய்திருக்கிறார்கள். மலர் வழிபாட்டிற்காக நந்தவனங்கள் அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். சித்திரா பௌர்ணமி, வைகாசி விசாகம், ஆடிவேல், திருக்கார்த்திகை, தைப்பூசம், மாசிமகம், பங்குனி உத்திரம் ஆகிய நாட்களில் திருவிழா நடத்தி அன்னதானம் செய்தனர். கொழும்பில் ஆடிவேல் திருவிழாவும், சிங்கப்பூர், பினாங்கு, இரங்கூன், செய்கோன் ஆகிய ஊர்களில் தைப்பூசத் திருவிழாவும் சிறப்புடையன.

4. 5. 3. 1. இலங்கை :

18 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இலங்கைக்குச் சென்ற நகரத்தார்கள் அரிசி, நவரத்தினம் முதலிய வணிகத்திலும் வட்டித் தொழிலிலும் ஈடுபட்டனர். இலங்கையின் தலைநகரான கொழும்பில் 'செட்டியார் தெரு' என்றே ஒரு தெரு உண்டு.

இலங்கையில் சுமார் அறுபது கோயில்களை நகரத்தார்கள் கட்டியுள்ளனர். அவற்றில், கொழும்பில் செட்டியார்

தெருவிலுள்ள பழைய கதிரேசன் கோயில், புதிய கதிரேசன் கோயில், காலி, கதிர்காமம் போன்ற ஊர்களில் உள்ள முருகன் கோயில்கள், நீர்க்கொழும்பில் உள்ள முத்துமாரியம்மன் கோயில், மாதம்பையிலுள்ள செல்வவிநாயகர் கோயில் ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

இலங்கையிலுள்ள தேவாரப் பாடல் பெற்ற தலங்களான திருக்கேதீச்சுரத்திலும், திரிகோணமலையிலும் நகரத்தார்கள் பெரும் பொருள் செலவிட்டுத் திருப்பணிகள் செய்துள்ளனர்.[50]

4. 5. 3. 2. பர்மா :

கல்கத்தா சென்ற நகரத்தார்கள் பாய்மரக் கப்பல்களில் வணிகத்தின் பொருட்டுப் பர்மாவிற்குச் சென்றுவந்தனர். முதன் முதலில் பர்மாவிலுள்ள மோல்மேனில் குடியேறினர். தங்களுடைய மூலதனத்தால் பர்மாவை வளப்படுத்தித் தாங்களும் பெரும் பொருள் ஈட்டினர். பர்மாவின் தலைநகரான இரங்கூனில் நகரத்தார் கடைகள் இருந்த வீதிக்கு 'நகரத்தார் ரோடு' என்று பெயர்.

சென்றவிடமெல்லாம் தெய்வப் பணியில் ஈடுபடுவது நகரத்தார் இயல்பு ஆதலால் பர்மாவிலும் சுமார் அறுபத்திரண்டு ஊர்களில் முருகன் கோயில்களும், ஒரு பெருமாள் கோயிலும் கட்டியுள்ளனர். இக்கோயில்களைக் கவனிப்பதற்காகவே இரங்கூனிலும் மோல்மேனிலும் 'நாட்டுக்கோட்டைச் செட்டியார்களின் கோயில்கள் தர்ம பரிபாலன சபை' என்ற அமைப்பை ஏற்படுத்தியிருந்தார்கள்.

பர்மாவில் நகரத்தார்கள் கட்டிய முருகன் கோயில்களுள் குறிப்பிடத்தக்கவை இரங்கூன் முகல் வீதியில் ஆறறை வீட்டிலுள்ள தண்டாயுதபாணிக் கோயிலும், பசுமந்தான் தண்டாயுதபாணிக் கோயிலும், கம்பையிலுள்ள முருகன் கோயிலுமாகும்.

இரண்டாம் உலகப் போரால் ஏற்பட்ட பாதிப்பால் நகரத்தார்கள் நடந்தே தாயகம் திரும்பினர். அந்நிலையில் 1942 - இல் பசுமந்தான் தண்டாயுதபாணிக் கோயில் ஜப்பானியரின் குண்டுவீச்சால் சேதப்பட்டது. நகரத்தார்கள் உடனே

இக்கோயிலைத் திருப்பணி செய்தனர். இதைக் குறித்து பிலிப் சீகல்மென் "இந்த நாட்டைவிட்டு வெளியேறிக் கொண்டிருக்கும் ஒரு சமூகத்தவர் இவ்வாறு இடிந்து போன கோயிலை மீண்டும் கட்டப் பெரும்பணம் செலவிடுவது வியப்புக்கும் பாராட்டுக்கும் உரியது" என்று குறிப்பிட்டுள்ளார்.[51]

பர்மாவில் நகரத்தார்கள் இப்போது விரல் விட்டு எண்ணக் கூடிய அளவே வசித்தாலும் அவர்கள் கட்டிய கோயில்களுக்கு இன்றும் ஏராளமான சொத்துக்கள் உள்ளன.

4. 5. 3. 3. வங்காள தேசம் :

இன்று தனி நாடான வங்காள தேசம் முன்பு இந்தியாவின் ஒரு பகுதியாக இருந்தது. இங்கு அரிக்கன் (தற்போது அக்யாப்) என்ற ஊரிலும் சட்டிகாமம் (சிட்டகாங்) என்ற இடத்திலும் கோயில்களும் சத்திரமும் கட்டியுள்ளார்கள்.[52]

4. 5. 3. 4. மலேசியா, சிங்கப்பூர் :

இரப்பர் மரங்களின் வருவாயால் இன்று மலேயா உலக நாடுகளிடையே முக்கியத்துவம் பெற்றிருப்பதற்குக் காரணம் நகரத்தார்கள் தான். முதலில் மலாக்காவிலும், பினாங்கிலும், பிறகு சிங்கப்பூர் முதலிய இடங்களிலும் குடியேறினர். மலேயாவிலும் தாங்கள் வசிக்கும் இடங்களில் எல்லாம் கோயில் கட்டியிருக்கிறார்கள். 1850-இல் பினாங்கில் தண்டாயுதபாணி கோயிலும் 1857-இல் தண்ணீர்மலை ஆண்டவன் கோயிலும் 1859-இல் சிங்கப்பூரில் தண்டாயுதபாணி கோயிலும் கட்டினார்கள். இன்னும் அலோர் ஸ்டார், கூலிம், வாலாப்பூர், சுங்குரும்பை, தைப்பிங், ஈப்போ, தெலுக்கான்சன், கோலாலம்பூர், கிள்ளான், ஜாவி, சிரம்பான், மலாக்கா, மூவார், பத்துபகாட், தாப்பா ஆகிய இடங்களிலும் நகரத்தார்கள் தண்டாயுதபாணிக்குக் கோயில் கட்டியிருக்கிறார்கள். சிகாமெட் என்னும் ஜோகூர் ஸ்டேட்டில் உள்ள ஊரில் சிங்கார வடிவேலர் கோயில் கட்டியுள்ளனர். இக்கோயில்களுள் ஒருசில, பின்பு சிவன் கோயில்களாக விரிவடைந்துள்ளன.[53]

இக்கோயில்களை இன்றும் நகரத்தார்கள் நல்லமுறையில் பராமரித்து வருகிறார்கள். நகரத்தார் சமுதாயக் கூட்டங்களும்,

திருமணங்களும் கோயில்களில் நடைபெறுகின்றன. சிங்கப்பூர், பினாங்கு, தைப்பூச விழாக்களில் மலேயா மக்கள் அனைவரும் சாதிமத வேறுபாடின்றிக் கலந்து கொள்வர். இத்தகைய விழாக்களில் அன்னதானம் செய்வதை முக்கியக் கடமையாகக் கொண்டிருக்கிறார்கள். தண்டாயுதபாணிக்கு மலேசியர்களும் சீனர்களும் காவடி எடுப்பது குறிப்பிடத்தக்கது.[54]

4. 5. 3. 5. தாய்லாந்து (சயாம்) :

இங்கு வணிகம் செய்யவந்த நகரத்தார்கள் தாய்லாந்தின் தலைநகரான பாங்காங்கில் தாய்லாந்து நாட்டு மன்னரிடம் நிலத்தை மானியமாகப் பெற்று 1890-இல் மாரியம்மன் கோயில் கட்டியுள்ளனர்.[55]

4. 5. 3. 6. வியட்நாம் :

தெற்கு வியட்நாமில் உள்ள செய்கோனில் கி. பி. 1888-இல் நகரத்தார்கள் தண்டாயுதபாணிக்குக் கோயில் கட்டியுள்ளனர். இக்கோயிலுக்குச் செட்டிநாட்டிலிருந்து வெள்ளி இரதம் செய்து அனுப்பப்பட்டது. 1979 இல் கோயிலின் சொத்து மதிப்பு ஆறு கோடியாகும்.[56]

4. 5. 3. 7. இந்தோனேசியா :

இந்தோனேசியாத் தீவுகளில் முக்கியமானது சுமத்திரா தீவு. இத்தீவின் தலைநகரான மைடான் தில்லியில் நகரத்தார்கள் தண்டாயுபாணிக்குக் கோயில் அமைத்துள்ளனர். சுமத்திரா தீவிலுள்ள மக்கள் அனைவரும் வந்து வழிபடும் இக்கோயிலில் வழிபாடுகள் தமிழிலேயே நடந்தன.[57]

4. 5. 3. 8. மொரிகூஷியஸ் :

19 ஆம் நூற்றாண்டில், இத்தீவின் தலைநகரான போர்ட்லூயி என்னும் நகரத்திற்கு. வியாபாரம் செய்யச் சென்ற நகரத்தார்கள், அங்கு சொக்கலிங்கம் - மீனாட்சி அம்மன் கோயிலைக் கட்டியுள்ளனர். இன்றும் இக்கோயிலில் தைப்பூசத் திருவிழாச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.[58]

4. 5. 3. 9. இங்கிலாந்து :

இங்கிலாந்தில் இலண்டன் நகரில் நகரத்தார் முயற்சியால் முருகன் கோயிலொன்று கட்டப்பட்டுள்ளது.[59]

4. 5. 3. 10. அமெரிக்கா :

கடந்த சில ஆண்டுகளாக, அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள இந்துசமய மலர்ச்சியிலும், கோயிற் பணியிலும் நகரத்தார்களுக்குப் பெரும்பங்கு உண்டு. ஐக்கிய நாடுகளின் சபையில் பணியாற்றும், டாக்டர் அழகப்ப அழகப்பன் போன்றோரின் முயற்சியால் நியூயார்க்கில் லாஸ், ஏஞ்சல்ஸ், பிட்ஸ்பர்க், ஹூஸ்டன், முதலிய நகரங்களில் கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. சிங்கப்பூர் நகரத்தார்கள் இக்கோயில்கள் கட்டப் பொருளுதவி செய்துள்ளனர்.[60]

இவ்வாறாகக் கடந்த 200 ஆண்டுகளாக நகரத்தார்கள் தமிழகத்திலும், இந்தியாவின் பிற பகுதிகளிலும், வெளிநாடுகளிலும் பல கோடி ரூபாய்கள் செலவிட்டுக் கோயில் திருப்பணிகள் ஆற்றியுள்ளனர்.

4. 6. கருத்து வேறுபாடுகள் :

நகரத்தார்களது கோயில் திருப்பணிகளைப் பலரும் பாராட்டிய அதே சமயத்தில் சிலர் அதைக் குறித்துக் கருத்து வேறுபாடுகளையும் தெரிவித்திருக்கிறார்கள். கி. பி. 1910 - இல் ஞானசாகரம் என்ற பத்திரிகையில் மறைமலையடிகள், நகரத்தார்கள் அதிகப் பொருட் செலவில் கோயில் திருப்பணி செய்வதைக் குறித்துச் சற்றுக் கடுமையாக விமரிசித்திருக்கிறார். இவர்கள் தருமங்கள் மாறவேண்டும் என்றும் கூறியிருக்கிறார். இது தொடர்பாக "ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்கள் பெருமையும் அவர்கள் மீது பொறாமையுற்றோர் சிலர் சிறுமையும் நாட்டுக்கோட்டைச் செட்டிப் பிரபுக்கள் தரும முறையும்" என்று ஒரு நூல் 1914 - இல் வெளிவந்துள்ளது.[61] இந்நூலுக்கு மறுப்பாக 1915-இல் "சுவாமி வேதாசலம் பிள்ளையவர்கள் கொள்கையும் வேறு சில பிள்ளைகள் செய்கையும்" என்ற நூல் நகரத்தாரால் வெளியிடப்பட்டுள்ளது.[62] அதில் தாங்கள், பழுதடைந்த கோயில்களைத்தான் திருப்பணி செய்ததாகவும், சுவாமி வேதாசலம் அவர்கள் சொல்வதுபோல் நல்ல நிலையிலுள்ள கோயில்களை இடித்து மண்ணிலும்

செங்கல்லிலும் காசை வீணாக்கவில்லை என்றும் நகரத்தார்கள் தெரிவித்துள்ளார்கள்.

பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியாரும், நகரத்தார்கள் கோயில் பணிகளுக்கு அதிகமாகச் செலவிடுவதை மாற்றிக் கொண்டு கல்வி முதலிய மற்ற பணிகளுக்குச் செலவிட வேண்டும் என்று கூறியுள்ளார்.[63] திருப்பணி தொடர்பாக, சில மடாதிபதிகளுக்கும் நகரத்தார்களுக்குமிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு இருக்கிறது.

சுருங்கச் சொன்னால், நகரத்தாரை ஆய்வு செய்த டாக்டர் பிலிப் சீகல்மென் கூறுவதுபோல, எத்துணையோ தாக்கு தல்களுக்கு ஈடுகொடுத்து நகரத்தார்கள் கோயிற்பணிகளைச் செய்திருக்கிறார்கள். இந்துசமயப் பாதுகாவலர்களாக விளங்கிய நகரத்தார்கள். பாடல் பெற்ற தலங்கள் போன்ற பழமையான தலங்களைத் திருப்பணி செய்தபோது அறியாமையினால் வரலாற்றுச் சிறப்புமிக்க கல்வெட்டுக்களைச் சில கோயில்களில் காக்கத் தவறியிருக்கிறார்கள்.

4. 7. தற்கால நிலை :

தமிழகத்துச் சிற்பிகள் அருமையானதிராவிடச் சிற்பக் கலை மரபை மறந்துவிடா வண்ணம் ஆங்காங்கு ஒரு சில கோயில்கள் எடுப்பித்தும் திருப்பணிகள் செய்தும் தங்கள் கோயிற்பணிகளைத் தொடர்ந்து செய்து வருகின்ற நகரத்தார்கள் அனேக குடமுழுக்கு விழாக்களையும் நடத்தி வருகின்றனர். நகரக் கோயில்கள் ஒன்பதனுள் பிள்ளையார்பட்டி, வயிரவன் கோயில், நேமங் கோயில் போன்றவை, இச்சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்குத் திருமணத்திற்கும் கல்விக்கும் உதவிவருகின்றன. பிள்ளையார்பட்டிக் கோயிலில் ஆண்டுதோறும் பல கூட்டுத் திருமணங்கள் திருச்சி நகரத்தார் சங்கத்தின் முயற்சியாலும் பல நகரத்தார் சங்கங்கள், அன்பர்களின் ஒத்துழைப்பாலும் நடைபெற்று வருகின்றன.

4. 8. முடிவுகள் :

இவ்வியலில் நகரத்தார்களின் கோயில் பணிகள் பற்றி ஆய்வாளர் கண்டுள்ள முடிவுகளைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்:

1. 18, 19 ஆம் நூற்றாண்டுகளில் இந்து சமயப் பாதுகாவலர்களாக நகரத்தார்கள் விளங்கினார்கள்.

2. புதிய கோயில்கள் கட்டியிருக்கிறார்கள்.

3. பாடல் பெற்ற தலங்களையும் பழைய தலங்களையும் திருப்பணி செய்திருக்கிறார்கள்.

4. விநாயகர், முருகன், கிராம தேவதைகள் ஆகிய கடவுளர் கோயில்களுக்குப் பணி செய்திருக்கிறார்கள்.

5. சமயக் காழ்ப்பில்லாமல் வைணவ ஆலயங்களிலும் திருப்பணிகள் செய்துள்ளனர்.

6. வட இந்தியாவிலும், அயல் நாடுகளிலும் ஆலயப் பணிகள் ஆற்றியுள்ளனர்.

7. அயல் நாடுகளில் பெரும்பாலும் தண்டாயுதபாணி கோயில்களையே கட்டியுள்ளனர்.

8. உலகமெங்கும் சைவ சமயத்தையும், திராவிடச் சிற்பக் கலையையும் பரப்பியதில் நகரத்தாருக்குப் பெரும் பங்கு உண்டு.

9. நகரத்தார்கள் அனைவருமே கோயிற்பணிகளில் எவ்விதத்திலேனும் தொடர்புடையவர்களாக உள்ளனர்.

10. தொண்ணூற்றாறூர் நகரத்தார்களில் தேவகோட்டை நகரத்தார்கள் அதிகமாகக் கோயில் திருப்பணிகள் செய்திருக்கிறார்கள்.

11. தேவகோட்டை நகரத்தார்களுள் 'மெ' வகையினர் அதிகமான திருப்பணிகள் செய்துள்ளனர்.

12. ஒன்பது கோயில் நகரத்தார்களுள் இலுப்பைக்குடி நகரத்தார்கள் அதிகமான திருப்பணிகள் செய்திருக்கிறார்கள்.

13. நகரத்தார்கள் தங்கள் வருவாயில் ஒரு பகுதியை 'மகமைப் பணம்' என எடுத்துவைத்து அறப்பணிக்குச் சிறப்பாகக் கோயில் பணிக்குச் செலவிட்டிருக்கிறார்கள்.

14. நகரத்தார்கள் அறியாமையினால் பழமையான கோயில்களில் உள்ள கல்வெட்டுக்களை, திருப்பணி களின்போது பாதுகாக்கத் தவறியுள்ளனர்.

15. சிலருடைய கருத்துவேறுபாடுகளுக்கிடையே நகரத்தார்கள் கோயில் பணிகளை மேற்கொண்டிருக்கிறார்கள்.

16. இன்றைய நிலையில் நகரத்தார்கள் தங்களால் இயன்ற அளவு கோயில் பணிகள் செய்து வருகிறார்கள்.

17. நகரத்தாரின் ஒன்பது கோயில்களுள் சில, தங்கள் சமுதாயத்துக்கு உதவி வருகின்றன.

18. கோயிலை ஒட்டிய நாகரிகம் நகரத்தார்களின் நாகரிகம். அவர்கள் குலம், குணம், செயல் யாவும் கோயிலை ஒட்டியே அமைந்துள்ளன.

19. நகரத்தார்கள் கோயில் இல்லா ஊரில் குடியிருக்க மாட்டார்கள். ஊர் மாற நேர்ந்தால், மாறிய ஊரில் கோயிலை உண்டாக்குவார்கள்.

20. அவர்கள் தம் குலப்பிரிவுகளைக் கோயிலை நடுவாக வைத்துப் பகுத்துள்ளனர். தத்தம் நகரக் கோயில்களில் திருமணங்களைப் பதிவு செய்வர். அவர்கள் பிறப்பு முதல் நிறைவு வரை கோயிலை ஒட்டியே வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர்கள் ஆதலால் கோயில் திருப்பணிகள் செய்வது அவர்கள் வாழ்க்கையின் ஓர் அங்கமாயிற்று.

அடிக்குறிப்புகள் :

1. சந்தானகிருஷ்ண நாயுடு, க. வி., **'சிங்கப்பூர் தெண்டபாணிப் பத்து** தோத்திரமஞ்சரி, வெ. ராம. சு. சுப்பிரமணியன் செட்டியாரவர்களால் சிங்கப்பூர் பி. சி. துரையன் கம்பெனியில் பதிப்பித்தது, 1912, ப. 19.

2. சேகஷாத்ரி சர்மா, அ. **நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு** வானதி பதிப்பகம், முதற்பதிப்பு 1970, ப. XVII.

3. ஆசிரியர் நால்வர், **கல்வெட்டியல்,** தமிழ் நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு, 1976, ப, 41.

4. சுப்பு கொத்தமங்கலம், **நேமம் ஸ்ரீ செளந்தர நாயகி அம்பாள் சமேத ஸ்ரீ ஜெயங்கொண்ட சோழீசுவரர் -** குடமுழுக்கு விழா மலர், 1991, ப. 191.

5. தெட்சிணாமூர்த்தி, அ. (ப.ஆ), **நாட்டுக்கோட்டை நகரத்தார் சரித்திரமும் பாடுவார் முத்தப்ப செட்டியார் வரலாறும் அவர்கள் இயற்றிய அருட்கவிகளும்** சு. செ. சேவு மெய்யப்பச் செட்டியார் உமையாள் ஆச்சி மணிவிழா வெளியீடு, 1981, ப. 187, பாடல் வரிகள் 43- 76

6. பழனியப்பய்யா, சேவு. பழ., **கோவிலூர் ஸ்ரீ முத்துராமலிங்க தேசிகர் என்னும் ஆண்டவர் சரித்திரச் சுருக்கம்,** மேற்படியாரால் சென்னை மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையிற் பதிப்பிக்கப்பட்டது, 1900, பக். 7-9.

7. சோமலெ., (ப. ஆ), **கோவிலூர் அருள்தரு திருநெல்லை நாயகி உடனாய அருள்மிகு கொற்றவாள் ஈசுவுரர் கோயில் திருக்குட நீராட்டு மலர்,** கோவிலூர் மடாலய ஆண்டவர் மன்றம், 1978, ப. 61.

8. மேலது , ப. 59.

9. தத்புருக்ஷ தேசிகர் பாலகவி வயிநாகரம் வே. இராமநாதன் செட்டியார் நேர்காணலின்போது கூறியது, 14.8.92.

10. மேலது.

11. இராமசாமிச் செட்டியார், ராம. உ., **ஸ்ரீமத் சொக்கலிங்க ஐயா அவர்கள் சரித்திரம்**, ஸ்ரீ மெய்கண்ட சித்தாந்த வித்தியாசாலை வெளியீடு, இரண்டாம் பதிப்பு 1964, ப. 27.

12. சோமலெ. (ப. ஆ.), **கோவிலூர் அருள்தரு திருநெல்லைநாயகி உடனாய அருள்மிகு கொற்றவாள் ஈசுவரர் கோயில் திருக்குட நீராட்டுமலர்** கோவிலூர் மடாலய ஆண்டவர் மன்றம், 1978, ப. 66.

13. சோமலெ. (ப. ஆ), **கோவிலூர் அருள்தரு திருநெல்லைநாயகி உடனாய அருள்மிகு கொற்றவாள் ஈசுவரர் கோயில் திருக்குட நீராட்டுமலர்** கோவிலூர் மடாலய ஆண்டவர் மன்றம், 1978,ப. 96.

14. உலகநாதர், **உலகநீதி**, காரைக்குடி தமிழ்ச் சங்க வெளியீடு, நான்காம் பதிப்பு 1985, பாடல் எண் 4.

15. **புதுக்கோட்டைக் கல்வெட்டுக்கள்** எண் 861. புதுக்கோட்டை சமஸ்தான வெளியீடு 1929.

16. **பெ. ராம. குடும்பத்திற்குச் சொந்தமான பேரையூர் அம்பாள்குளம் ஸ்ரீ பொய்யாத விநாயகர் மஹா கும்பாபிஷேக மலர்**, 'ஸ்ரீ பொய்யாத விநாயகர் கோயிலும் தோற்றமும்' கட்டுரை, 1975, ப. எ. இல்லை.

17. சிதம்பரம் செட்டியார், வெ. ஆ. தி. மா. **தேவகோட்டை விசுவநாதர் கோயிற்றிருப்பணி முறையீடு**, சென்னை ஆனந்த அச்சியந்திர சாலையிற் பதிப்பிக்கப் பெற்றது, 1930, பக். 362 - 368.

18. இராமநாதன் செட்டியார், அ. வயிநாகரம், அ. (தொ. ஆ) **நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு**, முதற்பதிப்பு 1953, ஆர் இராமநாதன் செட்டியார் வெளியீடு, ப. 167.

19. சோமு. எல். நடராசன், சித. **'பெ. ராம. குடும்பத் திருப்பணிகள்'** 1979, ப. எ. இல்லை.

20. பிள்ளை, கே. கே. **தமிழக வரலாறு - மக்களும் பண்பாடும்**, தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை,1981, பக். 450, 451.

21. மேலது, பக். 450 - 451.

22. மேலது, பக். 450 - 451.

23. மீனாட்சி சுந்தரம் பிள்ளை, மகாவித்துவான், **தனியூர் புரானம்**, உ. வே. சா. பதிப்பு, சிவாலய தரிசன விதிப்படலம், பாடல் எண் 13, ப. 23.

24. **திருவெண்பாக்கவாலய ஜீரணோத்தாரணம்**, திரிசிரபுரம் சாமிநாதப் பிள்ளை பொருளுதவியால் திருப்பாசூர் திருவள்ளூர்வாசிகளால் வெளியிடப்பட்டது, சென்னை மகாலட்சுமி விலாச அச்சுக்கூடத்தில் பதிக்கப்பட்டது, 1916, ப. எ. இல்லை.

25. **உறையூர் சிவாலயத் திருப்பணி**, உறையூர்வாசிகள் வெளியிட்டது, ஆண்டு குறிப்பிடவில்லை, ப. 16.

26. ஸ்ரீநிவாச சடகோபநாயகர், புதுவை, **'தனவணிகர் குல சிரேஷ்டர்களாகிய நகரத்தார் பேரில் நவரத்தினம்'**, பினாங்கு சர்வதேச சம்பந்த அச்சியந்திரசாலையிற் பதிப்பிக்கப்பட்டது, 1901, பாடல் எண் 3.

27. முத்துராமையா நா. பெ. நா. மு. **கும்பாபிடேகக் கவித்திரட்டு** மதுரை விவேகபாநு அச்சியந்திர சாலையில் பதிப்பிக்கப்பட்டது, 1913.

28. பொற்கிழி கவிஞர் அரு. சோமசுந்தரம் நேர்காணலின் போது கூறியது (5. 6. 85).

29. **நகரத்தார் குரல்**, மார்ச் 1984, வி. என். சிடி. கட்டுரை, ப.9.

30. தத்புருஷ தேசிகர் பாலகவி வயிநாகரம் வே. இராமநாதன் செட்டியார் நேர்காணலின்போது கூறியது, 14. 8. 92.

31. மேலது.

32. தேவகோட்டை சமீன்தார் குடும்பத்தைச் சேர்ந்த அழ. நாராயணன் செட்டியார் நேர்காணலின்போது கூறியது, 2. 6. 90.

33. மேலது.

34. மேலது.

35. நாராயணசாமி பிள்ளை, திமு, **இராமச்சந்திரபுரம் தீ. நா. நாச்சியப்ப செட்டியார்**, 1925, ப. 57.

36. சோமு. எல்., நடராசன், சித., **பெ. ராம. குடும்பத் திருப்பணிகள்** 'கல் திருப்பணியின் கவின்மிகு வரலாறு' கட்டுரை, 1979, ப. எண் இல்லை.

37. அருணாசலம் பிள்ளை, மு., **தமிழ்ப் பெருவள்ளல்,** அண்ணாமலை நகர், தமிழ் மனை வெளியீடு, இரண்டாம் பதிப்பு 1952, ப. 25.

38. 'வர்ணாசிரம தர்ம ஆலய சம்ரக்ஷண விசேஷ மகாநாடு' வரவேற்புக் கழகத் தலைவர் ஸ்ரீ மான் க. வீ. சொ. வீ. அழகப்பச் செட்டியார் வரவேற்புரை, 20. 1. 40.

39. சோமலெ. **அலைகடலுக்கு அப்பாலும் நகரத்தார்களின் ஆலயப் பணிகள்,** சோமு நூலக வெளியீடு, 1979, ப. 16.

40. சோமலெ., (ப. ஆ) **ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரம்** நூற்றாண்டு விழா மலர் ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரம் மானேஜிங் சொசைட்டி இரங்கூன் வெளியீடு, (1863 - 1963). ப. 41.

41. மேலது, ப. எ. இல்லை.

42. மேலது,ப. 36.

43. மேலது, ப. 123.

44. மேலது, ப. 61.

45. இராமநாதன் செட்டியார், அ. வயிநாகரம், (தொ. ஆ), **நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு**, ஆர் இராமநாதன் செட்டியார் வெளியிட்டது. ப. 185.

46. சோமலெ., (ப. ஆ) **ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரம் நூற்றாண்டு விழா மலர்** (1863 - 1963) ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரம் மானேஜிங் சொசைட்டி, இரங்கூன் வெளியீடு, ப. எ. இல்லை.

47. மேலது, பக். 28 - 30, 40 -48.

48. மேலது, பக். 23 - 27.

49. சுப்பு, கொத்தமங்கலம், **நேமம் ஸ்ரீ சௌந்தரநாயகி அம்பாள் சமேத ஸ்ரீ ஜெயங்கொண்ட சோழீசுவரர் குடமுழுக்கு விழா மலர்**, 1991, ப. 111.

50. சோமலெ. **அலைகடலுக்கு அப்பாலும் நகரத்தார்களின் ஆலயப் பணிகள்**, சோமு நூலக வெளியீடு, 1979, பக். 28-43.

51. மேலது, ப. 62.

52. மேலது, ப. 54.

53. மேலது, பக். 75 - 111

54. மேலது ப. 100

55. மேலது, பக் 112, 113,

56. மேலது, பக். 114, 115,

57. மேலது, பக் 116, 117,

58. மேலது, ப. 120.

59. மேலது, பக். 122 - 126.

60. மேலது, ப. 123.

61. கோபாலகிருஷ்ண பிள்ளை, ஸி, நாகை, "**ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்கள் பெருமையும் அவர்கள் மீது பொறாமையுற்றோர் சிலர் சிறுமையும் நாட்டுக்கோட்டைச் செட்டிப் பிரபுக்கள் தரும முறையும்**, சென்னை வைஜெயந்தி பிரஸ்ஸில் அச்சிடப்பெற்றது, 1914.

62. பழனியப்பச் செட்டியார், அரு. பழ. லெ. சி. **சுவாமி வேதாசலம் பிள்ளையவர்கள் கொள்கையும் வேறு சில பிள்ளைகள் செய்கையும்**, மதுரை அஷ்டலெக்ஷ்மி விலாசம் பிரசில் பதிப்பிக்கப்பட்டது, 1915.

63. கதிரேசச் செட்டியார், மு. பண்டிதமணி, **நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் சீர்திருத்தம்**, மெ. அரு. நா. இராமநாதச் செட்டியாரவர்களால் மதுரை விவேகபாநு அச்சியந்திரசாலையிற் பதிப்பிக்கப்பெற்றது, 1911, ப. 35.,

5. நகரத்தாரின் கோயில் தழீஇய பணிகள்

கோயிற்பணி புரிந்த நகரத்தார்கள் கோயில்களில் தினசரி வழிபாடுகள் முறையாகவும் சிறப்பாகவும் நடக்கப் பல அறக்கட்டளைகளை ஏற்படுத்தினர். திருவிழா, திருப்பணிச் செலவுகளுக்காகச் சேமநிதிகள் ஏராளமாக வைத்ததோடு பல கிராமங்களையும் கொடையாகக் கொடுத்துள்ளனர்.

மின்சார வசதிகள் இல்லாத அக்காலத்தில் கோயில்களில் விளக்கேற்றும் தொண்டைச் செய்வது சிறந்த அறமாகக் கருதப்பட்டது. நகரத்தார்களும் அப்பணியைத் தொடர்ந்து செய்தனர். கோயில்களில் விளக்கெரிக்கப் பல கட்டளைகளை ஏற்படுத்தினர். அதுமட்டுமல்லாமல் ஒன்பது கோயில் பிரிவினரான நகரத்தார்கள் தங்கள் தங்கள் கோயில்களில் வருடந்தோறும் 'புள்ளி' தவறாது, (ஒவ்வொரு குடும்பத்தினரும் தவறாது) விளக்கெரிப்பதற்காக ஒரு குறிப்பிட்ட தொகையை திருவிளக்குக் காணிக்கையாகச் செலுத்துவதை வழக்கமாகவும், கடமையாகவும் கொண்டுள்ளனர்.

கோயில்களில் விழாக் காலங்களில் சமய அறிவு, சாத்திர அறிவு பெருக சமயச் சொற்பொழிவுகளை நிகழ்த்தி மக்களிடையே சமய அறிவை வளர்த்தனர். இசை, நடனம் முதலிய நிகழ்ச்சிகளைக் கோயில்களில் நடத்தி, கலைகளை ஆதரித்தனர்.

இந்தியாவில் இரண்டு முக்கியமான சமய தத்துவங்களான வேதாந்தத்தையும் சித்தாந்தத்தையும் பயிலுவதற்காக வேதபாடசாலைகளையும், ஆகம பாடசாலைகளையும் கோயில்களையொட்டி ஏற்படுத்தினர். இன்னும் நந்தவனங்கள், பல்வகை மடங்கள், சத்திரங்கள், விடுதிகள், ஊருணிகள் ஆகியவற்றையும் கோயில்களை ஒட்டி ஏற்படுத்தினர்.

சமுதாய மையங்களாகிய கோயில்களையொட்டி நகரத்தார்கள் செய்த அப்பணிகள் யாவும் சமுதாயத்துக்குச் செய்த பணிகளே. இருப்பினும் அவை கோயில் தொடர்புடைய

பணிகள் ஆதலால் 'கோயில் தழீஇய பணிகள்' என்று இப்பகுதிக்குத் தலைப்பிட்டு ஆய்வாளர் ஆய்வை மேற்கொண்டுள்ளார்.

5. 1. நந்தவனங்கள் :

இறைவழிபாட்டிற்கு இன்றியமையாது வேண்டப்படுவது மலர்கள். மலர்களிடத்து உள்ள மணம் கண்ணுக்குப் புலனாகாது, மூக்குப் புலனுக்கு மட்டும் எட்டும் வண்ணம் அமைந்துள்ளது. பூக்களுக்குச் சிறப்பளிப்பதும் நறுமணமே. அதுபோல் இறைவனும் உயிர்களிடத்துக் கண்ணுக்குப் புலனாகாது மெய்ப் புணர்ப்பாகப் புணர்ந்து மறைந்து நின்று அருளுகிறான் என்ற தத்துவத்தின் அடிப்படையில் பூக்கள் இறைவனுக்கு அருச்சிக்கப்படுகின்றன[1]. அணிவிக்கப்படுகின்றன.

அப்பூக்களைக் கோயில்களுக்கென அமைக்கப்பட்ட நந்தவனத்திலிருந்து கொண்டுவந்து சரம், இண்டை, மாலை, செண்டு, பிணையல், கண்ணி முதலிய பலவாகக் கட்டிக் காலங்கள் தோறும் வழுவாது கடவுளர்க்குச் சாத்தி வழிபடுதலாகிய தொண்டிற்கென நகரத்தார்கள் திருப்பணி செய்த கோயில்கள் தோறும் நந்தவனங்கள் அமைத்தனர். அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவரான முருக நாயனார் இம்முறையில் தொண்டாற்றியவர்.

நந்தவனங்களில் மணம்தரும் மலர்களையுடைய செடிகொடிகளும், தெங்கு போன்ற பயன்தரு மரங்களும் வளர்க்கப்பட்டன. செடிகொடிகளுக்கு நீர் பாய்ச்சுவதற்காக, நந்தவனங்களுக்குள் கிணறுகள் தோண்டப் பெற்றன. நந்தவனத்திலுள்ள மரஞ்செடி கொடிகளுக்கு நீர்வார்ப்போரை 'நந்தவனம் இறைக்கும் அருந்தவத்தோர்' என்று முதலாம் இராசராசனின் கல்வெட்டொன்று குறிப்பிடுகிறது.[2] அத்தகைய அருந்தவத்தோர்களை நந்தவனப் பராமரிப்பிற்காகவும் மலர்களைப் பறித்து மாலைகள் கட்டுவதற்காகவும் நகரத்தார்கள் நியமித்திருந்தனர்.

நிலத்துப் பூக்களுக்கென நந்தவனங்களை ஏற்படுத்திய நகரத்தார்கள் கோயிலையொட்டி, குளங்கள் அமைத்து

அவற்றில் தாமரை, அல்லி, நீலோத்பலம், செங்கழுநீர் முதலியவற்றை வளர்த்து நீர்ப்பூக்களையும் இறைவழிபாட்டுக்கெனக் கொடுத்தனர்.[3]

சில தலங்களில் கோயில் திருப்பணி செய்தவர்களே நந்தவனத்தையும் அமைத்துள்ளனர். சில தலங்களில் கோயில் திருப்பணி செய்தவர்களின் உறவினரோ நண்பரோ நந்தவனத்தை அமைத்துள்ளனர். நகரத்தார்கள் அனைவரும் சேர்ந்து நந்தவனம் அமைத்ததும் உண்டு. காலை சந்தி நந்தவனம், உச்சிக்கால சந்தி நந்தவனம், சாயரட்சை நந்தவனம், அர்த்தசாம நந்தவனம் என்று ஒவ்வொரு வேளைக்கும் அமைக்கப்பட்ட நந்தவனங்களும் உண்டு.[4] தொழில் கருதிச் சென்ற ஊர்களிலும், நகரத்தார்கள் தருமத்திற்கென மகமைப் பணம் எடுத்து வைத்து, நந்தவனப் பணியை மேற்கொண்டிருக்கிறார்கள்.

சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்பு கோயம்புத்தூருக்குத் தொழில் செய்யச் சென்ற தேவகோட்டை, நச்சாந்துபட்டி நகரத்தார்கள் தங்கள் கடைகளிலிருந்து எடுத்துவைத்த மகமைப் பணத்தைக் கொண்டு பேரூர்க் கோயிலுக்கு மலர் கொடுப்பதற்காக நந்தவனமொன்றை ஏற்படுத்தியுள்ளனர்.

தமிழகத்தில் மட்டுமல்லாமல் தாங்கள் திருப்பணி செய்த வடநாட்டுத் தலங்களிலும் வெளிநாடுகளிலும் நந்தவனம் அமைத்துள்ளார்கள். காசி விசுவேசுவரருக்கு நாளும் நறுமலர்கள் அனுப்புவதற்காக நகரத்தார்கள் 1894 ஆம் ஆண்டில், 'சிக்ரா' பகுதியில் பெரியதோர் இடம் வாங்கி நந்தவனம் அமைத்தனர். மீண்டும் இரண்டு தடவைகள் புதிதாக இடங்கள் வாங்கி விரிவாக்கினர். நந்தவன வேலைக்கெனத் தனியே ஆட்களை நியமித்துக் குறித்த நேரத்தில் மலர்களைக் கோயிலுக்கு அனுப்பி வருகின்றனர்.

பர்மாவில் நகரத்தார்கள் தொழில் செய்தபோது இரங்கூன் ஆறறை என்ற இடத்தில் ஒரு நந்தவனம் அமைத்திருந்தார்கள். பிறகு பர்மாவிலிருந்து நகரத்தார்கள் வெளியேறியபோது நந்தவனத்துக்குரிய நிதியைக் காசியிலுள்ள நகரச்சத்திரத்திற்கு

கொடுத்துதவினர். மலேயா நாட்டில் கிள்ளானிலுள்ள தண்டாயுதபாணி கோயிலுக்கு சிம்பாங் லீமாவில் சுமார் மூன்று ஏக்கர் நிலம் வாங்கி நந்தவனத்துக்காகக் கொடுத்துள்ளனர்.

5. 2. மடங்கள் :

நகரத்தார்கள் தாங்கள் திருப்பணி செய்த கோயில்களுக்கு வழிபாட்டுக்குரிய பொருட்களைக் கொடுத்து உதவுவதற்காகவும், வழிபாடு செய்ய வரும் அடியவர்களுக்கு உதவும் பொருட்டும், சமயக் கல்வி, சமய தீட்சை தொடர்பாகவும் பல்வகை மடங்களை ஏற்படுத்தினர்.

5. 2. 1. பசுமடங்கள் :

'பஞ்ச கவ்யம்' எனப்படும் திருவெண்ணீற்றுக்கு மூலமான சாணம் மற்றும் கோமயம், பால், தயிர், நெய் ஆகிய அனைத்துமே இறைவழிபாட்டுக்குரிய பொருட்களாகும். 'பாலினொடு தயிர் நறுநெய் ஆடினான் காண்' என்பது ஆன்றோர் வாக்கு.[5]

எத்திறத்தார்க்கும் ஏற்புடையதும், விருந்தும் மருந்துமான ஆன்பால் அபிடேகத்தின் சிறப்புக் குறித்துச் சமய இலக்கியங்கள் பலபடப் பேசுகின்றன. சிதம்பரம் கோயிலில் உள்ள பாடல் கல்வெட்டொன்று நரலோகவீரன் என்பவன் தில்லைக் கூத்தனுக்கு அமிர்தத்துக்கு ஒப்பான பால் அபிடேகம் செய்வதற்காக ஓராயிரம் சுரபிப் பசுக்களை அளித்தான் என்று கூறுகிறது.[6]

பால் முதலியவற்றால் அபிடேகம் செய்யும்போது ஏற்படும் விளைவுகளைக் குறித்துக் குற்றாலம் பராசக்தி மகளிர் கல்லூரியினர் விஞ்ஞான முறைப்படி ஆராய்ந்து பின்வருமாறு விளக்கியுள்ளனர்.

'ஆலயத்திலுள்ள மூலவிக்கிரகத்திற்கு தயிர், பால், தண்ணீர் முதலியவற்றால் அபிடேகங்கள் செய்யும்போது சிலையின் மின்கடத்தும் திறன் அதிகமாயுள்ளது. அதுமட்டுமல்லாமல் தண்ணீர், பால், தயிர் ஆகியவற்றைக் கொண்டு அபிடேகம் செய்யும்போது கருவறையில் ஈரப்

பதமுள்ள காற்று மண்டலம் ஏற்படுகின்றது. அந்த ஈரப்பதமுள்ள காற்று மண்டலத்தில் எதிர் மின்னூட்டங்களும் பிராணவாயு அழுத்தமும் அதிகரிக்கிறது. பிராணவாயு மூலக்கூறுகளை அதிக அளவில் பெறுவதால் உடலுக்கு நன்மை பயப்பதாக அக்காற்று மண்டலம் உள்ளது.

அபிடேகத்தின்போது எதிர் மின்னூட்டமும் ஈரப்பதம் உள்ள காற்று மண்டலமும் அமைந்துள்ள கருவறைகள், 'ஓம்' என்ற ஒலியுடன் அருச்சனை செய்யும் போது, அவ்வொலி விக்கிரகத்தில் பட்டு எதிரொலிக்கின்றது. அதனால் அக்காற்று மண்டலம் பெரும் அலைவும் ஒத்ததிர்வும் பெறுகிறது. அக்காற்று மண்டலத்தின் அயனியாக்கப்பட்ட மூலக் கூறுகள் எதிரே உள்ள பக்தர்களை அடையும் போது அவர்களுக்கு உடல்நலத்தை அளிக்கின்றது.[7]

பூசை வேளைகளில் தொடர்ச்சியாகக் கோயிலுக்குச் செல்கிறவர்கள், உள்ள ஆரோக்கியத்தோடு உடல் ஆரோக் கியத்தையும் பெறுகிறார்கள். அதனால் தான் 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்று நம் முன்னோர்கள் சொல்லி வைத்தனர்.[8]

ஆலயங்களில் அபிடேகங்களும், வழிபாடுகளும் சிறப்பாக நடக்கப் பலவிதக் கட்டளைகளை ஏற்படுத்திய நகரத்தார்கள் பால் கட்டளைகளையும் ஏற்படுத்தினர். அபிடேகத்துக்குரிய பால் தொடர்ந்து குறித்த நேரத்தில் கிடைக்க வேண்டும் என்பதற்காகக் கோயில்களையொட்டிப் பசுமடங்கள் ஏற்படுத்தினர். அம்மடங்களில் பசுக்களை வளர்க்கவும் பராமரிக்கவும் ஏற்பாடுகள் செய்து அதற்கு வேண்டிய மூலதனங்களையும் வைத்தனர்.

திருப்ராய்த்துரைத் திருத்தலத்தில் பசுமடம் நிறுவியவர்கள் ஆத்தன்குடி சு.ராம.சு. குடும்பத்தாரவர். அக்குடும்பத்தார் குறித்த நேரத்தில் கோயிலுக்குப் பால்கொடுக்க வேண்டுமென்பதற்காக, பசுமடத்தின் எதிரே உள்ள கோயில் மதிற்சுவரில் தங்கள் பொருட்செலவில் கதவமைத்துக் கொண்டு, அந்த வழிமூலம் தாமதமாகாமல் அபிஷேகத்திற்குரிய பாலைக் கொண்டு சென்றிருக்கின்றனர்.

நகரத்தார்கள் திருப்பணி செய்த தலங்கள்தோறும் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட பசுமடங்கள் உள. சில பசுமடங்களிலிருந்து பால் மட்டும் அல்லாமல் அபிடேகத்துக்குரிய மற்ற பொருட்களும் கொடுக்கப்பட்டன. சான்றாக திருவண்ணாமலையிலுள்ள கோட்டையூரார் பசுமடத்திலிருந்து தினந்தோறும் காலையிலும் மாலையிலும் பால் கொடுத்து வந்ததோடு சந்தனம், பன்னீர், விபூதி, கற்பூரம் முதலியவைகளும் கொடுத்து வந்ததைக் கூறலாம். சில பசுமடங்கள் குழந்தைகளுக்கு இலவசமாகப் பால் வழங்கின.[9]

5. 2. 2. அன்னதான மடங்கள் :

பல தலங்களுக்கும் சென்று இறைவனை வழிபடும் வழக்கமுடைய நகரத்தார்கள் இறைவழிபாட்டின் பொருட்டும் வணிகத்தின் பொருட்டும் வெளியூர்களுக்குச் செல்லும்போது போக்குவரத்து வசதிகள் அதிகமில்லாத அக்காலத்தில் பகலிலும் இரவிலும் இளைப்பாறித் தங்கிச் செல்வதற்குப் பாதுகாப்பான இடமும், உணவும் தேவை என்பதை அனுபவபூர்வமாக நன்கு உணர்ந்திருந்தார்கள். அதனால் வசதியும் வாய்ப்பும் ஏற்பட்டபோது, கோயிலுக்கு வந்து வழிபடுவோரும், வழிப் போக்கரும் பகலிலும் இரவிலும் இளைப்பாறி உணவுண்டு தங்கிச் செல்லும் பொருட்டு, இறைவன் கோயில் கொண்டுள்ள பல தலங்களிலும், முக்கிய நகரங்களுக்குச் செல்லும் பெருவழிகளிலும் அன்னதான மடங்களையும், சத்திரங்களையும் ஏற்படுத்தினர், அங்கு, அடியார்களுக்கும், துறவிகளுக்கும், ஏழைகளுக்கும், வழிப்போக்கர்களுக்கும் சாதி மத இன வேறுபாடு கருதாது 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே[10]' என்பதை நினைவில் கொண்டு உணவளித்தனர். காசி முதல் இராமேசுவரம் வரை, நகரத்தார்களால் அமைக்கப்பட்ட மடங்களும் சத்திரங்களும் பல உள்ளன.

நகரத்தார்களின் அன்னதான மடங்களுள் காலத்தால் முற்பட்டவை திருவண்ணாமலை 'ஓயாமடம்', பழனி, 'அன்னதான மடம்', குன்றக்குடி 'அன்னதான மடம்' ஆகிய மூன்றுமாகும்.

நகரத்தார்கள் சுமார் இருநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் பழனிக்கு உப்பு வணிகம் செய்யச் சென்று, கிடைத்த இலாபத்தில் மகமைப் பணம் எடுத்து வைத்து மூன்று பரதேசிகளுக்குச் சோறு வடித்துப்போட்டு ஆரம்பித்த பழனி அன்னதான மடம் இன்று தைப்பூச விழாக் காலங்களில் ஆயிரக் கணக்கானோர்களுக்கு அன்னமளித்து வருகிறது.

சோறு மணக்கும் மடங்களெல்லாம்'[11] என்றபடி எப்போதும் சோறு மணந்து கொண்டிருக்கும் 'ஓயாமடம்' இருநூற்றறுபது வருடங்களுக்கு முன்பு திருவண்ணாமலையில் நகரத்தார்களால் தொடங்கப்பட்டது. ஓய்வில்லாமல் அன்னமளித்து வந்தமையால் 'ஓயாமடம்' என்ற பெயரினைப் பெற்ற இம்மடத்தில் கார்த்திகைப் பெருவிழாவில் நாள் ஒன்றுக்குச் சுமார் ஏழாயிரம் மக்களுக்கு அன்னமளிக்கப்படுகிறது.

குன்றக்குடியில் நகரத்தார் அனைவருக்கும் பொதுவான அன்னதான மடமொன்றும், ஒவ்வொரு ஊர் நகரத்தார்களுக்கென்று தனித்தனியே மடங்களும் உள்ளன.

5. 2. 3. கஞ்சி மடங்கள் :

கி. பி. 1877-78 இல் தமிழகத்தில் கடுமையான பஞ்சம் ஏற்பட்டது. அதை ஈசுவர வருடத்துப் பஞ்சம் என்று குறிப்பிடுவர். அப்பஞ்ச காலத்தில் நகரத்தார்கள் ஆங்காங்கு கஞ்சி மடங்கள் அமைத்து ஏழைகளுக்குக் கஞ்சி வார்த்தார்கள்.

ஒவ்வோர் ஆண்டும் தை, சித்திரை மாதங்களில் முறையே பழனித் தலத்திற்கும் வைத்தீசுவரன் கோயிலுக்கும் செட்டிநாட்டு ஊர்களிலிருந்து ஒரு வார காலம் தொடர்ந்து நடந்து சென்று இறைவனை வழிபடுவது என்பது நகரத்தார்களிடையே கடந்த இருநூற்று ஐம்பது ஆண்டுகளாக இருந்து வரும் பழக்கமாகும். அவ்வாறு நடந்து செல்லும் அடியார்க்கு நகரத்தார்கள் ஆங்காங்கு உணவளித்தும், தங்குவதற்கு இடமளித்தும் போதிய வசதிகளை இன்றளவும் செய்து வருகிறார்கள்.

5. 2. 4. உப்பு மடமும் ஊறுகாய் மடமும் :

திருப்பெருந்துறை உறை சிவபெருமானுக்கு நிவேதனமாக வெண்சோறு மட்டுமே படைக்கப்படும். அச்சோற்றை வாங்கிச் செல்லும் அடியவர்களுக்கு உதவியாக உப்பு மடம் ஊறுகாய் மடம் என்னும் இரண்டு மடங்கள் திருப்பெருந்துறையில் தேவகோட்டை நகரத்தாரால் ஏற்படுத்தப்பட்டன.[12]

5. 2. 5. அயல் நாடுகளில் அன்னதானப் பணி :

இலங்கை, பர்மா, மலேயா, இந்தோனேசியா, வியட்நாம் போன்ற அயல் நாடுகளுக்கு வணிகத்தின் பொருட்டுச் சென்ற நகரத்தார்கள் அங்கு பெரும்பாலும் தண்டாயுதபாணிக்குக் கோயில் எழுப்பினர் என்று கண்டோம். அங்கு நகரத்தார்கள் கோயில் எழுப்பிய ஊர்களில் தனியே அன்னதான மடங்கள் அல்லது சத்திரங்களை உருவாக்காவிட்டாலும், கோயில்களை யொட்டிப் பெரிய பெரிய கூடங்களை அமைத்துச் சித்திரா பௌர்ணமி, வைகாசி விசாகம், ஆடிப் பௌர்ணமி, பங்குனி உத்திரம் ஆகிய விசேட நாட்களில், கோயிலுக்கு வருகின்ற அடியவர்களுக்கும், ஏழைகட்கும், நகரத்தார்களுக்கும் சாதி மத வேறுபாடு பாராது பெரிய அளவில் அன்னம் அளித்து வருகின்றனர்.

5. 2. 6. அறுபத்துமூவர் மடங்களும் குருபூசை மடங்களும்:

அறுபத்துமூவர் மடம் என்பதிலுள்ள அறுபத்துமூவர் என்ற எண்ணிக்கை பெரிய புராணத்தில் கூறப்படும் அறுபத்து மூன்று நாயன்மார்களைக் குறிக்கும். சைவ சமயத்தில் ஆழ்ந்த ஈடுபாடுடைய நகரத்தார்களுக்கு, சைவம் தழைக்கப் பாடுபட்ட அச்சமயக்குரவர்களிடம் மிகுந்த பக்தி இருந்தது. அவர் களையே தங்கள் குருவாகக் கொண்டனர். அவர்களைப் போற்றி வழிபடும் முகமாகவும், அவர்களால் பாடப்பட்ட திருமுறைகளை வளர்க்கு முகமாகவும் அறுபத்துமூவர் மடங்களையும், குருபூசை மடங்களையும் ஆங்காங்கு நிறுவினர். அம்மடங்களில் நாயன்மார்கள் திருமேனிகளை எழுந்தருளுவித்தனர். நாயன்மார்கள் பிறந்த நட்சத்திரத்தன்று அவர்கள்திருமேனிகளுக்கு அபிடேக அலங்காரங்கள் செய்து நெய்வேத்தியம் தீபதூபாராதனை செய்வித்து வணங்கினர்.

மேலும் நாயன்மார் புராணம், சைவத் திருமுறைகள் ஆகியவற்றைப் படித்தும், படிப்பித்தும் வந்தனர். பின்பு, 'பரமனடியாரானார்கள் எல்லாம் எய்தி உண்கவென இரண்டு பொழுதும் பறை நிகழ்த்திச் சொல்லால் சாற்றிச் சோறிட்ட' அப்பரடிகள் போல[13] பொது நோக்காகச் சிவனடியார்கள் எல்லோருக்கும் அன்னமிட்டனர். சுமார் இருபது தலங்களில் குருபூசை மடங்களும், மதுரை, காரைக்குடி, ஆத்தங்குடி, காளையார்கோயில் ஆகிய ஊர்களில் அறுபத்து மூவர் மடங்களும் நகரத்தார்கள் நிறுவியுள்ளனர். காரைக்குடியிலுள்ள அறுபத்துமூவர் மடத்தில் சொக்கலிங்க ஐயா என்ற பெரும்புலவர் சைவ சித்தாந்தப் பாடம் கற்பித்து வந்தார்.

5. 2. 7. திருவாசக மடம் :

சைவத் திருமுறைகளில் ஒன்றான திருவாசகத்தின் பெயரால் நகரத்தார்கள் திருவாசக மடங்களை ஏற்படுத்தினர். திருவாசகம் இயற்றியவரும், சைவசமயக் குரவர் நால்வருள் ஒருவருமாகிய மாணிக்கவாசகர் திருநாளன்று சிறப்பு வழிபாடுகள் நடத்தியும், திருவாசகம் படித்தும் படிப்பித்தும் அடியவர்களுக்கு அன்னமளித்தும் வந்தனர்.

நகரத்தார்கள், மாணிக்கவாசகரோடு தொடர்புடைய திருப்பெருந்துறைத் தலத்தில் திருவாசக மடமொன்றை ஏற்படுத்தி, அதில் பல ஊர்களைச் சேர்ந்த ஏழை மாணவர்களைச் சேர்த்து, தேவார திருவாசகத்தை இசையுடன் பயிற்றுவித்தனர். காரைக்குடி, பலவான்குடி ஆகிய ஊர்களிலும் நகரத்தார்கள் திருவாசக மடங்களை அமைத்துள்ளனர்.

5. 2. 8. திருமந்திர மடம்:

நகரத்தார்கள் திருமந்திரத்தின் பெயரால் காளையார்கோயிலில் திருமந்திர மடமொன்றை ஏற்படுத்தி, திருமந்திரத்தைப் பாராயணம் செய்ய வழிவகை செய்தனர். திருமூலர் திருநாளன்று சிறப்பு வழிபாடுகள் நடத்தினர்.

5. 2. 9:குங்குலியக்கலய நாயனார் மடம்:

குங்குலியம் என்பது, தூளாக்கி அனலிட்டுப் புகைத்தலால் நறுமணங் கமழும் ஒருவகை வாசனைப் பண்டம். இது மலைக்

காடுகளில் விளையும் ஒருவகை மரப்பிசின். கோயில்களுக்கு குங்குலியத் தூபம் இடும் பணியைச் செய்துவந்த குங்குலியக் கலயநாயனார் பெயரால் காளையார்கோயிலில், ஒரு மடத்தை ஏற்படுத்திய நகரத்தார்கள் கடவுள் வழிபாட்டிற்குக் குங்குலியம் கொடுத்து வந்தனர்.

சிவனடியார்களைப் போற்றி, திருமுறைத் தொண்டு புரிவதற்காகவே நகரத்தார்கள் இத்தகைய மடங்களை ஏற்படுத்தினர்.

5. 2. 10. சாதுக்கள் மடம் :

நகரத்தார்கள் நிறுவிய சாதுக்கள் மடத்தில், துறவியர்களுக்கும் ஏழைகளுக்கும் வந்தவர்களுக்கும் இல்லையென்னாது அன்னம் பரிமாறப்பட்டது. திருவண்ணா மலையில், நகரத்தார்களால் நிறுவப்பட்ட சாதுக்கள் மடம் புகழ் பெற்றது.

5. 2. 11. சமய தீட்சைக்கான மடங்கள் :

நகரத்தார் இனத்து ஆண்களும் பெண்களும் திருவைந்தெழுத்து உபதேசம் பெற்றுக் கொள்வதற்காக மடங்களை ஏற்படுத்தினர். நகரத்தார் ஆண்கள் சமய தீட்சை பெற்றுக் கொள்ளுவதற்காக 'கலாமடம்' (கிளாமடம்) 'கல்லாங்குடி மடம்' 'பாதரக்குடி மடம்' என்ற மூன்று மடங்களை ஏற்படுத்தியிருந்தனர். இப்போது 'பாதரக்குடி மடம்' மட்டும் நகரத்தார் சமூகத்தைச் சேர்ந்த ஆண்களுக்கு உபதேசம் செய்து வருகிறது. இம்மடத்திற்கென ஒரு மடாதிபதி உள்ளார்.

நகரத்தார் பெண்கள் குன்றக்குடிக்கு அருகிலுள்ள துலாவூர் மடத்தில் உபதேசம் பெற்று வருகிறார்கள். இம்மடம் சைவ ஆதீனங்கள் பதினெட்டில் ஒன்றாகும்.

5. 2. 12. வேதாந்த மடங்கள் :

சாதி மத பேதமற்ற சங்கரரின் அத்துவைதத் தத்துவத்தைப் பரப்புவதைக் கொள்கையாக உடைய வேதாந்த மடங்களை நகரத்தார்கள் தோற்றுவித்தனர்.

கி. பி. 1818 இல் நகரத்தார் மரபைச் சேர்ந்த கோவிலூர் ஆண்டவர் என்று சொல்லப்படும் முத்துராமலிங்கத் தேசிகர் காரைக்குடிக்கு அருகிலுள்ள கோவிலூரில் வேதாந்த மடமொன்றை நிறுவினார்.

சாதி இன வேறுபாடற்ற அடியார் குழாம் உணவு, உடை, இருக்கை முதலியவற்றுக்குக் கவலைப்படாமல் அமைதியாகத் தவம், தியானம் முதலிய ஆத்மசாதனைகள் செய்து வரவும், இறைவழிபாட்டில் முழு மனதுடன் ஈடுபடவும் இம்மடம் வழிவகை செய்தது.

நகரத்தார் மரபைச் சேர்ந்தவர்களே இம்மடத்தில் மடாதிபதியாக வரமுடியும். நகரத்தார்களில் துறவு மேற்கொள்ளும் பழக்கம் கோவிலூர் ஆதீனம் ஏற்பட்ட பின்னரே பெரிதும் பரவியது. தொண்ணூற்றாறூர் நகரத்தார்கள் ஒருங்குகூடி ஒருமுடிவு எடுக்க வேண்டுமென்றால் கோவிலூர் மடத்தில் கூடுவது வழக்கம்.

இம்மடத்தில் வடமொழியில் உள்ள வேதாந்த நூல்கள் தமிழ்ப்படுத்தப்பட்டு முறைப்படி பயிற்றுவிக்கப்பட்டன. வடமொழி தெரிந்தவர்கள் தான் வேதாந்தம் படிக்க முடியும் என்ற நிலை மாறி, தமிழ் மொழியில் வேதாந்தம் படிப்பதற்கு வகை செய்த மடம் என்றளவில் வேதாந்த தத்துவ வரலாற்றில் கோவிலூர் மடம் முக்கிய இடம் பெற்றுள்ளது.

இம்மடத்தில் சங்கர குருகுலம் என்ற பெயரில் ஒரு பள்ளியை ஏற்படுத்தி அத்துவைதக் கருத்துக்களைத் தமிழ்நாட்டில் தமிழ்மொழி வாயிலாகப் பயிற்றுவித்தனர். சங்கர குருகுலத்தில் படிக்கும் மாணாக்கர்களுக்கு மடத்திலேயே இலவசமாகத் தங்க இடமும் உணவும் அளித்துப் பல மாணாக்கர்களுக்குப் பயிற்றுவித்தனர். சாதாரணத் தமிழ்க் குடிமகன் கூட அத்துவைதக் கருத்துக்களைத் தெரிந்து கொள்ளுவதற்கு ஏற்ற வகையில் தமிழில் பல நூல்களை வெளியிட்டது இம்மடம்.

தமிழகத்திலும் பிற பகுதிகளிலும் பல வேதாந்த மடங்கள் உருவாவதற்கு அடிப்படைக் காரணமாக கோவிலூர் மடம்

விளங்கியது. இருநூற்று அறுபத்துமூன்று மடங்களுக்குத் தாய் மடமாக விளங்குகிறது இம்மடம். இதன் கிளை மடங்களுள் குறிப்பிடத்தக்கவை பொருள்வைத்தசேரி, திருக்களர், திருவண்ணாமலை, சிதம்பரம், திருப்பூவணம், காளையார்கோயில், மதுரை ஆகிய தலங்களில் உள்ள மடங்களாகும்.

காரைக்குடியில் வேதாந்த பாடம் பயில்பவர்களுக்கென்று தனியே ஒரு மடம் தேவை என்று கருதி, கோவிலூர் ஆண்டவரின் சீடர் சேந்தணி பழனியப்பய்யா என்பவர் நகரத்தார் பொருளுதவியுடன் மேலமடம் என்ற மடத்தை நிறுவினார். வேதாந்தக் கல்வி பயிலுபவர்கள் அங்கு தங்கியிருந்தனர். அம்மடத்தில் குருபூசை முதலிய விசேட தினங்களில் வருவோர் அனைவருக்கும் உணவளிக்கப்படுகிறது. வேதாந்தக் கல்வியைப் பரப்புவதையும் துறவிகளை ஆதரிப்பதையும் இம்மடங்கள் முக்கிய நோக்கங்களாகக் கொண்டிருந்தன.

5. 2. 13. பிற மடங்கள் :

மேற்சொன்ன மடங்கள் தவிர நகரத்தார்கள் திருப்பணி செய்த தலங்களையொட்டியும், தங்கள் ஊர்களிலும் கார்த்திகை, ஏகாதசி, துவாதசி ஆகிய நாட்களில் அடியார்களுக்கும் ஏழை எளியோருக்கும் அன்னமிடுவதற்காக கார்த்திகை மடங்கள், ஏகாதசி மடங்கள், துவாதசி மடங்கள் ஆகியவற்றை ஏற்படுத்தினர். மேலும் சனி மடம், ஞானியார் மடம், இராக்கால மடம், விபூதி மடம், பன்னீர் மடம், கற்பூர மடம், சாம்பிராணி மடம், நடன மடம் ஆகிய மடங்களையும் நகரத்தார்கள் ஏற்படுத்தினர். காலத்தின் கோலத்தால் இம்மடங்களுள் ஒரு சில மட்டும் இன்றும் இயங்கி வருகின்றன.

5. 3. நகரச் சத்திரங்கள் :

நகரத்தார் சத்திரங்களும் நகரத்தார் மடங்களைப் போலவே அன்னதானப் பணியைச் செய்தன. தமிழகமெங்கும் நகரத்தார் சத்திரங்கள் காணப்படுகின்றன. தேவகோட்டையில் முதன் முதலாக சத்திரம் கட்டிய குடும்பத்தாரை 'சத்திரத்து வீட்டார்' என்று செட்டிநாட்டு மக்கள் அழைக்கின்றனர்.

1872-இல் கோட்டையூர் மெ. க. குடும்பத்தாரால், திருவண்ணாமலையில், அடியார்களுக்கு அன்னமளிப்பதே பெரு நோக்கமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது 'மெ. க. அன்னசத்திரம்'. இச்சத்திரத்துச் செலவுகளுக்காகப் 'பசுங்கரை' என்னும் கிராமத்தை வாங்கி மூலதனமாக வைத்துத் தினசரி அந்தணர்களுக்கும் மற்றவர்களுக்கும் அன்னமிட்டு வந்தனர். தற்போது கால நிலைகளுக்கு ஏற்ப ஏழை மாணவர்களுக்குத் தங்க இடமும், உணவும், உடையும், புத்தகங்களும் அளித்து வருகிறார்கள்.[14]

இராமேசுவரம் செல்லும் பயணிகளின் நலன் கருதி காரைக்குடியில் கீழைச் சத்திரம், மேலைச் சத்திரம் ஆகிய இரு சத்திரங்கள் நகரத்தார்களால் ஏற்படுத்தப்பட்டன.

வாழ்க்கையில் ஒரு முறையாவது காசிக்குச் செல்ல வேண்டும் என்று தென்னாட்டவர்கள் நினைப்பதுபோல், வட நாட்டவர்கள் ஒரு முறையேனும் இராமேசுவரத்திற்குச் சென்று இராமநாதரை வழிபட வேண்டும் என்ற எண்ணம் உடையவர்கள். அதனால் வட நாட்டவர்கள் அதிகமாக இராமேசுவரத்திற்கு வருகிறார்கள். மிகத் தொலைவிலிருந்து வரும் வட நாட்டவருக்கு உணவளிப்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டு கண்டனூரைச் சேர்ந்த ஒரு குடும்பத்தாரால் இராமேசுவரத்தில் 1918-இல் ஆரம்பிக்கப் பட்டது தான் 'இந்துஸ்தானி சதாவிருத்தி சத்திரம்', வட நாட்டில் இருந்து இராமேசுவரம் வரும் பயணிகளுக்கு இச்சத்திரத்தில் 'சதாவிருத்தி' எனப்படும் இலவச உணவு வழங்கப்படுகிறது. எவ்வளவு பேர் வந்தாலும் முன்பு மூன்று நாட்களுக்கும் தற்போது இரண்டு நாட்களுக்கும் வேண்டிய கோதுமை மாவு, பருப்பு, மிளகாய்வற்றல், உப்பு, விறகுக்கட்டு முதலியன கொடுக்கப்பட்டு வருகின்றது. வடநாட்டுப் பயணிகளிடையே இந்தச் சத்திரம் பெரும் புகழ் பெற்றுள்ளது.[15] அது மட்டுமல்லாமல் எம்மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் எந்நாட்டினர் ஆயினும் இங்கு இலவசமாக உணவு கொடுக்கப்படுகிறது.

இராமேசுவரம் தீவின் தென்கிழக்கில் இராமேசுவரத் திலிருந்து இருபது கிலோ மீட்டார் தொலைவில் தனுசுக்கோடி

அமைந்துள்ளது. தனுசுக்கோடிக்கு தீர்த்தமாட வருகின்றவர்களின் நலங்கருதி தேவகோட்டை வீர. ராம. வீர. லெ. குடும்பத்தார் சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு தனுசுக்கோடியில் ஒரு சத்திரத்தைத் தோற்றுவித்தனர்.

ஒருசமயம், திருவாங்கூர் மன்னர் தீர்த்தயாத்திரையாக தனுசுக்கோடி வந்தபோது அவருடைய முன்னோருக்கு திதி கொடுக்கத் தேவைப்பட்ட பஞ்ச கவ்வியத்தை நகரச் சத்திரத்திலிருந்து பெற்றார். அதற்குக் கைம்மாறாக அரசர் ஏதேனும் செய்ய விரும்பியபோது சத்திரத்துச் செட்டியார், தனுசுக்கோடிக்கு வரும் பயணிகள், சமைத்துக்கொள்ள விரும்பினால் அவர்களுக்குக் கொடுக்கப் போதுமான விறகுகள் கிடைக்க வகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். மன்னரும் தீர்த்தயாத்திரை முடிந்து திரும்பும் வழியில் இராமநாதபுரம் சேதுபதியைச் சந்தித்து அவரிடமிருந்து நூறு ஏக்கர் பரப்பளவுள்ள ஒரு காட்டை வாங்கி, தனுசுக்கோடிச் சத்திரத்திற்குத் தானமாகக் கொடுத்துள்ளார்.[16]

இந்தியாவில் தென்கோடியில் உள்ளதும் கடலால் சூழப்பட்டதுமான இராமேசுவரத் தீவின் மூலையில் சத்திரம் அமைத்து, அங்கு வருகின்ற யாத்திரிகர்களின் நலனுக்காக மன்னரிடம் வேண்டிக் கொண்ட நகரத்தாரின் இயல்பு அன்னதானப் பணியில் நகரத்தாருக்குள்ள ஈடுபாட்டைக் காட்டுவதாக உள்ளது.

தனுசுகோடியில் 1964-இல் ஏற்பட்ட புயலால் கடுமையான சேதம் ஏற்பட்டது. அதனால் தனுசுக்கோடிச் சத்திரம் இராமேசுவரத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

கடியாபட்டி தீ. நாச்சியப்பச் செட்டியார் தனக்கு எண்பது ஆண்டுகள் நிறைந்தபோது, சதாபிடேகம் செய்துகொள்ள வசதிகளும் வாய்ப்பும் இருந்த போதும், சதாபிடேகம் செய்து கொள்ளாது அதற்காகும் செலவில், திருப்பாதிரிப்புலியூரில் ஓர் அன்னசத்திரத்தை ஏற்படுத்தினார்.[17] நகரத்தார்கள் அரிதில் முயன்று ஈட்டிய பொருளை ஆடம்பரத்தின் பொருட்டுச் செலவிட மனமில்லாதவர்கள். அதே சமயம் அறப்பணி களுக்குச் செலவிடத் தயங்காதவர்கள் என்பதற்கும் இந்நிகழ்ச்சி எடுத்துக்காட்டாக உள்ளது.

திருநெல்வேலியில் தாமிரவருணி ஆற்றங்கரையிலுள்ள குறுக்குத்துறைச் சத்திரம், மாயவரத்தில் காவிரியாற்றங் கரையிலுள்ள அ. நா. அன்னசத்திரம், திருவரங்கத்தில் காவிரிக் கரையிலுள்ள 'சிதம்பரம் செட்டியார் அன்னதான சத்திரம்' போன்றவை சென்ற நூற்றாண்டில் தமிழகத்துத் தீர்த்தக்கரைகளில் நகரத்தார்களால் உருவாக்கப்பட்ட சத்திரங்களுள் சிலவாகும். காவிரி, கங்கை போன்ற நதிகளிலும், கடல்களிலும், ஆடி அமாவாசை, தை அமாவாசை போன்ற நாட்களில் நீராடுவதை இந்துக்கள் புனிதமாகக் கருதினர். அவ்வாறு நீராட வரும் பயணிகளுக்கு உணவளிப்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டு தீர்த்தக் கரைகளில் சத்திரங்களை நகரத்தார்கள் ஏற்படுத்தினர்.

நகரத்தார்கள் உருவாக்கிய அன்னதான மடங்களும், சத்திரங்களும் அடியார்களுக்கும், துறவிகளுக்கும், ஏழை எளியோருக்கும் வேறுபாடு பாராது உணவளித்து வந்தாலும் சில நிலையங்கள் அந்தணர்களுக்கே முதலிடம் கொடுத்தன. காலப் போக்கில் அவையும் வேறுபாடு கருதாது அனைவருக்கும் அன்னமிடும் பணியை மேற்கொண்டன.

5. 3. 1. வடநாட்டில் நகரச் சத்திரங்கள் :

கல்கத்தாவிற்கு வணிகத்தின் பொருட்டுச் சென்ற நகரத்தார்கள், காசியில் ஓர் இல்லம் அமைத்து, காசி விசுவநாதருக்கு அபிடேகங்களுக்குரிய பொருட்களைக் கொடுத்தும் ஏழைகளுக்கு உணவளித்தும் வந்தனர். இவ்வாறு ஐம்பது ஆண்டுகள் சென்றபிறகு 1863-இல் 'ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரத்தை' உருவாக்கினார். அச்சத்திரம் ஏற்பட்டபோது அதை 'அன்னதான மட்ம்' என்றே அழைத்தனர் என்பது அங்குள்ள கல்வெட்டால் தெரிகிறது.[18]

இச்சத்திரத்திலிருந்து காசி விசுவநாதர் விசாலாட்சி, அன்னபூரணி, விநாயகர், கால பைரவர், பாதாளேசுவரர், நகரேசுவரர், நகரேசுவரி முதலிய கடவுளர்க்கு வழிபாட்டுக்குரிய பொருட்கள் வருடம் முழுவதும் குறித்த நேரத்தில் அனுப்பப்படுகின்றன.

பர்மா, நகரத்தார்களுக்குச் செழிப்பாக இருந்தபோது இச்சத்திரத்தின் வருவாய் அதிகமாக இருந்தது. அக்காலத்தில் இங்கு சாதுக்கள், அந்தணர்கள், மாணவர்கள், ஏழைகள், நோயாளிகள், யாத்திரிகர்கள் முதலானவர்களுக்குத் தினசரி முந்நூறு பேர்களுக்குக் குறையாமல் உணவளிக்கப்பட்டு வந்தது.

பல இனத்தைச் சேர்ந்த மாணவர்கள் காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரத்தில் தங்க இடமும், உணவும் பெற்றுக் கல்வி பயின்றனர். அவர்களில் பலர் மேன்மை நிலையிலுள்ளனர்.[19]

தீர்த்த விசேடமுடைய வடநாடுகளில் நாசிக் பஞ்சவடி, பிரயாகை, அயோத்தி, தாரகேசுவரம், கயா, காளிகட்டம், கோதாவரி முதலிய முக்கியத்தலங்களில் நதிக்கரைகளில் நகரத்தார்கள் சத்திரங்கள் எழுப்பியுள்ளனர்.

வடநாட்டுச் சத்திரங்கள் யாவும் காசிச் சத்திர நிருவாகத்தின் கீழ் காலத்திற்கேற்றவாறு சத்திரப் பணியைச் செம்மையான முறையில் செய்து வருகின்றன.

5. 4. நகர விடுதிகள் :

நகரத்தார்கள் தொடர்புடைய ஊர்கள் அனைத்திலும் நகர விடுதிகள் உண்டு. தங்கள் இனத்தாருக்குச் செய்யும் பணியாக, நகரத்தார்கள் நகர விடுதிகளை அமைத்தனர். நகர விடுதிகளில் நகரத்தார்களே பெரும்பாலும் தங்க அனுமதிக்கப்பட்டனர். தலயாத்திரை வந்தவர்கள் தங்குவதற்கும், ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்கு வணிகம் முதலிய வேலை நிமித்தம் வந்தவர்கள் தங்குவதற்கும், வெளிநாடுகளுக்குச் செல்பவர்கள், போகும்போதும் வரும் போதும் தங்குவதற்கு வாய்ப்பாகவும் முறையே ஒன்பது நகரக் கோயில்களை ஒட்டியும், பழமையான கோயில் தலங்களிலும், தங்கள் ஊர்களிலும், முக்கியமான நகரங்களிலும், துறைமுக ஊர்களிலும் நகர விடுதிகளை அமைத்தனர்.

நகரக் கோயில்களைச் சேர்ந்த நகர விடுதிகள், கோயில் வரவு செலவுக் கணக்குகளையும். அந்தந்தக் கோயிலைச் சேர்ந்த நகரத்தார்களின் புள்ளி விவரங்கள் முதலியவற்றையும்

கவனித்து வருகின்றன சில விடுதிகளிலிருந்து கோயிலுக்கு வேண்டிய வழிபடு பொருட்கள் கொடுக்கப்படுகின்றன. சில நகர விடுதிகள் திருமண மண்டபங்களாகவும் பயன்படுகின்றன. ஆண்களுக்கென்றும் பெண்களுக்கென்றும் தனித்தனியே அமைக்கப்பட்ட விடுதிகளும் உள

5. 5. ஊருணிகளும் குளங்களும் :

ஆலயத் தூய்மைக்கும், ஆலயத்திற்கு வரும் அடியவர்கள் கால் கைகள் முதலிய புறத்தூய்மை செய்து கொள்ளுவதற்கும், குளிப்பதற்கும், குடிப்பதற்கும் நீர்தேவை. அதற்காக, தொன்றுதொட்டு கோயில்களை அடுத்துக் குளங்களையும் ஊருணிகளையும் அமைக்கும் முறை காணப்படுகின்றது. இப்பணியை நகரத்தார்களும் தொடர்ந்து செய்தனர். 'ஊருணி' என்பது பெரும்பாலும் ஊர் மக்கள் உண்பதற்காக அமைக்கப்பட்ட நீர் நிலையாகும். மக்கள் புறத்தூய்மை செய்து கொள்ளுவதற்கும், தாமரை போன்ற நீர் நிலைப் பூக்கள் வளர்ப்பதற்கும் குளங்கள் பயன்பட்டன.

நகரத்தார்கள் தங்களுடைய ஒன்பது நகரக் கோயில்களை அடுத்தும், புதியதாகக் கட்டிய கோயில்களை அடுத்தும், புதுப்பித்த தலங்களை அடுத்தும் கருங்கல் கட்டுமானங்களுடன் கூடிய அழகான ஊருணிகளையும், குளங்களையும் அமைத்தனர். ஏற்கனவே உள்ள ஊருணிகள், குளங்கள் ஆகியவற்றில் சீர்திருத்தங்கள் செய்ய வேண்டியதிருந்தால், சீர்திருத்தங்களைச் செய்தனர். உதாரணமாக, அண்ணாமலை யரசர் திருவண்ணாமலைக் கோயிலுக்குள் உள்ள பிரம்மதீர்த்தக் குளத்தைப் பிரித்து அகலப்படுத்தியும் ஆழப்படுத்தியும் உள்ளிருந்த கருங்கல் பாறையை ஜம்பர் போட்டுத் தகர்த்தெறிந்தும், நான்கு பக்கமும் கருங்கல்லினால் படிகள் கட்டியும் குளத்தைப் புதுப்பித்துள்ளார்.[20]

5. 10. முடிவுகள் :

1. கோயில் திருப்பணிகளைச் செய்த நகரத்தார்கள் கோயில்களில் தினசரி வழிபாடுகளும், திருவிழாக்களும் சிறப்பாக முட்டின்றி நடக்க, தக்க ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

2. இறைவழிபாட்டுக்குரிய மலர்களைக் கோயிலுக்குக் கொடுப்பதற்காகக் கோயில்களை அடுத்து நந்தவனங்கள் ஏற்படுத்தி நல்ல முறையில் பராமரித்து வந்தனர்.

3. பால் கட்டளைகளை ஏற்படுத்தி, கோயில்களுக்குக் குறித்த நேரத்தில் பால் கொடுப்பதற்காகப் பசுமடங்களை ஏற்படுத்தினர்.

4. வழிபடுவோரும் தேசாந்திரிகளும் உணவுண்டு இளைப்பாறித் தங்கிச் செல்லுவதற்கு ஏதுவாக அவர்கள் நலன் கருதி அன்னதான மடங்களையும் சத்திரங்களையும் ஏற்படுத்தினர்.

5. ஏழைகளுக்கு உணவளிப்பதற்காகப் பஞ்ச காலத்தில் கஞ்சி மடங்களை ஏற்படுத்தினர்.

6. சைவ சமயிகளான நகரத்தார்கள் அறுபத்துமூன்று நாயன்மார்களைப் போற்றுமுகமாக அறுபத்துமூவர் மடங்களையும், குருபூசை மடங்களையும், தேவார திருவாசக மடங்களையும், ஏற்படுத்தினர். சைவ அடியார்களின் தொண்டு மனப்பான்மையைப் போற்றவும், தொண்டு உணர்வை மக்களிடையே பரப்பவும் இத்தகைய மடங்களை ஏற்படுத்தினர்.

7. வேதாந்த மடங்களை நிறுவி வேதாந்தக் கல்வியைத் தமிழ் மொழி வாயிலாக வளர்த்தனர்.

8. நகரத்தார் ஆண்களும் பெண்களும் சமய தீட்சை பெற்றுக் கொள்ளுவதற்காக முறையே பாதரக்குடி, துலாவூர் மடங்களை ஏற்படுத்தினர்.

9. ஏகாதசி, துவாதசி, கார்த்திகை ஆகிய நாட்களில் அடியார்களுக்கு அன்னமளிப்பதற்காக ஏகாதசி மடம், துவாதசி மடம், கார்த்திகை மடம் ஆகியவற்றை நகரத்தார்கள் ஏற்படுத்தினர்.

10. இறைவழிபாட்டுக்குரிய பொருட்கள் குறைவறக் கொடுக்கப்பட வேண்டுமென்பதற்காகவே விபூதி மடம், குங்குலிய மடம், பன்னீர் மடம், சந்தன மடம் ஆகியன நகரத்தார்களால் ஏற்படுத்தப்பட்டன.

11. வேத பாடசாலைகள், ஆகம பாடசாலைகள் தேவார பாடசாலைகள், திருவாசக பாடசாலைகள் நிறுவி நகரத்தார்கள் இந்து சமயத்தையும் தமிழையும் பேணினர்.

12. நீரின் தேவையை உணர்ந்து கோயில்களையொட்டி ஊருணிகளும் குளங்களும் அமைத்தனர்.

13. நகரத்தார்கள், நகரத்தார்களின் வசதிக்காகவே நகர விடுதிகளை ஏற்படுத்தினர். நகர விடுதிகள் கோயில் நிர்வாகங்களையும் கவனித்தன.

அடிக்குறிப்புகள் :

1. சோமலெ. (ப. ஆ), **ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரம் நூற்றாண்டு விழா மலர்** (1863 -1963) ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரம் மானேஜிங் சொசைட்டி, இரங்கூன், ப. 110.

2. **'கல்வெட்டு'** காலாண்டு இதழ், வெ. வேதாசலம், கட்டுரை 'நந்தவனங்கள்' தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு 1976 -77 நள ஆண்டு ஆடித்திங்கள், ப. 10.

3. நீலோத்பல மலரும், செங்கழுநீர் மலரும் பூக்கும் குளமுடைய நந்தவனம் நகரத்தார்களின் ஒன்பது கோயில்களுள் ஒன்றான வயிரவன்பட்டிக் கோயிலில் உள்ளது.

4. காளையார்கோயிலில் இவ்வாறு ஒவ்வொரு வேளைக்குமுரிய நந்தவனங்கள் இருந்தன. தேவகோட்டை சமீன்தார் குடும்பத்தைச் சேர்ந்த ஏ. எல். ஏ.ஆர் நாராயணன் செட்டியார் நேர்காணலின் போது கூறியது, 2-6-90.

5. திருநாவுக்கரசர், தேவாரம் ஆறாம் திருமுறை, 6. 11. 2. தருமபுர ஆதீன வெளியீடு 1963, ப. 375.

6. T. N. சுப்பிரமணியன் (தொ. ஆ), **தென்னிந்திய கோயில் சாசனங்கள்** பாகம் -3, பகுதி -2, Government Oriental Manuscripts Library, Madras, 1957, ப. 1317.

7. **இந்து சமயம் - ஒரு விஞ்ஞானப் பார்வை**, ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி, குற்றாலம், பக். 3-5.

8. ஔவையார், **கொன்றைவேந்தன்**, காரைக்குடி தமிழ்ச் சங்க வெளியீடு, 1983, ப. 3.

9. கதிரேசன், ராம. சோம., **தனவணிகர் தன்மை**,செட்டி நாட்டு நூற்பதிப்புக் கழகம், தேவகோட்டை, முதற்பதிப்பு, 1940, ப. 49.

10. குடபுலவியனார், **புறநானூறு**, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1973, பாடல் எண் 18.

11. மீனாட்சி சுந்தரம் பிள்ளை, மகாவித்துவான், **சேக்கிழார் பிள்ளைத் தமிழ்**, தி. தெ. சை. சி. நூ. கழகம், 1964, பாடல் எண் 24.

12. சாமிநாதையர், உ. வே., **நல்லுரைக்கோவை** (முதற்பாகம்). ஸ்ரீ தியாகராச விலாச வெளியீடு, 1958, ப. 18.

13. சேக்கிழார், **திருத்தொண்டர் புராணம்**, கே. சுப்பிரமணியபிள்ளை (ப. ஆ) திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம், திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து வெளியீடு, , 1970, பாடல் எண் 259.

14. தாமோதரன், கு. **தமிழ்நாட்டுச் சத்திரங்கள்**, மணிவாசகர் பதிப்பகம், முதற்பதிப்பு 1988, பக். 83-85.

15. மேலது. ப. 90.

16. மேலது, பக். 81-82.

17. நாராயணசாமி பிள்ளை, தி.மு. **இராமச்சந்திரபுரம் தீ. நா. நாச்சியப்பச் செட்டியார்**, 1925, ப. 59.

18. சோமலெ. (ப. ஆ), **ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரம் நூற்றாண்டு விழா மலர்**, (1863-1963) ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரம் மேனேஜிங் சொசைட்டி, இரங்கூன், ப. எ. இல்லை.

19. மேலது, பக். 250, 251.

20. **திருவண்ணாமலை ஸ்ரீ அருணாசலேஸ்வர சுவாமி தேவஸ்தானத்திற்கு நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் செய்திருக்கின்ற தர்மங்களின் விவரம்**, ப. எ. 1, (வெளியீடு ஆண்டு ஆகிய விவரங்கள் இல்லை.)

6. நகரத்தாரின் கல்விப் பணிகள்

கோயில் பணியில் தலைநின்ற நகரத்தார்கள் காலத்திற்கேற்ற பிற அறப்பணிகளிலும் முன் நின்றனர். அவற்றுள் கோயில் திருப்பணிக்கு அடுத்து வருவது கல்விப் பணி. நகரத்தார்களின் கல்விப் பணியை, சமயக் கல்வி, தமிழ்க் கல்வி, ஆங்கில வழிக் கல்வி என்று பகுத்துக் காணலாம். நகரத்தார்கள் கல்வி நிறுவனங்கள் ஏற்படுத்திக் கல்விப் பணி புரிந்ததோடு, தாங்களே கல்வியைப் பயிற்றுவிக்கும் பணியிலும் ஈடுபட்டனர். அவர்கள் தமிழகத்தில் மட்டுமல்லாமல் அயல் நாடுகளிலும் கல்விப் பணியாற்றியிருக்கிறார்கள்.

6. 1. சமயக் கல்வி :

கி. பி. 18, 19 ஆம் நூற்றாண்டுகளில் கோயிற் பணிகளில் அதிகமாக ஈடுபட்ட நகரத்தார்கள் தாங்கள் திருப்பணி செய்த தலங்களையொட்டி வேத பாடசாலைகளையும், ஆகம பாடசாலைகளையும், தேவார பாடசாலைகளையும், திருவாசகப் பாடசாலைகளையும் ஏற்படுத்தினர் என்று கண்டோம்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தமிழகத்திற்கு வந்த கிறித்துவப் பாதிரிமார்கள் கிறித்தவ சமயக் கல்வியை மக்களிடையே பரப்பி வந்தார்கள். அதனால் அநேகர், கிறித்துவர்களாக மாறினர். அதைக் கண்ட நகரத்தார்கள் சமயக் கல்வியை, குறிப்பாக சைவசமயக் கல்வியைப் பரப்புவது அவசியம் என்று நினைத்து அக்கால இயல்பிற்கேற்ப, சமயக் கல்வியைப் புகட்டும் பாடசாலைகளை நிறுவினர். இப்பாடசாலையில் பயின்ற சிறார்கள் வேதாந்த சித்தாந்தங்களை அறிந்தனர். தேவார திருவாசகங்களை இன்னிசையோடு பாடிப் பழகினர். தாங்கள் கற்றவற்றை கோயில்களில் பாராயணம் பண்ணியும் வந்தனர்.

பாடசாலையில் பயிலும் மாணாக்கர்களுக்கு இலவசமாக உண்டி, உடை, உறையுள் ஆகிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

நகரத்தார்கள் சுமார் ஐம்பது தலங்களில் வேத பாடசாலைகளை நிறுவியுள்ளனர். அதிலும் கோவிலூர், திருக்களர், காளையார்கோயில் ஆகிய தலங்களில் தனித்தனியே இருக்கு, அசுர், சாம, வேத பாடசாலைகளை நிறுவியுள்ளனர்.

நகரத்தார்கள் சுமார் ஆறு தலங்களில் ஆகம பாடசாலைகளை நிறுவி உள்ளனர். நகரத்தார் நிறுவிய வேத பாடசாலைகளை நோக்க, ஆகம பாடசாலைகள் எண்ணிக்கையில் குறைவே. வேத பாடசாலைகளைப் போன்றே ஆகம பாடசாலைகளையும் அதிகம் நிறுவி சைவாகமங்களைப் பேண வேண்டும் என்று. பண்டிதமணி போன்றோர் கூறியுள்ளனர்.[1]

காரைக்குடியைச் சேர்ந்த இராம. சொ. சொக்கலிங்க ஐயா என்ற சைவ சித்தாந்தப் புலவர் நகரத்தார் பொருளும் தம் பொருளும் கொண்டு சிதம்பரத்தில் 1923-இல் ஸ்ரீ மெய்கண்ட வித்யாசாலையைத் தோற்றுவித்தார். அதில் அறுபத்துமூன்று நாயன்மார் குருபூசையும், சைவ இலக்கிய, இலக்கண, சித்தாந்த சாத்திர பாடங்களும் நடைபெறச் செய்து சைவ சமயம், சிவ தருமம் முதலியவற்றை விருத்தியடையச் செய்தார்.[2]

திருமுறைகளின் வளர்ச்சிக்கு உதவுமுகமாக தேவாரப் பதிகங்களை ஓதவும் ஓதுவிக்கவும் மதுரை, திருக்களர், தில்லை, திருப்பெருந்துறை, காளையார்கோயில் போன்ற சுமார் பன்னிரண்டு தலங்களில் நகரத்தார்கள் தேவாரப் பாடசாலைகளை நிறுவியுள்ளனர். அது தவிர திருவாசகப் பாடசாலைகளையும், திருப்புகழ் பாடசாலைகளையும் நிறுவியுள்ளனர்.

நகரத்தார்கள் நிறுவிய பாடசாலைகளில் பெரும்பான்மையாக அந்தணச் சிறார்களே படித்தனர். காலப்போக்கில் மேனாட்டுக் கல்விமுறை பரவியவுடன் அப்பாடசாலைகளில் மாணாக்கர்கள் சேர்ந்து படிப்பது அருகிவிட்டது. இக்காலத்தில் பல பாடசாலைகளில் பள்ளிகளில், கல்லூரிகளில் படிக்கும் ஏழை மாணாக்கர்கள் தங்கிப் படிக்க இடமளித்தும், அவர்களுக்கு உணவு உடை முதலியன கொடுத்தும் வருகிறார்கள்.

ஆங்கில முறைக் கல்விக் கூடங்கள் பெருகியுள்ள இக்காலத்தில் மாயவரம், திருவரங்கம், பிள்ளையார்பட்டி போன்ற தலங்களில் உள்ள ஒரு சில பாடசாலைகள் மட்டும் தொடர்ந்து நடந்து வருகின்றன.

6. 2. ஆங்கிலக் கல்விமுறை :

சமயப் பணியிலும் சமயஞ்சார்ந்த கல்விப் பணியிலும் ஈடுபட்டிருந்த நகரத்தார்கள் 1900க்குப் பிறகு தங்கள் அறப்பணிகளின் போக்கை மாற்றிக் கொண்டு, மேனாட்டுக் கல்வி முறையைப் பின்பற்றிக் கல்விப் பணியைத் தொடங்கினர். அவ்வாறு தொடங்கிய காலத்தில் பொதுமக்களுக்குக் கல்வி கற்கும் வாய்ப்புக் குறைவாக இருந்தது. கல்வி என்பது திண்ணைப் பள்ளிக்கூடமாகவே இருந்தது. அங்கு அரிச்சுவடி, சோதிடம், ஆத்திசூடி கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி, நன்னெறி, நிகண்டு, நன்னூல் முதலிய இலக்கிய இலக்கண நூல்களும் நெல்லிலக்கம், முந்திரி இலக்கம், கீழ்வாய் இலக்கம் கணக்கதிகாரம் முதலிய கணிதப் பாடங்களும், குமரேச வெண்பா, அறப்பளீச்சுர சதகம் போன்ற பக்தி நூல்களுமே கற்றுக் கொடுக்கப்பட்டன. அவ்வாறு கற்கும் கல்வி மூன்று ஆண்டுகளிலிருந்து ஆறு ஆண்டுகளுக்கு மேல் போகாது. அக்கல்வியும் வசதியுடைய சிலருக்கே கிடைத்தது. தொழிலாளர்கள் தம் மக்களை இளமையிலேயே தத்தம் குலத் தொழில்களில் ஈடுபடுத்தினர்.

ஆங்கிலேயர் ஆட்சியில் இம்முறை சிறிது சிறிதாக மாறியது. ஆங்கில அரசாங்கமும், பல கிறித்துவப் பாதிரிமார்களும் சாதிசமய வேறுபாடில்லாமல் எல்லா மக்களுக்கும் அடிப்படைக் கல்வி கிடைக்க வசதிகள் செய்து கொடுத்தனர். எழுத்தறிவு பெறப் பல கல்வி நிலையங்களை ஏற்படுத்தினர்.

அதுவரை கோயில் திருப்பணிகளில் ஈடுபட்டிருந்த நகரத்தார், காலச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப சாதிசமய வேறுபாடில்லாமல் அனைவருக்கும் கற்பிக்கும் கல்வியே தேவை என்று அறிந்து மேனாட்டார் கல்வி முறையைப் பின்பற்றிக் கல்வி நிலையங்களைத் தோற்றுவிக்கும் பணியில் ஈடுபட்டனர்.

6. 2. 1. பள்ளிகள் :

நகரத்தார்கள் தாங்கள் வசிக்கும் ஊர்களில் தொடக்கப் பள்ளிகளையும் நடுநிலைப் பள்ளிகளையும் ஏற்படுத்திச் சாதி மத வேறுபாடில்லாமல் அனைவரும் இலவசமாகக் கல்வி பயில ஏற்பாடுகள் செய்தனர். பள்ளிக்கூடங்கள் நடைபெற நல்ல கட்டிடங்களைக் கட்டினர். அப்பள்ளிகளின் நிருவாகச் செலவிற்காகப் பெருந்தொகைகளை வைப்பு முதலாக வைத்தனர்.

மேலைச்சிவபுரியில் 1909 - இல் தொடங்கப்பட்ட 'கணேசர் செந்தமிழ்க் கலாசாலையும் 1912 - இல் கோனாபட்டில் நிறுவப்பட்ட 'கற்பக விநாயகர் கலாசாலையும், 1913 - இல் காரைக்குடியில் நிறுவப்பட்ட ஆங்கிலக் கல்வியோடு கூடிய 'ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் வித்தியாசாலையும் 1915 - இல் சிதம்பரத்தில் நிறுவப்பட்ட இராமசாமிச் செட்டியார் உயர்நிலைப் பள்ளியும், 1917-இல் காரைக்குடியில் ஆரம்பிக்கப்பட்ட, 'ஸ்ரீ மீனாட்சி பெண்கள் உயர்நிலைப் பள்ளியும், அதே ஆண்டில் கடியாபட்டியில் நிறுவப்பட்ட பூமீசுவரர் இலவச உயர்நிலைப் பள்ளியும்,1920-இல் வலையபட்டியில் நிறுவப்பட்ட சித்திவிநாயகர் கலாசாலையும், 1926-இல் நேமத்தான்பட்டியில் நிறுவப்பட்ட திருநாவுக்கரசர் வித்தியாசாலையும், 1930-இல் ஆவினிப்பட்டியில் தோன்றிய விவேகானந்தர் கல்விக் கழகமும், வேந்தன்பட்டி திருவள்ளுவர் செந்தமிழ்க் கலாசாலையும், 1932-இல் ஆரம்பிக்கப்பட்ட புதுவயல் சரசுவதி சங்கத்தின் அங்கமான சரசுவதி வித்தியாசாலையும் 1935-இல் கொப்பனாபட்டியில் ஏற்படுத்தப்பட்ட பெண்களுக்கான கலைமகள் கலாசாலையும் நகரத்தார்கள் ஆரம்ப காலத்தில் நிறுவிய பள்ளிகளுள் குறிப்பிடத் தக்கவையாகும்.

செட்டிநாட்டுப் பகுதிகளில் உள்ள பெரும்பான்மையான பள்ளிகள் நகரத்தார்கள் உருவாக்கியவையே. தமிழகத்தில் சுமார் இருநூற்றைம்பது பள்ளிகளை நகரத்தார்கள் ஏற்படுத்தி இருக்கிறார்கள்.

நகரத்தார்கள் 1935-இல் 'செட்டியார்கள் நல உரிமைச் சங்கம்' என்ற அமைப்பை ஆரம்பித்து நடத்தியிருக்கிறார்கள். அச்சங்கத்தின் நோக்கங்களாகப் பின்வருபவை குறிக்கப்பட்டுள்ளன.

1. சமூகச் சீர்திருத்தம்
2. நகர் நலம்
3. நாட்டின் விடுதலை
4. பொதுஜன சேவை
5. கைத்தொழில் அபிவிருத்தி
6. உடற்பயிற்சி
7. கல்வி அபிவிருத்தி

செட்டியார்கள் நல உரிமைச் சங்கம் என்று பெயர் வைத்திருக்கிறார்களே தவிர அச்சங்கத்தின் நோக்கங்கள் பொதுநல சேவை, நாட்டு முன்னேற்றம், கல்வி முன்னேற்றம் என்பனவே.[3]

காரைக்குடி செக்காலைப் பகுதியைச் சேர்ந்த மெ. ராம. மெ. மெய்யப்பச் செட்டியார் என்பவர் காந்தியக் கொள்கைகளைக் கடைப்பிடித்தும், காந்தியடிகளிடம் மிகவும் ஈடுபாடு கொண்டும் விளங்கியதால் 'காந்தி மெய்யப்பர்' என்று அழைக்கப்பட்டார். அவர் 1927-இல் காந்தியடிகள் 'தீண்டாமை ஒழிப்பு இயக்கம்' தொடங்கிய காலத்திலேயே 'இராமநாதன் கலாசாலை'என்ற பெயரில் ஒரு பள்ளியைத் தன் இல்லத்திலேயே தொடங்கிப் பல இடையூறுகளையும் இகழ்ச்சிகளையும் பொருட்படுத்தாமல் ஆதிதிராவிடக் குழந்தைகளை வீட்டுக்குள் வரச் செய்து தேசியமுறைக் கல்வி கற்பித்தார். 1928-இல் காரைக்குடியின் வடபால் கழனிவாசல் என்ற பகுதியில் ஆதிதிராவிடர் தெருவில் ஒரு பள்ளிக்கூடம் 'காந்தி பாடசாலை' என்ற பெயரில் நிறுவினார். தங்கள் பகுதியைச் சார்ந்த ஆதிதிராவிடப் பிள்ளைகளின் நலனுக்காக அவ்விரு பள்ளிகளையும் ஏற்படுத்திய காந்தி மெய்யப்பர் தன் பெற்றோருக்குச் சிரார்த்தம் செய்வதற்குப் பதிலாக அதற்கென வைத்திருந்த பொருளை அவ்விரு பள்ளிகளுக்கும் கொடுத்துள்ளார்.[4]

அப்பள்ளிகளின் செலவுகளுக்காகத் தம் வருமானத்தில் ஆறில் ஒரு பங்கை ஒதுக்கி வைத்திருந்தார். மேலும் தன் வீட்டில் கனகாம்பரச் செடிகளை வைத்து வளர்த்து மகள், மருமகள் உட்பட யார் பூப்பறித்தாலும் நூறு பூவுக்கு ஓர் அணா

(ஆறு பைசா) வீதம் வசூலித்து மாத இறுதியில் கிடைக்கும் ஆறேழு ரூபாய்களுக்குப் புத்தகங்கள் முதலியன வாங்கி, படிக்கும் பிள்ளைகளுக்குக் கொடுத்தார் என்றும் அறிகிறோம்.[5]

தான் உருவாக்கிய பள்ளிகளுக்குப் பாடுபட்டதோடு அமையாமல் காந்தி மெய்யப்பர், கொப்பனாபட்டியில் உள்ள கலை மகள் பெண்கள் கல்வி நிலையத்திற்கு, ஒரு செவிலித்தாய்போல் விளங்கினார். அக்கல்வி நிலையத்திற்குத் தம் உழைப்பையும் பொருளையும் ஈந்தார். வசதியற்ற மகளிர் சிலரின் கல்விக்கும் உண்டி முதலியவற்றிற்கும் பண உதவி செய்துள்ளார்.

காந்தி மெய்யப்பரைப் போலவே காந்தியோடு நெருங்கிய தொடர்புடைய அமராவதிபுதூரைச் சேர்ந்த பிச்சப்பா சுப்பிரமணியன், காந்தியடிகள் நினைவாகத் தம் ஊரில் 'காந்தி சமதர்ம பாடசாலை' என்று ஒரு பள்ளியைத் தொடங்கி நடத்தி வந்தார். அமராவதிபுதூரில் ஆதிதிராவிட குழந்தைகளுக்காக 'நந்தனார் பாடசாலை' என்ற பெயரில் ஒரு பாடசாலையையும் நகரத்தார்கள் ஏற்படுத்தினர்.[6]

கி. பி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் பல பள்ளிகளை ஏற்படுத்தி, அனைத்து மக்களும் வேறுபாடின்றிக் கல்வி பயில நகரத்தார்கள் காலத்தால் பணி செய்தார்கள்.

6. 2. 2. பெண் கல்வி :

இக்காலத்தில் பெண்களுக்கென்று பள்ளிகளும் கல்லூரிகளும் ஏராளமாகக் காணப்படுகின்றன. ஆனால் சென்ற நூற்றாண்டில் பெண்களுக்குக் கல்வி என்பது மிக அருகியதாக இருந்தது. அக்காலத்தில் பெண் கல்விக்காக ஓர் இயக்கமே தோன்றிப் பெண் கல்வியின் தேவையை வற்புறுத்தியது. ஆங்கில அரசாங்கம் சென்னையில் 1866 - ஆம் ஆண்டில் பெண்கள் பள்ளிகளைத் திறக்கத் தொடங்கிற்று. அதைப் பின்பற்றி நகரத்தார்களும் தங்கள் பகுதிகளில் பெண்களுக்கென்று தனிப் பள்ளிகளை நிறுவ ஆரம்பித்தார்கள். காரைக்குடியில் 1917-இல் திறக்கப்பட்ட 'ஸ்ரீ மீனாட்சி பெண்கள் உயர்நிலைப் பள்ளி' தான் செட்டிநாட்டுப் பகுதியில் முதன் முதலாகப் பெண்களுக்கென்று ஏற்படுத்தப்பட்ட பள்ளியாகும். அன்றைய ஆங்கில அரசு அப்பள்ளிக்குப் பொருள் உதவி செய்ய விரும்பியபோது அப்பள்ளியின் நிறுவனர் மெ. செ.

மெ. மெ. மெய்யப்பச் செட்டியார் அதை மறுத்துவிட்டுப் பள்ளியைத் தன் சொந்தச் செலவிலேயே நடத்தியுள்ளார்.[7]

கொப்பனாபட்டியில் அ. மெ. மெய்யப்பச் செட்டியார் தம் பொருளுடன் நகரத்தார் பொருளுதவியும் பெற்று 1935-இல் பெண்களுக்காக 'கலைமகள் கல்லூரியை' நிறுவினார். அப்பள்ளியில் பெண்களுக்குத் தமிழ்க் கல்வியும் ஆங்கிலமும் கற்பிக்கப்பட்டு 'கலைச் செல்வி' 'கலைமணி' என்ற பட்டங்கள் வழங்கப்பட்டன. 1939-இல் அமராவதிபுதூரில் பெண்களுக்கான கல்வி நிலையமொன்று சொ. முருகப்பாவின் முயற்சியால் நிறுவப்பட்டது.

இன்று, கல்லூரி உட்பட பெண்களுக்கான பல கல்வி நிலையங்களை நகரத்தார்கள் உருவாக்கிப் பெண் கல்விக்கு வகை செய்துள்ளார்கள்.

6. 2. 3. குழந்தைக் கல்வி :

குழந்தைகளுக்காக 'மாண்டிசோரி' முறை போன்ற பாலர் பள்ளிகளையும் நகரத்தார்கள் ஏற்படுத்தினர். அமராவதிபுதூரில் இத்தகைய ஒரு மாண்டிசோரி பள்ளி சொ. முருகப்பாவால் 1941-இல் முதன் முறையாக ஏற்படுத்தப்பட்டது. பின்னர் வள்ளல் அழகப்பர் காரைக்குடியில் மாண்டிசோரிப் பள்ளி, தொடக்கப்பள்ளி, ஆயத்தப் பள்ளி ஆகியவற்றைக் குழந்தைகளுக்காக ஏற்படுத்தினார். ஆங்கில மோகம் பெருகியுள்ள இக்காலத்தில் தமிழ் மொழி வாயிலாகக் கற்பிக்கும் மழலையர் பள்ளி ஒன்றை மேலைச் சிவபுரிசன்மார்க்க சபை நிறுவியுள்ளது.

6. 2. 4. கல்லூரிகள் :

தொடக்கப் பள்ளிகளையும் நடுநிலைப் பள்ளிகளையும் ஏற்படுத்திய நகரத்தார்கள் கல்வியின் தேவை அதிகரிக்க அதிகரிக்க எங்கும் உயர்நிலைப் பள்ளிகளையும் மேனிலைப் பள்ளிகளையும், பெண்களுக்கெனத் தனிப் பள்ளிகளையும், கல்லூரிகளையும், நிறுவினர்.

பின்னர் தொழிற் கல்வியின் அவசியத்தை உணர்ந்து பொறியியல் கல்லூரிகள், தொழில் நுட்பக் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரி, உடற்பயிற்சிக் கல்லூரிகள், ஆசிரியப் பயிற்சிக்

கல்லூரிகள் போன்றவற்றை ஏற்படுத்திக் கல்வித் தொண்டு செய்தனர்.

6. 2. 5. தமிழ்க் கல்லூரிகள் :

மேலைச் சிவபுரியில் 1909-இல் வ. பழ. சா. பழனியப்பச் செட்டியாரால் சன்மார்க்க சபை தோற்றுவிக்கப்பட்டது. அச்சபையின் அங்கமாகத் தோன்றிய 'கணேசர் செந்தமிழ்க் கலாசாலை' பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார், வ. சுப. மாணிக்கனார் போன்றோரின் முயற்சியினால் கணேசர் செந்தமிழ்க் கல்லூரியாக விரிவடைந்து பல தமிழ்ப் புலவர்களை உருவாக்கியது. அங்கு தமிழறிஞர்கள் பலர் சொற்பொழிவு ஆற்றியிருக்கிறார்கள். பல தமிழ் நூல்களை அச்சபை வெளியிட்டது. மேலும் அச்சபை அப்பகுதியிலுள்ள சிறார்களுக்காகத் தொடக்கப் பள்ளி ஒன்று அமைத்து, தேவாரம், நீதி நூல்கள் முதலியவைகளையும் கற்பித்து வருகின்றது.[8]

கணேசர் செந்தமிழ்க் கல்லூரியைப் பின்பற்றி, தனித்தமிழ் ஆர்வலரான காரைக்குடி இராம. பெரி. பெரியகருப்பன் செட்டியார் காரைக்குடியில் 1964-இல் 'இந்தியப் பல்தமிழ்க் கழகம்' என்ற ஓர் அமைப்பை ஏற்படுத்தித் தமிழை வளர்க்கப் பெரும் பொருள் செலவிட்டார்.[9] பிறகு அதன் வளர்ச்சியாக 1967-இல் 'இராமசாமி தமிழ்க் கல்லூரி' என்ற தனித் தமிழ்க் கல்லூரியை ஏற்படுத்தினார். இவ்விரண்டு கல்லூரிகளும் மொழிப் பணியைத் தொடர்ந்து செம்மையாகச் செய்துவருகின்றன.

6. 3. கல்விக் கொடையாளர்கள் :

நகரத்தார்களில் பெரும்பான்மையோர் கல்விப்பணியில் ஈடுபட்டவர்களாக இருந்தாலும், அண்ணாமலை அரசர், வள்ளல் அழகப்ப செட்டியார், கலைத்தந்தை கருமுத்து தியாகராசச் செட்டியார் ஆகியோர் கல்விப் பணியாற்றிய நகரத்தார்களுள் குறிப்பிடத் தக்கவர்களாவர். அமெரிக்க நாட்டு ராக்பெல்லர், ஹென்றிபோர்டு போன்றும் காஞ்சிபுரம் பச்சையப்ப முதலியாரைப் போன்றும் கல்வித் துறையில் சிறப்பிடம் பெறுபவர்கள் அவர்கள். ஓர் அரசாங்கம் அல்லது ஒரு சமுதாயம் கூடிநின்று செய்ய வேண்டிய அறச் செயல்களை அவர்கள் தனி ஒருவராகச் செய்து முடித்துள்ளனர்.

6. 3. 1. அண்ணாமலை அரசர் :

கானாடுகாத்தான் வெ. சா. ராம. மு. அண்ணாமலைச் செட்டியார் தங்கள் குடும்பத்தார் கோயிற் பணியும் கல்விப் பணியும் செய்த தில்லைப் பதியில் தாமும் கல்வித் தொண்டு செய்ய முற்பட்டார்.

1920-இல் மீனாட்சி கல்லூரி என்ற பெயரில் ஒரு கல்லூரியைத் தொடங்கி, சிதம்பரத்துக்கு அருகிலுள்ள திருவேட்களத்தில் நூறு ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தை வாங்கித் திருத்தி, கட்டிடங்கள் கட்டி அதில் மீனாட்சி கல்லூரியை நடத்தினார். பிறகு 1927-இல் மீனாட்சி தமிழ்க் கல்லூரி, மீனாட்சி வடமொழிக் கல்லூரி ஆகியவற்றை நிறுவினார்.[10] தான் தமிழ்மொழி ஆர்வலராக இருந்தாலும், வேறுபாடு கருதாது, தமிழ்மொழி வளர்ச்சிக்குத் தமிழ்க் கல்லூரி ஏற்படுத்தியதைப் போல, வடமொழி வளர்ச்சிக்கெனவும் கல்லூரி அமைத்தது குறிப்பிடத்தக்கது.

மாணாக்கர்களை நல்லவண்ணம் உருவாக்க, அவர்களை நல்வழிப்படுத்தும் நல்லாசிரியர்கள் தேவை என்று உணர்ந்து ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியை ஏற்படுத்தினார். பிறகு 1928-இல், போற்றுவாரின்றி இருந்த இசைத் தமிழ் வளர்ச்சிக்காக இசைக் கல்லூரியை நிறுவினார். எட்டு ஆண்டுகளுக்குள் நான்கு கல்லூரிகள் அமைத்து நாட்டில் கல்வியை வளர்க்கும் பணியில் சிறந்து விளங்கினார் அண்ணாமலை அரசர்.

தாம் உருவாக்கிய கல்லூரிகளை ஒருங்கிணைத்து ஒரு பல்கலைக் கழகத்தை உருவாக்க வேண்டும் என்று விரும்பிய வள்ளல் அண்ணாமலை அரசர், அன்றைய ஆங்கில அரசாங்கத்திடம் தம் விருப்பத்தை வெளியிட, அரசாங்கமும் அவரின் அறச் செயல்களைப் போற்றி, உடன்பட்டது. 1929-இல் 'அண்ணாமலைப் பல்கலைக் கழகம்' உருவாகியது. அக்கால மதிப்புப்படி சுமார் ஐம்பது இலட்ச ரூபாய்கள் வரை பல்கலைக் கழகத்திற்காகச் செலவிட்டுள்ளார் அவர்.

இந்தியாவிலேயே முதன் முதலாகத் தனி மனிதர் ஒருவரின் பெரு முயற்சியாலும், கொடையாலும் உருவாக்கப்பட்ட பல்கலைக் கழகம் அண்ணாமலைப் பல்கலைக் கழகம். அப்பல்கலைக் கழகத்தின் தோற்றத்திற்குக் காரணமாக இருந்த அண்ணாமலை செட்டியாருக்கு அன்றைய ஆங்கில அரசாங்கம் 1929-இல்

'செட்டிநாட்டு அரசர்' என்ற பரம்பரைப் பட்டத்தை அளித்துச் சிறப்பித்ததோடு அவருடைய நன்முயற்சிக்கு உதவியாகப் பெருந்தொகையையும் பல்கலைக் கழகத்திற்கு வழங்கியது.[11]

பல்கலைக் கழகம் உருவானவுடன் அதன் ஒரு பகுதியாக தமிழ்ப் புலம் நிறுவப் பெற்றது. தமிழ்த்துறையின் முதல் தலைவராக கா.சு.பிள்ளை பொறுப்பேற்றார். பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார், ரா. பி. சேதுப் பிள்ளை, இரா. இராகவய்யங்கார் ந. மு. வேங்கடசாமி நாட்டார், அவ்வை துரைசாமிப் பிள்ளை, சதாசிவ பண்டாரத்தார், க. வெள்ளைவாரணனார், தேவ நேயப் பாவாணர், ச. தண்டபாணி தேசிகர், மு. அருணாசலம் பிள்ளை, வ.சுப.மாணிக்கனார் லெ.ப.கரு. இராமநாதன் செட்டியார் போன்ற பழுத்த தமிழறிஞர்கள் பலர் அங்கு பணியாற்றித் தமிழ் மணம் பரப்பினார்கள்.[12]

இன்று, கலைக் கல்லூரி, இசைக் கல்லூரி, ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி, பொறியியற் கல்லூரி, விவசாயக் கல்லூரி, மருத்துவக் கல்லூரி, அஞ்சல் வழி தொலைதூரக் கல்வித்துறை என அனைத்து வகைக் கல்வியையும் உள்ளடக்கிய அண்ணாமலைப் பல்கலைக் கழகம், நகரத்தாரின் கல்விப் பணிக்கு மாபெரும் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

பிற கல்வி நிறுவனங்களுக்கும் அண்ணாமலை அரசர் பொருளுதவி செய்துள்ளார். 'மதுரைக் கல்லூரி' க்கு இடம் கொடுத்துக் கட்டிடங்கள் கட்டப் பொருளுதவியும் செய்தார். மதுரை அமெரிக்கன் கல்லூரிக்கு மாணவர் விடுதி கட்டிக் கொடுத்துள்ளார். டேராடூனில் உள்ள இந்தியப் பொதுமக்கள் கல்விச் சாலைக்கும் தில்லியிலுள்ள இர்வின் பள்ளிக்கூடத்திற்கும், சென்னையிலுள்ள இராமகிருஷ்ணா கல்வி நிலையத்திற்கும் பொருளுதவி செய்துள்ளார்.

இந்தியாவில் மட்டுமல்லாமல் பர்மாவில் மோல்மேன், கம்பை, இரங்கூன் ஆகிய இடங்களில் பள்ளிகள் அமைப்பதற்கும் கொழும்பில் பல பள்ளிகளுக்கும் பொருளுதவி செய்துள்ளார். கல்கத்தாவிலுள்ள சாந்திநிகேதன் நூல் நிலையத்திற்கு இரண்டாயிரம் தமிழ் நூல்களை அன்பளிப்பாகக் கொடுத்து அந்த நூலகத்தில் தமிழ் நூல்கள் இடம்பெறச் செய்தார்.[13]

அண்ணாமலை அரசரின் மகனார் முத்தையா செட்டியார் தந்தையாரது கல்விப்பணியைத் தொடர்ந்து செய்ததோடு எண்ணற்ற கல்வி நிலையங்களின் புரவலராகவும் விளங்கினார். இருமுறை தமிழ் நாட்டின் கல்வி அமைச்சர் ஆகவும் இருந்து கல்விப் பணியாற்றியுள்ளார். அவரது கல்வித் தொண்டினைப் பாராட்டி இந்திய அரசு, அரசர் முத்தையா செட்டியாருக்கு 21-12-1987 - இல் அஞ்சல் தலை வெளியிட்டுச் சிறப்பித்தது. அண்ணாமலை அரசரின் வழிவந்தோர் தம் முன்னோர்களின் கல்விப் பணியைத் தொடர்ந்து செய்து வருகிறார்கள்.

6. 3. 2. வள்ளல் அழகப்பர் :

செட்டிநாட்டு ஊர்களுள் ஒன்றான கோட்டையூரில் 1909 -இல் தோன்றிய இராம. அழகப்பர் ஆலைத் தொழில் முதலியவற்றில் ஈடுபட்டுப் பெரும் பொருள் ஈட்டி, ஈட்டிய பொருளை கல்விப் பணிக்கென வாரி வழங்கினார். முதலில் மற்றவர்கள் நிறுவிய கல்வி நிறுவனங்களுக்கு உதவி செய்தார். பிறகு தாமே கல்விப் பணியாற்றினார். 1947-இல் சென்னையில் அன்னிபெசன்ட் அம்மையாரின் நூற்றாண்டு விழா நிகழ்ச்சியின் போது சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் ஏ.இலக்குமணசாமி முதலியார்,அறமன இயல்புடைய பெருமக்கள் தாங்களே முன்வந்து தமிழகத்தின் பின்தங்கிய மாவட்டங்களில் கல்லூரிகளைத் தொடங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டபோது, அழகப்பர் பின்தங்கிய மாவட்டமான இராமநாதபுர மாவட்டத்தில் கல்லூரி ஒன்று தொடங்குவதாகச் சொல்லி அதே ஆண்டு காரைக்குடியில் அதைச் செயல் வடிவத்திலும் காட்டினார். காரைக்குடி நாட்டாண்மைக் கழகத்திற்குரிய காந்தி மாளிகையில் கல்லூரி தொடங்கப்பட்டது.[14]

கல்லூரிக்கெனச் சொந்தமாகக் கட்டிடங்கள் தேவை என்பதால், கோட்டையூருக்கும் காரைக்குடிக்கும் இடையே உள்ள சுமார் அறுநூற்று ஐம்பது ஏக்கர் காட்டுப் பகுதியை அழகப்பர் கல்லூரிக்கென வாங்கினார்.

''ஒரு விளக்குமில்லா உதிகாட்டில் கல்வித்
திருவிளக்கு ஏற்றிய செய்யன்'

என்று அழகப்பரை 'கொடை விளக்கு' என்ற நூலில் புகழ்கின்றார் வ. சுப. மாணிக்கனார்.[15] நகரத்தார்களின் ஒன்பது கோயில்களுள் ஒன்றான இலுப்பைக்குடி நகரக் கோயில், அழகப்பருடைய கல்வி நிலையங்களுக்காகச் சுமார் நானூற்று ஐம்பது ஏக்கர் நிலத்தை இலவசமாக விட்டுக் கொடுத்தது. கல்லூரிக்கெனச் சிறந்த கட்டிடங்கள் கட்டப் பெற்றன.

கலைக்கல்வி மட்டும் போதாது; தொழிற் கல்வியும் நாட்டின் வளர்ச்சிக்குத் தேவை என்பதை அறிந்திருந்த அழகப்பர் 1952-இல் காரைக்குடியில் பொறியியற் கல்லூரியையும், 1955-இல் தொழில் நுட்பக் கல்லூரியையும் தொடங்கினார். பொறியியற் கல்லூரி தொடங்கியபோது நடந்த நிகழ்ச்சியொன்று அழகப்பரின் கல்வி ஆர்வத்துக்குத் தக்க சான்றாக உள்ளது. அழகப்பர் பொறியியற் கல்லூரியைத் தொடங்க நினைத்த நேரம் அவர் விபத்துக்குள்ளாகி, கோவையில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார். பொறியியற் கல்லூரி அமைக்கப் போதிய நிதி கைவசம் இல்லை. அதனால் 'அழகப்பா அறநிலைக் குழுவினர்' தயங்கினர். அப்போது அழகப்பர்,

> "பொருள் வந்த பிறகுதான் ஒரு நல்ல காரியம் செய்ய
> வேண்டுமென நினைத்தால் எந்த ஒரு நல்ல காரியத்தையும்"
> செய்ய முடியாது. காரியத்தைத் தொடங்குவோம்.
> நல்ல காரியத்துக்கு எப்படியும் பணம் வந்துசேரும். மேலும்
> இக்கல்லூரியைத் தொடங்கும் வேலை எவ்வளவு விரைவாக
> நடைபெறுகிறதோ அவ்வளவு விரைவாக நானும்
> குணமடைவேன்"

என்று கூறியதுடன் நில்லாமல் கோவையில் தனக்குச் சொந்தமாக இருந்த ஒரு கட்டிடத்தை விற்று, கல்லூரியைத் தொடங்குவதற்கான தொடக்கச் செலவுகளுக்காகப் பணம் அனுப்பி வைத்தார்.[16]

1954 - இல் மகளிர்க்கென ஒரு கல்லூரியைத் தொடங்கி, தான் பிறந்த ஊராகிய கோட்டையூரில் அரண்மனை போன்ற தன் இல்லத்தை அக்கல்லூரிக்கென வழங்கி 'குடியிருந்த வீடும் கொடுத்த விழுச்செல்வர்' என்று பாராட்டப் பெற்றார்.[17]

1950-இல் அழகப்பரால் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி தொடங்கப்பட்டு அக்கல்லூரியின் சார்பில் தொடக்கப்பள்ளி, ஆதாரப் பள்ளி, மாதிரி உயர்நிலைப் பள்ளி, மாண்டிசோரிப் பள்ளி ஆகியவை ஏற்படுத்தப்பட்டன.

அந்நாட்களில் மிக அரிதாக இருந்த உடற்பயிற்சிக் கல்வியையும் அழகப்பர் தொடங்கினார். 1957-இல் அழகப்பா உடற்பயிற்சிக் கல்லூரி உருவாகியது.

பத்து ஆண்டுகளுக்குள் காரைக்குடிக்கும் கோட்டையூருக்கும் இடையே காடு மேடாகக் கிடந்த நிலப்பரப்பு அழகப்பரின் கல்விக் கூடங்கள், நீண்டு அகன்ற சாலைகள், சாலைகளின் இருபுறமும் பசுமையான மரங்கள், விளையாடுமிடங்கள், மாணவ மாணவியரின் விடுதிகள், நூல் நிலையங்கள், கல்லூரிப் பணியாளர்களின் இல்லங்கள் ஆகிய பலவும் உடைத்தாகி வனப்புமிக்க நகராகி, 'அழகப்பாபுரம்' என்று பெயர் பெற்று விளங்குகிறது. அதனை 'அழகப்பாவரம்' என்று வழங்கினால் இன்னும் பொருத்தமாக இருக்கும்.

மூன்று வயதுக் குழந்தையொன்று தொடக்கக் கல்வி முதல் தான் விரும்பும் மேற்படிப்பு வரை படித்து வெளிவரும் வண்ணம் அழகப்பர் உருவாக்கிய அறிவாலயங்கள் திகழ்கின்றன.

அழகப்பர் அமைத்த கல்விக்கூடங்களால் காரைக்குடி கல்விக்குடியாகத் திகழ்வதுடன் மட்டுமல்லாமல், காரைக்குடியும் கோட்டையூரும் இணைந்து இன்று ஒரு பெருநகரமாக விளங்குகின்றது.

"நான் பல ஆண்டுகளாகப் பணத்தைச் சேர்த்திருக்கிறேன். அப்போதெல்லாம் எதற்காக நாம் பணம் சம்பாதிக்கிறோம்? மேலும் மேலும் பணம் வேண்டுமென யாருக்காக உழைக்கிறோம்? என்பது எனக்குப் புலப்படாமல் இருந்தது. ஆனால் காரைக்குடியில் கல்லூரிகளைத் தொடங்கிய நாள் முதல் பணம் சம்பாதித்தே தீரவேண்டும். இல்லாவிட்டால் கல்லூரிகளை முன்னேற்றி நிலை நிறுத்துவது இயலாது என்பது தெளிவானதால் புதிய ஊக்கம் பிறந்தது. இவ்வாறு கல்விக்காகச் செலவிடுகையில்

நான் அடைந்துவரும் நிம்மதியை வேறெதிலும் அடைந்ததில்லை"[18]

என்று கூறியுள்ள அழகப்பர் தன் மகளுக்கு இலண்டன் நகரிலிருந்து 1955 ஆம் ஆண்டில் எழுதியுள்ள கடிதத்தில் 'எனக்கு சதா காலேஜ் ஞாபகம்' என்று குறிப்பிட்டுள்ளார்.

அழகப்பருடைய கல்வித் தொண்டைப் பாராட்டி அண்ணாமலை அரசர் 'வள்ளல்' என்ற பட்டத்தை வழங்கினார். வள்ளல் அழகப்பரின் தொண்டுகளைப் பாராட்டும் வகையில் ஆங்கில அரசு 1946 – இல் அவருக்கு இளவீரர் [Knight] என்னும் பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தது. சென்னை, அண்ணாமலைப் பல்கலைக் கழகங்கள், இந்திய அரசு ஆகியனவும் பட்டங்கள் வழங்கிச் சிறப்பித்தன.[19]

கல்விப் பணியில் அழகப்பருக்கு இருந்த ஈடுபாட்டை உணர்ந்த தமிழக அரசு 1954-இல் இவரைத் தொடக்கக் கல்விச் சீரமைப்புக் குழுவிற்குத் தலைவராக நியமித்தது.[20]

உலகின் பல நாடுகளுக்கும் சென்று வந்தவராகையால், விஞ்ஞானத்தின் தேவையை உணர்ந்த வள்ளல் அழகப்பர், இந்திய அரசு, சென்னை மாநிலத்தில் இரசாயண ஆராய்ச்சி நிலையம் ஒன்றைத் தொடங்க வேண்டுமெனஎண்ணியதை அறிந்து காரைக்குடியில் அந்த ஆராய்ச்சி நிலையம் அமையவேண்டும் என்று விரும்பினார். தில்லிக்குச் சென்று மைய அரசிடம், மின் வேதியியல் ஆய்வகம் நிறுவுதற்கு முந்நூறு ஏக்கர் நிலமும் பதினைந்து இலட்ச ரூபாய்களும் கொடுப்பதாக வாக்களித்து அனுமதி பெற்றுவந்து, 1948-இல் காரைக்குடியில் நேரு பெருமகனாரைக் கொண்டு, ஆய்வகத்திற்கு அடிக்கல்லும் நாட்டினார். அவரது எண்ணத்தின் விளைவுதான் இன்று அழகப்பர் கல்வி வளாகத்தில் சிறப்புற இயங்கும் 'மைய மின்வேதியியல் ஆய்வுக் கூடமாகும்' [CECRI]. நம் நாட்டில் கிடைக்கும் மூலப் பொருள்களைக் கொண்டே பலவகையான இரசாயணப் பொருள்களைச் செய்ய இயலும் என்பதை ஆராய்ச்சிகளின் மூலம் வெளிப்படுத்தி வருகிறது அந்நிலையம்.

பிறர் நிறுவிய கல்வி நிலையங்களுக்கும் பொருளுதவி செய்துள்ளார் அழகப்பர். கிண்டியிலுள்ள பொறியியற் கல்லூரிக்கு ஐந்து இலட்ச ரூபாய்களும், அண்ணாமலைப் பல்கலைக் கழக பொறியியல் கல்லூரிக்கு ஐந்து இலட்ச ரூபாய்களும்

நன்கொடையாகக் கொடுத்துள்ளார். கேரளப் பல்கலைக் கழகத்திற்கு ஒரு இலட்ச ரூபாய் நன்கொடை கொடுத்துத் தமிழ்க் கல்விக்கு அங்கு ஒருபேராசிரியக் கட்டில் நிறுவினார். அங்கு மலையாள மொழிக்குப் பேராசிரியக் கட்டில் அமையுமுன்னரே தமிழுக்கு அத்தகைய சிறப்பு ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது. சென்னையில், கணிதமேதை இராமானுசத்தின் பெயரால் பெரும் பொருட் செலவில், 1948-ஆம் ஆண்டில் ஒரு கணித அறிவுக் கூடத்தைத் தொடங்கினார். தில்லியிலுள்ள தென்னிந்திய கல்விக் கழகத்திற்கும் மதுரையிலுள்ள லேடி டோக் கல்லூரிக்கும் பொருளுதவி செய்துள்ளார். மேலும் வள்ளல் அழகப்பர், சென்னையில், ஆதிதிராவிடர்களுடைய கல்விக்காக அமைக்கப்பட்ட தக்கர் பாபாவித்தியாலயத்தில் ஒரு மண்டபம் கட்டப் பொருளுதவி செய்தார். கண்டனூர் சிட்டாள் ஆச்சி உயர்நிலைப் பள்ளி நூல் நிலையத்திற்குப் பொருளுதவி செய்துள்ளார்.[21]

வள்ளல் அழகப்பர் காரைக்குடியில் பல்கலைக் கழகமொன்று உருவாக வேண்டுமென்று விரும்பி முயற்சி செய்தார். அவரது விருப்பம் அவர் காலத்திற்குப் பிறகுதான் நிறைவேறியது. 1984-இல் காரைக்குடியில் 'அழகப்பா பல்கலைக் கழகம்' உருவாகிப் பல துறைகளைக் கொண்டதாய்ச் செம்மையாகச் செயல்பட்டு வருகின்றது. அது தனித்தியங்கும் பல்கலைக் கழகமாகும்.

தான் உருவாக்கிய கல்வி நிலையங்களை விட்டு என்றும் பிரியாமல் இருக்க வேண்டும் என்று விரும்பிய வள்ளல் அழகப்பர், தான் இறந்தபிறகு தன்னை, கல்லூரி வளாகத்திலேயே புதைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, அதற்கான இடத்தையும் அவரே தேர்வு செய்தும் கொடுத்தார். அந்த இடத்தில் தான் அழகப்பர் சமாதி உள்ளது. ஒவ்வொரு வருடமும் கல்வித் தானம் செய்த அவரது நினைவு நாளின்போது சுமார் ஆயிரம் பேர்களுக்கு அன்னதானம் செய்யப்படுகிறது.

6. 3. 3. கருமுத்து தியாகராசர் :

அண்ணாமலை அரசர் சிதம்பரத்தை கலைமகள் நிலையமாக மாற்றியது போலவும், அழகப்பர் காரைக்குடியைக் கல்விக் குடியாக மாற்றியதைப் போலவும், மதுரை ஒரு பல்கலைக் கழக நகராக உருவாவதற்குப் பாடுபட்டவர் கலைத்

தந்தை என்று போற்றப்படும் ஆ. தெக்கூரைச் சேர்ந்த கருமுத்து. தியாகராசச் செட்டியாராவார். தியாகராசர் மாதிரி மேனிலைப் பள்ளி, தியாகராசர் கலைக் கல்லூரி , தியாகராசர் பொறியியற் கல்லூரி, தியாகராசர் வணிக நிர்வாகக் கல்லூரி, தியாகராசர் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி ஆகியவற்றை நிறுவி, 'ஆலைகள் வைப்போம் கல்விச் சாலைகள் வைப்போம்' என்ற பாரதியார் வாக்குப்படி இரண்டையும் மதுரையில் வைத்து வளர்த்தவர் அவர். சேலம், கேரளம் ஆகிய பகுதிகளிலும் கல்விப் பணி செய்த தியாகராசர், தமிழ் மொழியின்பாலும், தமிழ்ப் புலவர்கள் பாலும் தணியாத பற்றுடையவர். பல தமிழ்ப் புலவர்களை ஆதரித்தார். தியாகராசரின் தமிழ்த் தொண்டு 'நகரத்தாரின் மொழிப்பணி' என்ற தலைப்பில் ஆய்வாளரால் கூறப்பட்டுள்ளது.

6. 4. பிற கல்வி நிறுவனங்களுக்கு உதவி :

அண்ணாமலை அரசர், வள்ளல் அழகப்பர் ஆகியோர், தாங்கள் கல்வி நிலையங்களை உருவாக்கியதோடு மற்றவர்கள் உருவாக்கிய கல்வி நிலையங்களுக்கும் பொருளுதவி செய்ததுபோல், கல்வித் தொண்டு செய்த மற்ற நகரத்தார்களும் செய்திருக்கிறார்கள்.

நேமத்தான்பட்டி திருநாவுக்கரசு வித்தியாசாலையின் தாளாளர் சி. வீ. நா. பழனியப்பச் செட்டியார் வாலாஜாபாத்திலுள்ள இந்துமதப் பாடசாலைக்கும், மாணவர் இல்லத்துக்கும் பொருளுதவி செய்துள்ளார். கட்டிடங்கள் கட்டிக் கொடுத்துள்ளார். கேரளம் பாலக்காடு அரசினர் கலைக் கல்லூரியில் நூலகம் ஏற்படுத்த இராமசாமி தமிழ்க் கல்லூரி நிறுவனர் இராம. பெரி. பெரியகருப்பனார் நிதி வழங்கியிருக்கிறார்.[22]

1929 - இல் மகாகவி இரவீந்திரநாத் தாகூர் செய்கோனுக்குச் சென்றிருந்தபோது, அங்கு தொழில் செய்துவந்த நகரத்தார்கள், மகாகவியின் விசுவபாரதி பல்கலைக் கழகத்திற்கு டாலர் இரண்டாயிரத்து அறுநூற்று ஒன்று அடங்கிய பணமுடிப்பை அன்பளிப்பாக அளித்துள்ளார்கள்.[23]

ஒருவர் தோற்றுவித்த கல்வி நிறுவனத்தைத் தொடர்ந்து நடத்தமுடியாத சூழ்நிலை ஏற்படும்போது, அக்கல்வி

நிலையத்திற்கு ஊறு நேராதபடி, நகரத்தார்கள் அதை ஏற்று நடத்தியிருக்கிறார்கள்.

காரைக்குடி முத்துப்பட்டணத்தைச் சேர்ந்த சா. சு. சுப்பிரமணியன் செட்டியாரும், சேந்தணி வீர. இரா. இராமசாமி செட்டியாரும் நண்பர்கள். தாழ்த்தப்பட்ட மக்களின் மேம்பாட்டில் ஈடுபாடு கொண்டிருந்த சுப்பிரமணியன் செட்டியார், அம்மக்களின் கல்விக்காக ஒரு பள்ளி காண விழைந்தார். அப்போது சிராவயல் என்னும் ஊரில் அத்தகைய பள்ளி நடத்திய ஒருவர் அதைத் தொடர்ந்து நடத்த இயலாத நிலையில் இருந்ததை அறிந்து, அந்த ஆசிரியர்களையும் மாணவர்களையும் ஒப்புக்கொண்டு ஒரு குருகுலத்தை காரைக்குடி முத்துப்பட்டணத்தில் தொடங்கினார். சில ஆண்டுகளுக்குப் பிறகு குருகுலத்திற்கு விரிவான கட்டிடங்கள் கட்ட விரும்பி அமராவதிபுதூரில் இடம் வாங்கி, சேந்தணி இராமசாமி செட்டியாரிடம் பொறுப்பை ஒப்புவித்துவிட்டு சிங்கப்பூருக்குச் சென்றுவிட்டார். சென்றவர் அங்கேயே காலமாகிவிட்டார். இராமசாமி செட்டியார் அமராவதிபுதூரில் கட்டிடம் கட்டும் பணியைத் தாமே செய்துமுடித்தார். குருகுலத்திற்காக சுப்பிரமணியன் செட்டியார் சிங்கப்பூரில் வைத்திருந்த பணத்தை (இருபத்தேழாயிரம் வெள்ளி) இரண்டாம் உலகப்போர் காரணமாக, குருகுலத்திற்கு வரவழைக்க முடியவில்லை. இரண்டாம் உலகப்போர் காலம் முழுவதும் குருகுலத்திற்குத் தேவையான பணத்தை இராமசாமி செட்டியார் தான் கொடுத்து வந்தார். 1935-முதல் அமராவதிபுதூர் குருகுலத்திற்குத் தலைவராக இருந்து செயலாற்றித் தற்போது உரியவர்களிடம் நிருவாகப் பொறுப்பை ஒப்படைத்து உள்ளார். குருகுல மாணவர்களின் உணவு விடுதியைத் தன்னுடைய பொறுப்பில் பாதுகாத்து வருகிறார்.[24]

நகரத்தார்கள், அறக்கட்டளைகள் பல ஏற்படுத்தி மற்றவர்கள் நிறுவிய கல்வி நிலையங்களில் பயிலும் மாணாக்கர்களுக்குப் பாடநூல்கள், பயிற்சி நூல்கள், ஆகியன வழங்கியும் பள்ளி, கல்லூரி கட்டணங்கள் கட்டியும் உதவி வருகிறார்கள்.

சேந்தணி இராமசாமி செட்டியார் 'மறப்பறியாக் கொடையாளன் இராமசாமி' என்று வ. சுப. மாணிக்கனாரால் பாராட்டப் பெற்றவர். 1958-ஆம் ஆண்டில் இரண்டு இலட்சம் வெள்ளிகளை சிங்கப்பூரில் எடுத்துவைத்து, காரைக்குடிப் பகுதியில் உள்ள பள்ளிகளிலும்,

கல்லூரிகளிலும் படிக்கும் மாணவர்களுக்குச் சாதி சமய வேறுபாடில்லாமல் பொருளுதவி செய்து வருகிறார்.

தேவகோட்டையைச் சேர்ந்தவரும், 'தமிழ் வள்ளல்' என்று அழைக்கப்பட்ட வருமாகிய மெய்யப் செட்டியார் மயிலம், திருவையாறு, மேலைச்சிவபுரி ஆகிய இடங்களில் உள்ள தமிழ்க் கல்லூரிகளில் படிக்க முன்வந்த அனைவருக்கும் இன, மத வேறுபாடு பாராமல் பொருளுதவி செய்தார். தமிழ்ப் புலவர்களை ஆதரித்தார். தேவகோட்டை நகரத்தார் உயர்நிலைப் பள்ளிகளில் திருவள்ளுவர் விழா, திருக்குறள் போட்டி ஆகியவை ஆண்டு தோறும் சிறப்பாக நடக்க வழிவகுத்தார்.[25]

முத்துப்பட்டணம் காந்தி என்று அழைக்கப்பட்ட தியாகி தண்ணீர்மலையான் செட்டியார் காரைக்குடியில் செவிட்டூமைப் பள்ளி ஏற்பட முக்கியக் காரணமாக இருந்தவராவார்.[26]

பல ஊர்களில் உள்ள நகரத்தார் சங்கங்கள், சத்திரங்கள், மடங்கள் போன்றனவும் ஏதாவது ஒருவகையில் மாணாக்கர்களுக்கு உதவிசெய்து வருகின்றன. சில சத்திரங்களிலும், மடங்களிலும், பாடசாலைகளிலும் மாணாக்கர்கள் தங்கிப் படிக்க இடவசதியும், உண்டி முதலான வசதிகளும் செய்து கொடுக்கப்படுகின்றன.

சில நகரத்தார் சங்கங்கள் திருப்பித்தரும் வகையில் கடனாகப் பொருளுதவி செய்கின்றன. புத்தக வங்கிகள் ஏற்படுத்தி அதன் மூலம் புத்தகங்கள் வழங்கி வருகின்றன. மதுரை நகர விடுதியிலுள்ள புத்தக வங்கி சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது. சென்னையில் உள்ள 'நகரத்தார் ஐக்கிய சங்கம்' என்ற அமைப்பு, நகரத்தார் இனத்தைச் சேர்ந்த சிறந்த மாணாக்கர்களின் உயர் கல்விக்காகும் செலவை ஏற்றுக்கொள்கிறது.

வெளிநாடுகளிலுள்ள நகரத்தார்களும், அறப்பணிக் கழகங்களை ஏற்படுத்தி அதன்மூலமும், தனிப்பட்ட முறையிலும் நகரத்தார் இனத்து மாணாக்கர்களின் கல்விக்குப் பொருளுதவி செய்கின்றனர். உதாரணமாக சிங்கப்பூர் நகரத்தார்களுக்குரிய பொதுப் பணத்திலிருந்து, இருபத்தைந்து இலட்ச ரூபாய்களை இந்தியாவிற்கு

வரவழைத்து 'சிங்கப்பூர் நாட்டுக்கோட்டைச் செட்டியார்களின் அறப்பணிக் கழகம்' என்ற அமைப்பை 1966-இல் ஏற்படுத்திப் பதிவு செய்து, இருபத்தைந்து இலட்ச ரூபாய்களிலிருந்து கிடைக்கும் வட்டிப் பணத்தை மட்டும் நகரத்தார் இனத்து மாணாக்கர்களுக்குக் கல்விக் கொடையாகவும், நகரத்தார் இனத்து ஏழைப் பெண்களுக்குத் திருமணக் கொடையாகவும் கொடுத்து வருகிறார்கள். அதுபோலவே பினாங்கு, பேரா, பத்துபகாட், தைப்பிங் ஆகிய நகரத்தார் அறப்பணிக் கழகங்களும் செயலாற்றி வருகின்றன.

நகரக் கோயில்களுள் ஒன்றான வயிரவன்பட்டியில், வயிரவன் கோயிலைச் சேர்ந்த ஏழைப் பிள்ளைகளின் கல்விக்கு உதவி செய்யப்படுகிறது.

கோவிலூர் மடாலயத்தில் உள்ள சங்கர குருகுலத்தில் முன்பு வேதாந்தக் கல்வி கற்பிக்கப்பட்டது. வேதாந்தக் கல்வி பயிலுபவர்கள் அருகிவிட்டமையால், கோவிலூர் மடம் இக்காலத்தில் அக்குரு குலத்தில், சாதிமத வேறுபாடுபாராமல் சுமார் இருபது பிள்ளைகளைத் தங்க அனுமதித்து, அவர்களுக்கு உணவு வசதிகள் செய்து கொடுத்து, காலையிலும் மாலையிலும் சமயக் கல்வியைக் கற்பித்து வருகிறது. பகல் நேரத்தில் மாணாக்கர்கள் அருகிலுள்ள பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் சென்று படித்து வருகிறார்கள்.

கல்விக்காகப் பல கோடி ரூபாய்கள் செலவிட்டுப் பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றைத் தோற்றுவித்து அவற்றிற்கான பாதுகாப்பு நிதிகளையும் ஏற்படுத்தியுள்ள நகரத்தார்கள். அக்கல்வி நிலையங்களை இன்று அரசாங்கத்தின் உதவியுடன் செம்மையாக நடத்தி வருகிறார்கள்.

6. 5. நகரத்தார்களின் ஆசிரியப் பணி

கல்வி நிறுவனங்கள் ஏற்படுத்திக் கல்விப் பணிபுரிந்த நகரத்தார்கள், பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் ஆசிரியர்களாகப் பணிபுரிந்து, மாணாக்கர்களுக்குக் கல்வி புகட்டிய வகையிலும் கல்விப் பணிபுரிந்திருக்கிறார்கள். நகரத்தார்களில் பலர் ஆசிரியப் பணயில் உள்ளார்கள். பொறியியல் பேராசிரியர்களாகவும், மருத்துவப் பேராசிரியர்களாகவும் பலர் உள்ளனர். முனைவர் வ. சுப. மாணிக்கனார், முனைவர் சேது நாராயணன், முனைவர் கா. நாகப்பன், முனைவர் முத்துக்கருப்பன்,

ஆகியோர் நகரத்தார்களில் துணைவேந்தர்களாக முறையே மதுரை பல்கலைக் கழகத்திலும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் அழகப்பா பல்கலைக் கழகத்திலும், பாரதிதாசன் பல்கலைக் கழகத்திலும் பணியாற்றியவர்கள்.

6. 6. நூலகப் பணி :

நகரத்தார்கள் பல அருமையான கிடைத்தற்கரிய நூல்களைக் கொண்ட, நூல் நிலையங்களை ஏற்படுத்தி மாணாக்கர்களும், பொதுமக்களும் படிக்க வழிவகைகள் செய்தனர். அத்தகைய நூலகங்களுள் குறிப்பிடத்தக்கவை, சிவகங்கைக்கு அருகிலுள்ள பாகனேரியில் அவ்வூரைச் சேர்ந்த காசி விசுவநாதன் செட்டியார் ஏற்படுத்திய நூலகமும், கோட்டையூர் ரோசா முத்தையா செட்டியார் ஏற்படுத்திய நூலகமுமாகும். கிடைத்தற்கரிய நூல்கள் பலவற்றைத் தன்னகத்தே கொண்ட காசி விசுவநாதன் செட்டியாரின் நூலகத்தை, 1974க்குப் பிறகு இராமநாதபுர மாவட்ட நூலக ஆணைக்குழு ஏற்று நடத்தி வருகிறது.[27]

கோட்டையூர் ரோசா முத்தையா செட்டியாரின் நூலகம் உலக அளவில் பாராட்டப்படும் சிறப்புடையது. அங்கு இல்லாத நூல்களே இல்லை என்னுமளவிற்கு அனைத்துத் துறை நூல்களும், இதழ்களும் உள்ளன. பல நாடுகளைச் சேர்ந்த கல்வியாளர்களுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும் நூல்கள் கொடுத்து உதவியுள்ள ரோசா முத்தையா செட்டியார், பல ஆராய்ச்சி நூல்கள் வெளிவரக் காரணமாக இருந்தவர். அவருடைய இல்லத்தில் சமையலறையில் கூட நூல்கள் தான் இடம் பெற்றிருக்கும். அந்த அளவிற்குத் தன் சொந்த முயற்சியாலும், யாருடைய உதவியுமில்லாமல், நூல்களைச் சேகரித்து அவற்றை உயிரென மதித்த முத்தையா செட்டியார் நூல்களைப் பூச்சிகளிடமிருந்து காப்பதற்காக, ஒரு குறிப்பிட்ட பூச்சிகொல்லி மருந்தைப் பயன்படுத்தியதன் விளைவாக, உடல் நலம் அடிக்கடி பாதிக்கப்பட்டு காலமானார்.

6. 7. அயல்நாடுகளில் நகரத்தார்களின் கல்விப் பணி:

தாங்கள் தொழிலின் பொருட்டுச் சென்ற அயல் நாடுகளிலும் நகரத்தார்கள் கல்விப் பணி புரிந்துள்ளார்கள். திரைகடலோடி திரவியம் தேடப் போனவர்கள் போகும்போது

கைபழகுவதற்காக ஏட்டுப்படிப்பை முடித்தவுடன் தங்கள் பிள்ளைகளையும் அழைத்துச் சென்றனர். அவ்வாறு சென்ற நாடுகளில் தங்கள் பிள்ளைகள் ஆங்கில அறிவு, அந்தந்த நாட்டு மொழி அறிவு இல்லாமல் துன்பப்படுவதைக் கண்டு ஆங்காங்கே கல்வி நிலையங்களை ஏற்படுத்தினார்கள். அக்கல்வி நிலையங்களில் நகரத்தார் பிள்ளைகளோடு அந்தந்த நாட்டுப் பிள்ளைகளும் சேர்ந்து படித்தனர். தங்கள் பிள்ளைகளுக்காக மட்டுமல்லாமல், இயல்பாகவே உள்ள அற உணர்வு காரணமாகவும், நகரத்தார்கள் அயல் நாடுகளில் கல்விப் பணிகளில் ஈடுபட்டனர்.

தற்போது மியான்மர் என்று அழைக்கப்படுகின்ற பர்மாவிற்குச் சென்ற நகரத்தார்கள் பர்மாவிலுள்ள இரங்கூனில் ஒரு பள்ளியை ஏற்படுத்தினர். 1925-இல் பர்மாவில் 'பர்மா நாட்டுக்கோட்டைச் செட்டியார்களின் முதலாவது மாநாடு நடந்தது. அந்த மாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்களுள் ஒன்று 'இரங்கூனில் நம்மவர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் பாடசாலையை உன்னத ஸ்திதிக்குக் கொண்டு வருவதற்கு ஆவண செய்ய வேண்டும்'[28] என்பதாகும். அயல் நாடுகளில் தங்கள் தொழிலுக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்களோ அதே அளவிற்குக் கல்விப் பணிக்கும் கொடுத்திருக்கிறார்கள் என்பதை இதன்மூலம் தெரிந்து கொள்ள முடிகிறது.

இரங்கூனில் பல்கலைக் கழகம் தோன்ற ஆணி வேராக இருந்தவர்கள் நகரத்தார்களே. இப்பல்கலைக் கழகத்திற்கு இரங்கூன் நகரத்தார்கள் ஒரு இலட்சம் ரூபாயும், பர்மாவின் மற்ற பகுதிகளில் உள்ள நகரத்தார்கள் பல பெருந் தொகைகளும் கொடுத்திருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் அப்பல்கலைக் கழகத்தில் நகரத்தார்களின் பெயரால் 'சிக்கனம் அல்லது பொருளியல்' என்னும் பாடத்தைக் கற்பிக்கவும் ஏற்பாடு செய்தது குறிப்பிடத்தக்கதாகும்.[29]

பர்மாவில் தொழில் செய்த காந்தி மெய்யப்பர், தன் ஊரான காரைக்குடியில் கல்விப்பணி புரிந்தது போலவே பர்மாவிலும் கல்விப் பணிபுரிந்தார். பர்மாவிலுள்ள 'பியாப்புவே' என்ற இடத்தில் காந்தி பெயரால் ஒரு நூல் நிலையமும், ஏழைச் சிறுவர்களுக்காக ஒரு பள்ளியும் ஏற்படுத்தினார்.[30]

நகரத்தார்கள் பர்மாவில் கம்பை என்னும் ஊரில் 'கம்பை தனவைசியர் கல்விக் கழகம்' என்ற பெயரால் ஒரு பள்ளியை அனைத்து வசதிகளுடன் 1928-இல் ஏற்படுத்தினார்கள். அங்கு தமிழ் மொழி, பர்மிய மொழி, ஆங்கில மொழி ஆகிய மும்மொழிகளிலும் கல்வி போதிக்கப்பட்டது.[31]

1933-இல் காந்தியடிகள் கம்பை தனவைசியர் கல்விக் கழகத்திற்கு வருகைபுரிந்து அதன் பணிகளைப் பாராட்டியிருக்கிறார். சைவசமயக் கல்வி வளர்ச்சிக்கென அக்கழகம் காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திர நிர்வாகத்திடம் ஒரு இலட்ச ரூபாய் வழங்கியுள்ளது. 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற பொது நோக்கத்தோடு, உலகப் பொதுமறையாகிய திருக்குறளை பர்மிய மக்களும் படித்துப் பயனடையும் வண்ணம் பர்மிய மொழியில் மொழிபெயர்த்து, நூலாக்கி இலவச வெளியீடாக அக்கல்விக் கழகம் வெளியிட்டது.

கம்பை தனவைசியர் கல்விக் கழகத்தால் நடத்தப்பட்டு வந்த பள்ளியைப் பர்மிய அரசாங்கம் எடுத்து நடத்தத் தொடங்கியது. அதன்பிறகு அக்கல்விக் கழகம் கல்வித் தொண்டை எவ்வாறு செய்வது என ஆலோசித்து, ஆண்டுதோறும் நகரத்தார் மாணவர்களில் வெளிநாடு சென்று படிப்பவர் ஒருவருக்கும், இந்தியாவில் மேற்படிப்புப் படிப்பவர் ஐவருக்கும் திரும்பச் செலுத்தக் கூடியதாக நிதிஉதவி கொடுப்பது என்றும் பர்மிய மாணவரில் இந்தியாவிற்கு வந்து மேற்படிப்புப் படிக்கும் இருவருக்கு இலவசமாக நிதிஉதவி செய்வது என்றும் முடிவுசெய்து அதன்படி சில ஆண்டுகள் கொடுத்து வந்தது. பிறகு பர்மாவிலேயே வருடந்தோறும் எல்லா இனத்தையும் சேர்ந்த சுமார் நூற்று ஐம்பது பிள்ளைகள் கல்வி உதவி பெற்று வந்தனர்.[32]

மலேயாவிற்கு நகரத்தார்கள் சென்ற காலத்தில், மலேயாவில் உள்ள தமிழ் மக்களுக்குப் போதிய கல்வி வசதி இல்லை. அரசாங்க உதவி பெற்று ஓரிரு பள்ளிகள் நடந்துவந்தன. அந்நிலையில் நகரத்தார்கள் பினாங்கு, சுங்குரும்பை, மலாக்கா, மூவார், சிகாமெட், சிங்கப்பூர், ஈப்போ ஆகிய பல இடங்களில் கல்வி நிலையங்களை ஏற்படுத்தி இலவசக் கல்வி அளித்தார்கள்.[33]

சுங்குரும்பையில், ஆத்தங்குடி முத்துப் பழனியப்பச் செட்டியாரால்' 1923-இல் நிறுவப்பட்ட 'இராமநாதன் கலாசாலை'யில் ஏராளமான மாணவ மாணவிகள் கல்விப் பயிற்சியும் தொழிற் பயிற்சியும் பெற்றனர்.[34]

காரைக்குடியைச் சேர்ந்த சா. லெ. செ. செட்டியப்ப செட்டியார் என்பவர் ஈப்போவில் ஆரம்பித்த 'செட்டியார் கலாசாலைதான்', மலேயாவில் உள்ள நகரத்தார் பள்ளிகளில் பழமையானதாகும்.[35] பினாங்கில் 'தண்டாயுதபாணிப் பள்ளியை' நகரத்தார்கள் மூன்று இலட்சத்து இருபதாயிரம் வெள்ளி (3,20, 000) செலவில் நிறுவினர்.

மலேயா நாட்டில் சைவத்தையும் தமிழையும் வளர்த்த சான்றோர்களுள் குறிப்பிடத்தக்கவரான கா. இராமநாதன் செட்டியார் மலேயா பல்கலைக் கழகத்தில் இந்திய ஆய்வியல் துறையில் 'நாட்டுக்கோட்டைச் செட்டியார் அறக்கட்டளை' என்னும் அமைப்பை ஏற்படுத்தினார். அதற்கென அவர் வழங்கிய தொகை இன்று பல இலட்ச வெள்ளியாகப் பெருகியுள்ளது. பல தமிழ் நூல்கள் உருவாவதற்கும், தமிழ்க் கருத்தரங்குகள் நடத்துவதற்கும் அவ்வறக் கட்டளை உதவுகிறது[36].

மேலும் அயல்நாட்டுப் பல்கலைக் கழகங்களிலும் அங்குள்ள மற்ற கல்வி நிறுவனங்களிலும் ஆசிரியர்களாகப் பணிபுரிந்தும் கல்விப் பணியாற்றி வருகின்றனர் நகரத்தார்கள்.

இவ்வாறு நகரத்தார்கள், தாங்கள் சென்ற நாடுகளில், கோயிற் பணியில் ஈடுபட்டதைப் போலவே, கல்விப் பணியிலும் ஈடுபட்டுள்ளார்கள்.

இந்தியாவிலேயே கல்விக்காக அதிகம் வாரி வழங்கிய சமூகம் என்ற வகையில் நகரத்தார்களின் கல்வித் தொண்டு வரலாற்றுச் சிறப்புடையது.

6. 8. முடிவுகள் :

1. நகரத்தார்கள் முதலில் சமயஞ்சார்ந்த கல்வி நிலையங்களையே தோற்றுவித்தனர்.

2. பிறகு காலத்திற்கு ஏற்றவாறு ஆங்கில முறைக் கல்வி நிலையங்களைத் தோற்றுவித்தனர்.

3. பாலர் பள்ளிகள், தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், மேனிலைப் பள்ளிகள், கலைக் கல்லூரிகள், தொழில் நுட்பக் கல்லூரிகள், பொறியியற் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகள், விவசாயக் கல்லூரிகள், உடற்பயிற்சிக் கல்லூரிகள், தமிழ்க் கல்லூரிகள், தமிழிசைக் கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் என்று அனைத்து வகையான கல்வி நிலையங்களையும் நகரத்தார்கள் ஏற்படுத்தியுள்ளனர்.

4. கல்விப் பணி புரிந்த நகரத்தார்களுள் அண்ணாமலை அரசர், வள்ளல் அழகப்பர், கலைத் தந்தை கருமுத்து தியாகராசனார் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள்.

5. அயல் நாடுகளிலும் கல்விப் பணி புரிந்திருக்கிறார்கள்.

6. அனைத்துக் கல்வித் துறைகளிலும் ஆசிரியர்களாகவும், விரிவுரையாளர்களாகவும், பேராசிரியர்களாகவும், முதல்வர்களாகவும், பல்கலைக் கழகத் துணை வேந்தர்களாகவும் பணிபுரிந்துள்ளனர்.

7. நூல் நிலையங்கள் வாயிலாகக் கல்விப் பணி புரிந்துள்ளனர்.

8. இந்தியாவிலேயே கல்விக்காக அதிகம் வாரி வழங்கிய சமூகம் நகரத்தார் சமூகம்.

அடிக்குறிப்புகள் :

1. கதிரேசச் செட்டியார், மு. **நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் சீர்திருத்தம்,** மெ. அரு. நா. இராமநாதச் செட்டியார் அவர்களால் மதுரை விவேகபாநு அச்சியந்திரசாலையிற் பதிப்பிக்கப்பட்டது, 1911, பக். 37-39.

2. இராமசாமிச் செட்டியார், ராம. உ., **ஸ்ரீமத் சொக்கலிங்க ஐயா அவர்கள் சரித்திரம்,** ஸ்ரீ மெய்கண்ட சித்தாந்த வித்தியாசாலை வெளியீடு, சிதம்பரம், இரண்டாம் பதிப்பு, 1964, ப. 43.

3. **செட்டியார் நல உரிமைச் சங்கம்,** ஆறாவது ஆண்டறிக்கை, 19. 8. 1935.

4. **காந்தி மெய்யப்பர் நூற்றாண்டு விழா மலர்,** சா. கணேசன் கட்டுரை 'காந்தி மெய்யப்பர்', 5. 9. 1986, ப. 2.

5. மேலது, ப. 4.

6. சொக்கலிங்கன், இராய **ஊழியன் இதழ்** , 3. 5. 33.

7. Nilkan Perumal, **Glimpses of chettimarnad,** 1937, P.40

8. **சபைக் கட்டுரைகள்,** 'சன்மார்க்க சபையின் தொண்டு, கட்டுரை. சன்மார்க்க சபை வெளியீடு, மேலைச் சிவபுரி, 1962.

9. சோமலெ. **செட்டிநாடும் செந்தமிழும்,** வானதி பதிப்பகம், முதற்பதிப்பு 1984, பக். 168-170.

10. அருணாசலம் பிள்ளை, மு. **தமிழ்ப் பெருவள்ளல்,** தமிழ்மனை, அண்ணாமலை நகர், இரண்டாம் பதிப்பு, 1952, பக். 41, 42.

11. மேலது, ப. 111.

12. மேலது, பக் 100-109.

13. மேலது, ப. 137.

14. வேணுகோபால பிள்ளை, பி. க. வித்துவான். **கல்வி வளர்த்த வள்ளல்கள்,** அம்பிகா பிரதர்ஸ், முதற்பதிப்பு, 1961, ப. 550

15. மாணிக்கம், வ. சுப. **கொடைவிளக்கு,** செல்வி பதிப்பகம், முதற்பதிப்பு, 1957, பாடல் எண் 38, ப. 22.

16. **நகரத்தார் குரல்** 'பொறியியற் கல்லூரியும் வள்ளல் அழகப்பரின் விடாமுயற்சியும்' கட்டுரை, ஏப்ரல் 1993, ப. 36.

17. மாணிக்கம், வ. சுப. **கொடைவிளக்கு,** செல்வி பதிப்பகம், முதற்பதிப்பு, 1957, பாடல் எண் 77, ப. 35.

18. **நகரத்தார் குரல்,** ஏப்ரல் 1993, ப. 27.

19. மேலது, பக். 38, 39.

20. சோமசுந்தரம், அரு. **உயர்கல்வி தந்த உத்தமர்கள்,** அருணா பப்ளிகேஷன்ஸ், 1975, ப.23.

21. மேலது, ப. 22.

22. பாலக்காடு அரசினர் கலைக்கல்லூரி நூலகத்தில் 'இராம. பெரியகருப்பனார் கொடை' என்று எழுதப்பட்ட அலமாரியில் பல தமிழ் நூல்கள் உள்ளன.

23. செட்டியார், வி. ஆர். எம். (மொ. ஆ.) **கீதாஞ்சலி,** ஸ்டார் பிரசுரம், திருச்சிராப்பள்ளி, நான்காம் பதிப்பு, 1952, ப. 12.

24. **இராமசாமி செட்டியார் ஆயிரம் பிறைவிழா மலர்,** மெய்யம்மை பதிப்பகம், காரைக்குடி, 1982, பக். 26-28.

25. சோமலெ. **செட்டிநாடும் செந்தமிழும்,** வானதி பதிப்பகம், முதற்பதிப்பு 1984, பக். 116-118.

26. **தியாகராஜா அண்ணனும் - கண்ணனும்,** நாச்சியாபுரம், சு. வி. நா. நாச்சியப்ப செட்டியார் பொருளுதவியால் முத்துப்பட்டணம் செட்டியார்கள் இளைஞர் சங்கத்தாரால் வெளியிடப்பட்டது, 1953, அணிந்துரை, காரைக்குடி

முத்துப்பட்டணம் மெ. சு. தி. தண்ணீர்மலையான் செட்டியார்
• முத்துப்பட்டணம் காந்தி அவர்களுடைய வாழ்க்கைக் குறிப்பு.

27. **நகரத்தார் குரல்**, 'காலம் மறக்க முடியாத காசி விசுவநாதன் செட்டியார், கட்டுரை, ஆகஸ்ட் 1982, ப. 13.

28. **இரங்கூனைச் சேர்ந்த திருக்கம்பையிற் கூடிய பர்மா நாட்டுக்கோட்டைச் செட்டியார்களின் முதலாவது மாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள்**, இரங்கோன் சுதேச பரிபாலினி அச்சேந்திரசாலையில் பதிப்பிக்கப் பெற்றது, 1925, 10ஆவது தீர்மானம்.

29. **வெள்ளிவிழா மலர், பர்மா நாட்டுக்கோட்டை செட்டியார்கள் சங்கம், இரங்கோன்**, 'சங்க வரலாறு' கட்டுரை, சொ. மு. அ. மெ. ராம. ஷண்முகஞ் செட்டியார், 18. 8. 1948.

30. **காந்தி மெய்யப்பர் நூற்றாண்டு விழா மலர்**, 'காந்தி மெய்யப்பர்' கட்டுரை, சா. கணேசன், மெ. காந்தி, மலர் நிர்வாகி , 5. 9. 1986, ப. 4.

31. வெள்ளி விழா மலர் **பர்மா நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் சங்கம்**, இரங்கோன், 'கம்பை தனவைசியர் கல்விக் கழகம்' கட்டுரை, கே. ஏ. சோமசுந்தரன், 18. 8. 48.

32. சோமலெ. (பதி. ஆ) **'ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரம் நூற்றாண்டு விழா மலர்**, 1863- 1963, 'கம்பை தனவைசியர் கல்விக் கழகம், இரங்கூன், கட்டுரை, ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரம் மேனேஜிங் சொசைட்டி, இரங்கூன், ப. 175.

33. முத்துப் பழநியப்பச் செட்டியார், பெ. நா. மு. **மலேயாவின் தோற்றம்** பினாங்கு மெர்க்கண்டைல் அச்சியந்திரசாலையில் பதிப்பிக்கப் பெற்றது. ப. 38.

34. மேலது, ப. 60.

35. **சோமலெ.** (ப.ஆ), நகரத்தார் மாணவர் சங்கம், சென்னை, சிறப்பு மலர், 'ஈப்போவில் செட்டியார் கலாசாலை' கட்டுரை, வி. ச. முத்தையா, ப. 47.

36. இலக்குமி மீனாட்சிசுந்தரம், **இலக்கியப் பாலம் பங்கும் பணியும்**, தேமா பதிப்பகம், 1993, ப. 147.

7. நகரத்தாரின் மொழிப் பணிகள்

நகரத்தாரின் பல்துறைப் பணிகளுள் மொழிப் பணியும் ஒன்று. நகரத்தார்களின் மொழிப் பணி என்னும் போது அவர்கள் தங்கள் தாய்மொழியாகிய தமிழ் மொழிக்குச் செய்த தொண்டே இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

7. 1. நகரத்தார்களின் தமிழ்ப் பற்று :

தமிழ் வாழ்வோடு தங்கள் வாழ்வையும் இணைத்துக் கொண்ட நகரத்தார்கள் தமிழ் மொழியின் வளர்ச்சிக்குப் பல வகைகளிலும் துணையாக நின்றனர். தமிழ் வளர்ச்சி தொடர்பான அனைத்திலும் ஆர்வலராக இருந்தனர். தமிழ்ப் பற்றின் காரணமாக, தமிழ்ப் புலவர்களின் பெயரைத் தாங்கள் வசிக்கும் வீதிகளுக்குப் பெயர்களாக வைத்துத் தமிழ்ப் புலவர்களின் நினைவைப் போற்றினர். பாகனேரியிலுள்ள 'ஔவையார் தெரு', 'பாரதியார் தெரு' நேமத்தான்பட்டியில் உள்ள 'அப்பர் தெரு' ஆகியவற்றைச் சான்றாகக் கூறலாம். தங்களுடைய கடைகளுக்கும், தாங்கள் வசிக்கும் இல்லங்களுக்கும், தாங்கள் நிறுவிய பள்ளிகள், நூல் நிலையங்கள், தண்ணீர்ப் பந்தல்கள் முதலியவற்றிற்கும் தமிழ்ப் புலவர்களின் பெயர்களைச் சூட்டி மகிழ்ந்தனர்.

தமிழுணர்வுடைய நகரத்தார்கள் எவ்வளவு வரவு செலவு செய்தாலும் வரவு செலவுக் கணக்குகளைத் தமிழில்தான் எழுதுவார்கள். அக்கணக்கிற்கு 'ஐந்தொகை' என்பது பெயர். அதில் முதல், வரவு, செலவு, இருப்பு, ஆதாயம் என்ற ஐந்து விவரங்களும் இடம்பெற்றிருக்கும். எண்களும் இலக்கங்களும் தமிழ் எண்களாகவும் தமிழ் இலக்கங்களாகவுமே அவர்களின் கணக்குப் பதிவேடுகளிற் காணப்படுகின்றன.

தமிழ்நாட்டுக் கோயில்களில் தமிழிலேயே வழிபாடு நடைபெற வேண்டும் என்ற இயக்கம் முதன் முதலில் செட்டிநாட்டில் தான் தோன்றியது.

இலக்கியச் சொற்கள் பல நகரத்தார் வழக்கில் இன்றும் உள்ளன. அதற்குச் சான்றாக, 'பைய' 'ஊருணி' 'காவணம்' 'கழுத்துரு'

'திருப்பூட்டுதல்', 'முழுத்தம்', 'கும்மாயம்' போன்ற பல சொற்களைக் கூறலாம். செட்டிநாட்டுப் பெண்களின் தாலாட்டுப் பாடல்களும், ஒப்பாரிப் பாடல்களும் நல்ல இலக்கியத் தரமுடையவை. செட்டிநாட்டுப் பெண்கள் ஆங்கில மொழிச் சொற்களுக்கேற்ற பல தமிழ்ச் சொற்களை, பிறர் துணையின்றி தாங்களே அமைத்துக் கொண்டிருக்கின்றனர்.[1] அமுக்குப் பொத்தான் [Press Button], கொச்சிநாய்க்கயிறு [Wollen], புட்டாமா [Face Powder], தேங்காய்ப்பூத் துண்டு [Turkey Towel], போன்றவை சில எடுத்துக்காட்டுக்கள். பிறமொழிச் சொற்களைத் தமிழ் மயமாக்கி ஆளும் போக்கு நகரத்தார்களின் 'தமிழ்மை' எனலாம்.

திருமணம் போன்ற மங்கல நாட்களில் நல்ல பல தமிழ் நூல்களைப் பரிசுகளாக மணமக்களுக்கும், வந்தவர்களுக்கும் கொடுப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். பெற்றோர்கள் தம் பெண்களுக்குச் சீதனமாகத் தமிழ் நூல் தொகுதிகளையும் கொடுத்து மகிழ்ந்தனர். காரைக்குடி காந்தி மெய்யப்பச் செட்டியாரின் இல்லத்தில் பல பொன்மொழிகள் எழுதி வைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று,

"தாய்மொழி மறந்தவர் சாதியிற் கீழோர்"

என்பதாகும்.[2] 'இடாதார் இழிகுலத்தோர்' என்று ஔவையும் புலால் உண்பாரைப் 'புற இனத்தார்' என்று வள்ளலாரும் கூறியிருக்க, காந்தி மெய்யப்பரோ தாய்மொழி மறந்தவரைச் சாதியிற் கீழோர் என்கிறார். தமிழர்கள் மேன்மக்களாக இருக்க வேண்டுமானால் தாய்மொழியாகிய தமிழை மறத்தல் கூடாது என்பது அவரது உறுதியான கொள்கை. நகரத்தார்கள் அனைவரின் கொள்கையும் அதுவே.

7. 2. தமிழ் மொழிக் காவலர்கள் :

தமிழுக்கு ஆபத்தான நிலை ஏற்பட்ட போதெல்லாம் உரிமைக் குரல் கொடுத்துத் தமிழ் மொழிக் காவலர்களாகவும் நகரத்தார்கள் விளங்கினர்.

இந்தி திணிக்கப்பட்டால் தமிழுக்கு ஊறு உண்டாகும் என்று, 1937 இல் தமிழகத்தில் இந்தி எதிர்ப்பு இயக்கம் தோன்றியபோது பாகனேரி வெ. பெரி. பழ. மு. காசி விசுவநாதன் செட்டியார்

மறைமலையடிகளாரைக் கொண்டு 'இந்தி பொது மொழியா' என்ற நூலினை எழுதச் செய்து மக்களுக்கு இலவசமாக வழங்கியும். 1938 – இல் இந்தி எதிர்ப்பின்போது பாகனேரி தனவைசிய இளைஞர் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் பல புத்தகங்களை அச்சிட்டு இலவசமாக வழங்கியும் தங்கள் பகுதியில் தமிழ் விழிப்புணர்ச்சியை மக்களிடையே ஏற்படுத்தினார்.[3]

1937-இல் இந்தியை எதிர்த்து சென்னையில் மிகப் பெரியதொரு ஊர்வலம் நடைபெற்றது. அந்த ஊர்வலத்தில் முன்னின்று கொடிபிடித்துச் செல்ல நெடிதுயர்ந்த ஆளைத் தேடியபோது அங்கு வந்திருந்த செட்டிநாட்டு அரசராகிய முத்தையா செட்டியார் தமிழுக்குச் செய்யும் தொண்டே தலையான தொண்டு என்ற உணர்வோடு தானே முன்வந்து கொடியைப் பிடித்துச் சென்றிருக்கிறார்.[4]

1938-இல் திருச்சியில் நடந்த தமிழக இந்தி எதிர்ப்பு மாநாட்டில் முதன்முதலாக தமிழ்க் கொடியை ஏற்றி வைத்துத் தமிழ் முழக்கம் செய்து இந்தியை மிகத் துணிச்சலோடு எதிர்த்தவர் கருமுத்து தியாகராசச் செட்டியார் ஆவார்[5]. திருமுறைகள் கிடைத்த தில்லையம்பதியில் திருமுறைத் தமிழுக்கு இடமில்லை என்ற நிலை இருந்தது. அதை மாற்ற வ. சுப. மாணிக்கனார் தலைமையில் நகரத்தார்கள் போராட்டம் நடத்தி அம்பலத்தில் திருமுறைகள் ஏறச் செய்தனர்.[6] தமிழ் மொழிப் பற்றுடைய, தமிழ் மொழிக் காவலர்களாக விளங்கிய நகரத்தார்கள் தமிழ் மொழிக்குச் செய்த பணிகளைப் பின்வருமாறு பகுத்துக் காணலாம்.

1. சங்கங்கள், கழகங்கள், கல்விச் சாலைகள் முதலிய நிறுவனங்கள் வாயிலாகச் செய்த தமிழ்ப் பணிகள்;

2. தமிழ்ப் புலவர்களை ஆதரித்துப் போற்றியமை;

3. நகரத்தார்களின் பலதுறைப் படைப்புகளும் பணிகளும்;

4. சமயத்துறை வாயிலாகச் செய்த பணிகள்;

5. இதழ்கள் மூலமாகச் செய்த பணிகள்;

6. பதிப்பகங்கள் வாயிலாகச் செய்த பணிகள்;

7. வெளி மாநிலங்களிலும் அயல் நாடுகளிலும் செய்த பணிகள்.

7. 3. நிறுவனங்கள் வாயிலாகச் செய்த பணிகள் :

7. 3. 1. சன்மார்க்க சபை :

தமிழ்மொழி வளர்ச்சியைத் தன் வளர்ச்சியாகக் கொண்டு விளங்கிய இச்சபை 1909-இல் மேலைச் சிவபுரியில் வ. பழ. சா. பழனியப்பச் செட்டியாரால் தோற்றுவிக்கப்பட்டது.

இச்சபை, தமிழைப் பரப்ப மேற்கொண்ட முதல் வழி, பல தமிழ் அறிஞர்களைக் கொண்டு தமிழ்ச் சொற்பொழிவுகளை மக்கள் கேட்கச் செய்தது ஆகும். தமிழ் வளர்ச்சி பற்றிப் பேசுவதோடும் எழுதுவதோடும் அமையாது சபை செயல்முறையிலும் காட்டியது.

சன்மார்க்க சபை, இளமையிலேயே தமிழ்ப் பற்றை ஊட்டும் வண்ணம், குழந்தைகள் இடர்ப்படாமல் கருத்துக்களைப் புரிந்துகொள்ளும் வகையில் தாய்மொழியாகிய தமிழ்மொழி வாயிலாகக் கற்பிக்கும் மழலையர் பள்ளி ஒன்றையும் ஏற்படுத்தியுள்ளது. அரசு அங்கீகாரம் பெற்ற மழலையர் பள்ளி தமிழகத்தில் இது ஒன்றுதான்.

சபையின் சார்பில் தொல்காப்பியர் நூலகம் பல கிடைத்தற்கரிய நூல்களைத் தாங்கிச் சிறப்புடன் இயங்கி வருகிறது. நல்ல பல தமிழ் நூல்களை வெளியிடுவது மூலமாகவும் சபை, தமிழ்த் தொண்டு புரிந்தது. பண்டிதமணி மு.கதிரேசச் செட்டியாரின் வளர்ச்சிக்குச் சபை பெரிதும் காரணமாயிருந்தது. பண்டிதமணியின் பல நூல்களை வெளியிட்டதோடு அவர் வடமொழியிலிருந்து மொழிபெயர்த்த, 'சுலோசனை', 'சுக்கிரநீதி', 'மண்ணியல் சிறுதேர்' ஆகிய நூல்களை வெளியிட்டு மொழிபெயர்ப்புத் தொண்டை ஆதரித்தது.[7] சைவத்தை வளர்க்குமுகமாக, 'ஆடு கோழி அடைக்கல விண்ணப்பம்', சைவசமயிக்கும் பாதிரியாருக்கும் நடந்த உரையாடல்,' 'சிவாலய வழிபாடு' போன்ற துண்டு

வெளியீடுகள் ஆயிரக் கணக்கில் விலையின்றி இச்சபை மூலம் வழங்கப்பட்டன.[8]

சபை, தமிழ்ப் புலவர்களைப் போற்றி ஆதரிப்பதையும் தன் கடமையாகக் கொண்டிருந்தது. தமிழ்ப் புலமை மிக்கோர்க்குப் பட்டங்கள் வழங்கிச் சிறப்பித்தது. இரா. இராகவய்யங்காருக்கு, மகாவித்துவான் பட்டமும், மு. கதிரேசச் செட்டியாருக்குப், பண்டிதமணி பட்டமும் வழங்கிற்று. மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் குடும்பத்திற்குச் சபையின் முயற்சியால் நிதி தொகுத்து வழங்கப்பட்டது.

இச்சபைக்கு மலேயா, சிங்கப்பூர் நகரத்தார்கள் பொருள் கொடுத்து உதவியுள்ளனர். பண்டிதமணியின் நூற்றாண்டடு விழாவில் இச்சபை பண்டிதமணியின் நூல்களை நகரத்தார் பொருளுதவியுடன் மறுபதிப்பாக வெளியிட்டது.

இச்சபையை நிறுவிய பழநியப்பர் சிறிது காலம் பிணிவாய்ப்பட்டிருந்து 1912-இல் தனது முப்பத்தொன்பதாவது வயதில் இறந்தார். இவருக்குப் பிணி வந்த சமயம் கொழும்பிலிருந்த தன் தம்பி வருவதற்கு முன்பே தனக்கு இறுதி வந்துவிடுமோ என்று கருதி ஒரு கடிதம் எழுதி வைத்திருந்தார். பழனியப்பச் செட்டியார் இறந்தபிறகு அக்கடிதம் பார்க்கப்பட்டது. அதில் காணப்பட்ட முக்கிய வரிகள்.

"சன்மார்க்க சபையைத் தளரவிடாது
எப்போதும் நீடித்து நடத்தி வருக"

என்பதாகும்.

1909-இலிருந்து ஆரவாரமில்லாமல் தமிழ்ப் பயிரை வளர்த்து வருகின்ற இச்சபை நகரத்தார்களின் தமிழ் உணர்விற்குச் சிறந்தொரு எடுத்துக்காட்டாகும்.

7. 3. 2. கோவிலூர் மடத்தின் தமிழ்ப்பணி :

வடமொழியிலேயே எழுதப்பட்ட வேதாந்தக் கருத்துக்கள் இம்மடத்து அறிஞர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு

எளிமைப்படுத்தப்பட்டன. பல வேதாந்த நூல்களுக்கு விரிவான உரைகள் செய்யப்பட்டன. கோவிலூர் மடம் தமிழுக்குச் செய்த தொண்டுகளில் குறிப்பிடத்தக்கது உரைத் தொண்டு ஆகும்.

கோவிலூர் மடத்துத் துறவியான இராமசாமிச் சாமி என்பவர் மடத்தில் இருந்த பல ஏட்டுச் சுவடிகளை ஆராய்ந்து நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை அச்சிட்டுள்ளார்.[10]

தமிழ்ப் புலவர்கள் பலரையும் இம்மடம் ஆதரித்தது. கி. பி. 19 ஆம் நூற்றாண்டின் ஈடு இணையற்ற பெரும் புலவராக விளங்கிய மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களுக்குப் பல உதவிகள் செய்தது இம்மடம். 'சைவசமய வினாவிடை' போன்ற எளிமையான சைவசமய நூல்கள் பலவற்றை எழுதி கி. பி. 19, 20 ஆம் நூற்றாண்டுகளில் சைவசமயம் ஏற்றம்பெற உதவிய யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலரை அத்துறையில் ஈடுபடுத்தியவர் கோவிலூர் மடத்தின் இரண்டாவது பட்டமான துறவு ஆண்டவராவார்.[11]

கோவிலூர் ஆண்டவர் முதல், இம்மடத்தைச் சேர்ந்த பலரும் செய்யுள் பாடும் ஆற்றல் கைவரப் பெற்றவர்களாக இருந்தனர். அவர்கள் பல செய்யுள் நூல்களைப் படைத்துள்ளனர்.

7. 3. 3. இந்து மதாபிமான சங்கம் :

1917-இல் சொ. முருகப்பா, இராய. சொக்கலிங்கர் போன்றோரின் முயற்சியால் காரைக்குடியில் இந்து மதாபிமான சங்கம் நிறுவப்பட்டது. இலக்கிய வகுப்புக்கள் நடத்துதல், இலக்கியச் சொற்பொழிவுகள் நிகழ்த்துதல், புத்தகங்கள் வெளியிடுதல் ஆகிய பணிகளை இச்சங்கம் செய்துவருகிறது.

1919-இல் பாரதியார் இச்சங்கத்திற்கு வருகை தந்தபோது, இச்சங்கத்தைப் போற்றிப் பல பாடல்கள் பாடியுள்ளார். தமிழகத்தில் பாரதியாரின் பாடல்பெற்ற சங்கம் இது ஒன்றுதான். இச்சங்கத்து உறுப்பினர்களான நகரத்தார்களோடு இவர் எடுத்துக்கொண்ட நிழற்படத்தின் வாயிலாகத்தான் பாரதியாரின் படம் உலகுக்குக் கிடைத்தது. இச்சங்கத்தின் தமிழ்த் தொண்டைக் கண்டு வியந்த பாரதியார் இச்சங்கத்தைப் புகழ்ந்து

பல பாடல்கள் பாடி உள்ளார்.[12] இங்குள்ள விவேகானந்தர் நூல் நிலையத்தில் அரிய பல தமிழ் நூல்கள் உள்ளன.

7. 3. 4. தனவைசிய இளைஞர் தமிழ்ச் சங்கமும் காசிவிசுவநாதச் செட்டியாரும் :

சன்மார்க்க சபையைப் போலவே 1934-இல் பாகனேரியில் தோன்றிய தனவைசிய இளைஞர் தமிழ்ச் சங்கமும் பல நல்ல தமிழ் நூல்களை வெளிக்கொணர்ந்து மொழிப் பணி புரிந்தது. பாகனேரியைச் சேர்ந்த வெ. பெரி. பழ. மு. காசிவிசுவநாதன் செட்டியாரின் பொருளுதவியால் பல நூல்கள் இச்சங்கத்தின் மூலம் வெளியிடப்பட்டு அதிலிருந்து கிடைக்கும் ஆதாயம் இச்சங்கத்தின் ஆதரவில் இருந்த திருவள்ளுவர் நூல் நிலையத்திற்கு உரிமையாக்கப்பட்டது. நூலகத்தின் தந்தை 'என்று போற்றப்படும் எஸ். ஆர். ரங்கநாதன் திருவள்ளுவர் நூல் நிலையத்தின் பணிகளைப் பெரிதும் பாராட்டியிருக்கின்றார்.[13] பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட பலதுறை நூல்களைக் கொண்ட அந்த நூலகம் தற்போது சிவகங்கை மாவட்ட நூலக ஆணைக்குழுவின் ஆதரவில் இயங்குகிறது.

காசிவிசுவநாதன் செட்டியார் தமிழ் நூல் வெளியீட்டுத் துறையில் பெரும் புகழ் பெற்றுள்ள தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் தோற்றம், வளர்ச்சிக்குக் காரணர். பண்டைத் தமிழ் இலக்கியங்கள் யாவரும் புரிந்து கொள்ளும் வண்ணம் உரையுடன் வெளிவரவேண்டும் என்ற எண்ணமுடைய காசி விசுவநாதன் செட்டியாரின் பொருளுதவியால் பல சங்க நூல்களுக்கு உரைகள் வெளிவந்தன. ந. மு. வேங்கடசாமி நாட்டார் எழுதிய உரையோடு கூடிய சிலப்பதிகாரம், மணிமேகலை, அகநானூறு, போன்றவையும் இளவழகனார் எழுதிய விளக்க உரையோடு கூடிய கலித்தொகை, திருவாசகம், தாயுமானவர் பாடல், பட்டினத்தார் பாடல், திருமுகவிலாசம், செயங்கொண்டார் சதகம், நாலடியார் பொழிப்புரை ஆகியவை குறிப்பிடத்தக்கவை.[14]

7. 3. 5. கம்பன் கழகமும் கம்பன் அடிப்பொடியும் :

கம்பன் மீது கொண்ட ஈடுபாட்டால் 'கம்பன் அடிப்பொடி' என்று அழைக்கப்பட்டவர் காரைக்குடியைச் சேர்ந்த சா.கணேசன் ஆவார். அவரது ஓயாத உழைப்பும் முயற்சியும் கம்பனுக்குப் பெருமை தேடித்தந்தன.

1939-ஆம் ஆண்டு கம்பன் கழகத்தை சா. கணேசன் உருவாக்கினார். ஆண்டுதோறும் பங்குனித் திங்களில் கம்பன் விழா தவறாமல் நடைபெற்று வருகிறது. நிறைவு நாள் விழா நாட்டரசன்கோட்டையில் கம்பன் பள்ளிப்படைக் கோயிலில் நடைபெறும்.

கம்பன் கழகத்திற்கு, தமிழகத்திலும் கல்கத்தாவிலும், இலங்கையிலும், மலேசியாவிலுமாக சுமார் ஐம்பது கிளைக் கழகங்கள் உள்ளன. 'கம்பனுடைய படைப்பை ஒரு சமயக் காப்பியமாக அணுகும் போக்கைவிட்டுச் சமய உணர்வுக்கு அப்பாற்பட்ட பொதுநோக்கில் கண்டு இலக்கியமாகச் சுவைப்பதற்கு திரு கணேசன் வழிவகுத்தார்.'[15] எல்லாச் சமுதாயத்தாரும் பங்குகொண்ட இக்கழகத்தின் மூலம் பல புலவர்கள் உருவாயினர். கம்பனை நன்கு படித்த அறிஞர்கள் பல புதிய செய்திகளைக் கம்பன் மேடைகளில் எடுத்துச் சொன்னார்கள். புதிய புதிய கோணங்களில் கம்பனை அணுக இக்கழகம் வழிவகை செய்தது. மேடைத்தமிழ் கம்பன் கழகத்தால் வளர்ச்சி யடைந்தது. கவியரங்கம், பட்டிமன்றம், வழக்காடு மன்றம், ஆகிய களங்களைக் கம்பன் கழகம் செட்டிநாட்டுப் பகுதிக்கு அறிமுகம் செய்தது.

கம்பன் அடிப்பொடியின் முயற்சியால் காரைக்குடியில் கம்பனுக்கு மணிமண்டபம் அமைக்கப்பட்டது. மேலும் இவரது முயற்சியால் கம்பன் மணிமண்டப வளாகத்தில் சிற்ப ஆகம விதிப்படித் தமிழ்த் தாய்க்குக் கோயில் உருவாகி உள்ளது. உலகத்திலேயே மொழிக்காக உருவாக்கப்பட்ட கோயில் இது ஒன்றுதான்.

தமிழ்நாட்டில் பல தமிழ்க் கல்வெட்டுக்கள் படிக்கப்படாமல் தமிழக வரலாறும் பண்பாடும் மறைந்து கிடந்தன. அந்நிலையை மாற்ற விரும்பினார் கல்வெட்டறிஞரான சா.கணேசன். அவரது முயற்சியால் தான் 'தமிழக அரசு தொல் பொருள் ஆய்வுத்துறை' உருவானது. அத்துறை இன்று தமிழகமெங்குமுள்ள கல்வெட்டுக்களைப் படியெடுத்துப் படித்துப் பல புதிய செய்திகளை உலகுக்கு தந்து வருகின்றது. கம்பன் அடிப்பொடியால் தமிழ். பல புதிய துறைகளில் வளர்ச்சியடைந்தது.

7. 3. 6. கல்வி நிறுவனங்கள் மூலம் தமிழ்ப்பணி :

ஆத்தங்குடி தமிழ் இலக்கணப் பள்ளி முதலாகப் பல தமிழ்ப் பள்ளிகளையும், தமிழ்க் கல்லூரிகளையும் ஏற்படுத்திய நகரத்தார்கள், பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் பல தமிழ் இலக்கியப் போட்டிகள் நடத்தி மாணாக்கர்களை ஊக்குவித்தும், அறக்கட்டளைச் சொற்பொழிவுகளை ஏற்படுத்தியும், பல தமிழறிஞர்களின் சொற்பொழிவுகளை மாணாக்கர்கள் கேட்க ஏற்பாடு செய்தும், தமிழறிஞர்களை ஆசிரியப் பணியில் நியமித்து அவர்கள் மூலமாகவும் தமிழ் வளர்ச்சிக்கு ஊன்றுகோல் ஆயினர்.

சிற்றிலக்கிய மரபைப் பேணுமுகமாக தனித் தமிழ்த் தந்தையாகிய மறைமலையடிகள் நூற்றாண்டின்போது 'மறைமலையடிகள் பிள்ளைத் தமிழ்' என்ற கவிதைப் போட்டி நடத்தித் தேர்ந்தெடுத்ததை நூலாகவும் வெளியிட்டவர் காரைக்குடி இராமசாமி தமிழ்க் கல்லூரி நிறுவுனர் இராம.பெரி.பெரியகருப்பன் செட்டியாராவார்.

நகரத்தார்களில் ஆசிரியப் பணிகளில் உள்ளவர்களில் பலர் தமிழாசிரியர்களே. அவர்கள் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் தமிழ் ஆசிரியர்களாகப் பணிபுரிந்து தமிழை வளர்த்து, தமிழ் வரலாற்றில் இடம் பெற்று வருகின்றனர்.

7. 3. 7. பிற நிறுவனங்கள் :

புதுவயல் சரசுவதி சங்கம், ஆவினிப்பட்டி விவேகானந்தர் கல்விக் கழகம், காரைக்குடி திருக்குறள் கழகம், தமிழ் வளர்ச்சி உயர் ஆராய்ச்சி மையம், தேவகோட்டை கந்தர் சட்டிக் கழகம், சேக்கிழார் மன்றம், குருவிக் கொண்டான்பட்டி கவிமணி மன்றம் மேலைச்சிவபுரி வள்ளுவர் மன்றம் ஆகிய அமைப்புகள் மூலமும் நகரத்தார்கள் தமிழ் மொழிக்குக் கணிசமான தொண்டு புரிந்து வருகின்றனர்.

7. 3. 8. தமிழ்ச் சங்கங்களும் நகரத்தார்களும் :

மதுரையில் பாண்டித்துரை தேவரால் தோற்றுவிக்கப்பட்ட நான்காவது தமிழ்ச் சங்கத்திற்கு உறுதுணையாய் இருந்தவர் வீர.

லெ. சிந்நயச் செட்டியாராவார் அச்சங்கத்திற்குப் பல நகரத்தார்கள் ஏராளமான பொருளுதவி செய்திருக்கிறார்கள். கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கும் நகரத்தார்கள் உறுதுணையாய் இருந்தனர். கானாடுகாத்தான் வள்ளல் பெத்தாச்சி செட்டியார், நச்சாந்துபட்டி பெ.ராம.குடும்பத்தார் போன்றோர் அச்சங்கத்தின் புரவலராய் இருந்து வந்தார்கள். கரந்தைக் கவியரசு த. வே. உமாமகேசுவரம்பிள்ளையை ஆதரித்தவர்கள் நகரத்தார்கள். கேரள தமிழ்ச் சங்கம் தோன்றக் காரணமாயிருந்தவர்களும் நகரத்தார்களே.

7. 4. தமிழ்ப் புலவர்களை ஆதரித்தல் :

தமிழறிஞர்களின் தாய்வீடாகச் செட்டிநாடு விளங்குகிறது. நகரத்தார்களால் ஆதரிக்கப்பட்டவர்கள், வளர்க்கப்பட்டவர்கள், முன்னுக்குக் கொண்டுவரப் பெற்றவர்கள் தமிழ் உலகில் பலர்.

7. 4. 1. மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை :

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையை நகரத்தார்கள் ஆதரித்துச் சிறப்புச் செய்திருக்கின்றனர். தேவகோட்டையைச் சேர்ந்தவரும் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் மாணாக்கருமான ' வன்றொண்டச் செட்டியார்' தனக்குக் கல்விச் செல்வம் வழங்கிய ஆசிரியருக்கு உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் சிறப்புச் செய்துள்ளார். தன் ஆசிரியர் வறுமையால் வாடுவதை அறிந்து, செட்டிநாட்டுப் பகுதியிலுள்ள கோவிலூர், கண்டதேவி, சூரைக்குடி, வீரவனம் என்ற நான்கு தலங்களுக்கும் புராணம் பாடும்படிச் செய்வித்து, அங்கங்கே உள்ள நகரத்தார்கள் மூலமாகவும் பொருளுதவி செய்வித்தார்.[16] மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை, புராணங்களை அரங்கேற்றும் காலங்களில் கிடைக்கும் பொருள் ஊரைவிட்டுப் புறப்படுவதற்குள் அந்தந்த ஊர்களில் உள்ள கடைகளில் வாங்கியிருந்த கடனைத் தீர்க்கும் பொருட்டும், தம்முடன் அழைத்துச் சென்ற மாணவர் பொருட்டும் செலவாகி விடுவதைக் கண்ட வன்றொண்டர், மேற்கூறிய நான்கு புராணங்களும் அரங்கேற்றப்பட்ட காலங்களில் வேறு விதமான ஏற்பாடு செய்தார். அதன்படி திருவாவடுதுறை மடத்திலிருந்து அரங்கேற்றப் போகும்போது உண்டாகும் செலவுகளைத் திருவாவடுதுறை மடத்தாரும், அரங்கேற்றம் நடைபெற்று

முடிந்து மீண்டுவரும் காலங்களில் ஏற்படும் செலவுகளை நகரத்தாரும் ஏற்றுக் கொண்டனர். அதுமட்டுமல்லாமல் ஒவ்வொரு புராணத்திற்கும் செய்யுள் ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் கணக்குப் பண்ணி, கூடும் தொகைக்கு உண்டியல் கொடுத்து அத்தொகையை நாகப்பட்டினத்தைச் சேர்ந்த வெளிப்பாளையத்திலுள்ள ஒரு நகரத்தார் கடையில் பெற்றுக்கொள்ளும்படி செய்தார். அதைக் குறித்து.

> "நகர வட்டகையிலுள்ள ஸ்தலங்களுக்கு
> புராணங்கள் இயற்றி அரங்கேற்றிய
> காலத்திலேதான் பிள்ளையவர்கள்
> பெரிய தொகையைக் கண்ணாலே
> கண்டார்கள். அவர்கள் இந்த நன்றியை
> என்றும் பாராட்டி வந்தார்கள்"

என்று பிள்ளையவர்களின் மாணாக்கரான உ.வே.சா. கூறியுள்ளார்.[17] 'சேக்கிழார் பிள்ளைத் தமிழ்', 'அறுபத்துமூவர்', 'குருபூஜை மான்மியம்' ஆகியவற்றை மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை இயற்றக் காரணமாக இருந்தவர்களும் நகரத்தார்களே.

7. 4. 2. உ. வே. சாமிநாதய்யர் :

உ. வே. சாமிநாதய்யரின் நூல்கள் சில வெளிவரப் பொருளுதவி செய்தவர், 'தர்மபூஷணம்' என்ற பட்டம் பெற்ற கடியாபட்டி இராமச்சந்திரபுரம் தீ. நா. மு. முத்தையா செட்டியாராவார்.[18]

7. 4. 3. திரு. வி. க:

திரு.வி.கல்யாண சுந்தரனாரின், நூல்களான 'சைவசமயச்சாரம்', 'நாயன்மார்கள்', ஆகிய நூல்கள் காரைக்குடியில் நகரத்தார் உதவியால் வெளியிடப்பட்டன. திரு. வி.க. வெளியிட்ட இதழுக்கு பர்மா, மலேயாவில் வாழ்ந்த நகரத்தார்கள் பெரும் பொருள் உதவி செய்தார்கள்.[19]

7. 4. 5. நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை :

நாமக்கல் கவிஞருக்கு நகரத்தார்கள் பொருளுதவி செய்து ஆதரித்ததோடு அவருடைய நூல்களையும் தங்கள் பதிப்பகங்களின் மூலம் வெளியிட்டனர். நாமக்கல் கவிஞரின் 'சாந்த காந்தி சத்தியத்தில் சங்கநாதம் கேட்குது' போன்ற பாடல்களை உணர்ச்சியுடன் மேடைகளில் பாடி அவரது புகழைத் தமிழகத்தில் பரப்பியவர் சின்ன அண்ணாமலை.[20] வறுமையில் வாடிய நாமக்கல் கவிஞருக்கு, சின்ன அண்ணாமலை[2,0] பெருமுயற்சி எடுத்து 1944-இல் இராஜாஜி தலைமையில் விழா எடுத்து ரூபாய் இருபதாயிரம் பணமுடிப்பு வழங்கியுள்ளார்.

7. 4. 6. கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை :

கவிமணியை நாட்டுக்கு அறிமுகப் படுத்தியவர் சொ. முருகப்பா ஆவார். சொ. முருகப்பாவின் 'குமரன்' இதழில் தான் கவிமணியின் பாடல்கள் முதன்முதலில் வெளிவந்தன. 'ஆசிய ஜோதி' நூலை எழுதும்படி தூண்டி அதற்கான ஆங்கில மூலநூலைக் கவிமணிக்கு அனுப்பி உதவியவர் சொ. முருகப்பா[21]. 1943-இல் ஆத்தங்குடியில் அண்ணாமலை அரசரின் தலைமையில் கவிமணிக்குப் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தனர். கவிமணியின் நூல்கள் பலவற்றை நகரத்தார் பதிப்பகங்கள் வெளியிட்டன.[22]

7. 4. 7. சுப்பிரமணிய பாரதியார் :

பாரதியார் வாழ்ந்த காலத்தில் வெள்ளையர் கொடுமைக்குப் பயந்து பலரும் அவரை ஆதரிக்கவில்லை. ஆனால் பாரதியார் வாழ்ந்த காலத்திலேயே ஆங்கில அரசுக்கு அஞ்சாமல் அவரை ஆதரித்தவர், பெரும்புலவர்கள் செட்டிநாட்டுக்கு வரக் காரணமாக இருந்த கானாடுகாத்தான் வை.சு.சண்முகம் செட்டியாராவார். பாரதியாரின் பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு, முதலியவை அச்சானதற்கு, வை. சு. சண்முகனாரே காரணம், 'செட்டி மக்கள் குலத்தினுக்குச் சுடர் விளக்கே' என்று பாரதியார் அவரைப் பாராட்டியுள்ளார்.[23]. நகரத்தார்கள் தாங்கள் நடத்திய குமரன், ஊழியன், தனவைசியன் ஆகிய இதழ்களில் பாரதியாரின் கட்டுரைகளை வெளியிட்டனர்.

'திரையுலக மேதை' என்று போற்றப்படும் ஏவி. மெய்யப்பச் செட்டியார் பாரதியாரின் பாடல்களை வெளியிட்டு ஒலிபரப்பும் உரிமைகள் அனைத்தையும் விலைக்கு வாங்கி வைத்திருந்தார். தான் எடுத்த திரைப் படங்களில் பாரதியார் பாடல்களைப் பாடச் செய்து அதன்மூலம் பாமர மக்களிடையே பாரதி பாடலைப் பரப்பினார். பிறகு தமிழ் மக்கள் விரும்பிய போது தொழில் முறையில் விலைகொடுத்து வாங்கிய உரிமையை அன்பளிப்பாக விட்டுக் கொடுத்துப் பாரதி பாடல்களைப் பொதுச் சொத்தாக்கினார்.[24] 1906 முதல் 1910 வரை வெளியான மகாகவியின் 'இந்தியா' இதழ்களை நாடு முழுவதும் தேடி அலைந்து பெற்று அதுவரை வெளிவராத பாரதியாரின் கதை, கட்டுரை, கவிதைகளைத் தன் 'குமரி மலரில்' வெளியிட்டவர் ஏ. கே. செட்டியார் ஆவார்.

எட்டையபுரத்தில் அமைக்கப்பெற்ற பாரதி நினைவு மண்டபத்திற்கு நகரத்தார்கள் ஏராளமான பொருளுதவி செய்துள்ளனர்.

7. 4. 8. கவியோகி சுத்தானந்த பாரதியார் :

சுத்தானந்த பாரதியாரின் நூல்களை வெளியிடுவதற்காகவே 'அன்பு நிலையம்' என்ற பதிப்பகம் நகரத்தாரால் நிறுவப் பெற்றது. அவர் சிவகங்கைக்கு அருகில் சோழபுரத்தில் ஆசிரமம் ஒன்று நிறுவ விரும்பியபோது நகரத்தார்கள் நாற்பது ஏக்கர் நிலத்தை அன்பளிப்பாகக் கொடுத்தனர்.

"இந்த மோனகவியை முன்வந்து
ஆதரித்தவர்கள் தனவணிகமணிகளேயாவர்"[25]

என்று கவியோகி குறிப்பிட்டுள்ளார்.

7. 4. 9. பாரதிதாசன் :

பாரதிதாசனைப் பாரறியச் செய்தவர்கள் நகரத்தார்கள். முத்தமிழ் நிலையம், முல்லைப் பதிப்பகம், வள்ளுவர் பண்ணை, செந்தமிழ் நூல் நிலையம் போன்ற நகரத்தார்களது பதிப்பகங்கள் கவிஞரின் நூலை வெளியிட்டன. முல்லைப் பதிப்பகத்தார் புதுவையில் கவிஞருக்கு வீடு வாங்கிக் கொடுத்துள்ளனர்.[26]

7. 4. 10. பி. ஸ்ரீ. :

சிறந்த தமிழறிஞர்களுள் ஒருவரான பி.ஸ்ரீ.கம்ப ராமாயணத்திற்கு ஆற்றியுள்ள உரைத் தொண்டு பெரிது. அவர் இறுதிக் காலத்தில் தாம் வறுமையில் வாடுவதை 'சோமலெ' விற்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். சோமலெ, அக்கடிதத்தை 'ஆனந்தவிகடன்' இதழில் பிரசுரிக்கச் செய்து, அதைப் படித்த அன்பர்கள் மூலம், பி.ஸ்ரீ. க்குப் பொருளுதவி கிடைக்கச் செய்தார். பொருளுதவி பெற்ற பி.ஸ்ரீ., "சோமலெ காலத்தால் செய்த உதவி, பாயும் படுக்கையுமாக இருந்த என்னை நிமிர்ந்து உட்காரச் செய்தது" என்று நெகிழ்ந்து பாராட்டியுள்ளார்.[27]

7. 5. தமிழ்ப் புரவலர்கள் :

நகரத்தார்கள் தமிழ்ப் புலவர்களை ஆதரிப்பதைத் தம் கடமையாகக் கொண்டிருந்தனர். அவர்களால் ஆதரிக்கப்படாத தமிழ்ப் புலவர்களே இல்லை எனலாம்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் மூலமாகத் தமிழறிஞர்கள் பலரைத் தமிழுலகுக்குப் பயன்படும்படிச் செய்தவர் அண்ணாமலை அரசராவார். 'தமிழ் வள்ளல்' தேவகோட்டை மெய்யப்பச் செட்டியார் பல தமிழ்ப் புலவர்களை ஆதரித்தவர். அவர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனாரின் நூல்கள் சில வெளிவரப் பொருளுதவி செய்தார். தைப் பொங்கலன்று தம் பெண்மக்கள் வீடுகளுக்குச் சீர் அனுப்புவதுபோலத் தமிழ் வள்ளல் தமிழ்ப் புலவர்கள் சிலர் வீடுகளுக்குச் சீர் அனுப்பி வந்தார்.[28] கானாடுகாத்தான் வள்ளல் பெத்தாச்சி செட்டியார் பல புலவர்களை ஆதரித்தார். அவரிடத்தில் பரிசு பெற்ற நாவலரும் பாவலரும் எண்ணத் தொலையாதவர் என்று நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை கூறியுள்ளார்.[29]

தேவகோட்டை சமீன்தார் குடும்பத்தைச் சேர்ந்த நாராயணன் செட்டியார் மறைமலையடிகளுக்கு அவ்வப்போது பொருளனுப்பி உதவியதுடன் ஆண்டிற்கு இருமுறை மும்முறை அடிகளைச் சந்தித்து அவரது தமிழ்த் தொண்டினை ஊக்கப்படுத்தியுள்ளார்.[30]

தமிழ் ஆர்வலரான நகரத்தார்களில் குறிப்பிடத் தக்க மற்றொருவர் கலைத் தந்தை கருமுத்து. தியாகராசச் செட்டியாராவார். தமிழ் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த அவர், அழைப்பிதழ்களில் 'ஸ்ரீ' என்ற சொல்லுக்குப் பதிலாக 'திரு' என்ற அடைமொழியைப் பயன்படுத்த வேண்டும் என்று போராடி வெற்றி கண்டார். சிறந்த இலக்கிய இலக்கணப் புலமையுடையவராக விளங்கிய தியாகராசர் ஏராளமான தமிழறிஞர்களுடன் தொடர்புகொண்டு, அவர்களுக்கு உறுதுணையாகவும் ஆதரவாகவும் இருந்தார். பிற நாட்டைச் சேர்ந்த தமிழறிஞரையும் போற்றினார். செக்கோசுலவாக்கிய நாட்டுத் தமிழறிஞர் கமில் சுவலபிலை சிறப்பித்தார் கருமுத்து தியாகராசனார். 'ஸ்பெயின் நாட்டிலிருந்து வந்த ஒரு திராவிடன்' என்று தன்னைக் கூறிக்கொண்ட திராவிட மொழியியல், தொல்லியல், வரலாற்று ஆய்வாளரான ஹிராஸ் பாதிரியாரை ஆதரித்தார். சி.இலக்குவனார் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த 'தொல்காப்பியம்' நூல் வடிவில் வரப் பொருளுதவி செய்த அவர், தமிழில் உருவாக்கப் பெற்ற கலைக்களஞ்சியத்திற்கு முதன் முதலாகப் பெரும் பொருள் கொடுத்தவராவார்.[31]

7. 6. படைப்புத் துறையில் நகரத்தார்கள் :

நகரத்தாரின் மொழிப்பணி மிக விரிவானது. சிறிய சமூகத்தினரான நகரத்தார்களில் புலவர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், மேடைப் பேச்சாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், திறனாய்வாளர்கள் எனத் தமிழறிஞர்கள் மிகப் பலர் உள்ளனர். அவர்கள் தங்கள் எழுத்துக்களால் தமிழ் மொழிக்கு வளம் சேர்த்துள்ளனர்.

7. 6. 1. பலதுறைப் படைப்புக்கள் :

கி. பி. 18, 19 ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த செட்டிநாட்டுப் புலவர்களான பாடுவார் முத்தப்பர், வன்றொண்டர், வீர. லெ. சிந்நயச் செட்டியார், இராம. சொ. சொக்கலிங்க ஐயா, வயிநாகரம் அ. இராமநாதன் செட்டியார் போன்றோர் தங்கள் கால இயல்பிற்கேற்ப சமயத் தொடர்பான சிற்றிலக்கியங்களையும், தலபுராணங்களையும், தனிப் பாடல்களையும் பாடித் தமிழை வளர்த்தனர். வீர. லெ சிந்நயச் செட்டியார், இராம. சொ. சொக்கலிங்கஐயா போன்றோர் சித்தாந்தப் புலவர்களாயும் விளங்கினர்.

இராம. சொ. சொக்கலிங்க ஐயா சிவத்தலங்களுக்குப் புராணங்களும், கடவுளர் மீதும் சமயாச்சாரியார்கள், தம் குருநாதர்கள் ஆகியோர் மீதும் மான்மியம், பதிகம், மாலை, அந்தாதி, சிலேடை வெண்பா, பிள்ளைத்தமிழ், சந்தவிருத்தம், திருவூசல், நவமணி மாலை, திருவிரட்டை மணிமாலை, மும்மணிக்கோவை, மஞ்சரி, ஸ்தலம், நமகம், அஷ்டகம், கண்ணி, நாமாவளி முதலிய சிற்றிலக்கிய நூல்களும் உரைநடை நூல்களுமாக நூற்றெட்டு நூல்கள் இயற்றியுள்ளார்.[32]

மற்றவர்கள் அதிகம் பாடாத சிற்றிலக்கிய வகைகளான வாகனக்கவி, குதிரையடி, குளுவ நாடகம் போன்றவற்றையும் நகரத்தார்கள் பாடியுள்ளனர். பாடுவார் முத்தப்பர், இராங்கியம் கருப்பர் மீது குதிரையடி விருத்தம், கருப்பர் குளுவ நாடகம் ஆகியவற்றையும், வயிநாகரம் அ. இராமநாதன் செட்டியார் அரியக்குடி பெருமாள் மீது வாகனக் கவிதையையும் பாடியுள்ளார்கள்.

நகரத்தார்கள் தமிழின் பண்டைய மரபைக் காத்ததோடு, இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் பெரிதும் உதவியிருக்கிறார்கள். இருபதாம் நூற்றாண்டில் தமிழ் பல்வேறு துறைகளில் வளர்ச்சியடைந்தது. வளர்ச்சியடைந்த அனைத்துத் துறைகளிலும் நகரத்தார்களின் பங்கைக் காணலாம்.

வாழ்க்கை, சமயம், அரசியல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு ஏராளமான கவிதைகளையும், தனிப் பாடல்களையும் படைத்துள்ளனர். பழைய மரபை விட்டுவிடாமல் 'பண்டிதமணி பிள்ளைத்தமிழ்', 'காந்தி பிள்ளைத்தமிழ்' போன்ற இலக்கிய வகைகளையும், ஆத்திசூடியைப் பின்பற்றி அறிவியல்சூடி, அறிவுசூடி, தமிழ்சூடி, முத்துச்சூடி போன்ற நூல்களையும் படைத்தனர்[33]. இன்னும் இவர்களால் எழுதப்பட்ட இயல், இசை, நாடக நூல்கள் பல.

இருபதாம் நூற்றாண்டின் ஈடு இணையற்ற கவிஞராகப் போற்றப்படுபவர் கவிஞர் கண்ணதாசன். சேரமான் காதலி, ஆட்டனத்தி ஆதிமந்தி, தைப்பாவை, கவிதாஞ்சலி, ஏசுகாவியம் ஆகிய காவியங்களைப் படைத்தவர். 'வனவாசம்' என்ற தலைப்பில் தன் சுயசரிதையை எழுதியவர். இவரின்

'அர்த்தமுள்ள இந்துமதம்' இந்துமதக் கருத்துக்களை பாமரர்களிடையே எளிமையாக எடுத்துச் சொல்லிப் பெரும் வரவேற்பைப் பெற்றது. 'அழகி' என்ற இவருடைய கவிதை பதினான்கு இந்திய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

கவிஞர் கண்ணதாசன் ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட இலக்கியத் தரமுடைய திரையிசைப் பாடல்களை இயற்றியுள்ளார். அப்பாடல்கள் கருத்து வளமும் சந்த இனிமையும் நிறைந்தவை. இவரது இலக்கியத் தொண்டினைப் பாராட்டி தமிழக அரசு கண்ணதாசனை அரசவைக் கவிஞராக்கிச் சிறப்பித்தது. இவரது நினைவாகக் காரைக்குடியில் 'கண்ணதாசன் மண்டபம்' கட்டப்பட்டுள்ளது.

நகரத்தார்கள் இந்த நூற்றாண்டில் மிக வேகமாக வளர்ந்த உரைநடை இலக்கிய வகையைக் கையாண்டு ஏராளமான தமிழ் நூல்களைப் படைத்துள்ளனர். அரசியல் விழிப்புணர்ச்சி, சமுதாயச் சீர்திருத்தம், ஆன்மீக உணர்வு என்ற மூன்றையும் தங்கள் தமிழால் இராய. சொக்கலிங்கனார், சொ. முருகப்பா போன்றோர் பரப்பினர்.

நகரத்தார்களில் பலர், எளிதில் புரிந்துகொள்ளும் வண்ணம் பழைய இலக்கியங்களுக்கு உரை எழுதியும் எழுதுவித்தும் உரைத் தொண்டு புரிந்தனர். இராய. சொ. போன்றோர் சந்தி பிரித்து எளிமையாக யாவரும் புரிந்து கொள்ளும்படி ஆராய்ச்சி முன்னுரையுடன் பல இலக்கியங்களை வெளியிட்டனர். தொல்காப்பியம் போன்ற இலக்கணக் கருத்துக்களை எளிமைப்படுத்தி வ. சுப. மாணிக்கனார் போன்றோர் உரைநடையில் இலக்கண நூல்களையும் மொழியியல் நூல்களையும் கட்டுரைகளையும் எழுதியுள்ளனர். இலக்கிய ஆராய்ச்சி நூல்கள் பல எழுதியுள்ளனர். சுப. அண்ணாமலை போன்றோர் சமயம் தத்துவம் குறித்துப் பல நூல்கள் எழுதியுள்ளனர். டாக்டர் பட்ட ஆராய்ச்சி வாயிலாகத் தமிழ்ப் பணி செய்த நகரத்தார் அறிஞர் பத்தாண்டுக்கு ஒருவர் இருவர் எனப்பல்கி வருகின்றனர்.

ஓரிலக்கியத்தோடு மற்றோர் இலக்கியத்தை ஒப்பிட்டும், ஒரு மொழியிலுள்ள இலக்கியத்தோடு மற்றொரு

மொழியிலுள்ள இலக்கியத்தை ஒப்பிட்டும் நோக்கும் ஒப்பிலக்கிய வகை இலக்கியங்கள் இக்காலத்தில் மிகுதியாகக் காணப்படுகின்றன. 'தமிழண்ணல்' போன்றோர் தமிழ் இலக்கிய வரலாற்று நூல்கள், ஒப்பிலக்கிய ஆராய்ச்சி நூல்கள், திறனாய்வு நூல்கள் ஆகிய பலவற்றைப் படைத்துள்ளனர். இருபதாம் நூற்றாண்டில் உரைநடை வளர்ச்சி குறித்து 'வளரும் தமிழ்' என்ற நூலை 'சோமலெ' எழுதியுள்ளார்.

பொருளாதாரத் துறை, தொழில் துறை தொடர்பான பல நூல்களைப் படைத்துள்ளனர். ஆர். கே. சண்முகம் செட்டியார் பொருளாதாரக் கருத்துக்களை விளக்கும் பல நூல்களை எழுதியுள்ளார்.

கல்வெட்டு, வரலாறு, தொல்பொருள் தொடர்பான நூல்களையும் கட்டுரைகளையும் நகரத்தார்களில் சிலர் எழுதியுள்ளனர். நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாற்றை வயினாகரம் அ. இராமநாதன் செட்டியாரும் 'இராஜராஜன்', 'பிள்ளையார்பட்டித் தலவரலாறு', ஆகிய நூல்களைக் கம்பன் அடிப்பொடியும் எழுதியுள்ளனர்.

மொழிக்கும் நாட்டிற்கும் பணியாற்றிய அறிஞர் பெருமக்களின் வாழ்க்கை வரலாற்றை நகரத்தார்கள் நூல்களாக எழுதி அவர் தம் நினைவைப் போற்றி உள்ளனர். தேச விடுதலை தொடர்பான நூல்களையும் எழுதியிருக்கிறார்கள். விடுதலை போராட்ட வரலாற்றில் செட்டிநாட்டின் பங்கு குறித்து தேவகோட்டை டி. ஆர். அருணாசலம் செட்டியார் நூல் ஒன்று எழுதியுள்ளார்.

அச்சுக்கலை பற்றி நாரா. நாச்சியப்பன் ஒரு நூல் எழுதியுள்ளார். திரைப்படத் துறையைக் குறித்தும் நூல்கள் எழுதியுள்ளனர். விஞ்ஞானம் மருத்துவம் தொடர்பான நூல்களையும் கட்டுரைகளையும் எழுதியுள்ளனர். மருத்துவத் துறையைச் சேர்ந்த டாக்டர் லெ. சிவராமன், டாக்டர் என். என். கண்ணப்பன் போன்றோர் பல நூல்கள் எழுதியுள்ளனர். டாக்டர் லெ. சிவராமன் மருத்துவக் கண்ணோட்டத்தில் சிலம்பை ஆய்ந்து எழுதியுள்ளார். மேலும் 'அறுவைச் சிகிச்சை' என்ற

நூலைத் தமிழில் தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு எழுதிக் கொடுத்துள்ளார்.

உடற்பயிற்சியின் தேவையை, சிறப்பை, முறையை விளக்கும் நூல்களைத் தமிழ் மொழியில் சாண்டோ லெ. சோமசுந்தரம் செட்டியார் எழுதியுள்ளார். சோதிடக் கட்டுரைகள், சோதிட நூல்கள் ஆகியவையும் நகரத்தார்களால் எழுதப்பட்டுள்ளன.

1900 - இல் பாய்மரக் கப்பலில் மொரிஷியஸ் தீவிற்குச் சென்றவர் இராயவரம் கதிரேசன் செட்டியார். அவர் வட்டிக் கணிதம், கதிரேசன் பெருக்கல், கதிரேசன் எண்சுவடி ஆகிய கணிதத் தொடர்பான நூல்களை எழுதியுள்ளார். இன்று கணிதத் துறையில் பல நூல்களை நகரத்தார்கள் எழுதியுள்ளனர்.

பழமொழிகளைத் தொகுத்தும், நாட்டுப்புற இலக்கியங்களைத் தொகுத்தும் நூலாக்கியுள்ளனர். ஒரு கோயிலுக்கு குடமுழுக்காட்டு விழா நடத்தினால் அக்கோயில் வரலாறு, அக்கோயில் உள்ள ஊரின் வரலாறு, அவ்வூரிலுள்ள மக்களைப் பற்றிய செய்திகள் ஆகியவற்றைத் தொகுத்து குடமுழுக்கு விழா மலர்கள் வெளியிடுவதில் நகரத்தார்கள் திறமை வாய்ந்தவர்கள். சோமலெ இத்தகைய மலர்கள் பலவற்றைத் தயாரித்துள்ளார்.

7. 6. 2. குழந்தை இலக்கியம் :

தமிழகத்தில் குழந்தை இலக்கிய வளர்ச்சிக்கு வித்திட்டவர்கள் நகரத்தார்கள். இராயவரம் அ.கு.அரு. அருணாசலம் செட்டியாரின் பொருளுதவியால் நேமத்தான்பட்டி முத்துநாராயணன் என்பவர் 1942-இல் இராயவரத்திலிருந்து 'பாப்பாமலர்' என்ற இதழை வெளியிட்டார். தமிழில் குழந்தைகளுக்காக வெளிவந்த முதல் இதழ் இதுவே ஆகும்.[34]. 'பாப்பா', 'மாணவன்', 'அணில்', 'குழந்தைகள் செய்தி', 'ஜில் ஜில்' 'மிட்டாய்', 'வெண்ணிலா', போன்ற இதழ்களையும் நகரத்தார்கள் குழந்தைகளுக்காக வெளியிட்டனர். சக்திகாரியாலயம், தமிழ் நிலையம், குழந்தைப் பதிப்பகம் போன்றவை பல குழந்தை இலக்கிய நூல்களை வெளியிட்டன.

குழந்தைகளுக்காக எழுதிய நகரத்தார்களுள் நாக. முத்தையா, தமிழ்வாணன், அழ. வள்ளியப்பா போன்றோர் குறிப்பிடத் தக்கவர்களாவர்.

குழந்தை இலக்கியத்துக்காகவே தன் வாழ்நாளை அர்ப்பணித்துக் கொண்டவரும், 'குழந்தைக் கவிஞர்' என்று போற்றப்பட்டவருமான அழ. வள்ளியப்பா குழந்தைகளுக்காக ஐம்பதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். இந்திய அரசின் பரிசுபெற்ற 'மலரும் உள்ளம்', 'பாட்டிலே காந்தி கதை' ஆகியவை குறிப்பிடத்தக்கவை. எளிமையும் ஒலிநயமும் நிறைந்தவை. இவருடைய குழந்தை இலக்கியப் பாடல்கள் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. குழந்தை இலக்கியக் கவிஞர்கள் என்ற பரம்பரையைத் தோற்றுவித்த அழ. வள்ளியப்பா, 'குழந்தைகள் சங்கம்', 'குழந்தை எழுத்தாளர் சங்கம்' ஆகியவற்றை உருவாக்கி குழந்தை இலக்கிய வளர்ச்சிக்குப் பாடுபட்டார்.

சிறார்களுக்கான ஆங்கிலம் - தமிழ் அகராதியையும் 'பொது அறிவுக் களஞ்சியம்' என்ற நூலைப் படங்களுடனும் முல்லை முத்தையா வெளியிட்டார்.[35] குழந்தைகளுக்காக இதழ்களையும், நூல்களையும் வெளியிட்டதோடு, பல நூல்களை எழுதியும் குழந்தை இலக்கிய வளர்ச்சிக்கு வகைசெய்த நகரத்தார்கள் குழந்தை இலக்கிய வளர்ச்சிக்கெனப் பல போட்டிகளையும் நடத்தி, குழந்தைகளிடையும் குழந்தை எழுத்தாளர்களிடையும் ஆர்வத்தைத் தூண்டி வருகின்றார். அந்தவகையில் ஆண்டுதோறும் விழா எடுத்து கவிதை, கதை, நாடகம் ஆகியவற்றிற்குப் பரிசளித்துவரும் ஏவி.எம். நிறுவனமும், அழ.வள்ளியப்பாவின் பெயரால் குழந்தை இலக்கியப் போட்டி நடத்தி, குழந்தைகளுக்கு இலக்கிய ஆர்வத்தை ஊட்டி வரும் இராமசாமி தமிழ்க் கல்லூரியும் குறிப்பிடத்தக்கவை.

7. 6. 3. பயண இலக்கியம் :

அண்மைக் காலத்தில் தமிழ் உரைநடை வகைகளில் ஒரு புதிய துறையாக வளர்ந்துவரும் பயண இலக்கிய வளர்ச்சியில் நகரத்தார்களின் பங்கு குறிப்பிடத் தக்கதாகும். நகரத்தார்களின்

தமிழ்ப் பணியில், 'பயண இலக்கியக் கட்டுரைகள்', 'பயண இலக்கிய நூல்கள்' என்ற புதுப் பாதையை வகுத்தவர் ஏ. கே. செட்டியார் என்றழைக்கப்படும் கோட்டையூர் அ.கருப்பஞ் செட்டியாராவார்.

பயணங்கள் தரும் படிப்பும் மிகுதி; பயனும் மிகுதி; என்பதை உணர்ந்து பல நாடுகளுக்கும் சென்று அந்தந்த நாட்டின் வரலாறு, இயற்கையமைப்பு, கல்வி, சமயம், சமூகம், இலக்கியம் பற்றிய செய்திகளையும், தனது அனுபவங்களையும் நூல் வடிவில் வெளியிட்ட ஏ. கே. செட்டியார் 'உலகம் சுற்றிய தமிழன்' என்ற பாராட்டைப் பெற்றவர். தமிழ் வாசகர்களிடையே பயண நூல் ஆர்வத்தை உண்டாக்கியவர். கி. பி. 19 ஆம் நூற்றாண்டில் வெளிவந்த தமிழ்ப்பயணக் கட்டுரைகளைத் தொகுத்து 'தமிழ்நாடு' என்னும் அரியதொரு நூலைத் தந்தவர். அவர் எழுதிய நூல்களான 'ஜப்பான்' 'ஐரோப்பா வழியாக', 'உலகம் சுற்றும் தமிழன்', 'பிரயாண நினைவுகள்', 'திரையும் வாழ்வும்', 'அண்டை நாடுகள்', 'மலேயா முதல் கனடா வரை', 'அமெரிக்கா நாட்டில்' 'கரிபியன் கடலும் கயானாவும்', 'குடகு' ஆகிய பயண நூல்கள் பயண இலக்கியத் துறை வளர்ச்சிக்குப் படிக்கட்டுக்களாய் அமைந்தன.

ஏ.கே.செட்டியாரைப் பின்பற்றி நூல்கள் எழுதியவர்களுள் சோம. லெ. , அரு. சோமசுந்தரம், கருமுத்து தி. மாணிக்கவாசகம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். சோமலெ பத்துக்கும் மேற்பட்ட பயண நூல்களும் அரு. சோமசுந்தரம் சுமார் பதினெட்டுப் பயண நூல்களும் எழுதியுள்ளார்கள். சோமலெ தமிழ் நாட்டிலுள்ள பத்து மாவட்டங்களைப் பற்றி விரிவாக எழுதி உள்ளமை குறிப்பிடத்தக்கது. அரு. சோமசுந்தரம் இராமேசுவரத்திலிருந்து காசி வரை நடந்து சென்று தன் பயண அனுபவங்களைத் தொகுத்து 'இராமேசுவரம் - காசி நடைப் பயணம்' என்ற நூலாக வெளியிட்டுள்ளார்.

நகரத்தார்கள் தாங்கள் பயண நூல்கள் எழுதுவதோடு அமையாமல் மற்றவர்களையும் பயணக் கட்டுரைகள் எழுதத் தூண்டியும் அவற்றை வெளியிட்டும் உள்ளார்கள். சான்றாக, தான் நடத்திய 'குமரி மலர்' என்ற பத்திரிகையில் பலருடைய பயண அனுபவங்களை எழுதச் செய்து, புதிய பயண இலக்கிய

எழுத்தாளர்களை உருவாக்கியவர் ஏ. கே. செட்டியார். அவர் சுப்பிரமணிய பாரதியார் எழுதிய பயணக் கட்டுரைகளைத் தொகுத்து ஒரு நூலாக்கி வெளியிடச் செய்தார். நகரத்தார்கள் நடத்திய 'தனவணிகன்' இதழ் பயணக் கட்டுரைகளை வெளியிட்டுப் பயண இலக்கியத்தை ஆதரித்தது.[36]

7. 6. 4. மொழிபெயர்ப்பு இலக்கியம் :

தாம் இன்புறுவது உலகு இன்புறக் காமுறும் நகரத்தார்கள் மற்ற இனத்தாரின் அரசியல், பண்பாடு, நாகரிகம், பழக்க வழக்கங்கள், இலக்கியங்கள் ஆகியவற்றைத் தமிழர்கள் அறிந்து கொள்ளுவதற்கும், உலகியல் அறிவு பெறுவதற்கும் கருவியாக உள்ள மொழிபெயர்ப்புத் துறையில் ஈடுபட்டார்கள்.

அந்தவகையில் நகரத்தார்கள் பிறமொழி இலக்கியங்கள் சிலவற்றைத் தமிழில் மொழி பெயர்த்தும், தமிழ் இலக்கியங்களைப் பிறமொழியில் மொழி பெயர்த்தும் மொழிபெயர்க்கப் பொருளுதவிகள் செய்தும் மொழிபெயர்ப்பு இலக்கிய வகைக்குத் தங்களாலான தொண்டைச் செய்துள்ளார்கள்.

தமிழ்மொழி, வடமொழி ஆகிய இருமொழிப் புலமையுடைய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் சன்மார்க்க சபையின் மூலமாக ஆறு வடமொழி இலக்கியங்களைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.[37]. மகேந்திரவர்ம பல்லவன், வடமொழியில் எழுதிய 'மத்தவிலாசப் பிரகடனம்' என்ற நூலைத் தமிழில் மொழிபெயர்க்கச் செய்து கோட்டையூர் மெய்யப்பச் செட்டியார் என்பவர் 1930-இல் வெளியிட்டிருக்கிறார்.[38] வடமொழியிலிருந்து ஆகமங்களைத் தமிழில் மொழிபெயர்த்துப் பரப்புவதற்காக தேவகோட்டை மெ. வகையினர் சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு இருபதாயிரம் ரூபாய்கள் எடுத்து வைத்து உள்ளார்கள்.[39]

வி. ஆர். எம். செட்டியார், கவியரசர் இரவீந்திரநாத் தாகூரின் 'கீதாஞ்சலி', 'வளர்மதி', காதல் கண்கள்', முதலிய நூல்களை மொழி பெயர்த்துள்ளார். இவரே ஷெல்லி, ஆஸ்கார் ஒயில்டு ஆகியோரின் நூல்களையும் ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.[40]

புதுமைப் பதிப்பகத்தை நடத்திய அ. லெ. நடராசன் செட்டியார் காந்தியடிகள் எழுதிய 'மாணவர்க்கு', 'பெண்களுக்கு', 'நமது மொழிப் பிரச்சனை', 'பிரிட்டிஷாருக்கு எனது வேண்டுகோள்' ஆகிய நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.[41] பொற்கிழிக் கவிஞர் அரு. சோமசுந்தரம் பன்னிரண்டு ஷேக்ஸ்பியர் நாடகங்களை ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழி பெயர்த்துள்ளார். குங்குலியம் பழ. சண்முகனார், சிறந்த சிந்தனையாளரான ஜெ. கிருஷ்ணமூர்த்தி படைத்த ஆங்கில நூல் ஒன்றைத் 'தியானம்' என்ற பெயரில் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.[42]

விவேகானந்தரின் 'சிகாகோ உரைகள்', 'கர்மயோகம்', 'ராஜயோகம்', ஆகிய நூல்களை விபுலானந்தர் தமிழில் மொழிபெயர்க்கக் காரணமாக இருந்தவர் கொப்பனாபட்டி கலைமகள் கல்லூரி நிறுவனர் அ. மெ. மெய்யப்பச் செட்டியாராவார்.[43]

திருக்குறளின் பெருமையை உலகறியச் செய்ய வேண்டும் என்ற ஆர்வமுடைய நகரத்தார்கள் தாங்கள் சென்ற நாடுகளிலெல்லாம், திருக்குறளைப் பரப்ப ஆவண செய்திருக்கிறார்கள். பர்மிய மொழி, மலாய் மொழி போன்ற பிறமொழிகளில் திருக்குறள் வெளிவர நகரத்தார்கள் பொருளுதவி செய்தார்கள். போலந்து நாட்டில் வார்சா பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகவும், இந்திய இயல் துறைத் தலைவராகவும் பணியாற்றிய இராம. சுந்தரம், போலீஷ் மொழியில் திருக்குறள் வெளிவர உறுதுணையாய் இருந்தார்.[44]

மேலே குறிப்பிட்டவர்களைத் தவிர இன்னும் பல நகரத்தார்கள் மொழி பெயர்ப்புத் துறைக்கு ஊன்றுகோலாய் விளங்கியிருக்கிறார்கள்.

7. 6. 5. நாவல்களும் சிறுகதைகளும் :

நாவல்களும் சிறுகதைகளும் இன்று, தமிழில் பெருமளவில் வளர்ந்துவரும் துறைகளாகும். நகரத்தார்களில் பலர் பல நாவல்களையும் சிறுகதைகளையும் படைத்து நாவல், சிறுகதை வளர்ச்சிக்கு உதவியுள்ளனர். எஸ்.ஏ.பி.அண்ணாமலை,

தமிழ்வாணன், கண்ணதாசன், சின்ன அண்ணாமலை, அரு.இராமநாதன் போன்றோர், நகரத்தார்களில் இவ்வகைகளில் எழுதியவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

தேசபக்தி, நாட்டு விடுதலை, சமூக சேவை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு 1926-இல் சொ. பனையப்ப செட்டியார் என்பவர் ஐந்து நாவல்கள் எழுதியுள்ளார்.[45] உத்தமன் செட்டியார் என்பவர் இரங்கூனில் இருந்தபோது சில தமிழ் நாவல்களை எழுதியுள்ளார்.[46] நகரத்தார்கள், சமுதாய நாவல்கள், வரலாற்று நாவல்கள், துப்பறியும் நாவல்கள், மொழிபெயர்ப்பு நாவல்கள் எனப் பல்வகை நாவல்களையும் எழுதியுள்ளனர். அரு. இராமநாதன் எழுதிய 'வீரபாண்டியன் மனைவி', 'அசோகன் காதலி' ஆகிய வரலாற்று நாவல்கள் குறிப்பிடத்தக்கவை.

எழுத்துலகில் சிறந்த இடத்தைப் பெற்றவர் தமிழ்வாணன். இவருடைய துப்பறியும் கதைகள் இளைஞர் உலகத்தில் மிகுந்த வரவேற்பைப் பெற்றவை. மனத்தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு, தூய தமிழில் பல துப்பறியும் நாவல்களைத் தனக்கென ஒரு தனி நடையோடு எழுதியவர் அவர். மு. அ. சிதம்பரம் செட்டியாரின் குடும்பத்தார் 'எம் . ஏ. சிடி அறக்கொடையை நிறுவி, ஒவ்வொரு வருடமும் தமிழ் மொழியில் எழுதப்பட்ட நாவல், நாடகம், சிறுகதை, கவிதைத் தொகுப்புக்கள், நுண்கலைகள் தொடர்பான நூல்கள், ஆராய்ச்சிப் படைப்புகள் ஆகியவற்றில் சிறந்தவற்றைத் தேர்ந்தெடுத்து 'ராஜாஸர் அண்ணாமலைச் செட்டியாரின் நினைவுப் பரிசினை' வழங்கி வருகிறார்கள்.

'இலக்கியச் சிந்தனை' என்றதொரு அமைப்பை திரு. ப. லெட்சுமணன் உருவாக்கி, ஒவ்வொரு ஆண்டும் தமிழ் மொழியில் வெளிவந்த சிறுகதை, நாவல்களைத் திறனாய்வு செய்து சிறந்தவற்றிற்குப் பரிசளித்துச் சிறுகதை நாவல் வளர்ச்சிக்கு உதவி வருகிறார்.

நகரத்தார்கள் தாங்கள் நடத்திய இதழ்களிலும் பதிப்பகங்களிலும் சிறுகதைகள், நாவல்கள் ஆகியவற்றை வெளியிட்டு, நாவல், சிறுகதைகளை ஆதரித்தனர்.

7. 6. 6. மேடைத் தமிழ் :

நகரத்தார்களில் சிறந்த பேச்சாளர்கள் பலர் உள்ளனர். இவர்களால் மேடைத் தமிழ் வளர்ந்தது. இராய. சொக்கலிங்கனார், முரு.பழ.இரத்தினஞ் செட்டியார் போன்றோர், கேட்போர் பிணிக்கும் தகையவாய்ச் சமயச் சொற்பொழிவுகளை நிகழ்த்தினர். கம்பன் அடிப்பொடியால் மேடைத் தமிழ் பல புதிய முறைகளில் வளர்ந்தது. சொற்பொழிவுகள் நிகழ்த்தியும் பட்டிமண்டபம், கவியரங்கம் ஆகிய நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டும், ஏனைய பேச்சாளர்களைத் தங்கள் பகுதிகளில் பேசச் செய்தும், மாணாக்கர்களுக்குப் பேச்சுப் போட்டிகள் நடத்தி மேடைகளில் பேசுவதற்குப் பழக்கியும் நகரத்தார்கள் மேடைத் தமிழை வளர்த்து வருகிறார்கள்.

7. 7. இசைத்தமிழ் :

நகரத்தார்கள் இசைத் தமிழுக்குக் காலத்தால் தொண்டு செய்தனர். விசயநகர, நாயக்க மன்னர்கள் ஆட்சிக் காலமுதல் தமிழகத்தில் தெலுங்கும் வடமொழியுமே இசைத்துறையில் ஆட்சிசெய்தன. தமிழிசை மறக்கப்பட்டிருந்தது.

மறக்கப்பட்டிருந்த தமிழிசைக்கு நகரத்தார்கள் புத்துயிர் ஊட்டினர். நகரத்தார்களால் நடத்தப்பட்ட தேவாரப் பாடசாலைகள் தமிழிசையைப் போற்றின.

7. 7. 1. தமிழிசைத் தந்தை :

நகரத்தார்கள் அனைவருமே தமிழிசை வளர்ச்சியில் ஆர்வமுடையவர்களாக இருந்தனர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர். அண்ணாமலை அரசராவார். அவர் தன் ஆர்வத்தினாலும், உழைப்பாலும், வண்மையினாலும், வாடி வளர்ச்சியின்றி இருந்த தமிழிசைப் பயிருக்கு வான்மழையாக விளங்கினார். 1929-இல் சிதம்பரத்தில் இசைக் கல்லூரியை நிறுவி தகுந்த புலவர்களைக் கொண்டு, தமிழிசையைப் பயிற்றுவித்து தமிழகத்தில் இசைவாணர்களை உருவாக்கினார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தக்க புலவர்களைக் கொண்டு பழந்தமிழ்ப் பாடல்களையும், புதிய இசைப் பாடல்களையும் தொகுத்து நூல்களாக வெளியிட்டும், பாடச் செய்தும் நாடெல்லாம் தமிழோசை பரவச் செய்தார்.

மேலும் தமிழிசை இயக்கம், தமிழிசை விழாக்கள் ஆகியவை நடத்தி தமிழருக்குத் தமிழிசையே இனிதென முழங்கிய அண்ணாமலை அரசர் சென்னையில் 1942-இல் தமிழிசைச் சங்கத்தை ஏற்படுத்தினார். அச்சங்கம் ஆண்டுதோறும் இசை விழாவை நடத்தித் தமிழில் பாடச்செய்து இசைக் கலையை வளர்த்து வருவதோடு தேவாரப்பண் ஆராய்ச்சியையும் நடத்தி வருகிறது. பலவகைகளில் தமிழிசை மறுமலர்ச்சிக்கு ஊன்றுகோலாக இருந்த அண்ணாமலை அரசரை 'தமிழசைத் தந்தை' என்று அறிஞர்கள் போற்றுகின்றனர்.[47]

7. 7. 2. யாழ்நூல் :

இலங்கையைச் சேர்ந்த விபுலானந்தரின் தமிழ்ப் புலமையை அறிந்த அண்ணாமலையரசர், இமயமலையின் அடிவாரத்தில் இராமகிருஷ்ண மடத்துப் பணிகளைக் கவனித்துக் கொண்டிருந்த விபுலானந்த அடிகளைப் பெருமுயற்சியின் பேரில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்குத் தமிழ்ப் பணி செய்ய அழைத்துவந்தார்.[48] அதன் விளைவாக 'யாழ்நூல்' என்றொரு அருமையான இசைநூல் தமிழுலகுக்குக் கிடைத்தது. விபுலானந்தர் பதினான்கு ஆண்டுகள் அரிதின் முயன்று ஆக்கிய ஆய்வுநூல் யாழ்நூல். யாழ்நூலை விபுலானந்தர் இயற்றிக் கொண்டிருந்த போது நோய்வாய்ப்பட்டார். அப்போது நச்சாந்துபட்டி பெ. ராம. குடும்பத்தைச் சேர்ந்த சிதம்பரம் செட்டியார் பெருஞ்செலவு செய்து மருத்துவம் பார்த்ததோடு அந்நூல் வெளிவர எல்லா உதவியும் செய்துள்ளார்.[49]

1941 - இல் தேவகோட்டையில் சின்ன அண்ணாமலை தலைமையில் தமிழிசை மாநாடு நடந்தது. பொருள் தெரியாத பாடல்களைக் கேட்பதென்பது கண்கள் இல்லாதவர் யானையைக் கண்ட கதையாகத்தான் இருக்குமென எடுத்துக் கூறித் தமிழிசைப் பிரச்சாரம் தமிழகமெங்கும் நடைபெற்றது.[50] இந்த மாபெரும் இயக்கத்தால் தமிழ் மொழியும் தமிழிசையும் மக்கள் ஆதரவைப் பெற்றன.

தேவகோட்டையில் நடந்த தமிழிசை மாநாட்டின் விளைவாக, அண்ணாமலை அரசரின் ஆதரவில் 1942 - இல்

தேவகோட்டையில் தமிழிசைப் பள்ளி தோற்றுவிக்கப்பட்டது. நகரத்தார்கள் இப்பள்ளிக்குப் பொருளுதவி செய்தனர். இந்த இசைப் பள்ளியின் கிளை 1953-இல் காரைக்குடியில் தொடங்கப்பெற்றது. தமிழிசைக்கு அறக்கட்டளைகள் நிறுவியும்., தமிழிசை பற்றி பண்டிதமணி, மெ. சு. தி. தண்ணீர்மலைச் செட்டியார், வி. ஆர். எம். செட்டியார் போன்றோர் கட்டுரைகள் எழுதியும் மேடைகளில் பேசியும், விழிப்புணர்ச்சி ஏற்படச் செய்தார்கள்.

காரைக்குடியில் சா. கணேசன் தமிழிசைச் சங்கத்தைத் தொடங்கினார். மதுரை, பொள்ளாச்சி, கோவை, திருப்பூர் போன்ற ஊர்களிலும் நகரத்தார்களின் ஆதரவில் தமிழிசைச் சங்கங்கள் தோன்றின.

எந்தெந்த வகைகளிளெல்லாம் தமிழிசைக்கு ஆதரவு தெரிவிக்க முடியுமோ அந்தந்த வகைகளில் எல்லாம் தமிழிசைக்கு ஆதரவு தெரிவித்தனர் நகரத்தார்கள். தமிழிசையை ஆதரித்து ராஜாஜி போன்றோர் வெளியிட்ட கருத்துக்களை 'எது இசை' என்னும் பெயரில் தொகுத்து ஒரு நூலாக முல்லை முத்தையா வெளியிட்டார்.[51]

குமரன், செட்டிநாடு முதலிய இதழ்கள் தமிழிசை மலர்களை வெளியிட்டன. தேவகோட்டை வீர. லெ. சிந்நய செட்டியார், அமராவதிபுதூர் பாலகவி வெ.வயிநாகரம் செட்டியார், போன்றோர் இசைப் புலமையுடைய நகரத்தார்களில் குறிப்பிடத்தக்கவர்கள். பனையப்பட்டி வினைதீர்த்தான் செட்டியார் போன்றோர் தமிழிசைக் கச்சேரிகள் செய்து, தமிழிசை ஆர்வத்தை மக்களிடையே பரப்பினர்.

அமராவதிபுதூர் பாலகவி வெ. இராமநாதன் செட்டியார் தமிழிசைப் பாடல்கள் பலவற்றை இயற்றியுள்ளார்.

7. 8. நாடகத் தமிழ் :

முத்தமிழ் வளர்ச்சியில் முனைப்பாக இருந்த நகரத்தார்கள், நாடகத் தமிழுக்கும் பணியாற்றியிருக்கிறார்கள். படிப்பதற்குரிய நாடகங்கள், நடிப்பதற்குரிய நாடகங்கள், படிப்பதற்கும் நடிப்பதற்குமுரிய நாடகங்கள் என்று நாடகங்கள்

மூவகைப்படும். இம்மூன்று வகையான நாடகங்களையும் நகரத்தார்கள் படைத்திருக்கிறார்கள்.

மற்றவர்கள் நடத்திய நாடகங்களுக்கு நகரத்தார்கள் பேராதரவு காட்டியிருக்கிறார்கள். பள்ளத்தூரைச் சேர்ந்த வயிரம் அருணாசலம் செட்டியார் நாடகப் புரவலராக விளங்கினார். அவர் 'ஸ்ரீராமபாலகான விநோதசபை' என்ற ஒரு நாடக சபையை ஏற்படுத்தி, சமூக நாடகங்களையும் வரலாற்று நாடகங்களையும் பல ஊர்களில் நடத்தினார். நாடகக் கலை வளர்ச்சிக்காகப் பெரும் பொருள் செலவிட்டவர் அவர்.[52]

நகரத்தார்கள், செட்டிநாட்டு ஊர்கள் பலவற்றில் நாடகக் கழகங்களை ஏற்படுத்தி நாடகக் கலையை ஆதரித்துவந்தனர். 'முத்தமிழ் நிலையம்' என்ற பதிப்பகம் ஒரே மேடையில் இயல், இசை, நாடக நிகழ்ச்சிகளை நடத்தியது. 'அன்பு நடன சபை' என்ற ஒரு சபையை ஏற்படுத்தி அன்பு நிலையத்தார் சுத்தானந்த பாரதியாரின் நாடகங்களை நடத்தினர்.[53] டி.கே.எஸ். சகோதரர்களால் நடிக்கப்பெற்று இந்தியாவெங்கும் புகழ்பெற்ற 'ராஜராஜசோழன்' என்ற வரலாற்று நாடகத்தை எழுதியவர் கண்டனூர் அரு. இராமநாதன். தமிழ் நாடக உலகில் இந்த நாடகத்திற்குத் தனி இடம் உண்டு. கே.பி.எம். இராமநாதன் செட்டியார் என்பவர் 'பக்த நந்தனார்' வரலாற்றை நாடகமாகப் படைத்துள்ளார்.[54]

புதுவயல் சரசுவதி சங்கத்தின் அங்கமான சரசுவதி வித்தியாசாலை மாணாக்கர்கள் நாடக நடிகரான புதுவயல் பி. எஸ். வீரப்பாவின் உதவியோடு 'வசீகர சுந்தரி', 'அங்கும் இங்கும்', 'பொன்னி', 'தீனபந்து', 'தேசத்தொண்டு' போன்ற அக்காலத்தில் மிகவும் பேசப்பட்ட நாடகங்களை நடத்தி, செட்டிநாட்டுப் பகுதிகளில் நாடகக் கலை வளர்ச்சிக்கு உதவினர்.[55]

வ. சுப. மாணிக்கனார் 'நெல்லிக்கனி' முதலான நான்கு நாடகங்களை எழுதியுள்ளார். ஆறு. அழகப்பன் பல நாடக நூல்களை எழுதியுள்ளார். 'நாடகக்கலை' என்ற இதழையும் சிறிது காலம் நடத்தினார். அவருடைய 'திருமலை நாயக்கர்' வரலாற்று நாடகம் புகழ் பெற்றது.

7. 9. வானொலி வாயிலாக :

சென்னை வானொலியில் தமிழில் செய்தி வாசிப்பாளராகப் பணியாற்றியவர் மேலைச்சிவபுரியைச் சேர்ந்த ஜெயங்கொண்டான் ஆவார். இவர் வானொலி நாடகங்களில் நடித்துப் புகழ் பெற்றவர். கண்டனூர் சொக்கு சுப்பிரமணியன் தில்லி வானொலியில் தமிழ்ச் செய்திப் பிரிவில் பணியாற்றியவர்.

கம்பன் அடிப்பொடி சா. கணேசன்,காரைக்குடி கம்பன் விழா நிகழ்ச்சிகளை வானொலியில் ஒலிபரப்பச் செய்தும், சமயம், அறநெறி, இலக்கியம், கல்வெட்டுத் தொடர்பான நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு உரையாற்றியும் தமிழ்ப் பணி புரிந்துள்ளார்.

உள்நாட்டில் மட்டுமன்றி வெளிநாட்டு வானொலி, தொலைகாட்சி முதலியவற்றிலும் நகரத்தார்களின் தமிழ்ப் பணியைக் காணலாம். 1940 - இல் சோம. கதிரேசச் செட்டியார் என்பவர் இலங்கை வானொலியில் 'தனவணிகர் தன்மை' என்ற தலைப்பில் விரிவானதொரு உரை நிகழ்த்தியுள்ளார்[56]. தமிழகத்திலும் சிங்கப்பூர், மலேசியா வானொலிகளிலும், தொலைக்காட்சிகளிலும் நகரத்தார்கள் தமிழில் உரையாற்றியும், தமிழ்க் கலை நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டும் தமிழை வளர்த்து வருகிறார்கள்.

7. 10. திரைப்படத்துறை வாயிலாக :

இருபதாம் நூற்றாண்டின் மிகச் சக்திவாய்ந்த மக்கள் தொடர்பு சாதனமாகத் திரைப்படத்துறை விளங்குகிறது. திரைப்படத் தொழிலில் நகரத்தார் பலர் ஈடுபட்டுள்ளனர். இத்துறையையும் நகரத்தார்கள் தங்கள் தமிழால் வளப்படுத்தியிருக்கிறார்கள். திரையுலக மேதை ஏவி. மெய்யப்பச் செட்டியார், பாரதியார், பாரதிதாசன் பாடல்களைத் திரைப்படங்களின் மூலம், பாமரர்களிடையே பரப்பினார். சமுதாயத்திற்குத் தேவையான கருத்துக்களை எடுத்துச் சொல்ல, இத்துறையைப் பயன்படுத்திக் கொண்டார்.

கண்ணதாசன், பஞ்சு அருணாசலம் போன்றோர் பல படங்களுக்குத் திரைக்கதை வசனம் எழுதியுள்ளார்கள். தம்

திரையிசைப் பாடல்களால் மக்களைக் கவர்ந்தவர் கண்ணதாசன். திரைப்படத் தொடர்பான நூல்களை எழுதியுள்ள நகரத்தார்கள் திரை இதழ்களையும் நடத்தி வருகிறார்கள்.

காந்தியடிகள் வாழ்ந்த காலத்திலேயே காந்தியடிகளின் வாழ்க்கையைத் திரைப்படமாக எடுத்தவர் ஏ. கே. செட்டியார். அதற்குப் பின்னனிக் குரல் கொடுத்தவர் கம்பன் அடிப்பொடியாவார். பெரும் பொருள் கொடுத்து இப்படத்தை வெளிநாட்டினர் வாங்க முயன்றபோது, 'தேசப்பிதாவை விற்க மாட்டேன்' என்று கூறி இவர் மறுத்துவிட்டார்.[57]

7. 11. நகரத்தாரின் இதழியல் பணி :

இருபதாம் நூற்றாண்டில் தமிழ் பல துறைகளில் வளர்ச்சியடைந்துள்ளது. அவற்றுள் இதழியல் துறையும் ஒன்று. இதழியல் துறையின் வளர்ச்சிக்கு நகரத்தார்கள் அரும்பெரும் தொண்டாற்றியிருக்கிறார்கள். அவர்களின் பணிகள் தமிழ்மொழி வரலாற்றில் முக்கிய இடம் பெறுபவையாகும்.

நாள் இதழ்கள், வார இதழ்கள், திங்கள் இதழ்கள், ஆகிய அனைத்து வகை இதழ்களையும் நகரத்தார்கள் நடத்தியிருக்கிறார்கள். மற்றவர்கள் நடத்திய இதழ்களுக்கு உறுதுணையாக இருந்திருக்கிறார்கள்.

7. 11. 1. நாளிதழ்கள்:

தமிழில் தோன்றிய முதல் நாளிதழான 'சுதேசமித்திரனில்' பங்குதாரர்களாகச் சேர்ந்து ஆக்கமும் ஊக்கமும் அளித்தவர்கள் நகரத்தார்கள். சொ. முருகப்பா 'சண்ட மாருதம்' என்ற பெயரில் ஒரு நாளிதழை 1932-இல் தொடங்கி நடத்தினார்.[58]

தமிழ், தமிழினம், தமிழ்நாடு ஆகிய மூன்றின் வளர்ச்சியை மையமாகக் கொண்டு 1951 -இல் கருமுத்து தியாகராசனார் 'தமிழ்நாடு' என்ற தனித்தமிழ் நாளிதழைத் தொடங்கிப் பெருத்த பொருள் இழப்பையும் பொருட்படுத்தாது இருபத்தேழு ஆண்டுகள் நடத்தினார். இந்த இதழ் மா. இராசமாணிக்கனார், ஒளவை. துரைசாமிப்பிள்ளை, அ.கி.

பரந்தாமனார் போன்றோரின் எழுத்துக்களை வெளியிட்டு ஆதரித்தது. 'தமிழ்நாடு' இதழின் ஆசிரியர் உரையில் ஒவ்வொரு நாளும் ஒரு குறள் இடம்பெற்றது. 1967-இல் நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் தமிழ் மொழிக்காகப் போராடியவர்களைக் குறித்து எழுதியது. தமிழையே சிந்தனையாகக் கொண்ட இந்த இதழின் தூய தமிழ்ச் சொற்களுக்காகவே தமிழ் ஆர்வமுடையவர்கள் அதனை வாங்கிப் படித்துவந்தனர். இன்றைய தினசரி இதழ்களில் காணப்படும் நல்ல தமிழ்ச் சொற்களை உருவாக்கிய பெருமை 'தமிழ்நாடு' இதழுக்கே உரியது.[59]

குடியரசு, விடுதலை, நம்நாடு, பாரததேவி போன்ற இதழ்களுக்கும், திரு.வி.க , சுத்தானந்த பாரதியார், வ. ரா. சாமிநாத சர்மா, போன்ற பலர் நடத்தி வந்த இதழ்களுக்கும் பேராதரவு காட்டியவர்கள் நகரத்தார்கள்.

7. 11. 2. வார இதழ்கள் :

நகரத்தார்கள் ஆதரவால் ஏராளமான வார இதழ்கள் வெளிவந்தன. 'நாகை நீலலோசனி', என்ற இலக்கிய வார இதழ், மறைமலையடிகள் நடத்திய 'ஞானசாரம்', மதுரைக் கந்தசாமி கவிராயரை ஆசிரியராகக் கொண்ட 'வித்யாபாநு' பரலி சு.நல்லையப்பர் நடத்திய 'லோகோபகாரி' ஆகிய இதழ்கள் நகரத்தாரின் ஆதரவைப் பெற்ற வார இதழ்களில் சில.[60]

நகரத்தார்களால் தொடங்கப்பெற்ற முதல் வார இதழ் 'வைசியமித்திரன்' ஆகும். 1915 - இல் தேவகோட்டையிலிருந்து இராமநாதன் செட்டியார் என்பவர் தொடங்கினார்.[61] 1920-இல் தொடங்கப்பெற்ற 'ஊழியன்' வார இதழ் தேசிய இயக்கத்திற்குக் குரல் கொடுத்தது. வ.ரா., தி.ஜ.ர., புதுமைப்பித்தன், கொத்தமங்கலம் சுப்பு ஆகியோரை உருவாக்கியது 'ஊழியன்' இதழே. இலக்கியத் தரமுடையதாகவும், பல இலக்கியக் கட்டுரைகளைத் தாங்கியும் வெளிவந்த 'ஊழியன்' இதழ் தமிழ்க் கடல் இராய. சொக்கலிங்கனாரை ஆசிரியராகக் கொண்டு செம்மையாகச் செயல்பட்டது.

காரைக்குடியிலிருந்து வெளிவந்த 'குமரன்' என்னும் வார இதழை சொ. முருகப்பா, சமூக நலன்கருதி கால் நூற்றாண்டு

காலம் நடத்தினார். சமூகச் சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்பிய 'குமரன்' கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, பி. ஸ்ரீ. போன்ற பல இலக்கியவாதிகளை அறிமுகப்படுத்தியது. சுப்பிரமணிய பாரதியார், ரா. பி. சேதுப்பிள்ளை, தி. நா. சுப்பிரமணியன், டி. கே. சிதம்பரனார் ஆகியோரின் கட்டுரைகளை மிகுதியாக வெளியிட்டு அவர்கள் பெருமையைத் தமிழ் உலகுக்கு வெளிப்படுத்தியது.

தமிழ் மொழியில் முதன்முதலாகக் குழந்தைகளுக்கான இதழை வெளியிட்டவர்கள் நகரத்தார்களே.

7. 11. 3. திங்கள் இதழ்கள் :

புத்தகத் தொழிலிற்கும், பத்திரிகை உலகிற்கும் வழிகாட்டியாக விளங்கிய, இராயவரத்தைச் சேர்ந்த. வை.கோவிந்தன் 1939-முதல் 'சக்தி' என்னும் மாத இதழை' ஆங்கிலப் பத்திரிகைக்கு நிகராகப் பல வண்ணங்களில் அச்சிட்டு வெளியிட்டார். கல்வெட்டு, புவியியல், அறிவியல், கதைகள், நாடகங்கள், பிறமொழி இலக்கியங்கள், உலக நாடுகள் பற்றிய கட்டுரைகள், திரைப்படம் என்னும் பல பொருள்களைப் பற்றி எழுதி, பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் தங்கள் பொது அறிவை வளர்த்துக் கொள்ள இந்த இதழ் உதவியது. ஏ. கே. செட்டியார், சாமிநாத சர்மா, தி. ஜ. ர. அழகிரிசாமி, ரகுநாதன் போன்ற பல எழுத்தாளர்கள் இதன்மூலம் தமிழ் உலகுக்கு அறிமுகமானார்கள்.

குழந்தைகளுக்காக 'அணில்' என்னும் வார இதழையும், மகளிருக்காக 'மங்கை' என்னும் திங்கள் இதழையும் வை.கோவிந்தன் நடத்தினார். தொழில் முறையில் பல இன்னல்களை அனுபவித்துப் பெரும் பொருளை இழந்தபோதும், புத்தகத் துறையிலும், பத்திரிகைத் துறையிலும் உயர்ந்த இலட்சியங்களுடன் பணியாற்றியவர் வை. கோவிந்தன்.[62]

சைவத்தையும் தமிழையும் பரப்புவதற்காக 'சிவநேசன்' என்ற சமய இதழை பலவான்குடியிலிருந்து 1927-இல் நகரத்தார்கள் வெளியிட்டனர். இவ்விதழ், சைவச் சான்றோர்கள் எழுதிய, சைவ சமயத் தொடர்புடைய அரிய பல கட்டுரைகளை வெளியிட்டது.[63]

ஏ. கே. செட்டியார் 'குமரி மலர்' என்ற இதழை 1943-இல் தொடங்கி நாற்பது ஆண்டுகள் நடத்தித் தமிழ்ப்பணி புரிந்தார். தேசிய உணர்வை மக்களுக்குப் புகட்ட, காந்தியடிகள் போன்ற தேசியவாதிகளைப் பற்றிய கட்டுரைகளை வெளியிட்ட 'குமரி மலர்', பாரதியார் போன்றோரின் எழுத்துக்களையும் தேடித்தேடி வெளியிட்டது. ஒவ்வொரு இதழும் உலகப் பொன்மொழிகளைத் தாங்கி .வெளிவந்தது.[64] பெண்களின் கண்ணீர் துடைப்பதற்காக 'மாதர் மறுமணம்' என்னும் பத்திரிகையையும் நகரத்தார்கள் நடத்தியிருக்கிறார்கள்.[65]

'காதல்' என்னும் மாத இதழை கண்டனூர் அரு. இராமநாதன் நடத்தினார். பாலியல் உணர்வுகளை அறிவியல் முறைப்படியும், இலக்கியக் கண்ணோட்டத்தோடும் இந்த இதழ் விளங்கியது.

'தனவைசியன்', 'தனவணிகன்', 'செட்டிநாடு', ஆகிய இதழ்கள், பாரதிதாசன் கவிதைகளை வெளியிட்ட 'பொன்னி', கண்ணதாசனை ஆசிரியராகக் கொண்ட 'தென்றல்', தனித்தமிழ் இலக்கிய இதழாக வெளிவந்த 'அனல்' போன்ற இதழ்கள் நகரத்தார்கள் நடத்திய இதழ்களுள் குறிப்பிடத்தக்கவையாகும். தமிழில் மறுமலர்ச்சி இலக்கியங்களுக்கு வித்திட்ட 'பொன்னி' இதழை நடத்திய முருகு சுப்பிரமணியன், அரு. பெரியணன் ஆகியோர், அக்காலத்துத் தமிழ் இதழ்கள் தீபாவளி மலர் மட்டுமே வெளியிட்டுக் கொண்டிருந்தபோது, தமிழர் விழாவான பொங்கலை முன்னிட்டு 'பொங்கல் மலர்' வெளியிட்டு, இனக் காவலர்களாக விளங்கினார்கள்.[66]

இன்று ஆசியாவிலேயே அதிக விற்பனையாகும் குமுதம், தமிழ்வாணனால் உருவாக்கப்பட்ட கல்கண்டு ஆகிய வார இதழ்கள் நகரத்தார்களால் நடத்தப்படுபவையே. அவை தமிழக மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன. அதுதவிர, 'நகரத்தார் குரல்', 'நகரத்தார் மலர்', 'நகரத்தார் இதழ்' போன்ற நகரத்தார் சமூக இதழ்களையும் நகரத்தார்கள் நடத்தி வருகிறார்கள்.

பின்னாளில் சிறந்து விளங்கிய பல கவிஞர்களையும், எழுத்தாளர்களையும் நகரத்தார் நடத்திய இதழ்கள் உருவாக்கின. குமரன், தென்றல் போன்ற இதழ்கள் ஈற்றடி

கொடுத்து வெண்பாப் போட்டி வைத்து மரபுக் கவிஞர்களை உருவாக்கின.[67]

இதழியல் துறையில் ஈடுபட்டுத் தங்கள் பொருள்களை இழந்த நகரத்தார்கள் பலர். இருப்பினும் அவர்கள், சமுதாயத்திற்குப் பயன்படும் வகையில் தரமானதாக, தொண்டு மனப்பான்மையோடு இதழ்களை நடத்திவந்தார்கள்.

சிங்கப்பூரில் 'தமிழ்நேசன்', கொழும்பில் 'வீரகேசரி' போன்ற இதழ்களை நடத்தி, அயல்நாடுகளில், இதழியல் மூலமாகவும் தமிழ்ப் பணி புரிந்தனர் நகரத்தார்கள்.

7. 12. நகரத்தார்களும் பதிப்பகங்களும் :

நகரத்தார்கள், பல தமிழ் நூல்களைப் பதிப்பித்து, பதிப்பகத்துறை வாயிலாகவும் மொழிப் பணியாற்றியிருக்கிறார்கள். எண்ணிறந்த தமிழ் நூல்கள் வெளிவருவதற்கு மூலமாகவும் மூலதனமாகவும் இருந்து பெரும் பணியாற்றி, பல எழுத்தாளர்களைத் தமிழுலகுக்கு அறிமுகப் படுத்தியிருக்கிறார்கள். எழுத்தாளர்கள், சிந்தனையாளர்கள், கலைஞர்கள், கவிஞர்கள், அரசியல்வாதிகள் போன்றோரின் கருத்துக்கள் மக்களைச் சென்றடைய இப்பதிப்பகங்கள் வாயிலாக அமைந்தன.

தமிழகத்தில் உள்ள சுமார் முந்நூறு பதிப்பகங்களில் ஏறக்குறை இருநூற்று நாற்பது பதிப்பகங்கள் நகரத்தார் பதிப்பகங்களாகும். தேவகோட்டை நகரத்தார்கள் அதிகமாகப் பதிப்பகப் பணியில் ஈடுபட்டுள்ளார்கள்.

வை.கோவிந்தனின் சக்தி பிரசுராலயம், சின்ன அண்ணாமலையின் 'தமிழ்ப்பண்ணை', முல்லை முத்தையாவின் 'முல்லைப் பதிப்பகம்', ஆகியவை தமிழ்ப் பதிப்புத் துறைக்கு முன்மாதிரியாக விளங்கிய பதிப்பகங்களாகும். சக்தி வை. கோவிந்தன் போன்றோரின் முயற்சியால் உலகளாவிய அனைத்துத் துறைகளைப் பற்றியும் நூல்கள் வெளிவந்தன.

ஒரு சில பதிப்பகங்கள் குறிப்பிட்ட சில தமிழறிஞர்கள் நூல்களை வெளியிடுவதையே நோக்கமாகக் கொண்டிருந்தன. சான்றாக, 'அன்பு நிலையம்' சுத்தானந்த பாரதியாரின் நூல்களை

வெளியிடுவதற்காகவே தொடங்கப் பெற்றது. 'பொன்னி பதிப்பகம்' பாரதிதாசன் நூல்களை அதிகமாக வெளியிட்டது.

நவயுகப் பிரசுராலயம், குமரி மலர், காரியாலயம், பழனியப்பா பிரதர்ஸ், ஸ்டார் பிரசுரம், கமலா பிரசுராலயம், புதுமைப் பதிப்பகம், பாரி நிலையம், இலக்கியப் பதிப்பகம், செல்வ நிலையம், தமிழ்ப் புத்தகாலயம், கார்த்திகேயன் பிரசுரம், இன்பநிலையம், பழனி பிரசுரம், பாரதி பதிப்பகம், மலர் நிலையம், கலைவளர் மன்றம், சங்கப் பலகை, வள்ளுவர் பண்ணை, தமிழகம், செல்விப் பதிப்பகம், அழகுப் பதிப்பகம், அருணோதயம், மணிமேகலைப் பிரசுரம், அப்பர் புத்தக நிலையம், ஐந்திணைப் பதிப்பகம், பூங்கொடி பதிப்பகம், திருமகள் நிலையம், அபிராமி பப்ளிகேஷன்ஸ், வானதி பதிப்பகம், மணிவாசகர் பதிப்பகம், வெற்றிப் பதிப்பகம், சோமு நிலையம், பொன்முடி பதிப்பகம், மெய்யம்மை பதிப்பகம் மற்றும் பல நகரத்தார் பதிப்பகங்கள் தரமான தமிழ் நூல்களைப் பல்லாயிரக் கணக்கில் வெளியிட்டுள்ளன.

மலிவுப் பதிப்புக்களை அறிமுகப் படுத்தியவர்கள் நகரத்தார்கள். சக்தி காரியாலயத்தார் வெளியிட்ட 'பாரதியார் கவிதைகளைத் தொடர்ந்து, கணக்கற்ற நூல்கள் மலிவுப் பதிப்புக்களாக வெளிவந்துள்ளன.[68]

தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் தொடக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் பேராதரவாக இருந்தவர்கள் நகரத்தார்கள். மர்ரேராஜம் பதிப்பகத்தார் வெளியிடும் தமிழ் நூல்கள் சிறப்பாக வெளிவரத் துணைசெய்தவர்களுள் கம்பன் அடிப்பொடி குறிப்பிடத்தக்கவர்.[69]

செல்லுக்கும் கரையானுக்கும் இரையாகிக் கிடந்த ஓலைச் சுவடிகள் பல நகரத்தார்களால் நூல் வடிவம் பெற்றன. புதுவயல் சரசுவதி சங்கம், மெய்யம்மை பதிப்பகம் போன்றவை ஏட்டுச் சுவடிகளில் இருந்த பழந்தமிழ் நூல்களைப் பதிப்பித்தன. தனிப்பட்டோரும் பழைய நூல்களைப் பதிப்பித்து இருக்கிறார்கள். சொக்கநாதபுரம் பழ.சுப்பிரமணியன் செட்டியாரின் முயற்சியாலும் பொருளுதவியாலும் காளமேகப் புலவர் பாடிய 'திருவானைக்கா உலா' அச்சிடப்பட்டு வெளிவந்தது.[70]

ஆர்.பி.எம்.கனி என்பவர் பல நூல்களை எழுதியுள்ளார். அவருடைய முதல் நூலான 'அல்லாமா இக்பால்' என்ற தமிழ் நூலை மதவேறுபாடு கருதாமல் வெளியிட்டு ஆதரித்தவர் முல்லை முத்தையா.[71]

தேசிய விடுதலை உணர்வை ஊட்டும் 'பூட்டை உடையுங்கள்' என்ற நூலை தன் பதிப்பகத்தின் மூலம் வெளியிட்டதற்காக அன்றைய ஆங்கில அரசு, சின்ன அண்ணாமலைக்கு ஆறு மாத காலம் சிறைத் தண்டனை கொடுத்தது. மேலும் 'ஜப்பானைப் பார்', 'வங்கப் பஞ்சம்' என்ற நூல்களை வெளியிட்டதற்காகவும் சின்ன அண்ணாமலை தண்டிக்கப்பட்டார்.[72] இதன்மூலம் பதிப்பகத் துறையில் ஈடுபட்ட நகரத்தார்கள் வணிக நோக்கில் அல்லாமல் தமிழுக்கும் தமிழ்நாட்டிற்கும் செய்யும் தொண்டாகவே கருதி பதிப்பகத்துறையில் ஈடுபட்டனர் என அறியமுடிகிறது.

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்மொழி வளர்ச்சியில் நகரத்தார் பதிப்பகங்களின் பங்கு மிகப் பெரிது.

7. 13. சமயம் வாயிலாகத் தமிழ்ப்பணி :

சைவத்தையும் தமிழையும் இரு கண்களாகக் கொண்ட நகரத்தார்கள் சமயப் பணி வாயிலாகவும் தமிழ்ப் பணியாற்றியிருக்கிறார்கள்.

பக்தி இலக்கியங்கள் பலவற்றை இயற்றியும், இயற்றுவித்தும், பலதலபுராணங்களையும், சமய இலக்கியங்களையும் பதிப்பித்தும், சமயத் தொடர்பான இதழ்கள் நடத்தியும், சைவ இலக்கியங்கள் பலவற்றிற்கு உரை எழுதியும், சமயச் சொற்பொழிவு ஆற்றியும், தேவாரம், திருவாசகம், பட்டினத்தார் பாடல்கள், அபிராமி அந்தாதி போன்ற நூல்களைப் பரிசாக வழங்கியும் ஓதுவார்களை ஆதரித்தும் சைவத்தோடு தமிழும் பெருகத் தொண்டாற்றியுள்ளனர்.

'சிவநேசர் திருக்கூட்டம்' என்ற அமைப்பை நகரத்தார்கள் 1923-இல் ஏற்படுத்தினார்கள். இத்திருக்கூட்டத்தின் குறிக்கோள் 'சைவமும் 'தமிழும் தழைத்தினிது ஓங்குக' என்பதாகும். இக்கூட்டத்தினர் ஐயாயிரம் ரூபாய்கள் வைப்பு முதலாக வைத்து

செட்டிநாட்டு ஊர்களுள் ஒன்றான பலவான்குடியில் 'சிவநேசன்' என்னும் பெயரால் ஓர் அச்சியந்திரசாலையை நிறுவி சிவநேசமும் செந்தமிழும் வளர 'சிவநேசன்'என்ற பெயரில் இதழொன்று வெளியிட்டனர். சிவநேசர் திருக்கூட்டத்தைச் சேர்ந்தவர்களும் தனிப்பட்ட முறையில் தேவாரம் திருவாசகம் போன்ற நூல்களை அச்சிட்டு இலவசமாக வழங்கியுள்ளனர்.[73]

இந்து மதாபிமான சங்கம் சார்பில் 'மாணிக்கவாசகர்' போன்ற சைவ சமய குரவர் வரலாறுகளைச் சிறு சிறு நூல்களாக வெளியிட நகரத்தார்கள் பொருளுதவி செய்துள்ளார்கள். சன்மார்க்க சபையும் சைவத்தை வளர்க்கு முகமாக சில நூல்களை வெளியிட்டது.

இராமச்சந்திரபுரம் தீ. நா. மு. முத்தையா செட்டியார் 1923 இல் இராமலிங்க அடிகளாரின் கையெழுத்துப்பிரதிகளை வரவழைத்துச் சரிபார்த்து திருவருட்பாவை அச்சிட்டு இலவசமாக வெளியிட்டார். அன்றைய மதிப்பில் இந்நூலின் அடக்கவிலை முப்பது ரூபாயாகும். இவரே திருவாசகத்தை நாடெங்கும் பரப்பும் வகையில் மலிவுப் பதிப்பாக வெளியிட்டார்.[74]

பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் திருவாசகத்திற்கு எழுதிய 'கதிர்மணி விளக்க உரை' கவிஞர் கண்ணதாசனின் 'அர்த்தமுள்ள இந்துமதம்' போன்றவை நகரத்தார்களால் தமிழுக்குக் கிடைத்த சமயத் தொடர்பான நூல்களுள் குறிப்பிடத் தக்கவையாகும்.

நகரத்தாரின் முயற்சியால்தான் கடந்த நூற்றைம்பது ஆண்டுகளாகக் காசியில் தேவார ஓசை கேட்டுக் கொண்டிருக்கிறது.

முரு. பழ. இரத்தினஞ் செட்டியார் போன்றோர் சமயச் சொற்பொழிவுகளைத் தமிழகத்திலும், அயல் நாடுகளிலும் நிகழ்த்தி சைவத்தின் வாயிலாகத் தமிழையும் தமிழ்மூலம் சைவத்தையும் பரப்பும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

பழனி, வைத்தீசுவரன்கோயில், திருச்செந்தூர் போன்ற முருகன் தலங்களுக்கு செட்டிநாட்டிலுள்ள தங்கள் தங்கள் ஊர்களிலிருந்து நடந்துசென்று வழிபடுவதை வழக்கமாகக் கொண்டுள்ள நகரத்தார்கள் முருகனைக் குறித்த வழிநடைப் பாடல்களையும், கருப்பர் போன்ற சிறு தெய்வங்களைக் குறித்த பாடல்களையும் ஏராளமாக இயற்றியுள்ளனர்.

சமயக் காழ்ப்பில்லாமல் மற்ற சமயங்களையும் நகரத்தார்கள் போற்றியதால் 'ஏசுகாவியம்' தமிழுக்குக் கிடைத்தது. வைணவக் காப்பியமான கம்பராமாயணம் தமிழகமெங்கும் மக்களால் படிக்கப்படுவதற்கு முக்கியக் காரணமாக இருந்தவர் கம்பன் அடிப்பொடியாவார்.

7. 14. வெளி மாநிலங்களில் தமிழ்ப்பணி :

தமிழகத்திற்கு வெளியேயும் இயன்ற அளவில் தமிழ் மொழியைப் பரப்பும் பணியை நகரத்தார்கள் மேற்கொண்டிருக்கிறார்கள். கொச்சி, எர்ணாகுளம், கோட்டயம், திருவனந்தபுரம், கள்ளிக்கோட்டை போன்ற கேரள நாட்டு ஊர்களில் உள்ள தமிழ்ச் சங்கங்களுக்கு அங்கங்கு தொழில்புரியும், பணிசெய்யும் நகரத்தார்கள் ஆதரவாக இருந்து வருவதோடு அகில கேரள தமிழ்ச் சங்கம் உருவானதற்கும் காரணமாயிருந்தார்கள்.[75]

ஆசன், மைசூர், பம்பாய், பரோடா, சூரத், ஜெய்ப்பூர், தில்லி, கல்கத்தா ஆகிய நகரங்களில் உள்ள தமிழ்ச் சங்கங்களின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் பெரும்பாலும் நகரத்தார்களே காரணமாக இருந்தனர். தமிழறிஞர்களை வரவழைத்துச் சொற்பொழிவுகள் நிகழ்த்தச் செய்தும், தமிழ்ப் பள்ளிகள் போன்றவற்றை நடத்தியும், அங்கு செல்லும் தமிழர்களுக்கு உறுதுணையாக இருந்தும் பணிபுரிந்து வருகிறார்கள்.

கேரளப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறை அமைக்கப் பொருளுதவி செய்தவர் வள்ளல் அழகப்பர். கல்கத்தாவிலுள்ள இரவீந்திரநாத்தாகூர் நிறுவிய சாந்தினிகேதனில் உள்ள விசுவபாரதி பல்கலைக் கழக நூல் நிலையத்திற்கு அண்ணாமலை அரசர் இரண்டாயிரம் தமிழ் நூல்களை

அன்பளிப்பாகக் கொடுத்துள்ளார்.[76] அதன் விளைவாக விசுவபாரதி பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறை ஏற்பட்டது. வள்ளல் அழகப்பர், அண்ணாமலை அரசர் போன்றோரின் இத்தகைய செயல்கள், அயல் மாநிலங்களில் தமிழ்க் கல்வி வளர வழிவகுத்தன.

செல்லுமிடமெல்லாம் கோயில் கட்டும் இயல்புடைய நகரத்தார்கள், வணிக நோக்கில் கல்கத்தா சென்றபோது அங்கு சிவாலயம் ஒன்று கட்டினர். அவ்வாலயத்தில் மார்கழி மாதந்தோறும் தேவார திருவாசகத்தை இசையோடு ஓத ஏற்பாடு செய்திருந்தனர். அதன் விளைவால் வங்கமொழி பேசுபவர்களில், சில தமிழறிஞர்கள் உருவாயினர். இளமையில் தேவார திருவாசகங்களைக் கேட்டதன் விளைவாகத் தமிழைப் படிக்க வேண்டும் என்று விரும்பி, முறையாகத் தமிழ் பயின்று பின்னாளில் சிறந்த தமிழறிஞராகவும், பன்மொழிப் புலவராகவும் விளங்கியவர் கல்கத்தாவைச் சேர்ந்த டாக்டர் சுனீத்குமார் சட்டர்ஜியாவார். அவர் 'நன்னெறி முருகன்' என்ற தமிழ்ப் பெயரைச் சூட்டிக் கொண்டார்.[77] அவரைப் பின்பற்றிப் பல வங்க இளைஞர்கள் தமிழ் பயின்றனர்.

கல்கத்தாவில் பணிபுரியும் கா. சு. மணியன் சிறந்த கவிஞர். கல்கத்தாவில் தமிழர்கள் அதிகமாக வசிக்கும் பகுதிக்கு பாரதியாரின் பெயரைச் சூட்ட வேண்டும் என்று முயற்சி செய்தவர்களுள் குறிப்பிடத்தக்கவர். அதற்கு மூவாயிரம் பேர்கள் எதிர்ப்புத் தெரிவித்து மனுக் கொடுத்தபோது, கா. சு. மணியன் ஒன்பதாயிரம் பேரிடம் ஆதரவாகக் கையெழுத்து வாங்கி எதிர் மனுக் கொடுத்து வெற்றிபெற்றார். அதன் விளைவாக 'லேக் ரோடு' என்பது 'கவி பாரதிசாலை' என்று மாற்றப்பட்டது. மேலும் கா. சு. மணியனின் முயற்சியால் பாரதி சாலையில் உள்ள விவேகானந்தர் பூங்காவில் பாரதியாரின் சிலை அமைக்கப்பட்டது.[78]

7. 15. அயல் நாடுகளில் தமிழ்ப்பணி :

திரைகடலோடித் திரவியம் தேடப் பல நாடுகளுக்கும் சென்ற நகரத்தார்கள் தேமதுரத் தமிழோசை அங்கெல்லாம் பரவும் வகை செய்வதிலும் முன்னின்றார்கள்.

எல்லா நாடுகளிலும் வசித்த நகரத்தார்கள் தமிழ் நாட்டிலிருந்து. தமிழறிஞர்களை வரவழைத்துச் சொற்பொழிவாற்றச் செய்வதையும், விழாக்கள் நடத்தி அறிஞர்களைப் பெருமைப் படுத்துவதையும் வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

7. 15. 1. இலங்கை :

இலங்கை வாழ் நகரத்தார்கள், கொழும்பில் 'வீரகேசரி' என்ற தமிழ் நாளிதழை மிகச் சிறப்பாக நடத்தினார்கள். இலங்கையைச் சேர்ந்த யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர், விபுலானந்த அடிகள், சுவாமிநாத பண்டிதர் போன்ற தமிழ்ச் சான்றோர்களை ஆதரித்தும், அவர்கள் நூல்கள் வெளிவரப் பொருளுதவி செய்தும் உள்ளார்கள். ஈழத் தமிழ்க் குழந்தைகளுக்காக 'சிறுவர் உலகம்' என்ற மாத இதழை நகரத்தார்கள் நடத்தினர்.[79]

7. 15. 2. பர்மா :

ஆங்கிலம், பர்மிய மொழிகள் ஆகியவற்றோடு தமிழ் மொழியையும் கற்பிக்க, பர்மிய அரசின் இசைவோடு, தமிழ்ப் பள்ளிகளைத் தொடங்கி நடத்தியவர்கள் நகரத்தார்கள்.

நகரத்தார்கள் பர்மாவில் 'தனவணிகன்' என்ற இதழை நடத்தியும், 'ஜோதி', ஜெய்ஹிந்த்' போன்ற தமிழ் இதழ்களுக்கு ஆதரவாகவும் இருந்தார்கள். பல ஊர்களில் நூல் நிலையங்களை ஏற்படுத்தி அதில் தமிழ் நூல்களையும், தமிழ் இதழ்களையும் இடம்பெறச் செய்து பர்மாவிலுள்ள தமிழரிடையே தமிழ் உணர்வை வளர்த்தனர். பர்மாவிலிருந்து பல தமிழ் நூல்களை நகரத்தார்கள் வெளியிட்டிருக்கிறார்கள். காஞ்சிபுரம் குமரகோட்டத்தைச் சேர்ந்த சோணாசலபாரதி என்ற புலவரைக் கொண்டு 'கம்பைச் சந்நிதிமுறை' என்ற நூலைப் பாடச் செய்து 1903-இல் வெளியிட்டார்கள்.[80]

பாடுவார் முத்தப்பரின் 'ஜெயங்கொண்டார் சதகத்' தை 1893-இல் 'பிரிட்டிஷ் பர்மா அச்சேந்திரசாலை'யில் பதிப்பித்து வெளியிட்டிருக்கிறார்கள். முத்தப்பரின் 'திருமுக விலாசம்' என்ற

நூலை ஸ்ரீ பாலசுப்பிரமணிய அச்சியந்திர சாலையில் 1910-இல் பதிப்பித்து வெளியிட்டனர்.

'வணிகர்குல திலகங்கள் பர்மியருடைய நகரில் வந்து வர்த்தகஞ் செய்கின்ற தன்மையைச் சொல்லும் நொண்டிச்சிந்து' 'பர்மா டாப்பு நொண்டிச் சிந்து', 'இந்தியா, பர்மா மலாய் டாப்பு நொண்டிச் சிந்து' என்று நொண்டிச் சிந்து நூல் வகையையும் பதிப்பித்திருக்கிறார்கள். 1880-1930க்கு இடையில் சமயத் தொடர்பான பல செய்யுள் நூல்களை பர்மாவில் நகரத்தார்கள் வெளியிட்டிருக்கிறார்கள். அந்நூல்கள் பெரும்பாலும் பதிகம், ஊசல், மாலை, பிள்ளைத்தமிழ் போன்ற சிற்றிலக்கிய வகையைச் சேர்ந்தவை. அவற்றை நகரத்தார்களும், நகரத்தார் வேண்டுகோளுக்கிணங்கப் பிறரும் பாடியிருக்கிறார்கள்.

அயல் நாடுகளில் சமயம் வளர்த்த வரலாற்றை இச்சிற்றிலக்கியங்கள் தெரிவிக்கின்றன. அவற்றுள் சிலவற்றின் பெயர்கள் கீழே தரப்பட்டுள்ளன.

1. இரங்கோன் பசுமந்தான் நகரில் எழுந்தருளியுள்ள சிவசுப்பிரமணியக் கடவுள் மீது கூறும் குமார சம்பத்துத் திருப்புகழ்.
2. இரங்கோன் எழுநகர குல பூபாலர்கள் நடாத்திவரும் ஸ்ரீ சண்முகநாதக் கடவுள் தைப்பூசாரோகண இரதபந்த வெண்பா.
3. இரங்கோன் மொகல் வீதி ஆறறை முருகன் திருப்பதிகம்.
4. கம்பை சிவசுப்பிரமணிய மாலை.
5. இரங்கோன் விநாயகர் பேரில் திருத்தாண்டகம்.
6. கம்பை வடிவேலர் பேரில் கொம்பிலாப் பஞ்சரத்தினத் திருப்புகழ்.
7. இரங்கோன் முகல்வீதி ஆறறைக்கு மேல்வீட்டில், திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுள் வெள்ளி ரதோற்சவ விநோதரசமாலை.

8. இரங்கோன், வணிகர் மாளிகையில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமியின் திருச்சதகம்.

9. இரங்கோன் திருத்தலப் பஞ்சரத்னப் பதிகம்.

10. இரங்கோன் காளியம்மன் பதிகம்.

'சைவமும் தமிழும் தழைத்தினிது ஓங்குக' என்ற கொள்கையை வெளி நாடுகளிலும் மறக்காமல் பரப்பியவர்கள் நகரத்தார்கள். பொருளீட்டப் பர்மாவுக்குச் சென்று அங்கும் தமிழ்ப்பணிபுரிந்த நகரத்தார்களுள் காந்தி அண்ணாமலை, கவியரசர் பெரி. இலக்குமணச் செட்டியார் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். கம்பை தனவைசிய கல்விக் கழகத்தினர் பெருமுயற்சியின் பேரில், திருக்குறளை பர்மிய மொழியில் வெளியிட்டு, இலவசமாக வழங்கினர்.

7. 15. 3. மலேசியா சிங்கப்பூரில் தமிழ்ப்பணி :

மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் நகரத்தார்கள் செய்த தமிழ்ப்பணி, தமிழ்மொழி வரலாற்றில் சிறப்பிடம் பெறுவதாகும். மலேசியாவில் தமிழ்க் கல்வி மூலம் தமிழைப் பரப்ப நகரத்தார்கள் பெருமுயற்சி எடுத்துக் கொண்டார்கள். 1930-இல் 'திருவள்ளுவர் செந்தமிழ்க் கலாசாலை' என்ற ஒரு பள்ளியை ஈப்போவில் நிறுவி அங்குள்ள தமிழர்கள் தமிழ்க் கல்வி பயில வகை செய்தார்கள்.

மலேசியாவில் வாழும் தமிழர்களுக்குத் தமிழ் படிக்க வாய்ப்பும் வசதிகளும் செய்து கொடுக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தில் உ. அரு. அருணாசலம் செட்டியாரால் 1948-இல் 'மலேயா தமிழ்ப்பண்ணை' என்றதொரு அமைப்பு உருவாகியது. இப்பண்ணை, தமிழ் இலக்கிய வகுப்புக்கள் நடத்தியும், தமிழறிஞர்களைக் கொண்டு சொற்பொழிவுகள், தமிழ் மாநாடுகள், தமிழ் விழாக்கள், தமிழில் பேச்சுப் போட்டிகள் நடத்தியும் தமிழ் ஆர்வத்தை அங்குள்ள மக்களுக்கு ஊட்டியது.[81]

மலாயாப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறை ஏற்பட உறுதுணையாய் இருந்தவர்கள் நகரத்தார்கள். மலாயாப் பல்கலைக் கழகத்தில் வடமொழியை அடிப்படையாகக் கொண்டு 'இந்திய இயல் புலம்' அமைக்கப்பட வேண்டும் என்று கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியார் கருத்துத் தெரிவித்தார். அக்கருத்தை எதிர்த்து

மலேயாவாழ் தமிழர்கள் 'தமிழ் எங்கள் உயிர்' என்ற இயக்கத்தைத் தொடங்கினர். புதிய பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறை தொடங்கப் பெறவேண்டும் என்றும் அதற்கான நிதியைத் தாங்கள் திரட்டித் தருவதாகவும் கூறி மலேயா வாழ் தமிழர்கள் போராட்டம் நிகழ்த்தினர். அதன் விளைவாக கோலாலம்பூர் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறை உருவாகியது. அந்த இயக்கத்தில் முழு மூச்சாக உழைத்த நகரத்தார்கள் அதிக அளவில் நிதி வசூலித்துக் கொடுத்தனர்.[82]

தமிழ் மொழியில் நாளிதழ்கள், வார இதழ்கள், திங்கள் இதழ்கள் ஆகியவற்றை நடத்தி அங்குள்ள தமிழர்களுக்குத் தமிழ் உணர்வை ஊட்டினர். 1924-இல் தொடங்கப்பட்டு நகரத்தாரால் நடத்தப்பட்டு வந்த 'தமிழ் நேசன்' என்ற நாளிதழின் பணி மிகச் சிறப்பானது. 'தமிழ் நேசன்' 'தமிழ்முரசு' ஆகிய பத்திரிகைகளில் நகரத்தார்கள் துணை ஆசிரியராகப் பணிபுரிந்திருக்கிறார்கள்.

அங்கு பல கோயில்களைக் கட்டிய நகரத்தார்கள், அக்கோயில்களில் குடி கொண்டிருக்கும் கடவுளர்கள் மீது செய்யுள் நூல்கள் இயற்றியும் இயற்றுவித்தும் நூல்களாக வெளியிட்டிருக்கிறார்கள்.

'சிங்கை வடிவேலர் ஸ்தோத்திரம்' (1880)
'தண்டாயுதபாணி பிள்ளைத் தமிழ்' (1917)
'கோலமா நகர் குமாரக் கடவுள் போற்றிப் பதிகமும்
பத்துமலை வடிவேலர் பதிற்றுப் பத்தந்தாதியும்' (1931)
'ஸ்ரீ வாலைப்பூர் முத்துமாரியம்மை பதிகம்'
'கிள்ளான் தெண்டாயுதபாணி கோயில் மகோற்சவ சிறப்பு'
'பினாங்கு தண்ணீர்மலை முருகன் ஆடுமயில் பாடல்' (1931)

ஆகியவை அவற்றுள் ஒரு சிலவாகும்.

மலேயாவாழ் நகரத்தார்களில் தமிழறிஞர்கள் பலர் உள்ளனர். அவர்கள் தமிழில் பல துறைகளில் நூல்கள் இயற்றியும், பிற மொழி நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தும் வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டும், சொற்பொழிவுகள் நிகழ்த்தியும் மலேயாவில் தமிழை வளர்த்து வருகிறார்கள். அவர்களுள் இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில்

வாழ்ந்த உ. அரு. அருணாசலம் செட்டியார், பெ. நா. மு. முத்துப் பழனியப்பச் செட்டியார், கா. இராமநாதன் செட்டியார், சுப. நாராயணன் முருகு சுப்பிரமணியன், முரு. பழ. இரத்தினஞ் செட்டியார் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

மலாக்கா உ. அரு. அருணாசலம் செட்டியார் மலேயா தமிழ்ப்பண்ணையை ஆரம்பித்தும், 'தமிழ்க்கொடி' என்ற இதழ் நடத்தியும், மலேய மொழியில் திருக்குறளை மொழிபெயர்க்க ஏற்பாடு செய்தும், திருவள்ளுவர் நூல் நிலையத்தைத் தொடங்கி நடத்தியும், சொற்பொழிவுகள் நிகழ்த்தியும் மாநாடுகள் நடத்தியும் அயராது தமிழுக்குத் தொண்டு செய்தார்.[83]

'மலேயாவின் தோற்றம்' என்ற நூலை பெ. நா. மு. முத்துப் பழனியப்பச் செட்டியார் ஜே. பி. எழுதியுள்ளார். மலேயாவைப் பற்றித் தமிழில் முதலில் விரிவாக வெளிவந்த நூல் இது.

தமிழகத்தில் 'குமரன்' இதழில் பணியாற்றி 'பொன்னி' இதழை நடத்திய முருகுசுப்பிரமணியன் அந்த அனுபவத்தைக் கொண்டு மலேயாவில் 'தமிழ்நேசன்' 'தமிழ்முரசு' ஆகிய இதழ்களில் பணியாற்றினார். அவ்விதழ்கள் மூலம் மலேசியத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தார். சிறந்த கட்டுரை யாசிரியரும் நூலாசிரியருமான முருகு சுப்பிரமணியன் 'புதிய சமுதாயம்' என்ற தரமான இதழை நடத்தினார். பயண இலக்கியத்துறை மலையகத்தில் செழித்து வளர்ந்திட அவருடைய பயணக் கட்டுரைகள் வழி செய்தன.[84]

மலேயாவில் சைவத்தையும் தமிழையும் வளர்த்தவர்களுள் குறிப்பிடத் தக்கவரான கா. இராமநாதன் செட்டியார் 'மலேயா தமிழ்ப்பண்ணை' க்கு உறுதுணையாக இருந்தார். பேச்சாற்றல் மிக்கவர். சமயத் தொடர்பான பல நூல்களையும், 'நான் கண்ட மலாயா' என்ற பயண நூலையும் எழுதியுள்ளார். மேலும் 'சோலை', 'தமிழ்க் கொடி' ஆகிய இதழ்கள் மூலமும் அன்னார் மொழிக்குத் தொண்டாற்றினார்.

மலேசியத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பாடுபட்ட மற்றொருவர் சுப. நாராயணன். படைப்பிலக்கியத்தின் பல்வேறு துறைகளிலும் தொண்டு புரிந்த அவர் கதை வகுப்புக்கள் நடத்தி மலேசியத் தமிழ் எழுத்தாளர் பரம்பரையை உருவாக்கினார்.

மலேசிய வானொலியில் சுப. நாராயணன் படைத்த நாடகங்கள் பல.[85]

சித்தாந்த வித்தகர் முரு. பழ. இரத்தினஞ் செட்டியார் சமயத் தொடர்பான பல நூல்களைப் படைத்துள்ளார். பன்னிரு திருமுறைகளைப் பற்றியும் சைவ சமய தத்துவக் கருத்துக்களைப் பற்றியும் பிற இலக்கியங்களைப் பற்றியும் மிக எளிதாகக் கேட்போர் மனங்கொள்ளும் வகையில் சொற்பொழிவாற்ற வல்லவர். அவர் தமிழகத்திலும் மலேயாவிலும் நூற்றுக்கணக்கான சமயச் சொற்பொழிவுகளை நிகழ்த்தியுள்ளார்.

இராம. சுப்பையா, சுப. திண்ணப்பன், இலக்குமி மீனாட்சி சுந்தரம் ஆகியோர் மலேயா பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியர்களாகப் பணியாற்றித் தமிழை வளர்த்தனர். அவர்களுள், சுப. திண்ணப்பன் பல கட்டுரைகளையும், இராம. சுப்பையா, இலக்குமி மீனாட்சி சுந்தரம் ஆகியோர் பல நூல்களையும் எழுதியுள்ளனர். இராம. சுப்பையா 'பேச்சுத் தமிழ்' பற்றி ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற்றவர்.

மேற்சொன்னவர்கள் தவிர டத்தோ ஆதி. நாகப்பன், மெ. சிதம்பரம், எஸ். ஆர். எம். பழனியப்பன், எஸ். பி. இராமநாதன், முத்து விஸ்வநாதன், மு. சேதுராமன், வி. எஸ். முத்தையா, ரெ. ராமசாமி, சித. இராமசாமி, பி. எல். சிங்காரம், பெரி. முத்தையா, சுப. சிதம்பரம், இசையாசிரியர் சங்கீதபூஷணம் உடையப்பா, பெரி. முத்தையா போன்ற நகரத்தார்கள் பலர் மலேயாவில் தமிழ் எழுத்தாளர்களாகவும், கவிஞர்களாகவும், இலக்கியவாதிகளாகவும், திறனாய்வாளர்களாகவும், ஆராய்ச்சியாளர்களாகவும், நாடக ஆசிரியர்களாகவும் உள்ளனர்.[87]

சிங்கப்பூரில் ஆட்சி மொழிகளுள் ஒன்றாகத் தமிழ் விளங்குகிறது. கல்வி நிலையங்களிலும், வானொலி, தொலைக்காட்சி முதலியவற்றிலும் சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கின்றது. சிங்கப்பூரில் தமிழ் வளர்ச்சியில் நகரத்தார்களுக்கு முக்கிய இடம் உண்டு. வயி. சண்முகஞ் செட்டியார், இராம. பெரி. பெரியகருப்பன் செட்டியார், மெ. திரு. அரசு, மெ. சிதம்பரம், நா. கருப்பையா, அருண் செங்குட்டுவன் போன்றோர் சிங்கப்பூரில் தமிழ்ப் பணிக்கு உறுதுணையாக இருந்தார்கள். 'தமிழ் முரசு' ஆசிரியர் தமிழவேள் கோ. சாரங்கபாணியுடன் இணைந்து தமிழ்ப்பணி செய்தவர் வயி. சு.

சண்முகஞ் செட்டியார். தமிழ் முரசின் துணை ஆசிரியராக மெ. சிதம்பரம் என்பவர் பல்லாண்டுகளாகப் பணியாற்றித் தமிழ்ப்பணி செய்தார். வயி. சண்மும் செட்டியாரும், செந்தமிழ்ச்செல்வர் இராம. பெரி. பெரியகருப்பன் செட்டியாரும் தமிழறிஞர்களைப் பேணுவதில் சிறந்து விளங்கினர். மெ. திரு. அரசு இலக்கிய அறிவியல் தொடர்பான கட்டுரைகளையும், பல வானொலி நாடகங்களையும் படைத்துள்ளார். 'சிங்கப்பூர் தமிழ் இயக்கம்', 'சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர் கழகம்', 'சிங்கப்பூர் தமிழர் சீர்திருத்த இயக்கம்', ஆகிய அமைப்புக்களோடு தொடர்பு கொண்டு நகரத்தார்கள் சிங்கப்பூரில் தமிழ்மொழி வளர்ச்சிக்கு உதவினர்.[88]

7. 15. 4. பிற நாடுகளில் :

மறப்பறியாத் தமிழ் நெஞ்சமுடைய நகரத்தார்கள் தாங்கள் சென்ற நாடுகளில் எல்லாம் இயன்ற அளவில் தமிழோடு தொடர்பு வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இலண்டன் தமிழ்ச் சங்கம் உருவாவதற்கு முக்கியக் காரணமாக இருந்தவர்களுள் ஒருவர் டாக்டர் அழகப்பா அழகப்பன் ஆவார். அமெரிக்காவிலும், அவர் தமிழ்ப் பணியைத் தொடர்ந்து செய்தார். பி.பி.சி. வானொலியில் தமிழில் பல உரைகள் நிகழ்த்தியுள்ள அவர், அமெரிக்காவிலுள்ள தமிழ் அமைப்புகளுக்கு உறுதுணையாக இருந்து வருகிறார்.

நியூயார்க் தமிழ்ச் சங்கம், சிக்காக்கோ தமிழ்ச் சங்கம் போன்றவற்றில் நகரத்தார்கள்தான் தலைவர், செயலர் பதவிகளிலிருந்து பணியாற்றி வருகிறார்கள். உலகெங்கும் உள்ள தமிழர்களின் குரலாக, அமெரிக்காவிலிருந்து வெளியாகும் 'தமிழ் உலகம்' என்ற இதழோடும் நகரத்தார்கள் பங்கு கொண்டிருக்கின்றார்கள். இந்த இதழின் ஆசிரியர் குழுவில் ஒருவராக கலைத்தந்தை கருமுத்து தியாகராசனாரின் பெயரர் கருமுத்து. கே. எம். தியாகராசன் இருந்து வருகிறார்.[89]

7. 16. முடிவுகள் :

1. நகரத்தார்களின் பல்வகைப் பணிகளுள் மொழிப் பணியும் ஒன்று.

2. தாய்மொழிப் பற்றுடைய நகரத்தார்கள். தமிழ் மொழியின் வளர்ச்சிக்குப் பல வகைகளிலும் தொண்டாற்றி யிருக்கிறார்கள்.

3. தமிழ் ஆர்வலர்களான நகரத்தார்கள் தங்கள் இல்லங்களுக்கும், வீதிகளுக்கும், தங்கள் தொழில் நிறுவனங்களுக்கும், பள்ளிகள், நூல் நிலையங்கள் இன்ன பிறவற்றிற்கும் தமிழ்ப் புலவர்களின் பெயர்களைச் சூட்டியும், பழந்தமிழ் நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டும், மங்கல நாட்களில் தமிழ் நூல்களைப் பரிசுகளாக அளித்தும் தமிழ்ப் புலவர்களின் நினைவைப் போற்றியுள்ளனர்.

4. செட்டிநாட்டு மக்கள் பல இலக்கியச் சொற்களையும்,தூய தமிழ்ச் சொற்களையும், பொருத்தமான மொழிபெயர்ப்புச் சொற்களையும் வழக்கில் பயன்படுத்துவதைக் காணலாம்.

5. வடமொழி, இந்திமொழி ஆகிய மொழிகளால் தமிழ்நாட்டில், தமிழ்மொழிக்கு ஊறு ஏற்பட்ட போதெல்லாம், உரிமைக் குரல் கொடுத்து தமிழ் மொழிக் காவலர்களாக விளங்கியிருக்கிறார்கள்.

6. சன்மார்க்க சபை, இந்துமதாபிமான சங்கம், கம்பன் கழகம் போன்ற அமைப்புக்களின் மூலம் இலக்கியச் சொற்பொழிவுகள், நூல்கள் வெளியிடுதல் முதலிய தொண்டுகளைச் செய்து தமிழை வளர்த்து வருகிறார்கள்.

7. தமிழ்ப் பள்ளிகள், தமிழ்க் கல்லூரிகள், பிற கல்வி நிலையங்கள், பல்கலைக் கழகங்கள் மூலம் தமிழ்ப் ப்ணியாற்றி வருகின்றனர்.

8. தமிழையும் தமிழ்ப் பண்பாட்டையும் உலகறியச் செய்வதை நோக்கமாகக் கொண்ட அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்ப்பணி சிறப்பானது.

9. பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் இலக்கியப் போட்டிகள் நடத்திப் பரிசளித்தும், அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் நடத்தியும், சிறந்த தமிழ்மொழிப் படைப்புக்களுக்குப் பரிசளித்தும், நகரத்தார்கள் தமிழ்மொழி வளர ஊக்கப்படுத்தி வருகிறார்கள்.

10. நகரத்தார்களில் பலர் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும், தமிழாசிரியர்களாகப் பணிபுரிந்து, தமிழை வளர்த்து வருகிறார்கள்.

11. தமிழ்ப் புரவலர்களாகிய நகரத்தார்கள், தமிழ்ப் புலவர்களை ஆதரித்துப் போற்றியும், அவர்களுக்கு உற்றுழி உதவியும், அவர்களை உலகுக்கு அறிமுகப்படுத்தியும், அவர்கள் நூல்கள் வெளிவரப் பொருளுதவிகள் செய்தும் தமிழ் இலக்கியத் துறையை வளப்படுத்தியிருக்கிறார்கள்.

12. படைப்புத் துறையிலும் நகரத்தார்கள் சிறந்து விளங்குகின்றனர். பழைய இலக்கிய வகைகளோடு, இருபதாம் நூற்றாண்டில் பல துறைப் படைப்புக்களிலும் நகரத்தார்களின் பங்கைக் காணலாம், நகரத்தார்களில் பலர் புலவர்களாக, கவிஞர்களாக, எழுத்தாளர்களாக, மேடைப் பேச்சாளர்களாக, ஆராய்ச்சியாளர்களாக, திறனாய்வாளர்களாகச் சிறந்து விளங்குகின்றனர்.

13. தமிழ் மொழியில் பயண இலக்கியம், குழந்தை இலக்கியம் ஆகியவற்றிற்கு வித்திட்டு வளர்த்தவர்கள் நகரத்தார்கள்.

14. அண்ணாமலை அரசரின் தலைமையின் கீழ் நகரத்தார்கள் தமிழ் இசைக்குக் காலத்தால் தொண்டு செய்தனர்.

15. ஏவி. எம். மெய்யப்பச் செட்டியார், கவிஞர் கண்ணதாசன் போன்ற நகரத்தார்கள் திரைப்படத்துறை மூலம் சிறந்த தமிழ்ப்பணியாற்றி, சாதனைகள் படைத்துள்ளனர்.

16. நகரத்தார்களின் இதழியல் பணி சிறப்பானது. சிறந்த தமிழ் எழுத்தாளர்கள் பலர், நகரத்தார்கள் நடத்திய இதழ்களில் எழுதிப் பழகியவர்களே.

17. நகரத்தார்கள் பதிப்பகத்துறை மூலமாகச் செய்த மொழிப்பணி குறிப்பிடத்தக்கது. தமிழகத்திலுள்ள பதிப்பகங்களில் பெரும்பான்மையானவை நகரத்தார் பதிப்பகங்களே. தமிழ்ப் புலவர்கள், தமிழறிஞர்கள் ஆகியோரின் படைப்புக்களை நூல்களாக வெளியிட்டு அவர்களை ஆதரித்தனர். நகரத்தார்கள், பாரதியார், பாரதிதாசன், சுத்தானந்தபாரதியார் ஆகியோரின் படைப்புக்களை வெளியிடுவதற்காகவே சில பதிப்பகங்களை ஏற்படுத்தினர்.

18. சைவத்தையும் தமிழையும் இரு கண்களாகக் கொண்ட நகரத்தார்கள் சைவத்தின் மூலம் தமிழையும், தமிழ்மூலம் சைவத்தையும் வளர்த்தார்கள்.

19. நகரத்தார்கள், தமிழகத்தில் மட்டுமல்லாமல், தென்னிந்தியாவிலும், வடஇந்தியாவிலும், வெளி நாடுகளிலும் தமிழ்ப் பணி புரிந்து, தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தார்கள்; செய்து வருகிறார்கள்.

20. தமிழ்மொழி வரலாற்றில், 19, 20ஆம் நூற்றாண்டுகளில், நகரத்தார்கள், தமிழ் மொழிக்குச் செய்த பணி நிலைத்த இடம்பெறுவதாகும்.

அடிக்குறிப்புகள் :

1. சோமலெ. **செட்டிநாடும் செந்தமிழும்**, வானதி பதிப்பகம், முதற்குறிப்பு, பக். 467, 1984.

2. **காந்தி மெய்யப்பர் நூற்றாண்டு விழா மலர்**, 'காந்தி மெய்யப்பர்' கட்டுரை, இராம. பெரி. பெரி. பெரியகருப்பன் செட்டியார், ப. 62. 1986.

3. வி. என். சிதம்பரம் செட்டியார், **'நகரத்தார் குரல்'** 'காலம் மறக்க முடியாத காசி விசுவநாதன் செட்டியார்' நேர்காணல், எல். சுந்தரம், ஆகஸ்ட் 1982, ப. 14.

4. மேலது. 'கொடி பிடித்த அரசர்' கட்டுரை, எஸ். எஸ். தென்னரசு, நவம்பர் 1983.

5. மேலது, ஆகஸ்ட் 1993, ப. 30.

6. பேராசிரியர் ச. மெய்யப்பன் கோவிலூர் மடாலயத்தில் 12.12.92. அன்று நடந்த 'சிந்தனைப் பூங்கா' நிகழ்ச்சியில் சொற்பொழிவாற்றியபோது கூறியது.

7. **சபைக் கட்டுரைகள்**, 'சன்மார்க்க சபையின் தொண்டு' கட்டுரை வ. சுப. மாணிக்கம், சன்மார்க்க சபை வெளியீடு, 1962, ப. 96.

8. மேலது, பக். 98, 99.

9. மேலது, ப. 101.

10. சோமலெ. **செட்டிநாடும் செந்தமிழும்**, வானதி பதிப்பகம், முதற்பதிப்பு. 1984, பக் 62, 63.

11. சோமலெ. (ப.ஆ) **கோவிலூர் திருக்குட நீராட்டு மலர்**, கோவிலூர் மடாலய ஆண்டவர் மன்றம், 1978, ப. 128.

12. **பாரதியார் கவிதைகள்**, 'ஹிந்து மதாபிமான சங்கத்தார்' பூம்புகார் பிரசுரம், முதற்பதிப்பு, 1976, பக். 242, 243.

13. 'சோமலெ. **செட்டிநாடும் செந்தமிழும்**, வானதி பதிப்பகம், முதற் பதிப்பு, 1984, ப. 281.

14. வி. என். சிதம்பரம் செட்டியார், **நகரத்தார் குரல்**, 'காலம் மறக்க முடியாத காசி விசுவனாதன் செட்டியார், நேர்காணல், எல். சுந்தரம், ப. 14.

15. சோமலெ. **செட்டிநாடும் செந்தமிழும்** வானதி பதிப்பகம், 1984, ப. 147.

16. சாமிநாதையர், உ. வே., **'நல்லுரைக் கோவை'** முதற் பாகம், ஸ்ரீ தியாகராச விலாச வெளியீடு, ஏழாம் பதிப்பு, 1958, ப. 23.

17. மேலது, ப. 24.

18. சோமலெ. **செட்டிநாடும் செந்தமிழும்**, வானதி பதிப்பகம், 1984, ப. 108.

19. மேலது, ப. 175.

20. மேலது, பக் 186-189.

21. **முருகப்பனார் மணிவிழா மலர்**, இந்து மதாபிமான சங்கம், காரைக்குடி -1, 23. 8. 1953, ப. 6.

22. சோமலெ. **செட்டிநாடும் செந்தமிழும்**, வானதி பதிப்பகம், 1984, பக். 180-183.

23. மேலது, பக். 102, 103.

24. மேலது, ப. 179.

25. கதிரேசன், இராம. சோம. **தன வணிகர் தன்மை** செட்டிநாடு நூற்பதிப்புக் கழகம், தேவகோட்டை, 1940, சுத்தானந்த பாரதியார் கடிதம் ப. 14.

26. சோமலெ. **செட்டிநாடும் செந்தமிழும்**, வானதி பதிப்பகம், 1984. பக். 183-186.

27. மெய்யப்பன், ச. **சோமலெ.** திருமண அன்பளிப்பு, மணிவாசகர் பதிப்பகம், 1988, ப. 36.

28. சோமலெ. **செட்டிநாடும் செந்தமிழும்**, வானதி பதிப்பகம், 1984, பக். 116-118.

29. மேலது, ப. 105.

30. திருநாவுக்கரசு, **மறை. 'மறைமலையடிகள் வரலாறு,'** கழக வெளியீடு, 1959, பக். 830.

31. சோமலெ. **செட்டிநாடும் செந்தமிழும்**, வானதி பதிப்பகம், 1984, பக். 95-100.

32. இராமசாமிச் செட்டியார் ராம. உ. **ஸ்ரீமத் சொக்கலிங்க ஐயா அவர்கள் சரித்திரம்**, ஸ்ரீ மெய்கண்ட சித்தாந்த வித்தியாசாலை, 1964, ப. 47.

33. பண்டிதமணி பிள்ளைத் தமிழ், காந்தி பிள்ளைத் தமிழ், அறிவியல் சூடி, தமிழ் சூடி, முத்துச் சூடி ஆகியவற்றை முறையே சொ. சொ. மீ. சுந்தரம், இராய. சொக்கலிங்கனார். ச. மெய்யப்பன், வ. சுப. மாணிக்கனார், ரெ. முத்துக் கணேசன் ஆகியோர் இயற்றியுள்ளனர்.

34. சோமலெ. **செட்டிநாடும் செந்தமிழும்**, வானதி பதிப்பகம், 1984, ப. 297.

35. மேலது, ப. 334.

36. மேலது, பக். 290-296.

37. மேலது, ப. 238.

38. மேலது, ப. 479.

39. சோமலெ. நேர்காணலின்போது கூறியது. 1, 2-6-1984.

40. சோமலெ. **செட்டிநாடும் செந்தமிழும்**, வானதி பதிப்பகம், 1984, ப. 658.

41. மேலது, ப. 667.

42. மேலது, ப. 651.

43. மேலது, ப. 155.

44. மேலது, ப. 253.

45. மேலது, பக். 585-550.

46. மேலது, ப.479.

47. அருணாசலம் பிள்ளை, மு. **தமிழ்ப் பெரு வள்ளல்,** தமிழ்மனை, அண்ணாமலை நகர், இரண்டாம் பதிப்பு, 1952, பக். 86-97.

48. சோமலெ. **செட்டிநாடும் செந்தமிழும்,** வானதி பதிப்பகம், 1984, ப. 79-80.

49. மேலது, ப. 110.

50. **தினமணிகதிர்**, 11. 4. 80, 'நகரத்தார் சிறப்பிதழ்' 'கோபுரம் போல் உயர்ந்த குலவணிகர்' கட்டுரை, குன்றக்குடி பெரிய பெருமாள், ப. 22.

51. சோமலெ. **செட்டிநாடும் செந்தமிழும்,** வானதி பதிப்பகம், 1984, ப. 331.

52. சோமலெ. **செட்டிநாடும் செந்தமிழும்,** வானதி பதிப்பகம் ப. 314.

53. மேலது, ப. 613.

54. மேலது, ப. 479.

55. ஸ்ரீ சரசுவதி சங்கம் - மணிவிழா, ஸ்ரீ சரசுவதி வித்தியாசாலை பொன்விழா சிறப்பு மலர், புதுவயல், 1982,. 'பொன் விழாக் காணும் வித்தியா சாலை, கட்டுரை, பெரி. வீர. இராம. பெரியணன், பக்க எண் இல்லை.

56. கதிரேசர் வழங்கிய 'வானுரை **'தன வணிகர் தன்மை'** என்ற நூலாக, வெளிவந்திருக்கிறது. செட்டிநாடு நூற்பதிப்புக் கழகம், தேவகோட்டை, 1940ல் வெளியிடப் பெற்றது.

57. வி. என். சிதம்பரம் செட்டியார், **நகரத்தார் குரல்,** 'தேசப் பிதாவை விற்காத செட்டியார், கட்டுரை, சொ. சொ. மீ. சுந்தரம், அக்டோபர் 83.

58. முருகப்பனார் மணிவிழா மலர், ஹிந்து மதாபிமான சங்கம், காரைக்குடி 1953, கி. ஆ. பெ. விசுவநாதம், கட்டுரை, 'தமிழாசிரியர்' ப. 22.

59. வி. என். சிதம்பரம் செட்டியார், **நகரத்தார் குரல்,** 'என்னை வளர்த்த தமிழ்நாடு' கட்டுரை, எல். சுந்தரம், பக். 29,30.

60. சோமலெ. **செட்டிநாடும் செந்தமிழும்**, வானதி பதிப்பகம், 1984, ப. 338.
61. மேலது, ப. 339.
62. மேலது, பக். 341-346.
63. மேலது, ப. 348.
64. சிதம்பரம் செட்டியார், வி. என். '**நகரத்தார் குரல்**,செப்டம்பர் 93, பக். 21-30.
65. சோமலெ. **செட்டிநாடும் செந்தமிழும்**, வானதி பதிப்பகம், 1984, ப. 348.
66. மேலது, ப. 385.
67. மேலது, பக். 341, 346.
68. மேலது, ப. 321.
69. மேலது, ப. 214.
70. சோமலெ. **செட்டிநாடும் செந்தமிழும்**, வானதி பதிப்பகம், 1984, ப. 656.
71. மேலது, ப. 332.
72. மேலது, ப. 329.
73. சிவநேசர் திருக்கூட்டம், ஐந்தாவது ஆண்டு அறிக்கைப் பத்திரம், குமரன் அச்சுக்கூடம், காரைக்குடி, 1928.
74. சோமலெ. **செட்டிநாடும் செந்தமிழும்**, வானதி பதிப்பகம், 1984. ப. 108.
75. மேலது, ப. 355, 356.
76. அருணாசலப் பிள்ளை, மு. **தமிழ்ப் பெரு வள்ளல்**, இரண்டாம் பதிப்பு, 1952, 'தமிழ்மனை', அண்ணாமலை நகர், ப. 137.
77. சோமலெ. **செட்டிநாடும் செந்தமிழும்** , வானதி பதிப்பகம், 1984, ப. 359.
78. மேலது, பக். 360 & 361.
79. மேலது, பக் 363 & 364.

80. மேலது, ப. 371.

81. மேலது, ப. 377.

82. மேலது, பக். 381 & 382.

83. மேலது, பக் 377 & 378

84. இலக்குமி மீனாட்சி சுந்தரம், **இலக்கியப் பாலம் - பங்கும் பணியும்,** தேமா பதிப்பகம், 1993, பக். 123 -133.

85. மேலது, பக். 135-140.

86. மேலது, பக் 111-118.

87. சோமலெ. **'செட்டிநாடும் செந்தமிழும்,'** வானதி பதிப்பகம், 1984, வானதி பதிப்பகம், 1984, பக். 383 - 400.

88. மேலது, பக். 414-418.

89. மேலது, ப. 421.

8. நகரத்தாரின் பிறதுறை அறப்பணிகள்

சமூகம் வேறு, தாம் வேறு என்று எண்ணாமல் தேர்ந்த அறிவுடன் சிந்தித்துச் செயல்பட்ட நகரத்தார்கள் இயன்ற அளவு மக்களுக்கு நன்மைகளைச் செய்தார்கள். கட்டாயத்துக்காகக் கொடுப்பது, புகழுக்காகக் கொடுப்பது என்ற நிலைகளைக் கடந்து சமுதாயத்தின் தேவை அறிந்து கடமையுணர்வுடன் அறப்பணிகளைச் செய்தார்கள்.

8. 1. மருத்துவத் துறையில் :

செட்டிநாட்டில் நகரத்தார்கள் வசிக்கும் ஊர்களில் தேவகோட்டை, காரைக்குடி தவிர மற்ற அனைத்து ஊர்களும் கிராமங்களே. தங்கள் பகுதிகளில் வாழும் மக்கள் நோய்வாய்ப்பட்டால், மருத்துவ வசதிகள் கிடைக்காமல் படும் துன்பங்களையும் மேனாட்டார் ஆங்காங்கு மருத்துவச் சாலைகள்அமைப்பதையும் கண்ட நகரத்தார்கள் கிராமப் பகுதியில் உள்ள மக்கள் நோயற்ற வாழ்வு வாழவும் தம் பகுதியில் மருத்துவமனைகள் இல்லாத குறையைப் போக்கவும் முற்பட்டு சுமார் எண்பது ஊர்களில் இலவச மருத்துவமனைகளையும், சுகாதார நிலையங்களையும் ஏற்படுத்தினர்.

8. 1. 1. மேனாட்டு முறை - மருத்துவமனைகளும் மகப்பேறு மருத்துவ மனைகளும் :

1915 - இல் கடியாபட்டியில் நிறுவப்பட்ட பி. கு. நா. மருத்துவ மனைதான் மேனாட்டு முறைப்படி நகரத்தார்கள் நிறுவிய முதல் மருத்துவமனை என்பர். மகப்பேற்றுக்கு முன்னும் பின்னும் மகப்பேறு காலத்திலும் கிராமங்களிலுள்ள தாய்மார்களுக்கு உதவிபுரியவும் சுகாதாரத்தின் அவசியத்தை எடுத்துச் சொல்லவும் பெண்களுக்கென்று மகப்பேறு மருத்துவமனைகளையும், தாய் - சேய் நல விடுதிகளையும் நகரத்தார்கள் நிறுவினர். அந்தவகையில் கானாடுகாத்தானில் அண்ணாமலை அரசர் 1916 - இல் நிறுவிய 'லேடி பெண்லண்டு'

மருத்துவமனை தான் பெண்களுக்கான மருத்துவ மனைகளுள் முதலாவதாகும். அதைத் தொடர்ந்து 1945க்குள் தேவகோட்டை, காரைக்குடி, பாகனேரி, நாட்டரசன்கோட்டை, பூலாங்குறிச்சி, வலையபட்டி ஆகிய பல ஊர்களில் மகப்பேறு மருத்துவ மனைகளை நகரத்தார்கள் நிறுவினர்.

நகரத்தார்கள் நிறுவிய மருத்துவமனைகளில் அந்தக் காலத்திலேயே போதுமான மருந்துகளும், கருவிகளும் இருந்தன. கடியாபட்டி இராமச்சந்திரபுரம் மருத்துவ மனையில் 'எக்சுரே' பிரிவும் இருந்தது குறிப்பிடத்தக்கது.[1]

நகரத்தார்களில் சிலர், மற்றவர்கள் மருத்துவமனைகள் கட்டத்தேவையான இடத்தை நன்கொடையாகக் கொடுத்துள்ளனர். சிலர், மருத்துவமனைகள் கட்டி அரசாங்கத்திடம் ஒப்படைத்து நடத்திவரச் செய்தனர். தேவகோட்டைக்கு அருகில் சோமநாதபுரத்தில் உள்ள காச நோய் மருத்துவமனை தேவகோட்டை சமீன்தார், ஏ.எல். ஏ. ஆர். சோமநாதன் செட்டியாரின் நிலக்கொடையால் உருவானதாகும்.[2]

நகரத்தார்கள் பலர் சேர்ந்தும், தனித்தும் மருத்துவமனைகளை நிறுவி உள்ளார்கள். 'சக்கந்தி' போன்ற ஊர்களில் நகரப் பொதுவில் கட்டப்பட்ட மருத்துவ நிலையங்களும் உள. கானாடுகாத்தான், காரைக்குடி, தேவகோட்டை, பூலாங்குறிச்சி போன்ற ஊர்களில் ஒன்றுக்கும் மேற்பட்ட மருத்துவமனைகளை நகரத்தார்கள் நிறுவியுள்ளார்கள்.

அரசாங்கம் நிறுவிய மருத்துவ நிலையங்களுக்குத் தேவையான உதவியையும் நகரத்தார்கள் செய்துள்ளார்கள். பொன்னமராவதியிலுள்ள அரசாங்க மருத்துவமனையில் நோயாளிகளுக்கான படுக்கைகளை நகரத்தார்கள் அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். காரைக்குடியில் உள்ள அரசாங்கப் பொது மருத்துவமனைக்கு நகரத்தார்கள் பெருமளவில் பொருளுதவி செய்துள்ளனர்.

மக்கள் நலப்பணியில் தம்மை முற்றிலுமாக ஈடுபடுத்திக் கொண்ட பிச்சப்பா சுப்பிரமணியம் அமராவதிபுதூரில் தம் இல்லத்திலேயே மருத்துவமனையை ஏற்படுத்தி, தானே

சிகிச்சையும் அளித்து வந்தார்.[3]

முன்பு கோயில்களைச் சார்ந்து ஆதுலசாலைகள் இருந்ததுபோல நகரத்தாரின் ஒன்பது கோயில்களுள், இளையாத்தங்குடிக் கோயில் 1949 முதல் தாய் - சேய் நல மருத்துவமனையையும், பிள்ளையார்பட்டிக் கோயில் ஒரு மருத்துவமனையும் நடத்தி வருகின்றது.

பல ஊர்களிலுள்ள நகரத்தார் சங்கங்கள் ஆங்காங்கு இலவச மருத்துவ முகாம்களை நடத்தி ஏழை மக்களுக்கு மருத்துவ உதவிகள் செய்து வருகின்றன.

காரைக்குடியைச் சேர்ந்தவரும், நாட்டு நலத் தொண்டருமான ஆறு. ஆ. ராம. சொக்கலிங்கம் செட்டியார் தம் தந்தை இறந்தபோது இறுதிச் சடங்கன்று, தந்தையின் நினைவாக, தந்தையின் பெயரால் 'இராமநாதன் மருத்துவ மனையை' ஏற்படுத்தினார்.[4] அதுமட்டுமல்லாமல் சுகாதாரத்தின் இன்றியமையாமையைக் கருத்திற் கொண்டு 1937 - இல் காரைக்குடியில் 'சொக்கலிங்கம் சுகாதார நிலையம்' ஒன்றை ஏற்படுத்தி, அதன் தலைவராகப் பணியாற்றினார். அச்சுகாதார நிலையத்தின் திறப்புவிழாவின்போது, 'சுகாதார முறைகள்' என்னும் நூல் ஒன்றை அச்சிட்டு மக்களுக்கு இலவசமாக வழங்கினார். தமிழகத்தில் முதல் முதலாகத் தோன்றிய சுகாதார நிலையம் என்றும், இந்தியாவில் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது என்றும் பாராட்டுப் பெற்ற நிலையம் அது.[5]

செட்டிநாட்டுப் பகுதிகளில் மட்டுமல்லாமல், நகரத்தார்கள் தாங்கள் தொழில் கருதிச் சென்ற பிற இடங்களிலும் மருத்துவசாலைகளை அமைத்து மக்கள் நலப் பணியை மேற்கொண்டனர். பெரியார் மாவட்டம் 'பெருந்துறை' என்ற இடத்திலுள்ள காசநோய் மருத்தவமனைக்குப் பெரும் பொருள் செலவிட்டு, கட்டிடம் கட்டிக் கொடுத்தவர் தேவகோட்டை பி. எஸ். சோமசுந்தரம் செட்டியார் ஆவார்.

பள்ளத்தூரில் தம் தந்தையார் நிறுவிய மருத்துவமனையால் தம் வட்டார மக்கள் பயன்பெறுவதைக் கண்ட அ. மு. முருகப்பச்

செட்டியார், அம்மாதிரி மருத்துவமனையைத் தாம் தொழில் நடத்தும் பகுதிகளிலும் ஏற்படுத்த விரும்பி அறக்கட்டளை ஒன்றை நிறுவி, அதன்மூலம் அம்பத்தூரில் 'ஸர் ஜவன் ஸ்டெடி போர்டு' மருத்துவமனையை நிறுவினார். அதனால், முருகப்பரின் மிதிவண்டித் தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்களும் அப்பகுதி மக்களும் பயன் பெற்றனர். அதுபோலவே அழகப்பரும், கருமுத்து தியாகராசச் செட்டியாரும் தாங்கள் நிறுவிய ஆலைகளைச் சுற்றியுள்ள பகுதிகளில் வாழும் மக்களும், தொழிலாளர்களும் நலம்பெறும் பொருட்டு மருத்துவமனைகளை நிறுவினர்.

8. 1. 2. சித்த மருத்துவம் :

நகரத்தார்கள் ஆங்கில மருத்துவமனைக்கு மட்டுமல்லாமல், சித்த மருத்துவம் போன்றவற்றிற்கும் உதவியுள்ளனர். கீழச்சிவல்பட்டி, இராம. மு. சோம. சோமசுந்தரம் செட்டியார் காஞ்சிபுரத்திலுள்ள ஒரு சித்த வைத்திய சாலைக்குப் பெரும் பொருள் கொடுத்து உதவியுள்ளார்.[6] எர்ணாகுளம் மகாராஜா கல்லூரியின் நாட்டு மருத்துவ ஆராய்ச்சிக்கு வள்ளல் அழகப்பர் ரூபாய் எண்பதாயிரம் கொடுத்துள்ளார்.[7]

8. 1. 3. யோகப் பயிற்சி :

நோயின்றி வாழவும், உடம்புக்குள்ளே உறுபொருள் காணவும் உதவுகின்ற யோகாசனத்தை வளர்க்குமுகமாக நகரத்தார் இனத்தைச் சேர்ந்த யோகி சா. அ. அ. இராமையா, 'கிரியா பாபாஜி சங்கம் ஒன்றைத் தோற்றுவித்து அன்னிய நாடுகளிலும் கிளைகள் அமைத்து யோகாசனப் பயிற்சியை மருத்துவ முறையாக வளர்த்து வந்தார்.[8]

இன்னும் பலர் ஆங்காங்கே சிறுசிறு ஊர்களிலும் ஆரம்ப சுகாதார நிலையங்களை, அறக்கட்டளைகளை நிறுவி நடத்தி வருகின்றனர். கண்டனூர்க் காந்திமதி மருத்துவமனையும், எழுவன்கோட்டையில், தேவகோட்டை சேவு. அண்ணாமலைச் செட்டியார் நடத்திவரும் ஆரம்ப சுகாதார நிலையமும் இவ்வகையில் குறிப்பிடத்தக்கவை.

உயிர் நலம் கருதிச் செய்துவரும் கல்வி, கோயில் ஆகிய திருப்பணிகளோடு உடல் நலம் கருதும் மருத்துவப் பணியும் நகரத்தார்களின் கவனத்தைக் கவர்ந்தது குறிப்பிடத்தக்கது.

8.2. நீர்நிலை அறங்கள் :

நகரத்தார்கள் கோயில் தழுவிய பணிகளாகக் குளம் வெட்டும் பணியை மேற்கொண்டார்கள் என்று ஆய்வாளரால் முன்பு கூறப்பட்டது. அது தவிர சமூக வாழ்க்கையின் அமைப்புக்கு மிகவும் அவசியமான நீர்நிலை வசதிகளையும் நகரத்தார்கள் மக்களுக்குச் செய்து கொடுத்திருக்கிறார்கள்.

நகரத்தார்கள் குடியேறிய பாண்டிய நாட்டுப் பகுதிகளில் வளமான ஆறுகள் இல்லை, மழையும் குறைவு, அதனால் வானம்பார்த்த பூமியான அப்பகுதிகளில் எப்போதாவது பெய்யும் மழைநீரைத் தேக்கிவைத்துக் குடிக்கவும், குளிக்கவும், உழவுத் தொழிலுக்கும், பிற தேவைகளுக்கும் பயன்படுத்தும் வகையில் நகரத்தார்கள், பாண்டிய நாட்டில் பண்டுதொட்டு மன்னர்களும் மற்றவர்களும் செய்ததுபோல ஊருணிகள், குளங்கள், சேங்கைகள் வெட்டியும், கிணறுகள் தோண்டியும், மேல்நிலை நீர்த்தொட்டிகள் கட்டியும் தண்ணீர் கிடைக்க வழி வகைகள் செய்தார்கள். அதுமட்டுமல்லாமல் முன்பே தோண்டப்பட்ட ஊருணிகள், குளங்கள் ஆகியவை மண்மேடிட்டுத் தூர்ந்து விடும்போது, தூர்வாரியும், ஆழப்படுத்தியும், குளக்கரையை உயர்த்தியும் வந்துள்ளார்கள்.

8. 2. 1. ஊருணிகள் :

செட்டிநாட்டிலும் அதன் சுற்றுப்புறங்களிலுமுள்ள ஊருணிகளில் பெரும் பாலானவை நகரத்தார்கள் உண்டாக்கியதாகவோ அல்லது புதுப்பித்ததாகவோ இருப்பதைக் காணலாம். அவை குடிநீர் அளித்தன என்பதை ஊருணி என்ற சொல்லே காட்டும். 'திருவேட்பூருடையான் ஊருணி'[9] 'அளகப்பெருமாள் ஊருணி',[10] 'பட்டணசாமி ஊருணி'[11] ஆகியவை கல்வெட்டுக்கள் மூலமாக அறியப்படும் நகரத்தார்களால் உருவாக்கப்பட்ட பழமையான ஊருணிகளுள் சிலவாகும்.

நீர்மட்டம் கணக்குப் பார்த்துக் கட்டப்பட்ட நகரத்தார் ஊருணிகள், நகரத்தார்களின் கட்டிடக் கலைக்கும், சிற்பக் கலைக்கும் சிறந்த எடுத்துக் காட்டுக்களாய்த் திகழ்பவை. திருமெய்யத்திலுள்ள 'சத்தியபுட்கரணி ஊருணி', வலையபட்டியிலுள்ள ஊரணி ஆகியவை எண்கோண வடிவில் அமைந்தவை.

நகரத்தார்களில் தனிப்பட்ட ஒருவரோ அல்லது ஊரார் அனைவரும் சேர்ந்தோ ஊருணிகளை அமைத்திருக்கிறார்கள். சிலர் ஊருணிகளுக்குப் படித்துறை அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். அமராவதிபுதூர் வயிநாகரம் குடும்பத்தார் 'கண்டதேவி' என்ற ஊரிலுள்ள கண்மாயின் கரையைச் செப்பனிட்டுள்ளார்கள்.

இளையாத்தங்குடிக்கோயில் ஏழு பிரிவினருக்கென்று ஏழு ஊருணிகள் இளையாத்தங்குடியில் அடுத்தடுத்து அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. கோவிலூர், அரிமளம், காளையார்கோயில் போன்ற ஊர்களில் தெப்பத் திருவிழா போன்றவை நடத்துவதற்கு ஏதுவாக மையமண்டபத்துடன் குளங்களை நகரத்தார்கள் அமைத்திருக்கிறார்கள்.

பழனிக்குப் பாதயாத்திரையாகச் செல்பவர்களின் நலன்கருதி அவர்களுக்குப் பயன்படும் படியாக ஆயர்குடிக்கு அருகில் காரைக்குடியைச் சேர்ந்த ஒரு குடும்பத்தார் 'கலிங்கு' ஒன்று ஏற்படுத்தியுள்ளார்கள். அக்குடும்பம் 'கலிங்கப்பய்யா வீடு' என்று அழைக்கப்படுகிறது.

தங்கள் ஊர்களில் திருவிழாக் காலங்களில் வருடந்தோறும் 'சேங்கை வெட்டுத் திருவிழா' என்ற விழாவை பல நகரத்தார் ஊர்களில் கொண்டாடி வருகிறார்கள். 'சேங்கை' என்றால் குளம் என்று பொருள், நகரத்தார்கள் தங்கள் பொருளைக் கொண்டே ஊருணிகள் முதலிய நீர்நிலைகளை அமைத்தாலும், அதற்கு உடலுழைப்பு நல்கியவர்களைப் பாராட்டுமுகமாகவும், நன்றி கூறுமுகமாகவும் இத்திருவிழாவை நடத்திவருகிறார்கள்.

சுமார் இருநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்புவரை நகரத்தார்கள் குடிசை வீடுகளில் தான் வாழ்ந்திருக்கின்றனர். ஓட்டுவீடு கட்டிக்கொண்டு வாழக்கூடாது என்ற சமூகக்

கட்டுப்பாடு நகரத்தாரிடையே நிலவியது. இந்தக் கட்டுப்பாட்டை மீறி அரிமளம் நகரத்தார் ஒருவர் ஓட்டுவீடு கட்டியபோது இராயவரம் 'மலைக்கொழுந்து ஈசுவரர்' கோயிலில் நகரத்தார்கள் கூடிக் கட்டுப்பாட்டை மீறியதற்குப் பரிகாரமாக, ஊருக்குப் பயன்படும் வகையில் அரிமளத்தில் ஓர் ஊருணியை வெட்டப் பணித்திருக்கின்றனர்.[13] இச்செய்தி சமுதாய நலனில் நகரத்தார்களுக்கு உள்ள அக்கறையைக் காட்டுவதாய் உள்ளது.

8. 2. 2. நீர்நிலைப் பாதுகாப்பு :

நகரத்தார்கள் ஊருணிகள் அமைத்தபோது ஊருணிக் கரைகளில் விநாயகருக்கு ஆலயம் எடுப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். கோயிலைச் சார்ந்து ஊருணியும் ஊருணியைச் சார்ந்து கோயிலுமாக இருந்ததால் ஊருணிகள் இறைத்தன்மையுடையனவாகக் கருதப்பட்டு, மக்களால் போற்றிப் பாதுகாக்கப்பட்டன. நகரத்தார்கள் குடிநீர் ஊருணிகளைப் பாதுகாக்கக் காவலர்களையும் நியமித்திருந்தனர்.

ஊருணிகள் வெட்டியதோடு ஊருணிக்கு நீர்வருத்துக்குரிய மடைவாய்களையும், பாலங்களையும் நகரத்தார்கள் கட்டியிருக்கிறார்கள். அவ்வாறு கட்டும்போது தூய்மை கருதி, ஊருணிக்கு நீர்வரும் மடையை மூடுமடையாகவும் அமைத்துள்ளனர். சான்றாகக் கோனாபட்டிலுள்ள அழகப் பெருமாள் ஊருணிக்கு, அருகிலுள்ள மலைச்சாரலிலிருந்து சுமார் ஒரு கிலோமீட்டர் தூரம் வரை மூடுமடை கட்டியிருக்கிறார்கள். பள்ளத்தூரிலும் நகரத்தார்கள் மூடு மடையுடன் கூடிய குளத்தை அமைத்துள்ளனர்.

வடநாட்டில் ஹவுராவிற்கு அருகிலுள்ள 'தாரகேசுவரம்' என்ற தலத்தில் நகரத்தார்கள் குளமொன்று வெட்டியிருக்கிறார்கள்.[14]

8. 2. 3. குடிநீர்க் குழாய்கள் :

காலத்திற்கேற்றவாறு மக்களுக்குப் பயன்படும் வண்ணம் குடிநீர்க் குழாய்களையும் நகரத்தார்கள் ஆங்காங்கு அமைத்து உள்ளனர். கானாடுகாத்தான் சா. ராம. மு. ராம. இராமசாமிச்

செட்டியார் சிதம்பரத்தில், 1908 முதல் 1916 வரை நகராண்மைக் கழகத் தலைவராக இருந்தபோது நகராண்மைக் கழகப் பொதுப் பொருளுடன், இலட்சக் கணக்கான தமது பொருளையும் செலவு செய்து சிதம்பரம் நகர் முழுதும் குழாய்கள் பதித்து மக்களுக்கு காவிரி நீர் கிடைக்கும்படி செய்தார்.[15]

தேவகோட்டை பி. எஸ். சாத்தப்பச் செட்டியார் கோவையில் பஞ்சாலைத் தொழில் நடத்தியபோது, கோவைக்கு அருகிலுள்ள சென்னிமலையில் ஏற்பட்ட குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்குவதற்காகப் பெரும் பொருள் செலவிட்டு அங்கு குடிநீர் வசதிசெய்து கொடுத்தார்.[16]

காரைக்குடியில் 1936-இல் மெ. செ. மெ. மெ. மெய்யப்பச்செட்டியார், பொதுமக்கள் உபயோகத்திற்காகப் பல இடங்களில் குழாய்கள் அமைத்துக் கொடுத்துள்ளார்.[17]

கடியாபட்டியைச் சேர்ந்த உ. அரு. அருணாசலம் செட்டியார், மலாக்காவில் சந்நாசிமலை ஆண்டவர் கோயிலில் பல திருப்பணிகள் செய்ததோடு தண்ணீர் வசதிக்காக ஒரு குளம் வெட்டி, அக்குளத்திலிருந்து தண்ணீரைப் பல இடங்களுக்குக் கொண்டுபோகக் குழாய்கள் அமைத்துக் கொடுத்துள்ளார்.[18]

8. 2. 4. தண்ணீர்ப் பந்தல்கள் :

தண்ணீர்ப்பந்தல் வைப்பது மிகச் சிறந்ததொரு அறமாகப் பழங்கால முதல் கருதப்பட்டு வருகிறது. ஒருவர் செய்த தருமத்திற்குத் தீங்கு நினைத்தால் ஏற்படும் பழி பாவங்களைப் பற்றிக் கூறவந்த ஒரு செப்பேடு 'இந்த தருமத்துக்கு அகிதம் நினைப்பவன் தண்ணீர்ப்பந்தலும் சாலையும் உடைத்த தோஷத்திலே போவானாக' என்கிறது.[19] இதிலிருந்து மக்களுக்குத் தேவையான தண்ணீர்ப்பந்தல், சாலை முதலியன அமைத்தல் சிறந்த அறங்களாகக் கருதப்பட்டன என்பதை உணர முடிகிறது.

கடுங்கோடையில் வழிநடந்து செல்வோர்க்கும், தாகத்தால் தவிப்போருக்கும் குளிர்ந்த நீர், மோர் வழங்கி, அவர்கள் விடாயைத் தணிப்பதற்காகத் தண்ணீர்ப் பந்தல்கள் அமைக்கும் பணியிலும் நகரத்தார்கள் சிறந்து விளங்கினர். வருடம்

முழுவதும் தண்ணீர்ப்பந்தல் வைத்து நடத்திய நகரத்தார் குடும்பங்கள் பல. பலர் திருவிழாக் காலங்களிலும், கோடைக் காலத்திலும் தண்ணீர் பந்தல் வைத்து நடத்தி வருகின்றனர். அப்பூதியடிகள் திருநாவுக்கரசர் பெயரால் தண்ணீர்பந்தல் அமைத்ததுபோல, சைவ சமயக் குரவரிடத்து ஆழ்ந்த ஈடுபாடுடைய நகரத்தார்களும் 'திருநாவுக்கரசர்' பெயரால் தண்ணீர்பந்தல்கள் அமைத்துள்ளனர்.[20]

8. 2. 5. விலங்குகளுக்கு நீர் :

மக்களுக்காக மட்டுமல்லாமல் அஃறிணை உயிர்களிடத்தும் அன்புகொண்டு வெயிலில் திரியும் ஆடு மாடுகள் நீர் அருந்திச் செல்வதற்கு ஏற்றவாறு சில இடங்களில் குளங்களின் கரைகளை, விலங்குகள் ஏறி இறங்குவதற்கு வசதியாகச் சரிவாக வெட்டி வைத்துள்ளனர். மேலும் விலங்குகள் உடல தினவு தீரத் தேய்த்துக் கொள்ள உதவியாக, 'ஆவுறிஞ்சு தறி' 'ஆ தீண்டு குற்றி' ஆகியவற்றை ஊருணிக் கரைகளில் அமைத்துள்ளனர்.

போக்குவரத்து வசதிகள் அதிகமில்லாத அக்காலத்தில் வண்டியோடு பல மக்களையும் இழுத்துக்கொண்டு நாள் முழுதும் ஓடும் வண்டி மாடுகளும், குதிரைகளும் நீர் அருந்தும்பொருட்டு மஞ்சக் குப்பம், புதுப்பாளையம், திருப்பாதிரிப்புலியூர், புதுக்கோட்டை முதலிய ஊர்களில் நீர்க்குழாயும், தொட்டியும் அமைத்தவர் கடியாபட்டி தீ. நாச்சியப்பச் செட்டியாராவார்.[21]

'நீரின்றி அமையாது இவ்வுலகம்' என்பதை நன்குணர்ந்து, தாங்கள் வாழும் பகுதிகளில் மற்ற பணிகளோடு நீர் நிலைகள் தொடர்பான பணிகளையும் மேற்கொண்டார்கள் நகரத்தார்கள்.

8. 3. போக்குவரத்து அறங்கள் :

இந்திய நாடு விடுதலை பெறுவதற்கு முன்புவரை பல இந்திய கிராமங்கள் வெளியுலகத் தொடர்பின்றியிருந்தன. அதனால் அவர்களது சமுதாய நிலையும் பொருளாதார நிலையும் பின்தங்கியிருந்தன. அதற்கு முக்கியக் காரணம் கிராமங்களுக்குச் சரியான போக்குவரத்து இல்லாததுதான். போக்குவரத்திற்குரிய சாலைகள் ஒழுங்காக இல்லாததனால்.

கிராமத்து மக்களால், தாங்கள் விளைவித்த பொருட்களை உடனடியாக மற்ற பகுதிகளுக்கு விற்பனைக்கு எடுத்துச் செல்லமுடியவில்லை. மருத்துவம் போன்ற அவசரத் தேவைகளும் அவர்களுக்கு உடனடியாகக் கிடைக்கவில்லை. மற்றவர்களாலும் போக்குவரத்து வசதியற்ற அக் கிராமங்களுக்குச் செல்ல இயலவில்லை.

8. 3. 1. சாலைகள் :

இந்த நிலையில் யாருக்கு, எங்கு, என்ன தேவை என்று உணர்ந்து, அதைக் காலத்தால் செய்யும் இயல்புடைய நகரத்தார்கள், 'கிராம வளர்ச்சியே நாட்டின் வளர்ச்சி' என்று காந்தியடிகள் கூறியதை நினைவிற்கொண்டு, தாங்கள் வாழும் கிராமங்களிலும், சுற்றியுள்ள கிராமங்களிலும் தாங்கள் திருப்பணி செய்த தலங்களிலும் பல சாலைகளைத் தங்கள் செலவில் அமைத்தனர். நகரத்தார்கள் அமைத்த கற்சாலைகள் பல ஆண்டுகள் ஆகியும் இன்றும் நல்ல நிலையில் உள்ளன.

> 'இராமேசுவரத்தில் கோதண்டராமசாமி கோயிலுக்குச் செல்ல நிரந்தரமான ரோடு போடவேண்டும் என்பதை ஏ.எல். நாராயணன் செட்டியார் மிகவும் வற்புறுத்தினார்'

என்று இராஜராஜேஸ்வரி சேதுபதி மன்னர் தம் நாட்குறிப்பில் எழுதி வைத்துள்ளமை,[22] நகரத்தார்கள், கோயிலுக்கு மக்கள் எளிதில் சென்றுவரச் சாலைகள் அமைப்பதில் ஆர்வமுடையவர்களாக இருந்தமையைக் காட்டுகிறது.

8. 3. 2. பாலங்கள் :

சாலைகளைத் தவிர, சிறுசிறு பாலங்களையும் நகரத்தார்கள் கட்டியுள்ளனர். இராமச்சந்திரபுரத்திற்கும் இராயவரத்திற்கும் நடுவே சாலைப் பாலங்கள் கட்டியுள்ளனர். பட்டமங்கலம் கோயிலுக்கும் ஊருக்கும் நடுவில் உள்ள ஆற்றுப் பாலத்தை பட்டமங்கலம் நகரத்தார்கள் கட்டியுள்ளனர்.

இந்துக்களின் புனிதத் தலமான இராமேசுவரத்திற்குச் செல்வதற்குப் பயன்படும் பாம்பன் பாலம், விரைந்து முடிக்கப்பட்டதற்கு முக்கியக் காரணமாக இருந்தவர்

தேவகோட்டை சமீன்தார் ஏ. எல். ஏ. ஆர். சோமநாதன் செட்டியார் ஆவார்.[23]

8. 3. 3. சுமைதாங்கிக் கற்கள் :

செட்டிநாட்டுப் பகுதிகளில் ஊருணிக் கரைகளையொட்டி சுமைதாங்கிக் கற்கள் ஏராளமாகக் காணப்படுகின்றன. போக்குவரத்து வசதிகள் அதிகமில்லாத அக்காலத்தில் தலைச் சுமையுடன் நடந்து செல்வோர் வேறு ஆள் உதவியில்லாமல் இறக்கிவைத்து இளைப்பாறிப் பின் எளிதாக எடுத்துச் செல்வதற்கு உதவியாக இருக்கும் சுமைதாங்கிக் கற்களில் பெரும்பாலானவை நகரத்தார்கள் நிறுவியவையே.

8. 3. 4. பிறவசதிகள் :

செட்டிநாட்டுப் பகுதிகளில், ஊருக்கு முக்கியமான இடங்களில் நிழல்தரும் வண்ணம் தகரக் கொட்டகைகள் அமைத்தும், பேருந்து வசதிகள் செய்துகொடுத்தும், பேருந்து நிலையங்களில் அமர்வதற்குக் கற்பலகைகள், நிழற்குடைகள் அமைத்தும், ஊருணிக் கரைகளில் உள்ள அரச மரங்களைச் சுற்றி, 'அமரும் கல்மேடைகள், பூங்காக்கள் அமைத்தும், மைல் கற்கள், கைகாட்டிகள் நிறுவியும், தங்கள் பகுதிகளுக்கு உதவியாக அக்காலத்தில் தந்திச் சாலைகள், அஞ்சல் நிலையங்கள், தெருவிளக்குகள், மின்சார சங்குகள் ஆகியவை ஏற்படுத்தியும், தங்கள் பகுதி மக்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுத்துள்ளார்கள். கிராமப் பகுதிகளுக்கு மின் வசதிகள் வராத காலத்தில் நகரத்தார்கள், செட்டிநாட்டின் பல பகுதிகளில், பெரிதும் முயன்று பொருட்செலவு செய்து, அரசாங்க அனுமதியுடன் 'மின்சார கார்ப்பரேஷன்கள்' அமைத்துத் தங்கள் பகுதிகளுக்கு மின்சாரம் கிடைக்கச் செய்தனர். கானாடுகாத்தான், தேவகோட்டை, நெற்குப்பை போன்ற பல ஊர்களில் மின்சாரக் கழகங்களை நகரத்தார்கள் அமைத்திருந்தனர். 'கானாடுகாத்தான் மின்சாரக் கழகம்' தென்னிந்தியாவில் உண்டான மின் வழங்கும் தனியார் நிலையங்களுள் பழமையானது.[24]

இவ்வாறு மக்கள் நல்வாழ்வுக்கு வேண்டிய சமுதாய வசதிகள் செய்து கொடுப்பதில் நகரத்தார்கள் முன்நின்று அறப்பணிகள் செய்துள்ளார்கள். அறம் செய்தல் என்பது அவர்கள் இரத்தத்தில் ஊறிய ஓர் இயல்பாக இருக்கிறது என்பது இத்தகைய சமுதாய அறப்பணிகளால் தெளிவாகிறது.

8. 4. தேசியப் பணியில் நகரத்தார்கள் :

இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு, நாட்டிற்காகப் பாடுபட்ட நகரத்தார்கள் பலர். காரைக்குடியில் தேசபக்தர் 'சுப்பிரமணிய சிவா' தேசிய உணர்வை வளர்த்தபோது அவருக்கு ஆதரவாக இருந்த நகரத்தார்கள், தாங்கும் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டனர். 'இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி, நாட்டு விடுதலைக்குப் பாடுபடுவதைக் கண்டு, அதில் பல நகரத்தார்கள் சேர்ந்து நாட்டுக்குப் பணியாற்றினர்.

8. 4. 1. காந்தியடிகளும் நகரத்தார்களும் :

இந்திய நாட்டின் விடுதலையில் காந்தியடிகள் காட்டிய நெறியில் மிகுந்த ஈடுபாடு கொண்ட நகரத்தார்கள், காந்தியக் கொள்கைகளான கொல்லாமை, பொய்யாமை, தீண்டாமை ஒழிப்பு, சாதிப் பாகுபாடின்மை, கதர் இயக்கம் ஆகியவற்றையும் பின்பற்றினர்.

'ஊழியன்', 'குமரன்', 'தனவணிகன்', 'செட்டிநாடு', 'வீரகேசரி', 'சக்தி' போன்ற நகரத்தார் இதழ்கள் போட்டி போட்டுக்கொண்டு தேசிய உணர்வையும் சமூகச் சீர்திருத்தக் கருத்துக்களையும் மக்களிடையே பரப்பின. நல்லவை வாழவும், அல்லவை வீழவும், தேசிய முழக்கம் செய்யவும் இத்தகைய இதழ்களை கருவிகளாகப் பயன்படுத்திக் கொண்டனர் நகரத்தார்கள்.

'ஊழியன்' இதழின் நோக்கம் என்ன என்பதை ஒவ்வொரு இதழின் தொடக்கத்திலும் இடம் பெற்றுள்ள,

'இந்தியத்தாய் முடிசூடி எழிற்சிங்கா
தனமேறி ஈடி லாது

சொந்தவர சேபுரியத் துயர்போக்கி
யாவருமே சுகவாழ் வெய்த
இந்தநிலம் வந்தவருள் இலை பிறப்பில்
இழிவுயர்வென் இயற்கை ஓங்க
நந்தலிலா ஊழியமே நான்கொண்டேன்
நல்லனவெந் நாளும் வாழ்க'

என்ற பாடல் தெரிவிக்கிறது.[25] மேலும் ஊழியன் இதழ் 'சுதந்தரமே உயிர்' 'தீண்டாமை ஒழிக', 'காந்தியைப் போற்றிக் கதரை அணியுங்கள்,' 'சுயராஜ்யம் பிறப்புரிமை', 'சுயராஜ்ய வாழ்வே சுகவாழ்வு', 'ஹரிஜனங்களை ஆதரியுங்கள்' என்று பழமொழிகள் போல எழுதி, காந்தியக் கொள்கைகளை முழக்கங்களாக மக்களிடையே பரப்பியது.[26]

'புதுமைப் பதிப்பகம்' போன்ற நகரத்தார் பதிப்பகங்கள் காந்தியடிகளின் நூல்களைத் தமிழில் வெளியிட்டன. காந்தியடிகளின் உள்ளக் கிடக்கைகளையும் இலட்சியங்களையும் யாவரும் எளிதில் தெரிந்துகொள்ளும் பொருட்டு புதுமைப் பதிப்பகத்தார் காந்தியடிகள் எழுதியதையும், பேசியதையும் தொகுத்து, 'மாணவர்க்கு' என்ற நூலாக வெளியிட்டபோது ஆங்கில அரசு தடை உத்தரவு பிறப்பித்ததோடு, பிரதிகள் யாவற்றையும் பறிமுதல் செய்தது. பிறகு தமிழ் நாட்டு அனைத்துப் பத்திரிகைகளும் வன்மையாகக் கண்டித்ததன்பேரில் தடை உத்தரவை நீக்கியது.[27]

8. 4. 2. கதரியக்கமும் நகரத்தார்களும் :

அயல் நாட்டிலிருந்து இறக்குமதியாகும் துணிகளினால் இந்திய நாட்டு மக்களுக்கு வேலைவாய்ப்பு இல்லாமல் போவதுடன், நாட்டின் பொருளாதாரமும் சீர்குலைவதைக் கண்ட காந்தியடிகள்,

"சுதேச நலன்களுக்குப் பாதகமாக இறக்குமதி செய்யப்படும்
அந்நியச் சரக்கு எதையும் தடை செய்வதே எனது
பொருளாதாரக் கொள்கை"

என்று கூறி[28] அயல் நாட்டுத் துணிகளைப் புறக்கணித்து, கதரை ஆதரித்துக் கதரியக்கத்தைத் தொடங்கினார்.

காந்தியடிகள் கதரியக்கத்தைத் தொடங்குவதற்கு முன்பே நகரத்தார்கள் கதரணிந்தனர், நூல் நூற்றனர்.[29] செட்டி நாட்டுப் பெண்கள் நீண்ட காலமாகவே கை ராட்டையால் நூல் நூற்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். மணப் பெண்ணுக்கு நூல் நூற்கும் இராட்டினத்தைச் சீதனமாகக் கொடுக்கும் வழக்கம் நீண்ட காலமாக நகரத்தாரிடையே இருந்துவந்தது.

இயல்பாகவே கதரின்பால் பற்றுடைய நகரத்தார்கள் காந்தியடிகள் தொடங்கிய கதரியக்கத்தை மிகவும் ஆதரித்தனர்.

'உண்மையான காந்தியவாதி கதர் உடுத்தினால் மட்டும் போதாது, தன் ஆடைகளுக்கு வேண்டிய நூலைத் தானே நூற்றுக்கொள்ளவும் வேண்டும். அப்படி நூற்கிறபோது கடமை, பொறுமை, இலட்சியப் பிடிப்பு போன்ற நற்குணங்கள் வளர்வதோடு எல்லோர்க்கும் வேலையும் கிடைக்கிறது'

என்று கூறி நூல் நூற்ற செக்காலை காந்தி மெய்யப்பர்[30] கதர் அணிவது கூட, ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிரான செயல் என்று கருதிய காலத்தில், தாம் மட்டும் கதர் உடுத்தியதோடு அமையாமல் தம் மனைவி மக்களையும் கதர் கட்டும்படி செய்தார்.

'கதரை உடுத்துங்கள்' என்ற தலையங்கத்தைக் 'குமரன்' வெளியிட்டுக் கதரை அணிவதினால் ஏற்படும் நன்மைகளை விரிவாக விளக்கியுள்ளது.[31]

ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்திலேயே காந்தியடிகளின் வாழ்க்கையைத் திரைப்படமாக எடுத்த ஏ. கே. செட்டியார், தாம் கதர் அணிந்ததோடு, தாம் வெளியிட்ட 'ஜப்பான்' என்ற நூலுக்கும் கதர் அட்டை அணிவித்த கொள்கையாளர் ஆவார்.

8. 4. 3. விடுதலைப் போராட்டமும் நகரத்தார்களும் :

ஆங்கிலேயருக்கு எதிராக, காந்தியடிகள் தொடங்கிய 'தனிநபர் சத்தியாகிரகம்', 'ஒத்துழையாமை இயக்கம்', 'வெள்ளையனே வெளியேறு' என்ற ஆகஸ்ட் புரட்சி ஆகிய அனைத்திலும் நகரத்தார்கள் கலந்து கொண்டனர்.

காரைக்குடி, தேவகோட்டைப் பகுதிகளில் தேசிய இயக்கம் வலிமையோடு வளர்ந்தது. 1920-இல் காந்தியடிகள் செட்டிநாட்டுக்கு வந்தபோது அவரது வருகையால் விடுதலை இயக்கத்தில் நகரத்தார்களிடையே தீவிரப் போக்கு ஏற்பட்டது.

'பஞ்சாப் படுகொலை' எதிர்ப்புக்குப் பின், காந்தியடிகள் தொடங்கிய ஒத்துழையாமை இயக்கத்தில் செட்டிநாட்டில் இராய.சொ. , சா.கணேசன் முதலியோர் பங்கு கொண்டனர். சட்ட மறுப்பு இயக்கத்தில் சேர்ந்து 1932-இல் இராய. சொ. ஓராண்டு சிறைத் தண்டனை பெற்றார். நகரத்தார்களில் அரசியல் காரணமாக முதன் முதலாகச் சிறை சென்றவர் இராய. சொ. ஆவார்.[32]

காந்தியடிகள், 'தனிநபர் சத்தியாகிரகத்தைத் தொடங்கியபோது காரைக்குடியில் சா.கணேசன்,, தேவகோட்டையில் சின்ன அண்ணாமலை மற்றும் கருமுத்து சிவலிங்கம் செட்டியார் போன்றோர் கலந்து கொண்டு சிறை சென்றனர். வெள்ளையருக்கு எதிரான போராட்ட காலத்தில் தலைமறைவாயிருந்த சா. கணேசனை எங்கு கண்டாலும் சுடுமாறு ஆங்கில அரசு உத்தரவு பிறப்பித்ததோடு' அவருடைய சொத்துக்களையும் பறிமுதல் செய்தது. 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தில் பங்குகொண்டு சிறை சென்ற சா. கணேசன் 1942-இல் காரைக்குடியில் கள்ளுக்கடை மறியல், சூதாட்ட மறியல் ஆகியவற்றை தலைமையேற்று நடத்தி உள்ளார்.[33]

சா. கணேசனுடன் இணைந்து விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுப் பலமுறை சிறைசென்ற மற்றொருவர் தேவகோட்டை சின்ன அண்ணாமலையாவார். 'நமது நாட்டிற்கு சின்ன அண்ணாமலை செய்திருக்கும் சேவை மகத்தானது. சரித்திரத்தில் எழுதப்பட வேண்டிய சிறந்த தியாகி' என்று காமராசர் சின்ன அண்ணாமலையைப் பாராட்டியுள்ளார்.[34]

'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தில் காந்தியடிகள் கைதுசெய்யப்பட்டபோது, தேவகோட்டைப் பகுதியில் ஏற்பட்ட கொந்தளிப்பை அடக்க 144 தடையுத்தரவு போடப்பட்டது.

தடையுத்தரவை மீறியதற்காக, இரவோடிரவாக, சின்ன அண்ணாமலை, திருவாடானை சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார். அதையறிந்து கொதித்தெழுந்த மக்கள் தேவகோட்டையில் இருந்த நீதிமன்றம், தாலுகா அலுவலகம், கருவூலம் முதலியவற்றை எரித்து, சிறையை உடைத்துச் சின்ன அண்ணாமலையை மீட்டனர். இம்மாதிரி சிறைக்கதவை உடைத்து, ஓர் அரசியல் கைதியை விடுதலை செய்தது வரலாற்றிலேயே முதன்முதலாக நடந்த நிகழ்ச்சியாகும்.

சின்ன அண்ணாமலையை இராஜாஜி மூலம் அறிந்த காந்தியடிகள்,

> 'சின்ன அண்ணாமலை சுதந்திரப் போராட்டத்தில் பலமுறை சிறை சென்றவர் என்றும், குறிப்பாக 1942- இல் நடந்த ஆகஸ்ட் போராட்டத்தில், சிறையில் இருந்த அவரை, மக்கள், சிறையை உடைத்து விடுதலை செய்தனர் என்றும் அறிந்து ஆச்சரியமடைந்தேன். இப்படிப்பட்ட இளைஞர்களை நினைத்துப் பெருமையடைகின்றேன்'

என்று பாராட்டி, 'ஹரிசன்' பத்திரிகையை தமிழில் நடத்த சின்ன அண்ணாமலைக்கு அனுமதியும் ஆசியும் வழங்கினார்.[35]

இவர்களைத் தவிர தேசியப் போராட்டத்தில் ஈடுபட்ட நகரத்தார்களுள், காரைக்குடியைச் சேர்ந்த ஆறு. ஆ. ராம. சொக்கலிங்கஞ் செட்டியார், ராம. கருப்பன் செட்டியார், காரைக்குடி முத்துப்பட்டணம் மெ.சு.தி. தண்ணீர்மலையான் செட்டியார், தேவகோட்டை ஆர்ச் அண்ணாமலைச் செட்டியார், டி. ஆர். அருணாசலம் செட்டியார், அழ. சுப. திருநாவுக்கரசு செட்டியார், மெ. சி. மாணிக்கவாசகம் செட்டியார், டைரி அருணாசலம் செட்டியார், எஸ். பி. முத்தையா செட்டியார், கொத்தமங்கலம் நடேசன் செட்டியார், கண்டனூர் அன்பு நாச்சியப்பன், குப்பான் செட்டியார், சொக்குச் செட்டியார், தண்ணீர்மலை செட்டியார், அலவாக்கோட்டை சொக்கலிங்கம் செட்டியார், நெற்குப்பை குப்பான் செட்டியார், சிறுகூடல்பட்டி குப்பான் செட்டியார், கண்டரமாணிக்கம் லெட்சுமணன் செட்டியார், பூலாங்குறிச்சி சிவலிங்கம் செட்டியார் போன்றோர் குறிப்பிடத்தக்க சிலராவர்.[36]

1928-இல் சைமன் கமிஷன் புறக்கணிப்பில் பம்பாயில் கைது செய்யப்பட்டவர் தேவகோட்டை ஆர்ச் அண்ணாமலை,. அவருக்கு, ஆகஸ்ட் புரட்சியின்போது தேவகோட்டையில் நீதிமன்றம் எதிர்ப்பு, திருவாடானைச் சிறையில் இருந்த சின்ன அண்ணாமலையைச் சிறையை உடைத்து விடுதலை செய்தது ஆகிய காரணங்களுக்காக, ஆங்கில அரசு பதினேழு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தது.[37]

விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுத் தங்கள் வீடுகளையும், சொத்துக்களையும் இழந்த நகரத்தார்கள் பலர். விடுதலை இந்தியாவில் இந்திய அரசு இத்தகைய தியாகிகளுக்குத் தாமிரபட்டயம் கொடுத்துச் சிறப்பித்தது.

8. 4. 4. நேதாஜியும் நகரத்தாரும் :

இந்திய நாடு விடுதலை பெற 'நேதாஜி சுபாஷ் சந்திர போசு' நிறுவிய 'இந்திய தேசியப் படை', 'ஆஜாத் இந்த்லீக்' ஆகியவற்றில் நகரத்தார்கள் பலர் பணியாற்றியுள்ளனர். நகரத்தார்களை நேதாஜி', 'செட்டியார் பாபுக்கள்' என்று அன்புடன் குறிப்பிட்டுப் பெரிதும் மகிழ்ந்திருக்கிறார்.[38]

காரைக்குடி அபிசீனியா நாச்சியப்பச் செட்டியார், சொ. தேவராயன் செட்டியார், லெ. தேனப்பச் செட்டியார், வீர. கண்ணப்ப செட்டியார், ராம. சுப்பிரமணியன் செட்டியார், கண்டனூர் ரெ. மெய்யப்பச் செட்டியார், நாச்சியாபுரம் வ. நாச்சியப்பச் செட்டியார், காரைக்குடி முத்துப்பட்டணம் எம். மெய்யப்பச் செட்டியார், சண்முகநாதபுரம் இராம. அண்ணாமலைச் செட்டியார், இராயவரம் பி. எல். பெருமாள் செட்டியார் ஆகியோர் நேதாஜியின் இயக்கத்தில் தொடர்புடையவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள்.[39]

நகரத்தார்கள், பர்மாவில், இந்திய தேசிய இராணுவத்திற்குப் பெரும் பொருள் வசூலித்துக் கொடுத்தனர். காந்தியவாதியாக இருந்தாலும், நாட்டு விடுதலை என்ற நோக்கத்தில் காந்தி மெய்யப்பர், பர்மாவில் பல இலட்சம் ரூபாயும், தங்கம் வைரம் முதலியவற்றையும் சேகரித்துக் கொடுத்ததோடு, தம் பொருளிலிருந்து அறுபது பவுன் நகையும் முப்பதாயிரம் ரூபாயும் கொடுத்து உதவியுள்ளார்.[40]

இந்திய நாடு விடுதலை பெற உழைப்பையும் பொருளையும் தந்த நகரத்தார்கள் விடுதலைக்கு முன்னும் பின்னும் நகரசபைத் தலைவர்களாக சட்டமன்ற உறுப்பினர்களாக, பாராளுமன்ற உறுப்பினர்களாக, அமைச்சர்களாகப் பணிபுரிந்து, தங்கள் பகுதிக்கும், தமிழகத்திற்கும், நாட்டிற்கும் தொண்டாற்றினர். தொண்டாற்றி வருகின்றனர்.

8. 5. சமூகச் சீர்திருத்தமும் நகரத்தார்களும் :

பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார், மு. சின்னைய செட்டியார், வை. சு. சண்முகஞ் செட்டியார், சொ. முருகப்பா, இராய. சொக்கலிங்கனார், பிச்சப்பா சுப்பிரமணியன் செட்டியார் போன்றோர் சமூகச் சீர்திருத்தத்துக்குக் குரல் கொடுத்த நகரத்தார்களுள் சிலர். அவர்கள் பேச்சளவில் மட்டும் நில்லாமல், செயலிலும் தீண்டாமை, பெண்ணடிமை ஆகியவற்றை ஒழிக்கப் பாடுபட்டனர். கொல்லாமையை வலியுறுத்தினர். இராய. சொ வின் 'ஊழியன்' 'எல்லோரும் ஓர் குலம்', 'தீண்டாமை ஒழிக', 'விதவையின் கண்ணீரைத்துடை' என்று முழங்கியது.[41]

'தென்னாட்டு இராஜாராம் மோகன்ராய்' என்று பாராட்டப் பெற்ற சொ. முருகப்பா தாம் பிறந்த நகரத்தார் சமூகத்தில் உள்ள குறைபாடுகளை நீக்கத் தனவைசிய ஊழியர் சங்கத்தை நிறுவினார்.[42] அனைத்து ஊர் நகரத்தார்களையும் கூட்டி, தம் குல மக்களிடையே சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்பினார் பெண் கல்விக்காகப் போராடினார்.

1922-இல் 'சிவனடியார் திருக்கூட்டம்' என்ற சங்கத்தைத் தொடங்கி அதன்மூலம் கொல்லாமையை வலியுறுத்திவந்தார். பெண்களை விலை கூறி விற்கலாகாது என்றும், இளம் விதவைகளுக்கு மறுமணம் புரிய வேண்டும் என்றும் பேசியதோடும் எழுதியதோடும் மட்டுமல்லாமல் செயலிலும் காட்டினார். தாமே வேறு இனத்து விதவை ஒருவரைத் திருமணமும் செய்து கொண்டார்.[43]

பெண்கள் நலனுக்காக, அமராவதிபுதூரில் இல்லமொன்று தொடங்கிய சொ. முருகப்பா, அந்த இல்லம் கட்டத் தேவையான

பொருளுக்கு, காரைக்குடியில் இருந்த தம் இல்லத்தையே விற்றார் என்றும் தெரியவருகிறது.[44]

சொ. முருகப்பா காட்டிய வழியில் ஆதரவற்ற பெண்களின் நலனுக்காக பள்ளத்தூரில் எம். ஏ. பழனியப்பச் செட்டியார் 'ஸ்ரீ சாரதா சேவாசிரமம்' என்றதொரு பெண்கள் நல மையத்தைத் தொடங்கினார். மகளிரை வாழ்வாங்கு வாழவைத்தல், அவர்களுக்குக் கைத்தொழில்களைக் கற்பித்தல், சேவை மனப்பான்மையை அவர்களுக்கு ஊட்டிச் சேவையில் ஈடுபடுத்துதல் ஆகியவை ஆசிரமத்தின் முக்கிய நோக்கங்களாகும். திருமணமாகாத பெண்கள், படிக்க வசதியில்லாத பெண்கள், கணவனால் கைவிடப் பெற்றவர்கள், விதவைகள், ஆதரவற்றோர். அங்கம் பழுதடைந்தோர், வயோதிகப் பெண்கள் ஆகியோருக்குப் புகலிடமாக உள்ளது இந்த ஆசிரமம். ஆசிரமத்தில் அப்பெண்களுக்கு அச்சுவேலை, நூல் நூற்றல், துணி நெய்தல், அப்பளம் தயாரித்தல், சோப்பு செய்தல் போன்ற தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகின்றன.

இன்றைய நிலைகளில் நகரத்தார் இனத்துப் பெண்களின் திருமணம் ஒரு பிரச்சனைக்குரியதாய் இருப்பதால் நகரத்தார்கள் தனிப்பட்ட முறையிலும், உள்நாட்டு வெளிநாட்டுச் சங்கங்கள் வாயிலாகவும் தேவைப்படும் பெண்களுக்குத் திருமண உதவி செய்து வருகிறார்கள்.

8. 6. கலைத்துறையில் நகரத்தார்கள் :

கலைகள் ஒரு நாட்டின் பெருமையை, அந்நாட்டு மக்களின் உணர்வை, உழைப்பை, திறமையை உலகுக்கு அறிவிப்பன. அந்த வகையில், கலைத்துறையில் பணியாற்றி, தமிழகத்தின் பெருமையை உலகறியச் செய்தவர்கள் நகரத்தார்கள்.

சிற்பம், கட்டிடம், ஓவியம், இசை, இலக்கியம் போன்ற நுண்கலைத் துறைகளிலும் திரைப்படத் துறையிலும் நகரத்தார்களின் பங்கும் பணியும் குறிப்பிடத்தக்கவை.

8. 6. 1. கட்டிடக் கலையும் சிற்பக் கலையும் ::

நகரத்தார்கள் திருப்பணி செய்த ஆலயங்கள் அனைத்தும் திராவிடக் கட்டிடக் கலைக்கும், சிற்பக் கலைக்கும் விளக்கமாகத் திகழ்கின்றன. பல்லவர் காலச் சிற்ப மரபு, சோழர் காலச் சிற்ப மரபு என்று கூறுவதுபோல, நகரத்தார்களுக்கென்று ஒரு தனிச் சிற்ப மரபு உண்டு. நகரத்தார்கள் எப்போதும் கோயில் பணிகளில் ஈடுபட்டிருந்ததால், சிற்பக் கலையில் வல்லுநர்களான ஸ்தபதிகள் செட்டிநாட்டுப் பகுதிகளில் எழுவன்கோட்டை போன்ற ஊர்களில் நிரந்தரமாகக் குடியேறினர்.

செட்டிநாட்டு ஸ்தபதிகளுக்கு உலகமெங்கும் நல்ல மதிப்பிருக்கிறது. கணபதி ஸ்தபதியை உலகிற்கு வழங்கியது செட்டிநாடே. காரைக்குடி கம்பன் மணிமண்டப வளாகத்திலுள்ள தமிழ்த்தாய் கோயில், சென்னை கிண்டியிலுள்ள காந்தி மண்டபம், கன்னியாகுமரியிலுள்ள விவேகானந்தர் நினைவு மண்டபம், பல அணைக்கட்டுக்கள் ஆகியவற்றைக் கட்டிக் கொடுத்தவர்கள் செட்டிநாட்டு ஸ்தபதிகளே.

தமிழகத்தில் மட்டுமல்லாமல் வட இந்தியாவிலும் கடல் கடந்த நாடுகளிலும் கோயில் பணிகள் புரிந்து, சைவ சமயத்தோடு திராவிடச் சிற்ப மரபையும் பரப்பியவர்கள் நகரத்தார்கள். நகரத்தார்களின் மிகப்பெரிய வீடுகளும் சிற்ப நுணுக்கங்களோடு கட்டப்பட்டவை. செட்டிநாட்டு இல்லங்களில் சாந்துக் கலவைகளோடு கோழிமுட்டைகளைக் கலந்து சுவர்களில் தேய்த்து முகம் பார்க்கும் கண்ணாடி போன்று வீட்டுச் சுவர்களை அமைக்கும் கலை அனைவரது பாராட்டையும் பெற்றிருக்கிறது. இம்முறைக்குச் 'செட்டிநாடு பிளாஸ்டர்' அல்லது 'மதராஸ் பிளாஸ்டர்' என்று பெயர்.[45]

நகரத்தார் வீடுகளிலுள்ள முகப்பு நிலைக் கதவுகள் மட்டும், அதன் சிற்ப வேலைப்பாடுகளுக்காகப் பல இலட்சம் ரூபாய் மதிப்புடையவையாகத் திகழ்கின்றன.

8. 6. 2. ஓவியக் கலை :

நகரத்தார்கள் தாங்கள் திருப்பணி செய்த கோயில்களில் மண்டபங்களின் விதானங்களிலும், கோயில் திருச்சுற்றுக்களிலும்

பலவித வண்ண ஓவியங்களை நாயக்கர் கால ஓவியங்களின் அமைப்பில் வரைந்துள்ளனர். மகாபாரத இராமாயணக் காட்சிகள், திருவிளையாடற்புராண நிகழ்ச்சிகள் போன்றவற்றை ஓவியங்களாகத் தீட்டி சமய அறிவை மக்களிடையே வளர்த்தனர். இலுப்பைக்குடி, கல்லாங்குடி போன்ற கோயில்களில் நகரத்தார்களின் இத்தகைய ஓவியங்கள் காணப்படுகின்றன.

நகரத்தார்கள், அரண்மனை போன்ற தங்கள் வீடுகளிலும் வண்ண ஓவியங்களை வரைந்துள்ளனர். ஆத்தங்குடியில் ஓர் இல்லத்தில் கண்ணன் லீலைகள் அனைத்தும் ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. இரவிவர்மா ஓவியங்களை பெருவிலை கொடுத்து வாங்கி வீடுகளின் கல்யாணக் கொட்டகைகளில் மாட்டியவர்கள் நகரத்தார்கள்.

கோயில்களில் திருவிழாக் காலங்களில் இசை, நாட்டியம் முதலியவற்றில் சிறந்த வல்லுநர்களைக் கொண்டு கலை நிகழ்ச்சிகள் நடத்தி, கலைகளையும், கலைஞர்களையும் ஆதரித்து, கலைக் காவலர்களாக விளங்கிய நகரத்தார்கள் இலக்கியத் துறைக்கும், இசைத் துறைக்கும், நாடகத் துறைக்கும் செய்த தொண்டுகள் ஆய்வாளரால் மொழிப்பணி என்ற தலைப்பில் கூறப்பட்டுள்ளன.

8. 6. 3. திரைப்படத் துறையில் நகரத்தார்கள் :

தமிழகத் திரைப்படத் துறையில் புகுந்து நாட்டின் கலை வளர்ச்சிக்கு நல்ல அடித்தளமிட்ட பெருமை ஏ. வி. மெய்யப்பச் செட்டியாருக்கு உரியது. பாடகர்களின் பாடல்களை இசைத் தட்டுக்களில் பதிவுசெய்து வெளியிட்டு இசை வளர்ச்சியில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியவர் மெய்யப்பர்.

திரைப்படத்தை வெறும் பொழுது போக்குக் கருவியாகக் கையாளாமல் நல்ல கருத்துக்களை எடுத்துச் சொல்லப் பயன்படுத்திக் கொண்டார். மிகச் சிறந்த கலைஞர்களை உருவாக்கினார் அவர். திரைப்படத் துறையில் பல புதுமைகளைப் புகுத்தினார். புராணக் கதைகள், முடி மன்னர் கதைகள் என்று இருந்த நிலையை மாற்றி முதன் முதலில் 'நாம் இருவர்' என்ற சமூகக் கதையை திரைப்படமாக எடுத்தார்.

வேறொரு மொழியில் வெளியான படத்தை தமிழில் ஒலிப்பித்து ஒலிப்பதிவு செய்து (டப்பிங் செய்து) வெளியிடும் முறையை முதன் முதலில் இந்தியாவில் அறிமுகப்படுத்தினார்.[46]

ஏவி. எம். மெய்யப்பச் செட்டியாரைத் தொடர்ந்து ஏ.எல். சீனிவாசன், பஞ்சு அருணாசலம், சின்ன அண்ணாமலை, கண்ணதாசன், எஸ். பி. முத்துராமன், இராம. நாராயணன், பழ. கருப்பையா, வசந்தன் போன்ற பலர் தயாரிப்புத் துறை, திரைக்கதை வசனம் எழுதுதல், பாடல்கள் புனைதல், படங்களை இயக்குதல் ஆகிய துறைகளில் சிறந்த இடம் பெற்றுள்ளனர்.

இன்றைய திரைப்படத் துறையின் மிகப்பெரிய வளர்ச்சிக்கு வித்தூன்றிய மற்றொருவர் தேவகோட்டை பி. எல். சாத்தப்ப செட்டியாராவார். அவர் 1933-இல் சென்னையில் ஒரு படப்பிடிப்பு நிலையம் தொடங்கி திரைப்படத் தொழில் வளர ஊக்குவித்தார். சுமார் அறுபத்தைந்து திரைப்படங்கள் அந்த படப்பிடிப்பு நிலையத்தில் உருவாகிவெளிவந்தன. அவருக்குப் பிறகு ஏ.வி. மெய்யப்பச் செட்டியார் தேவகோட்டைச் சாலையிலும், பிறகு சென்னையிலும் படப்பிடிப்பு நிலையத்தை உருவாக்கினார்.[47]

நுண்கலை உலகிற்கும், திரைப்பட உலகிற்கும், நகரத்தார்களின் பணி சிறப்பானதாகும். எல்லாத் துறைகளிலும் நகரத்தார் இருப்பர் என்பதற்கு கலைத் துறையும் திரைப்படத் துறையும் தெளிவான எடுத்துக்காட்டுக்கள்.

8. 7. பொருளாதாரத் துறையில் நகரத்தார்கள் :

பொருளாதாரம் என்பது சமூகவியலின் ஓர் அங்கமாகும். சமுதாயப் பணிகள் பல புரிந்த நகரத்தார்கள் மனித வள மேம்பாட்டை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத் துறையில் ஈடுபட்டு இந்தியாவில் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியுள்ளனர்.

அயல்நாடுகளில் தொழில் புரிந்து. அந்தந்த நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திற்குக் காரணமாக இருந்த நகரத்தார்கள், இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் தம்

தாயகத்திலேயே பல தொழில் துறைகளில் ஈடுபடலாயினர்.

''பட்டினில் ஆடையும் பஞ்சில் உடையும்
பண்ணி மலைகளென வீதிகுவிப்போம்
கட்டித் திரவியங்கள் கொண்டு வருவார்
காசினி வணிகருக்கு அவைகொடுப்போம்
ஆயுதம் செய்வோம் நல்லகா கிதம்செய்வோம்
ஆலைகள் வைப்போம் கல்விச்சாலைகள் வைப்போம்
ஓயுதல் செய்யோம் தலைசாயுதல் செய்யோம்
உண்மைகள் சொல்வோம் பலவண்மைகள் செய்வோம்'

என்று இந்திய நாடு பொருளாதாரத் துறையில் தன்னிறைவு பெற வழிவகைகள் சொல்கிறார் பாரதியார்.[48] ஆயுதம் செய்வதைத் தவிர மற்றெல்லாத் தொழில் துறைகளிலும் ஈடுபட்டனர் நகரத்தார்கள்.

8. 7. 1. ஆலைகளும் தொழிற்சாலைகளும் :

நூற்பு ஆலைத் தொழிலிலும், நெசவு ஆலைத் தொழிலிலும் நகரத்தார்கள் சிறந்து விளங்கினர். இந்திய நாட்டு விடுதலைக்கு முன்புவரை நம் நாட்டில் ஆங்கிலேயர் தான் நூற்பாலைகளை நிறுவ முடியும் என்றிருந்த நிலையை மாற்றி ஆங்கிலேயருக்குப் போட்டியாக ஆலை நடத்தி வெற்றி கண்டவர் தேவகோட்டையைச் சேர்ந்த பி. எஸ். சோமசுந்தரம் செட்டியாராவார். கேரளத்தில் கள்ளிக்கோட்டைப் பகுதியில் 'கல்லாய்' என்ற ஊரில் நூற்பு நெசவாலையை நடத்தினார்.

நகரத்தார்கள் பெரிய அளவில் ஆலைத் தொழிலில் ஈடுபடக் காரணமாக இருந்த பி. எஸ். சோமசுந்தரம் செட்டியார், 1910-இல் கோயம்புத்தூரில் நிறுவிய காளீசுவரா நெசவாலைதான் தமிழகத்தில் தமிழரால் நிறுவப்பட்ட முதல் ஆலையாகும்[49]. அதைத் தொடர்ந்து வள்ளல் அழகப்பர், கருமுத்து தியாகராசச் செட்டியார் போன்றோர் நூற்பாலைகளையும் நெசவாலைகளையும் கேரளாவிலும், தமிழகத்தின் பல பகுதிகளிலும் ஆந்திராவிலும் ஏற்படுத்தினர்.

கருமுத்து தியாகராசச் செட்டியார் 1921-இல் மதுரையில் மீனாட்சி ஆலையைத் தொடங்கி 1973க்குள் சிலைமான். பரவை,

தேனூர், கப்பலூர், கோவில்பட்டி, சூலக்கரை, கோயம்புத்தூர் போன்ற பல இடங்களில் பதினெட்டுக்கும் மேற்பட்ட ஆலைகளை நிறுவி 'ஆலை அரசர்' என்று போற்றப்பட்டார். மதுரையைப் பஞ்சாலைத் தொழிலின் கேந்திரத் தலமாக மாற்றிய அவர், நலிந்து நின்ற பல ஆலைகளையும் ஏற்று நடத்தினார்.[50]

நகரத்தார்கள் இத்தகைய ஆலைகள் மூலம் நல்ல பொருள் வருவாய் பெற்றனர். அதே சமயம் சமுதாயமும் நாடும் பல நன்மைகளைப் பெற்றன. இந்த ஆலைகளில் பல்லாயிரக் கணக்கானோர் இனமத வேறுபாடு கருதாது வேலைவாய்ப்புப் பெற்றனர். அதனால் நாட்டின் வேலையில்லாத் திண்டாட்டம் ஓரளவு குறைக்கப்பட்டது. ஆலைகளைச் சுற்றிலுமுள்ள பகுதிகள் நன்கு வளர்ச்சியடைந்தன. நம் நாட்டுத் துணிகள் உலகச் சந்தைக்கு அனுப்பப்பட்டு ஏற்றுமதி வாணிகம் சிறப்படைந்தது. அதனால் நம் நாட்டிற்கு வருவாய் கிடைத்தது. பொருளாதாரம் வளர்ந்தது.

வெறும் இலாபத்தை மட்டும் கருத்தில் கொள்ளாது தொழிலாளர் நலன் கருதி அவர்களுக்கு வேண்டிய குடியிருப்புக்கள், கல்வி நிலையங்கள், மருத்துவசாலைகள் போன்ற தேவையான வசதிகளைச் செய்து கொடுத்து நகரத்தார்கள், தொழிலாளர் நலனைக் காத்தனர். நகரத்தார் ஆலைகளில் பயிற்சி பெற்ற பலர், புதிய ஆலைகளைத் தொடங்கினர். இந்தவகையில் தமிழகத்தில் ஆலைத்தொழில் வளர்வதற்கு நகரத்தார்கள் காரணர்களாக இருந்திருக்கிறார்கள்.

தேவகோட்டை 'சத்திரத்தார் குடும்பத்தார்' தச்சநல்லூரில் சர்க்கரை ஆலையை நிறுவி, சர்க்கரை ஆலைகளை நகரத்தார் நிறுவ முன்னோடிகளாக விளங்கினர். தேவகோட்டை 'மேனா வகையினர் புனலூரில் காகிதத் தொழிற்சாலை அமைத்து காகிதத் தொழிற்சாலைக்கு முன்னோடிகளாகத் திகழ்ந்தனர்.[51]

இரும்பைக் காய்ச்சி உருக்கி, இயந்திரங்கள் பல செய்து இந்திய நாட்டின் தொழில் நிலையையும் அதன் மூலம் பொருளாதார நிலையையும் வளர்த்த தொழிலதிபர்களில் பள்ளத்தூர் அ. மு. மு. முருகப்பச் செட்டியாரும் ஒருவர். சாதாரண மக்களின் தேவையை உணர்ந்து, அவர்களின்

போக்குவரத்திற்குப் பயன்படும் வகையில் மிதிவண்டிகளைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்ட முருகப்பர் சென்னையில் அம்பத்தூர் பகுதியில் டி. ஐ. சைக்கிள் தொழிற்சாலையை நிறுவினார். இன்று இந்தியாவிலேயே முன்னணியில் நிற்கும் அத்தொழிற்சாலை உலகின் பல நாடுகளுக்கு ஏராளமான மிதிவண்டிகளை ஏற்றுமதி செய்கிறது. அதனால் இந்தியாவிற்கு அதிகமான அயல்நாட்டுச் செலாவணி கிடைக்கிறது. மேலும் உப்புத்தாள் தயாரிக்கும் தொழிற்சாலையை 'கார்பரெண்டம் யூனிவர்சல்' என்ற பெயரில் முருகப்பர் தொடங்கினார். பல வேலைகளுக்கும் பயன்படும் உப்புத்தாள், இந்தியாவில் இத்தொழிற்சாலையில் தான் பெருமளவில் தயாரிக்கப்படுகிறது.[52]

இந்திய நாட்டின் ஐந்தாண்டுத் திட்டங்களின் அடிப்படைக் கொள்கை, கனரகத் தொழில்களை வளர்ப்பதும் இறக்குமதியைக் குறைத்து ஏற்றுமதியைப் பெருக்குவதும், வெளிநாட்டுச் செலாவணியை விரிவுபடுத்துவதுமாகும். அந்த வகையில் கொப்பனாபட்டியைச் சேர்ந்த மு. பெ. மு. செ. குடும்பத்தார் தோல் பதனிடும் தொழிலை தமிழகத்தில் தொடங்கினர். அதனை வளர்த்து உலக அளவில் தமிழகத்திற்கும், இந்தியாவிற்கும் பெயரையும் புகழையும் அயல்நாட்டுச் செலர்வணியையும் தேடித் தந்தவர் மேலைச் சிவபுரியைச் சேர்ந்த ஆ. நாகப்பச் செட்டியாராவார். ஏற்றுமதித் துறையில் அதிகச் சாதனை படைத்ததற்காக இந்திய அரசாங்கம் அவரைப் பாராட்டி விருது வழங்கிச் சிறப்பித்தது.

தமிழகத்தில் தோல் பதனிடும் தொழிலைச் செய்துவந்த முகமதியர்கள் இந்திய நாடு சுதந்திரம் பெற்றதும் பாகிஸ்தானுக்குக் குடியேறிவிட்டனர். அதனால் பதனிட்ட தோல்களின் பற்றாக்குறை ஏற்பட்டது. ஆடு மாடுகளின் தோல்களைப் பதனிடும் தொழிலை மேற்கொள்ள, பெருவாரியான இந்துக்களாகிய தமிழர்கள் தயங்கியதால் பச்சைத் தோல்கள் கெட்டு அழுகின. அதனால் நாட்டின் சுகாதாரமும் பொருளாதாரமும் பாதிக்கப்பட்டன. இந்நிலையில் துணிவோடு, தமிழகத்தில் திண்டுக்கல், சென்னை முதலான பல ஊர்களிலும் பச்சைத் தோல்களை அழுகவிடாமல், தோல் பதனிடும் தொழிற்சாலைகளை ஏற்படுத்திப் பதனிட்டு. உலகச்

சந்தைக்கு அனுப்பி நாட்டின் பொருளாதாரத்தைக் காப்பாற்றினார் நாகப்பச் செட்டியார்.[53]

கழிவுத் தோல்களைக் கொண்டு, காலணிகள் தயாரிக்கப் பயன்படும் தோல் அட்டைகள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றையும் நாகப்பர் நிறுவினார். அத்தோல் அட்டைகள் அமெரிக்க ஐரோப்பிய நாடுகளில் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளன.[54]

இன்று, இந்தியாவில் தோல் பதனிடும் தொழிலில் சென்னை முன்னணியில் நிற்பதற்குக் காரணமாக விளங்குகின்றனர் நாகப்பர் குடும்பத்தினர். இந்திய அரசாங்கத்துக்கு நமது நாட்டின் ஏற்றுமதி வாணிகம் மூலம் கிடைக்கின்ற அயல்நாட்டு வருவாயில் ஐந்து சதவிகிதம் சென்னையிலிருந்து ஏற்றுமதியாகும் தோல் மூலம் கிடைக்கிறது.[55]

இன்று ஒவ்வொரு சராசரி இந்தியக் குடிமகனின் கனவும் தனக்கென ஒரு வீடு கட்டிக் கொள்ளவேண்டும் என்பதாகும். அதற்கு உதவும் வகையில், வீடு கட்டத் தேவையான 'சிமிண்டு' தயாரிக்கும் தொழிற்சாலைகளையும், உணவுப் பொருட்களின் உற்பத்தியைப் பெருக்க உதவும் உரங்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளையும் நகரத்தார்கள் நிறுவியுள்ளனர். ஆயுள் காப்பீட்டுக் கழகங்களை நடத்தியிருக்கிறார்கள். தேயிலை, இரப்பர் தோட்டங்கள் போன்றவற்றின் உரிமையாளராக நகரத்தார்கள் உள்ளனர். நகரத்தார்கள் ஈடுபடாத தொழில் துறைகளே இல்லை.

நகரத்தார்களது செல்வம் ஆயிரக்கணக்கான ஏழைகளுக்கு உழைப்பும் பிழைப்பும் நல்கியது. ஊதிய நோக்கில் மட்டுமல்லாது, சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் தங்களாலான தொண்டைச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் உலகத் தொழிலனைத்தும் உவந்து செய்து இந்திய நாட்டின் தொழில் வளர்ச்சிக்கும், பொருளாதார மேம்பாட்டிற்கும் நகரத்தார்கள் பெரிதும் உதவியுள்ளனர்.

8. 7. 2. வங்கிப் பணிகள் :

தொழில், வாணிகம் இவற்றைப் பெருமளவு மேற்கொள்வதற்கு மூலதனம் தேவைப்படுகிறது. அதே சமயம் பல்லாயிரக்கணக்கானோர் தங்கள் வருவாயில் நுகர்வுக்காகச் செலவழித்தது போகச் சிறுசிறு தொகைகளைச் சேமிக்க நினைக்கிறார்கள். அவ்விரு சாராரிடையே இடையிட்டு மக்களிடமிருந்து சிறுசிறு தொகைகளைப் பெற்று, பெருந்தொகையாக்கி அப்பணத்தை வேண்டுவோருக்குக் கடனாக கொடுக்கும் ஓர் அமைப்புத் தான் வங்கியாகும். வங்கியில் சேமிக்கும் தொகை பாதுகாப்பாக இருப்பதோடு அச்சேமிப்புப் பணத்திற்கு வட்டியாகச் சிறிது ஊதியமும் கிடைக்கிறது. உற்பத்தித் துறையில் பயன்படும் வகையில் வணிகர்களுக்கும்; தொழில் துறைகளில் ஈடுபட விரும்பு வோருக்கும் வங்கிகள் பணத்தைக் கடனாகக் கொடுத்துத் திரும்பப் பெறுகின்றன.

அத்தகைய வங்கிகள் ஒரு நாட்டின் பொருளாதார அமைப்பில் முக்கிய அங்கம் வகிக்கின்றன. மக்களின் வைப்புக்களை ஏற்றுக்கொண்டு வேண்டும்போது திருப்பிக் கொடுக்கும் வங்கிகள், உழைத்துப் பொருளீட்டிச், சிக்கனமாகச் செலவழித்து சேமிக்க வேண்டும் என்ற நல்ல பண்புகளை மக்களிடையே வளர்க்க உதவுகின்றன. வணிகர்கள் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குப் பணத்தை எளிதாக வங்கிகள் மூலம் அனுப்பமுடிகிறது. அயல்நாட்டில் வணிகத்தில் ஈடுபட்டவர்களுக்கு வங்கிகள் பெருந்துணையாக இருக்கின்றன.

வங்கிகள் செய்துவரும் பணிகள் பலவற்றை நீண்ட காலமாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் செய்துவந்த நகரத்தார்கள் மேனாட்டு முறைப்படி இயங்கிவரும் வங்கித்துறையின் முன்னோடிகள் ஆவர். உண்டியல் முறையை உலகிற்கு அறிமுகப்படுத்தியவர்கள் நகரத்தார்களே.

ஆங்கிலேயர் ஆட்சியில் கூட்டுப்பங்கு நிறுவன அடிப்படையில் வங்கிகளைத் தொடங்கும் தனியார் முயற்சி ஆதரிக்கப்பட்டதால் வங்கித் தொழிலின் நுட்பங்களை அறிந்திருந்த நகரத்தார்கள், மக்களுக்குப் பயன்படும் வகையில்,

1906-இல் 'இந்தியன் வங்கியையும், 1937-இல் 'இந்தியன் ஓவர்ஸீஸ் வங்கி' யையும், 1943-இல் 'மதுரை வங்கி'யையும் தொடங்கி நடத்தினர். அது தவிர செட்டி நாட்டில், காரைக்குடி வங்கி, 'செட்டிநாடு கமர்ஷியல் வங்கி' 'நாட்டுக்கோட்டை வங்கி' (தேவகோட்டை), 'செட்டிநாடு பயனீர் வங்கி, 'நகரத்தார் வங்கி' (கண்டனூர்) என சிறிய வங்கிகளும் நகரத்தார்களால் நடத்தப்பெற்றன.[56]

பெரிய வங்கிகளுக்கிடையில் சிறிய வங்கிகள் இயங்குவது சிரமமாக இருந்தபோது ஸ்ரீரங்கம் 'ஜனோபகார வங்கி', தென்காசி 'இலஞ்சி வங்கி' 'மாயவரம் வங்கி', 'திருச்சிராப்பள்ளி வங்கி', சென்னையில் இயங்கிய 'ரிலையன்ஸ் வங்கி', 'செட்டிநாடு மெர்க்கண்டைல் வங்கி', கேரளத்தில் 'தாம் கோஸ் வங்கி' போன்ற சிறிய வங்கிகள் பலவற்றை, தாம் ஏற்படுத்திய மதுரை வங்கியுடன் இணைத்து நடத்தினார் கருமுத்து தியாகராசர்.[57]

இன்றைய ஸ்டேட் வங்கியின் முன்னோடியான இம்பீரியல் வங்கி, அதற்கு முற்பட்ட பிரசிடென்சி வங்கி ஆகியவற்றின் வளர்ச்சியில் நகரத்தார்களின் பங்கு முக்கியமானது. இந்தியாவில் வங்கித் தொழில் வளர்ச்சி பற்றிய ஆய்வு நூல்கள், அரசாங்க அறிக்கைகள் ஆகிய அனைத்தும் நகரத்தார்களின் வங்கித் தொழிலின் சிறப்பைப் பாராட்டுகின்றன.[58]

இவ்வாறு வங்கித் தொழிலிலும் முன்னோடியாக விளங்கி, நாட்டின் வளர்ச்சிக்கு உதவியிருக்கின்றனர் நகரத்தார்கள்.

8. 8. நகரத்தார் அறப்பணிகளில் பெண்களின் பங்கு :

நகரத்தார் சமுதாயத்தைச் சேர்ந்த பெண்கள் தங்கள் குடும்பத்தார் செய்யும் அறப்பணிகளுக்குப் பக்கபலமாய், பின்புலமாய் இருப்பதோடு தாங்களே நேரடியாக அறப்பணிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். நகரத்தார் இனத்து ஆடவர்கள் என்னென்ன அறப்பணிகள் செய்தார்களோ அவற்றை அந்த இனத்துப் பெண்களும் செய்திருக்கிறார்கள்.

நகரத்தார் இனத்துப் பெண்களை 'ஆச்சிகள்' என்று பொதுவாக அழைப்பர். ஆகவே ஆய்வாளரும் நகரத்தார் இனத்துப் பெண்களை ஆச்சிகள் என்ற குறிப்பிடுகிறார்.

நகரத்தார் இனத்துப் பெண்கள் இயல்பாகவே சமயப் பற்று மிக்கவர்கள். தலங்கள்தோறும் சென்று இறைவனை வழிபடுவதையும், ஐப்பசி கடைமுழுக்கு, முதல் முழுக்கு, ஆடி அமாவாசை, தை அமாவாசை ஆகிய நாட்களில் புண்ணிய நதிகளில் நீராடுவதையும், கும்பாபிடேகம் திருவிழாக்கள் காணச்செல்வதையும் சிறந்த வழக்கமாகக் கொண்டுள்ளனர். அவர்கள் கட்டிய, புதுப்பித்த கோயில்களும், கோயில்களில் ஏற்படுத்திய கட்டளைகளும் பல.

திருக்கொள்ளம்புதூரில் அம்மனுக்குத் தனி ஆலயம் எடுத்தவர்கள் நகரத்தார் பெண்களே.[59] ஆ. தெக்கூரில் உள்ள வாழ்நாள் பிள்ளையார் கோயில் சா. கல்யாணி ஆச்சியால் திருப்பணி செய்யப்பெற்றது.[60] காஞ்சிபுரத்தில் உள்ள சுரகரீசுவரர் கோயில் கண்டனூர் சி. ராம. சு. இராமன் செட்டியார் மனைவி சிவகாமி ஆச்சியால் திருப்பணி செய்யப்பெற்று 1916-இல் கும்பாபிடேகம் நடைபெற்றது.[61]

க. லெ. சிகப்பி ஆச்சி, சொக்கலிங்கம்புதூரில் முனியையா கோயிலைக் கட்டியவர்.[62] கோயில் திருப்பணிகளோடு மடங்கள், நந்தவனங்கள், ஊருணிகள் ஆகிய திருப்பணிகளிலும் நகரத்தார் சமூகப் பெண்கள் ஈடுபட்டனர்.

திருக்கழுக்குன்றத்தில் குருபூசை மடத்தை ஏற்படுத்தியவர் தேவகோட்டை அழ. மு. கரு. வினைதீர்த்தாள் ஆச்சியாவார்[63]. காஞ்சிபுரம் நாராயண சேவாசிரமத்தில் ஆச்சிமார்கள் பல இல்லங்களைக் கட்டிக் கொடுத்துள்ளனர்.[64] காவிரிப் பூம்பட்டினம் மேலையூரில் இருக்கும் 'சிவராஜயோக மடம்' ஆச்சி ஒருவரால் வசூலித்துக் கொடுக்கப்பட்ட நிதியிலிருந்து கட்டப்பட்டதாகும். துலாவூர் மடத்தை நகரத்தார் பெண்கள் ஒன்றுசேர்ந்து செப்பனிட்டுக் கொடுத்துள்ளனர்.

நகரத்தார் இனத்தைச் சேர்ந்த பெண் துறவி ஒருவர் வடலூரில் மடமொன்று நிறுவி, அடியார்களுக்கும்

ஏழைகளுக்கும் தொண்டு செய்வதையே தன் குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்துள்ளார்.

வடலூரில் தெய்வானை ஆச்சியடிகள் மடம் என்றொரு மடம் உண்டு. அந்த மடத்தைத் தோற்றுவித்த அரிமளம் தெய்வானை ஆச்சி 1870-இல் பிறந்தவர். இளவயதிலேயே கணவரை இழந்து அரிமளத்திலுள்ள கோடகநல்லூர் சுந்தர சுவாமிகள் மடத்திற்குச் சென்று பாடம் கேட்டும், சாதுக்களுக்குத் தொண்டு செய்தும், தம் இல்லத்தில் அடியாரை உண்பித்தும் சமயத் தொண்டு புரிந்து வந்தார்.

1921-இல் வடலூர் சென்று அங்கு ஒரு மடத்தைத் தோற்றுவித்து அதன் வாயிலாகச் சமயப் பணியும் சமுதாயப் பணியும் ஆற்றி வந்தார். அங்குள்ள கோயிலுக்கு, வெள்ளி வாகனங்கள் செய்து கொடுத்து, திருவிழாக்களைச் சிறப்பாக நடத்தியும், மடத்தில் நந்தவனம் வைத்து சிவ வழிபாட்டிற்குரிய மலர்கள் கொடுத்தும், சாதுக்களுக்கும் ஏழைகளுக்கும் உணவு, உடை முதலியன அளித்தும், தல யாத்திரை மேற்கொள்ள விரும்பும் வசதியில்லாதோருக்குப் பொருளுதவி செய்தும் தொண்டாற்றி வந்தார் தெய்வானை ஆச்சியடிகள். மேலும் அங்குள்ள சாத்தப்ப சுவாமி மடாலயத்தைத் திருப்பணி செய்துள்ளார். மக்கள் தொண்டையும் மகேசன் தொண்டையும் மேற்கொண்டு தன் வாழ்நாளை வடலூரில் கழித்தவர் தெய்வானை ஆச்சியடிகள்.[65]

செட்டிநாட்டுப் பெண்களின் தாலாட்டுப் பாடல்கள் புகழ் பெற்றவை. அப்பாடல்களில் பல, நகரத்தார்களின் அறப்பணிச் செயல்களை எடுத்துரைக்கின்றன. வீரசிவாஜியின் தாய், சிவாஜிக்கு வீரக் கதைகள் சொல்லி இளமையிலேயே வீர உணர்வை ஊட்டியதுபோலத் தங்கள் குடும்பத்தாரும் மற்றவர்களும் செய்த அறப் பணிகளைச் சொல்லி அற உணர்வை, பிள்ளைகளுக்கு ஊட்டினர் நகரத்தார் பெண்கள். அவர்களது தமிழ் உணர்வையும் அறப்பணி இயல்பையும் கண்ட கவிஞர் கொத்தமங்கலம் சுப்பு.

"கோயிலிலே அலகிடுவார் கோடீசுவரர் மனைவி - வண்ணக்
கோலமிடும் கைகளிலே குலுங்கும் வைர வளைவி

வாய்மணக்கும் தாலாட்டிலே வருகும் தமிழருவி
வாழ்க்கையெல்லாம் உழைப்பதிலே வானம்பாடிக் குருவி"

என்று பாராட்டியுள்ளார்.[66]

சமயத் துறையில் மட்டுமல்லாமல் சமுதாயத் துறையிலும் ஆச்சிகள் பல பணிகள் செய்துள்ளார்கள். ஊருணிகள், மருத்துவமனைகள், பள்ளிகள், சுமை தாங்கிக் கற்கள் ஏற்படுத்தியுள்ளனர்.

கோட்டையூரிலிருந்து குன்றக்குடிக்குப் போகும் வழியிலுள்ள 'செட்டிச்சி ஊருணி' ஆச்சி ஒருவரால் கட்டப்பட்டதாகும். மேலைச் சிவபுரியிலுள்ள அமிர்தகுள ஊருணியின், ஒரு படித்துறையை 'ஆரு. சுப. சுப்பிரமணியஞ் செட்டியார் தமக்கை வள்ளியம்மை ஆச்சி' என்பவர் கட்டிக் கொடுத்துள்ளார். அதைக் குறிக்கும் கல்வெட்டு அப்படித் துறையில் பொறிக்கப்பட்டுள்ளது.

தேவகோட்டையைச் சேர்ந்த 'யாழ்ப்பாணம் இராமன் செட்டியாரின் மனைவி, திருவையாற்றில் தேவாரப் பாடசாலையொன்று நிறுவியுள்ளார்.[67] பாகனேரியில் தெய்வானை ஆச்சி என்பவரால் தோற்றுவிக்கப்பட்ட 'தெய்வானை ஆச்சி உயர்நிலைப் பள்ளி' செம்மையான முறையில் இயங்கி வருகிறது. இவரே பாகனேரியில் அன்னசத்திரமொன்றையும் நிறுவியுள்ளார்.

வலையபட்டியில் அ. ராம. அ. அண்ணாமலை செட்டியார் மனைவி அ. கல்யாணி ஆச்சி என்பவர் திருமண மண்டபம் ஒன்று கட்டிக் கொடுத்துள்ளார்.

ஆத்தங்குடியில் ராம. கா. அரு. மீனாட்சியாச்சி என்பவரும் கீழச்சிவல்பட்டியில் வள்ளியம்மையாச்சி என்பவரும் மருத்துவமனைகள் ஏற்படுத்தியுள்ளனர்.[68]

நகரத்தார் இனத்துப் பெண்கள் பல துறைப் பணிகளையும் மேற்கொண்டு நாட்டிற்கு உழைத்துள்ளனர். சுப.தி.த. திருநெல்லையாச்சி காரைக்குடி சிறப்பு நீதிபதியாகவும் (ஸ்பெஷல் மாஜிஸ்ட்ரேட்), குடா. சிவ. பழ. அழகம்மை ஆச்சி, ராம.

வள்ளியம்மை ஆச்சி, நா. பார்வதி ஆச்சி போன்றோர் நகரவை உறுப்பினராகவும் பணிபுரிந்து தங்கள் பகுதி மக்களுக்கு இயன்ற நன்மைகள் செய்துள்ளார்கள்.[69]

சமூக சேவையில் தம் கணவர் மெ.சுப.தி. தண்ணீர் மலையான் செட்டியாருடன் இணைந்து செயல்பட்ட திருநெல்லையாச்சி, கணவருடன் ஊர் ஊராகச் சென்று மேடைகளில் தமிழிசைக்குக் குரல் கொடுத்துள்ளார்.[70]

காதல் ஒருவனைக் கைப்பிடித்து அவன் காரியம் யாவினும் கைகொடுத்து வாழ்ந்த நகரத்தார் இனத்துப் பெண்களில் குறிப்பிடத்தக்கவர் காந்தி மெய்யப்ப செட்டியாரின் மனைவி நாச்சம்மை ஆச்சியாவார். காந்தியடிகளுக்கு கஸ்தூரிபாய் வாய்த்ததுபோல மெய்யப்பருக்கு நாச்சம்மை ஆச்சி விளங்கினார். பொதுத்தொண்டில் ஈடுபட்டு வீடு முதல் நாடுவரை நல்லன எல்லாவற்றிற்கும் மெய்யப்பருக்குத் தோள் கொடுத்தார். தங்கள் இல்லத்தில் ஆதி திராவிடப் பள்ளியைத் தம் கணவர் தொடங்கியபோது ஆதரவாக இருந்ததுடன், காந்தியடிகள் தம் இல்லத்திற்கு வந்திருந்தபோது கதரியக்கத்திற்காகவும் ஆதிதிராவிடர் நலனுக்காகவும் நன்கொடை கொடுத்துள்ளார்.[71]

இதழியல் பணியிலும் நகரத்தார் இனத்துப் பெண்களுக்குப் பங்கு உண்டு. கண்டனூர் சாந்தா சுப்பிரமணியன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர். 1973-இல் சோழவந்தான் கல்லுப்பட்டியிலிருந்து வெளிவரும் 'வண்ணங்கள்' என்ற இலக்கிய இதழுக்கு ஆசிரியராகப் பணிபுரிந்தவர்.[72]

இன்று நகரத்தார் பெண்களில் மேடைப் பேச்சாளர்கள் பலர் உள்ளனர். பட்டிமன்றம், கவியரங்கம் ஆகியவற்றில் பலர் பங்கு கொள்கின்றனர். வங்கிப் பணியிலும் நகரத்தார் பெண்கள் மிகுதியாக ஈடுபட்டுள்ளனர்.

சமய உணர்வும், சமுதாய உணர்வும், மொழி உணர்வும் நகரத்தார்களுக்கு இயல்பாகவே உள்ள காரணத்தினால் நகரத்தார் இனத்துப் பெண்களும் காலத்திற்கேற்ப அனைத்து வகையான அறப்பணிகளையும் தங்களால் இயன்ற அளவு செய்திருக்கிறார்கள்.

8. 9. நகரத்தார் இளைஞர்கள் :

நகரத்தார் ஆண்கள், பெண்கள், இளைஞர்கள் எல்லோருக்கும் இயல்பாகவே அறப்பணிகளில் ஆர்வமுண்டு. முன்பு 'தனவைசிய இளைஞர் சங்கத்தை' உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உருவாக்கிச் சமூக சேவை செய்ததுபோல இக்காலத்தில் 'நகரத்தார் இளைஞர் சங்கங்கள்' ஆங்காங்கே தோன்றிக் காலத்திற்கேற்பத் தங்கள் ஊருக்கும், தங்கள் இனத்துக்கும் பயன்படும்படியான பணிகளைத் தங்களால் இயன்ற அளவு செய்து வருகின்றன.

தங்கள் ஊர்க் கோயில்களில், திருவிழாக் காலங்களில் சாமி தூக்குதல், திருமண வீடுகளில் உணவு பரிமாறுதல், இறந்தவர் உடலை அடக்கம் செய்ய எடுத்துச் செல்லும் வண்டிகள் இல்லாதபோது பிணத்தைத் தூக்கிச் செல்லுதல் போன்ற பணிகளோடு புத்தக வங்கிகள் போன்றவற்றை ஏற்படுத்திப் புத்தகங்களைக் கொடுத்து உதவுதல், ஊராருடன் இணைந்து தேவையான பணிகளைச் செய்தல் போன்ற பணிகளைச் செய்து வருகின்றனர் நகரத்தார் இளைஞர்கள்.

'நாநயா' என்றதொரு இளைஞர் அமைப்பைத் திரு. முத்துராமன் என்ற இளைஞர் மதுரையிலிருந்து தொடங்கி, நகரத்தார் வசிக்கும் ஊர்களுக்குச் சென்று அந்தந்த ஊர்ப் புள்ளி விவரம், அறப்பணிகள், அறப்பணியாளர்களைப் பற்றிய செய்திகள் ஆகியவற்றைத் தொகுத்து 'நாநயா' என்ற இதழ் மூலம் சிறிது காலம் வெளியிட்டார். மேலும் இந்த அமைப்பு, வேலையில்லாத நகரத்தார் இளைஞர்களுக்கு அவரவர் கல்வி முதலிய தகுதிகளுக்கு ஏற்ப சுயவேலை வாய்ப்பை எப்படி மேற்கொள்வது என்பதை, ஆண் பெண் இருபாலாரையும் கோவிலூர் போன்ற இடங்களில் கூட்டி, இலவசப் பயிற்சியும் அளித்தது.

மேற்படிப்பும், வேலைவாய்ப்பும் இன்றைய நகரத்தார் இளைஞர்களுக்கு ஒரு பெரிய கேள்விக் குறியாக இருந்தாலும், அந்நிலைக்கு மனந்தளராது, சென்ற நூற்றாண்டிலும், இந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலும் நகரத்தார்கள், தொழில் துறைகளில் ஈடுபட்டுப் பொருளீட்டியதுபோல இக்கால

இளைஞர்களும் பல தொழில் துறைகளில் ஈடுபட்டுள்ளதோடு, தங்கள் முன்னோர்களைப் போல, அறப்பணிகளிலும் பங்கு கொண்டு வருகிறார்கள்.

8. 10. முடிவுகள் :

1. 'நாடெங்கும் வாழக் கேடொன்றுமில்லை' என்ற எண்ணமுடைய நகரத்தார்கள் தாங்கள் சார்ந்து வாழும் சமுதாயத்தின் தேவைகளை நிறைவேற்றுவது தங்கள் கடமை என்ற சமுதாய உணர்வோடு எந்தவொரு காரியத்தையும் செய்திருக்கிறார்கள்.

2. பயன்மரம் உள்ளூர் பழுத்ததுபோல நகரத்தார்களுடைய செல்வம் சமுதாயத்துக்குப் பயன்பட்டது.

3. நகரத்தார்கள், தம் பகுதி மக்கள் நோயற்ற வாழ்வு வாழ, மேனாட்டு முறையில் அமைந்த பல இலவச மருத்துவமனைகளையும், தாய்-சேய் நல விடுதிகளையும், சுகாதார நிலையங்களையும் ஏற்படுத்தியுள்ளனர்.

4. நகரத்தார்கள் தங்கள் பகுதி மக்களுக்கு, நீர் நிலை வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறார்கள்.

5. சாலைகள், பாலங்கள் போன்ற போக்குவரத்திற்குரிய வசதிகளையும், தேவையான பிற வசதிகளையும் நகரத்தார்கள் தங்கள் பகுதியிலும், கோயில் திருப்பணி செய்த தலங்களிலும் செய்து கொடுத்திருக்கிறார்கள்.

6. நகரத்தார்களில் காந்தியவாதிகள், சீர்திருத்தவாதிகள், தேசியவாதிகள் பலர், அவர்கள் நாட்டின் விடுதலைக்கும் விழிப்புணர்ச்சிக்கும் பாடுபட்டனர்.

7. நேதாஜியின் இயக்கத்திற்குத் தோள் கொடுத்தவர்கள் நகரத்தார்கள்.

8. ஆலைகளும், தொழிற்சாலைகளும், வங்கிகளும் நிறுவி, திறமையாக நடத்தி நாட்டின் பொருளாதரா வளர்ச்சிக்கு உறுதுணையாக உள்ளனர்.

9. தமிழகத்துக் கலை வளர்ச்சியில் நகரத்தாரின் பங்கு கணிசமானது.

10. நகரத்தார் இனத்துப் பெண்கள், நகரத்தார்கள் செய்யும் அறப்பணிகளுக்கு உறுதுணையாய் இருப்பதோடு, தாங்களும் எல்லாவிதமான அறப்பணிகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

11. 'குலவிச்சை கல்லாமல் பாகம் படும்' என்ற பழமொழியின் இயல்பை நகரத்தார் இளைஞர்களிடையே காணமுடிகிறது.

அடிக்குறிப்புகள் :

1. சேஷாத்ரி சர்மா, அ. **நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு** வானதி பதிப்பகம், 1970, ப. 105.

2. சோமலெ. **இராமநாதபுர மாவட்டம்**, பாரி நிலையம், 1972, ப. 240.

3. முத்து பழநியப்ப செட்டியார், ஜெ. பி. பெ. நா. மு., **மலேயாவின் தோற்றம்**, பினாங்கு மெர்க்கெண்டைல் அச்சியந்திர சாலையில் பதிப்பிக்கப்பெற்றது. 1938, ப.105.

4. பத்மநாபன், N. R. **தேசபக்தர் ராம. சொக்கலிங்கனார் மணிவிழா மலர்**, நேரு சங்கம், காரைக்குடி, 5 பெப்ருவரி, 1961, ப. 29.

5. மேலது, ப. 38.

6. முத்துப் பழநியப்பச் செட்டியார், ஜே. பி, பெ. நா. மு., **மலேயாவின் தோற்றம்**, பினாங்கு மெர்க்கெண்டைல் அச்சியந்திர சாலையில் பதிப்பிக்கப் பெற்றது, 1938, ப. 235.

7. சோமசுந்தரம், அரு. **உயர்கல்வி தந்த உத்தமர்கள்**, அருணா பப்ளிகேஷன்ஸ், சென்னை, 1975, ப. 22.

8. பத்மநாபன், N.R. **தேசபக்தர் ராம. சொக்கலிங்கனார் மணிவிழா மலர்**, நேரு சங்கம், காரைக்குடி, 5 பெப்ருவரி, 1961, ப. 91.

9. இரணியூர் கோவில் கல்வெட்டு A.R. No. 3/1926.

10. **புதுக்கோட்டை கல்வெட்டுக்கள்**, புதுக்கோட்டை சமஸ்தான வெளியீடு, திருமயம் தாலுகா, 1929, கோனாபட்டு கற்பக விநாயகர் கோயிலில் நடப்பட்டிருக்கும் ஒரு கல்லிலுள்ள சாசனம் கல்வெட்டு எண் 1861.

11. இளையாத்தங்குடியில் குளக்கரையில் உள்ள கல்வெட்டு AR. No. 42/1926.

12. இராமநாதன் செட்டியார், வயிநாகரம், அ., (தொ. ஆ.) **நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு**, ஆர். இராமநாதன் செட்டியாரால் வெளியிடப் பெற்றது. 1953, ப. 160.

13. அரிமளம் ஏ. சம்பந்தம் செட்டியார் தகவல்.

14. சோமலெ., (ப. ஆ) **ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரம் நூற்றாண்டு விழா மலர்** 1863-1963 ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரம் மேனேஜிங் சொசைடி, இரங்கூன், 1963, ப. 48.

15. அருணாசலம் பிள்ளை, மு. **தமிழ்ப் பெரு வள்ளல்,** தமிழ்மனை, அண்ணாமலை நகர், இரண்டாம் பதிப்பு, 1952, ப. 6.

16. சோமசுந்தரம், அரு., (ப. ஆ.) **திரு P.S.S.சோமசுந்தரம் செட்டியார் திருமதி மீனாட்சி ஆச்சி சஷ்டியப்த பூர்த்தி மணிவிழா மலர்,** சுந்தரவிலாஸ், தேவகோட்டை வெளியீடு, 26-9-1993, ப. 28.

17. இராமநாதன் செட்டியார் வயிநாகரம், **அ.நாட்டுக்கோட்டை** நகரத்தார் வரலாறு ஆர்.இராமநாதன் செட்டியார் வெளியீடு, 1953, ப. 82.,

18. முத்துப் பழநியப்ப செட்டியார், ஜே. பி. பெ. நா. மு. **மலேயாவின் தோற்றம்,** பினாங்கு மெர்க்கெண்டைல் அச்சியந்திரசாலையில் பதிப்பிக்கப்பெற்றது. 1938, ப.163.

19. தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக கல்வெட்டுத் துறைப் பேராசிரியர் திரு. இராசு அவர்களால் கண்டுபிடிக்கப்பட்ட, கோயம்புத்தூருக்கு அருகில் பூச்சியூர் என்னுமிடத்தில் கிடைத்த செப்பேடு.

20. கடியாபட்டி தீ. நா. நாச்சியப்ப செட்டியார் திருப்பாதிரிப் புலியூரில் அமைத்த தண்ணீர்ப் பந்தலுக்கும், நேமத்தான்பட்டி நா. பழனியப்ப செட்டியார் அமைத்த தண்ணீர் பந்தலுக்கும் 'திருநாவுக்கரசு தண்ணீர்ப்பந்தல்' என்று பெயர். நாராயணசாமிபிள்ளை, தி மு. **இராமச்சந்திரபுரம்**

தீ. நா. நாச்சியப்ப செட்டியார் 1925, ப. 91. சேதுப்பிள்ளை, **ரா. பி. பழனியப்பர் வாழ்க்கை வரலாறு**, திருநாவுக்கரசு வித்யாசாலை, நேமத்தான்பட்டி, வெளியீடு 1944, ப. 14.

21. நாராயணசாமி பிள்ளை, தி. மு., **இராமச்சந்திரபுரம் தீ. நா. நாச்சியப்பச் செட்டியார்**, 1925, ப. 65.

22. சோமலெ., (ப. ஆ) **அருள்மிகு இராமநாத சுவாமி திருக்கோவில், இராமேசுவரம், மகா கும்பாபிஷேக சிறப்பு மலர்**, 1925 பிப்ரவரி 3 முதல் 9 வரை இராஜராஜேசுவரி சேதுபதி மன்னர் எழுதிவைத்த நாட்குறிப்பு, இராமநாதபுர சமஸ்தான வெளியீடு, 5.2.1975, ப. 334.

23. மேலது, '**நகரத்தார்களும், இராமேசுவரமும்**' கட்டுரை, ப. 334.

24. சோம.லெ., **இராமநாதபுர மாவட்டம்**, பாரி நிலையம், 1972 ப. 157.

25. சொக்கலிங்கன், ராய. **ஊழியன்**, 6.7.1934.

26. இவைகள் முறையே 20.7.34., 3.8.34., 10.8.34.. 17.8.34., 7.9.34. ஆகிய ஊழியன் இதழ்களில் வெளிவந்துள்ளன.

27. ராமசாமி, வெ. நடராசன் அ. வெ. (மொ. ஆ) **மாணவர்க்கு**, புதுமைப் பதிப்பகம் லிமிடெட், காரைக்குடி, இரண்டாம் பதிப்பு, 1947, நன்றியுரை.

28. மேலது, ப. 446.

29. கதிரேசன் மெ. **தனவணிகர் தன்மை**, செட்டிநாடு நூற்பதிப்புக் கழகம், தேவகோட்டை, 1940, பக். 51, 52.

30. **காந்தி மெய்யப்பர் நூற்றாண்டு விழா மலர்**, 'மெய்யப்பர் என்றொரு காந்தி' கட்டுரை முத்து அண்ட் சாமி, 1986, ப.65.

31. முருகப்பா, **சொ. குமரன்** 5.9.1923.

32. **ராமு. சொ. நினைவு மலர்,** இந்து மதாபிமான சங்கம் அறுபத்து ஆறாம் ஆண்டறிக்கை, காரைக்குடி, 22. 1. 1984, ப. 10.

33. வி. என். சிதம்பரம் செட்டியார், **நகரத்தார் குரல், கம்பன் அடிப்பொடி** சா. கணேசனார் கட்டுரை, ஜூலை 1993, ப. 26 & 36.

34. மேலது, (சின்ன அண்ணாமலை நினைவு இதழ்) ஜனவரி 1993, ப. 18.

35. மேலது, ப. 15.

36. பார்த்தசாரதி நா. **தினமணி கதிர்** (நகரத்தார் சிறப்பிதழ்). 'நலம் வளர்க்கும் நகரத்தார்' கட்டுரை. குன்றக்குடி பெரிய பெருமாள், ப. 18.

37. மேலது, ப. 21.

38. சோமலெ. **இராமநாதபுர மாவட்டம்** பாரி நிலையம், 1972, ப. 184.

39. பார்த்தசாரதி, நா. **தினமணிகதிர்,** (நகரத்தார் சிறப்பிதழ்) 'நலம் வளர்க்கும் நகரத்தார்' கட்டுரை, குன்றக்குடி பெரியபெருமாள், ப. 21.

40. **காந்தி மெய்யப்பர் நூற்றாண்டு விழா மலர்,** '**காரைக்குடி காந்தி செட்டியார்**' கட்டுரை, தியாகி நெற்குப்பை லெட்சுமணன், ப. 39.

41. 6.7.1934 முதல் 28.9.34 வரை வெளிவந்த ஊழியன் இதழ்களில் இத்தகைய முழக்கங்கள் காணப்படுகின்றன.

42. **முருகப்பனார் மணி விழா மலர், 'தென்னாட்டு இராஜாராம் மோகன்ராய்'** கட்டுரை, தமிழண்ணல், ஹிந்து மதாபிமான சங்க வெளியீடு, 1953, ப. 25.

43. மேலது, **'சங்கமும் சொ. முருவும்'** கட்டுரை, ராய.சொ இராமசாமி பக். 3-5.

44. மேலது, **'நல்ல தமிழன்', கட்டுரை,** ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள், ப. 15.

45. சோமலெ. **இராமநாதபுர மாவட்டம்,** பாரி நிலையம், 1972, பக். 104, 105.

46. சோமசுந்தரன், அரு. **பெருந்தொழில் வளர்த்த பெரியோர்,** மேன்மைமிகு மெய்யப்பர், கட்டுரை, பொன்முடிப் பதிப்பகம்; காரைக்குடி, இரண்டாம் பதிப்பு, 1979, பக். 121-136.

47. சோமசுந்தரன், அரு. (ப.ஆ) திரு **P.S.S.சோமசுந்தரம் செட்டியார் திருமதி S.மீனாட்சி ஆட்சி சஷ்டியப்த பூர்த்தி மணி விழா மலர்,** 26.9.1993, ப. 27.

48. **பாரதியார் கவிதைகள்,** பூம்புகார் பிரசுரம், இரண்டாம் பதிப்பு 1978, 'பாரததேசம்' பாடல் எண் 8,9, ப. 22.

49. சோமசுந்தரன், அரு. **பெருந்தொழில் வளர்த்த பெரியோர்,** பொன்முடி பதிப்பகம், இரண்டாம் பதிப்பு 1979, 'சொல் தவறாச் சோமசுந்தரர்' ப. 15.

50. குழந்தைநாதன், சு. **கலைத் தந்தை கருமுத்து தியாகராசர்,** கருமுத்து, தி. மாணிக்கவாசகனார் மணி விழாக் குழு வெளியீடு, ப. 108.

51. பார்த்தசாரதி, நா. **தினமணிகதிர்,** 'நலம் வளர்க்கும் நகரத்தார்' கட்டுரை, குன்றக்குடி பெரிய பெருமாள், 25-4-80, ப. 16.

52. சோமசுந்தரன், அரு. **பெருந்தொழில் வளர்த்த பெரியோர்,** 'மூதறிஞர் முருகப்பர்' கட்டுரை, பொன்முடி பதிப்பகம், இரண்டாம் பதிப்பு, 1979, பக் 31-33.

53. மேலது, **'நாடு போற்றும் நாகப்பர்',** ப. 103.

54. மேலது, ப. 108.

55. மேலது, ப. 106.

56. குழந்தைநாதன், சு. **கலைத்தந்தை கருமுத்து தியாகராசர்** கருமுத்து தி. மாணிக்கவாசகனார் மணிவிழாக் குழு வெளியீடு, 1980, ப. 147.

57. மேலது, பக். 149, 150

58. சோமலெ. **இராமநாதபுர மாவட்டம்**, பாரி நிலையம், 1972, ப. 158.

59. சோமு. ட.நடராசன், சித. **பெ. ராம. குடும்பத் திருப்பணிகள்**, ப. எ. இல்லை.

60. ஆ. தெக்கூர் கும்பாபிடேக மலர் இங்குள்ள வாழ்நாள் பிள்ளையார் கோயில் சா. கல்யாணி ஆச்சியார் திருப்பணி செய்யப் பெற்றது.

61. சோமலெ. (ப.ஆ), **காஞ்சிபுரம் மலர்**, 19, 20 ஆம் நூற்றாண்டுகளில் காஞ்சியில் நகரத்தார் திருப்பணிகள், கட்டுரை, சோமலெ, நகரத்தார் வெளியீடு, 1979, ப. 29.

62. க.லெ. சிகப்பி ஆச்சி, சொக்கலிங்கம் புதூரில் முனியையா கோயிலைக் கட்டியவர். சொக்கலிங்கம்புதூர் அருள்மிகு மீனாட்சி சுந்தரரேசுவரர், திருக்கோயில் சிறப்பு மலர், 1982, சு. கரு. பழநியப்பன் கட்டுரை.

63. இராமநாதன் செட்டியார், அ. வயிநாகரம், **நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு**, இராமநாதன் செட்டியாரால் வெளியிடப் பெற்றது. 1953, ப. 266.

64. காஞ்சிபுரத்தில் ஆச்சிமார்கள் கொடையால் சேவாசிரமத்தில் பல இல்லங்கள் தோன்றியுள்ளன. 'காஞ்சிபுரம் மலர்' - ஸ்ரீ நாராயண சேவாசிரமம்' கட்டுரை, 1979, ப. 121.

65. ராமநாத சுவாமிகள், வடலூர், **தெய்வானை ஆச்சியடிகளின் சரித்திரம்**, கார்த்திகேயன் பிரஸில் பதிப்பிக்கப்பட்டது. 1935, ப. 18.

66. சுப்பு, கொத்தமங்கலம், **அருள்மிகு சௌந்தரவல்லி அம்பாள் சூதவனேசுவரர் கோயில் கும்பாபிஷேக மலர்,** கொத்தமங்கலம்.

67. இராமநாதன் செட்டியார், அ. வயிநாகரம், **நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு,** ஆர். இராமநாதன் செட்டியார் வெளியிட்டது. 1953, ப. 207.

68. மேலது, பக், 65, 86.

69. சேஷாத்ரி சர்மா, அ. **நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு,** வானதி பதிப்பகம், 1970, ப. 234.

70. மேலது, பக். 137, 138.

71. **காந்தி மெய்யப்பர் நூற்றாண்டு விழா மலர்,** 'அவர் தம் சிறப்புக்குவேறென்ன வேண்டும்' கட்டுரை, குன்னக்குடி தங்கவேலன், 1986, ப. 30.

72. சோமலெ. **செட்டிநாடும் செந்தமிழும்** வானதி பதிப்பகம், 1984, ப. 657..

9. முடிவுரை

ஆய்வு முடிவுகள் :

1. வணிகத்தைக் குலத் தொழிலாகவும், அறப்பணிகள் ஆற்றுவதைக் குலமரபாகவும் கொண்ட நகரத்தார்கள் காவிரிப் பூம்பட்டினத்தில் சிங்கக் கொடியும் சீரகப்பூமாலையும் பெற்றுச் சிறப்புடன் வாழ்ந்தவர்கள். காலப் போக்கில் சிறிது சிறிதாகப் பாண்டிய நாட்டுப் பகுதிகளில் குடியேறிய பிறகு இப்போதுள்ள செட்டிநாட்டுப் பகுதியைத் தாயகமாகக் கொண்டு வாழ்ந்து வருகிறார்கள்.

2. செட்டிநாட்டில், இளையாத்தங்குடிக் கோயில் நகரத்தார் என்ற பிரிவினராக இருந்து, காலப் போக்கில் ஏழு கோயில் நகரத்தார்களாகவும் பிறகு ஒன்பது கோயில் நகரத்தார்களாகவும் பிரிந்து, கோயிலை அடிப்படையாகக் கொண்டு தங்கள் வாழ்க்கை முறைகளை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். இரணியூர்க் கோயிலாரும் பிள்ளையார்பட்டிக் கோயிலாரும் சகோதரர்கள் ஆதலால் தங்களுக்குள் மணவினைத் தொடர்பு வைத்துக் கொள்வதில்லை.

3. இந்தியாவில் குறிப்பிடத் தக்கதொரு வாணிபச் சமுதாயமாக விளங்கிய நகரத்தார்கள் கி. பி. 18, 19 ஆம் நூற்றாண்டுகளில் கீழ்த்திசை நாடுகளுக்குச் சென்று, அரிசி, நவதானியங்கள், துணிமணிகள், முதலியவற்றைக் கொண்டுவிற்கும் தொழிலிலும், கொடுக்கல் வாங்கல் தொழிலிலும், தேயிலை, இரப்பர் தோட்ட முதலாளிகளாகத் தோட்டத்தொழிலிலும் ஈடுபட்டுப் பெரும்பொருள் ஈட்டினர்.

4. ஈட்டியதில் ஒரு பகுதியை மகமைப் பணமென எடுத்துவைத்து, அதைக் கோயில் திருப்பணிகளுக்கும் மற்ற அறப்பணிகளுக்கும் செலவிட்டனர். நகரத்தார்களின் கோயில் திருப்பணிகள் தமிழகத்திலும், இந்தியாவின் பிற பகுதிகளிலும், உலகமெங்கும் காணப்படுகின்றன. கோயில்

திருப்பணிகள் செய்ததன் மூலம் நகரத்தார்கள் சைவ சமயத்தையும், தமிழர் நாகரிகத்தையும், பண்பாட்டையும், தமிழ் மொழியையும், தமிழகக் கலைகளையும் உலகமெல்லாம் பரவும் வகை செய்தார்கள். இன்று பல கோயில்களுக்குக் குடமுழுக்குகள் நடத்தியும், சென்னையிலுள்ள 'ஐயப்பன் கோயில்', தேவகோட்டையில் அமைந்த 'சுவர்ண ஆகர்ஷண பைரவர் கோயில்' போன்று புதிதாகச் சில கோயில்கள் கட்டியும், கோயிற் பணிகளில் விடாது தொடர்பு கொண்டுள்ளனர்.

5. சமயஞ்சார்ந்த சமுதாயப் பணிகளாகப் பாடசாலைகள், நந்தவனம், பல்வகை மடங்கள், சத்திரங்கள் ஆகியன அமைத்தும், குளங்கள் வெட்டியும் அறப்பணிகளைச் செய்தனர்.

6. ஈத்துவக்கும் இன்பத்தினை அறிந்த நகரத்தார்கள், கால நிலைகளுக்கு ஏற்ப அறப்பணிகளின் போக்கை மாற்றிக் கொண்டு சமுதாயத்திற்குத் தேவையான பிற பணிகளில் ஈடுபட்டனர். அவற்றுள் தலையாயது கல்விப்பணி, ஆரம்பப் பள்ளிகள் முதல் பல்கலைக் கழகங்கள் வரை அனைத்துக் கல்வி நிலையங்களையும் நகரத்தார்கள் ஏற்படுத்தி, சாதி மத இன வேறுபாடு கருதாமல் ஆண் பெண் இருபாலரும் கல்வி பயில வழிவகைகள் செய்தனர். மிகச் சிறிய சமூகத்தினரான அவர்கள் கோயில் பணிகளுக்கு அடுத்தபடியாக, மிகப்பெரிய அளவில் கல்விப் பணி புரிந்துள்ளனர்.

7. நகரத்தார்களின் மொழிப் பணி சிறப்பானது. இன்று நாடறிந்த உலகம் போற்றும் பல தமிழ்ப் புலவர்களையும் சான்றோர்களையும் ஆதரித்துப் போற்றியவர்கள் அவர்கள்.

8. நகரத்தார்களில் தமிழ்ப் புலவர்கள், கவிஞர்கள், சான்றோர்கள், ஆராய்ச்சியாளர்கள், திறனாய்வாளர்கள் எனப் பலர் உள்ளனர். அவர்கள் படைப்புக்கள் மூலம் தமிழ் மொழி வளம் பெற்றது. தமிழ் மொழியில், பயண இலக்கியம், குழந்தை இலக்கியம் ஆகிய இலக்கிய

வகைகளுக்கு முன்னோடியாக விளங்கியவர்கள் நகரத்தார்கள்.

9. சங்கங்கள், கழகங்கள், கல்வி நிறுவனங்கள் ஆகிய அமைப்புக்களின் மூலம் தமிழ் மொழிக்குத் தொண்டு செய்தனர்.

10. தமிழிசை மறுமலர்ச்சிக்கு, நகரத்தார்கள் செய்த தொண்டு மகத்தானது.

11. நகரத்தார்களின் இதழ்களும், பதிப்பகங்களும் தமிழ் மொழி வளர்ச்சிக்குக் கணிசமான தொண்டாற்றியுள்ளன.

12. மருத்துவமனைகள் நிறுவுதல், நீர்நிலைகள் அமைத்தல், போக்குவரத்து வசதிகள் செய்து கொடுத்தல் போன்ற, சமுதாயத்திற்குத் தேவையான பணிகளைக் காலமறிந்து செய்துள்ளார்கள்.

13. நாட்டின் விடுதலைக்கும், சமூகச் சீர்திருத்தத்திற்கும் பாடுபட்டவர்கள், நகரத்தார்கள்.

14. நகரத்தார்கள் தமிழகத்து நுண்கலை வளர்ச்சிக்குத் துணை நின்றவர்கள்.

15. பல தொழில் துறைகளில் ஈடுபட்டுப் பலருக்கு உழைப்பும் பிழைப்பும் நல்கும் நகரத்தார்கள், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரிதும் உதவி வருகின்றனர்.

16. நகரத்தார்களில் ஆண்கள், பெண்கள், இளைஞர்கள் என அனைவரும் அறப்பணிகளில் ஈடுபாடுடையவர்கள். 'அறஞ் செய்தல்' என்பது நகரத்தார்களுடைய இயல்பாகக் காணப்படுகின்றது. உலகிலேயே அதிகமாக அறப்பணி களுக்கு வாரி வழங்கிய சமூகம் நகரத்தார் சமூகம்.

17. சுருக்கமாகக் கூறினால் எளிமையான வாழ்க்கை, சொல் தவறாமை, பல்லாற்றால் பொருளீட்டி நல்லாற்றால் செலவு செய்யும் தன்மை, தன்னல மறுப்பொடு பிறர்க்கு ஆவண செய்யும் கடமையுணர்வு ஆகியவை நகரத்தார்களுடைய

இயல்பாகக் காணப்படுகின்றன. பயன்மரம் உள்ளூர்ப் பழுத்ததுபோல அவர்களுடைய செல்வம் பலருக்கும் பயன்பட்டது. தாங்கள் ஈட்டியதில் ஒரு பகுதியை அறப் பணிகளுக்கெனச் செலவிட்ட நகரத்தார்கள் பிறகு அறப்பணிகளுக்குச் செலவிடுவதற்காகவே பொரு-ளீட்டினர். தங்கள் தேவைகளைக் குறைத்துக்கொண்டு, திட்டமிட்டு, அறப் பணிகளைச் செய்தனர். உலகின் எந்தப் பகுதியில் அறப் பணியொன்றைத் தொடங்கினாலும், அங்கு நகரத்தார்களின் பங்கோ, குரலோ, தொண்டோ இருக்கும்.

நகரத்தாரின் அறப்பணிகள் பற்றிய ஆய்வு, அவர்கள் வரலாற்றை, அவர்கள் அறஞ்செய்த இயல்பை, அறிவிப்பதோடு, இன்றையச் சமுதாயத்திற்கு வழிகாட்டி யாகவும், ஊக்கம் தருவதாகவும் அமைந்துள்ளது.

'நகரத்தாரின் அறப்பணிகள்' என்ற இந்த ஆய்வு பரந்து விரிந்த பொருளைக் களமாகக் கொண்டு செய்தது. ஆகவே ஆய்வாளர் அவர்களின் அறப்பணிகள் பற்றிய செய்திகளை அறிந்தவரையில் கூறியிருக்கிறார். இதில் சில செய்திகள் விடுபட்டுப் போயிருக்கலாம்.

நகரத்தாரின் அறப்பணிகளை, 'நகரத்தாரின் சமயப் பணிகள்', 'நகரத்தாரின் சமுதாயப் பணிகள்', 'நகரத்தாரின் கோயிற் பணிகள்' நகரத்தாரின் கல்விப் பணிகள் என்ற தலைப்புக்களில் தனித்தனி ஆராய்ச்சியாக மேற் கொண்டால் இன்னும் பல செய்திகள் தெரிய வரும். புதிய ஆராய்ச்சிகளுக்குத் தூண்டுதலாக இவ்வாராய்ச்சி அமையும்.

கல்விப் பணிக்கெனப் பொருளை வாரி வழங்கிய நகரத்தார் சமூகத்தில் இன்று நகரத்தார் இளைஞர்களுக்கு மேற்படிப்பும்; வேலை வாய்ப்பும் நகரத்தார் பெண்களுக்குத் திருமணமும் பெருஞ் சிக்கல்களாக உள்ளன. அந்நிலையை மாற்ற ஆய்வாளர் கூறும் சில கருத்துக்களாவன.

நகரத்தார்கள் கோயில்களுக்குப் புள்ளி வரி செலுத்துவதைப் போல, ஒவ்வொரு நகரத்தார் புள்ளியும் ஒரு குறிப்பிட்ட தொகையை எடுத்துச் சேர்த்து, அழகப்பா பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் கா. நாகப்பன் ஒரு கட்டுரையில் கூறியது போல, 'நகரத்தார் தற்சார்பு பல்கலைக் கழகம்' ஒன்று அமைத்து, அதில் நகரத்தார் இளைஞர்களின் படிப்புக்கு முன்னுரிமை அளித்துத் தீர்வு காணலாம்.


நகரத்தார் இளைஞர்கள் அரசாங்க வேலை வாய்ப்புக்களை மட்டும் எதிர்பார்த்துக் கொண்டிருக்காமல் முன்புபோலத் தாங்களே, முயற்சியோடு தொழில் துறைகளில் ஈடுபட்டால், தாங்களும் பொருள் ஈட்டுவதோடு, மற்றவர்களுக்கும் வேலைவாய்ப்பை அளிக்கலாம்.

நகரத்தார் இனத்துப் பெண்களின் திருமணச் சிக்கலைத் தீர்க்க, வசதியற்ற நகரத்தார் பெண்களின் திருமணங்களுக்குப் பொருளுதவி செய்வதோடு மட்டுமல்லாமல், நகரத்தார்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து 'வரதட்சணை முறை' என்ற முறையற்ற செயலை ஒழிக்கப் பாடுபட வேண்டும். இன்றைய நிலையில் அதுவே ஒரு பெரிய அறப்பணியாகும்.

செட்டி நாடு.

நாட்டுக்கோட்டை நகரத்தார் ஊர்கள்

அளவு 1-1.செ.மீ = 1.6 கி.மீ (1 மைல்)



பின்னிணைப்பு எண் - 2

நகரத்தார்கள் வசிக்கும் செட்டிநாட்டு ஊர்ப்பெயர்கள்

வரிசை எண்	ஊர்ப்பெயர்	மாவட்டம்	அஞ்சல் எண்
1.	அமராவதிபுதூர்	சிவகங்கை	630 301.
2.	அரண்மனைசிறுவயல்	சிவகங்கை	630 305.
3.	அரிமளம்	புதுக்கோட்டை	622 201.
4.	அரியக்குடி	சிவகங்கை	630 202.
5.	அலவாக்கோட்டை	சிவகங்கை	630, 564.
6.	ஆத்தங்குடி	சிவகங்கை	630 101.
7.	ஆத்திக்காடு தெற்கூர்	சிவகங்கை	630 201.
8.	ஆவினிப்பட்டி	சிவகங்கை	630 205.
9.	ஆறாவயல்	சிவகங்கை	630 314.
10.	இராங்கியம்	புதுக்கோட்டை	622 409.
11.	இராயவரம்	புதுக்கோட்டை	622 506.
12.	உய்யக்கொண்டான்சிறுவயல்	சிவகங்கை	630 208.
13.	உலகம்பட்டி	சிவகங்கை	622 410.
14.	ஒக்கூர்	சிவகங்கை	630 557.
15.	கடியாபட்டி	புதுக்கோட்டை	622 505.
16.	கண்டரமாணிக்கம்	சிவகங்கை	630 204.
17.	கண்டவராயன்பட்டி	சிவகங்கை	630 203.
18.	கண்டனூர்	சிவகங்கை	630 104.
19.	கருங்குளம்	சிவகங்கை	630 204.
20.	கல்லல்	சிவகங்கை	630 305.
21.	கல்லுப்பட்டி	சிவகங்கை	630 306.
22.	காரைக்குடி	சிவகங்கை	630 001.
23.	காளையார்மங்கலம்	சிவகங்கை	630 557.
24.	கானாடுகாத்தான்	சிவகங்கை	630 103.
25.	கீழச்சிவல்பட்டி	புதுக்கோட்டை	630 205.
26.	கீழப்பூங்குடி	சிவகங்கை	630 552.
27.	குருவிக்கொண்டான்பட்டி	சிவகங்கை	622 415.
28.	குழிபிறை	புதுக்கோட்,டை	622 402.

வரிசை எண்	ஊர்ப்பெயர்	மாவட்டம்	அஞ்சல் எண்
29.	கொத்தமங்கலம்	சிவகங்கை	630 105.
30.	கொ. லெட்சுமிபுரம்	சிவகங்கை	630 105.
31.	கொப்பனாபட்டி	புதுக்கோட்டை	622 401.
32.	கொல்லங்குடி அழகாபுரி	சிவகங்கை	630 561.
33.	கோட்டையூர்	சிவகங்கை	630 106.
34.	கோட்டையூர் அழகாபுரி	சிவகங்கை	630 106.
35.	கோனாபட்டு	புதுக்கோட்டை	622 503.
36.	சக்கந்தி	சிவகங்கை	630 560.
37.	சிராவயல்	சிவகங்கை	630 214.
38.	சிறுகூடல்பட்டி	சிவகங்கை	630 215.
39.	செம்பனூர்	சிவகங்கை	630 313.
40.	செவ்வூர்	சிவகங்கை	622 417.
41.	சொக்கநாதபுரம்	சிவகங்கை	630 313.
42.	சொக்கலிங்கம்புதூர் (சொக்கனேந்தல்)	சிவகங்கை	630 101.
43.	சோழபுரம்	சிவகங்கை	630 553.
44.	தேவகோட்டை	சிவகங்கை	630 302.
45.	தேனிபட்டி	புதுக்கோட்டை	622 202.
46.	நடராஜபுரம்	சிவகங்கை	630 555.
47.	நற்சாந்துபட்டி	புதுக்கோட்டை	622 404.
48.	நாச்சியாபுரம்	சிவகங்கை	630 207.
49.	நாட்டரசன்கோட்டை	சிவகங்கை	630 556.
50.	நெற்குப்பை	புதுக்கோட்டை	622 405.
51.	நேமத்தான்பட்டி	சிவகங்கை	630 103.
52.	பட்டமங்கலம்	சிவகங்கை	630 310.
53.	பலவான்குடி	சிவகங்கை	630 208.
54.	பள்ளத்தூர்	சிவகங்கை	630 107.
55.	பனங்குடி	சிவகங்கை	630 555.
56.	பனையப்பட்டி	புதுக்கோட்டை	622 406.
57.	பாகனேரி	சிவகங்கை	630 558.

வரிசை எண்	ஊர்ப்பெயர்	மாவட்டம்	அஞ்சல் எண்
58.	பில்லமங்கலம் அழகாபுரி	சிவகங்கை	630 205.
59.	பிள்ளையார்பட்டி	சிவகங்கை	630 207.
60.	புதுவயல்	சிவகங்கை	630 108.
61.	பூலாங்குறிச்சி	புதுக்கோட்டை	622 413.
62.	பொன்புதுப்பட்டி	புதுக்கோட்டை	622 408.
63.	பொன்னமராவதி	புதுக்கோட்டை	622 408.
64.	மகிபாலன்பட்டி	புதுக்கோட்டை	630 217.
65.	மதகுபட்டி	சிவகங்கை	630 553.
66.	மானகிரி	சிவகங்கை	630 307.
67.	மிதிலைப்பட்டி	புதுக்கோட்டை	622 409.
68.	மேலைச்சிவல்புரி	புதுக்கோட்டை	622 403.
69.	வலையபட்டி	புதுக்கோட்டை	622 411.
70.	விராமதி	புதுக்கோட்டை	630 312.
71.	விரையாச்சிலை	புதுக்கோட்டை	622 412.
72.	விரையாச்சிலை லெட்சுமிபுரம்	புதுக்கோட்டை	622 412.
